வைத்திய அட்டவணை

352

Completed

352

352

****

குப்புசாமி செட்டியார்,

காவேரிப்பட்டணம்,

வைத்திய அட்டவணை

கட்டு-7.

****

Total Pages 88

Sunderananda Saraswathi

15-5-63

தேதி:- 27.3.63
ஓலை சுவடியின் பெயர்:- வைத்திய முறை அட்டவணை-7.
உரிமையாளரின் பெயர்:- குப்புசாமி செட்டியார்,
இடம்:- காவேரிப்பட்டணம், சேலம்:

******

வைத்திய முறை அட்டவணை - 7.

புத்திரனுண்டாகுதல்:-

ஈ ஐந்து பிடித்து மூன்று நாள் பிறகு பசு வெண்ணெயில் உள்ளுக்கு முடி மேலு முடி கொடுக்கவும்.

சீத சுரத்துக்கு விஷந் தாகத்துக்கு கசாயம்:-

துளசி சமூலம் பிட்டு இட்டு அந்த தண்ணீரில் மிளகு, திப்பிலி பொடிஞ்சு தேன் கூட இஞ்சி சாறு கூட்டி அரைத்துக் கொடுக்கவும் சீத சுரம் நிற்கும்.

பேய்ப்புடல் கடுகுரோகணி.உ, அதிமதுரம்.ரு, கடுக்காய்.ச, முத்தக் காசு.ந, இந்த பிறகாரத்தில் கசாயம் பண்ணி கொடுக்க விஷ சுரம் நிற்கும்.

முத்தக் காசு, சீந்தில் கரு நொச்சில் முந்திரிப் பழம், நன்னாரி வேர், வெட்டி வேர், சந்தனம், பேய்ப்புடல் இந்த வகை எட்டுக்கும் ஒரு படி நீர் வார்த்து உழக்காக காய்ச்சி கொடுக்க பயித்திய சுரந் தீரும்.

சாதிக்காய் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லி முள்ளி தானிக்காய் --- சுக்கல்லு ருத்திராட்சம், செஞ்சந்தனம்; கஸ்தூரி மஞ்சள், அசமதாகம், அதிமதுரம், சீரகம் அமுக்குறாய் இது எல்லாம் சமமாக கூட்டி எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து உருண்டை பண்ணி தேனில் கொள்ளவும் பயித்திய சுரம் தீரும்.

பித்த சுரத்துக்கு வாத சுரத்துக்கு கசாயம்: தாப சுரத்துக்கு சன்னி சுரத்து:

பித்த சுரத்துக்கு கசாயம்:-

முந்திரிப் பழம்; சுக்கு இலுப்பைப் பூ, நரிப் பயறு விலாமிச்சை இருவேலி இது வகை கசாயம் பண்ணிக் கொள்ள பித்த சுரம் தீரும். சீந்தி தண்டு விலாமிச்சை வட்டத் திருப்பி முத்தக் காசு, சுக்கு, நிலவேம்பு, வெட்டிவேர் பற்படாகம், கொத்தமல்லி சிறுகாஞ்சொறி இந்த பத்து வகையும் சமமாக கூட்டி இரண்டு காசிடை ஒரு படி தண்ணீர் வார்த்து உழக்காக காய்ச்சி ராக்காலம் அசனம் பண்ணின பிறகு கொடுக்கவும் வாத சுரமென்னப்பட்ட தெல்லாந் தீரும்.

சிறுகாஞ் சொறி சீந்தில் முத்தக் காசு இந்த மூன்றும் பனிரெண்டு காசிடை கூட்டி ஆலங் கொழுந்து அரசங் கொழுந்து அத்திக் கொழுந்து இவையுங் கூட்டிக் காய்ச்சி திப்பிலி மேற் பொடி போட்டுக் கொடுக்கவும் தாப சுரந் தீரும்.

சீந்தில் ஆடாதோடை நிலவேம்பு பற்படாகம் இவைகள் ஒவ்வொரு காசிடை சுக்கு, முத்தக் காசு இரண்டு காசிடை இவை யெல்லாம் இந்தப் பிறகாரம் கூட்டிக் கசாயம் இட்டுக் கொடுக்க சன்னி வாத சுரம் நிற்கும்.

சன்னி வாத சுரத்துக்கும் சேத்தும சுரத்துக்கு நாலாம் சுரத்துக்கு கசாயம்:-

வெட்பாலை, சீந்தில் பேய்ப்புடல், பற்படாகம், சிறுகாஞ்சொறி, நிலவேம்பு, சுக்கு, செங்கழு நீர், கோஷ்டம், சிறுவழுதலை வேர், முத்தக் காசு இவை யெல்லாம் கூட்டி கசாயமிட்டுக் கொடுக்க சன்னி வாத சுரந் தீரும்.

கண்டங் கத்திரி சிறுகாஞ் சொறி, சிறுதேக்கு, சுக்கு சீந்தில், முத்தக் காசு, இந்த ஆறும் ஒவ்வொன்று இரண்டு காசிடை கூட்டி ஒரு படி தண்ணீர் வார்த்து உழக்காக காய்ச்சி திப்பிலி, மேற்பொடி போட்டு கொடுக்க சேத்தும சுரந் தீரும். முன்னை பாதிரி வில்வம், சித்த மல்லி, பேரமல்லி, சிறுவழுதலை, கண்டங்கத்திரி, நெரிஞ்சில், சிறுகாஞ்சொறி, சீந்தில் ஆடாதோடை சுக்கு முத்தக் காசு, நிலவேம்பு, பற்படாகம், செங்கழு நீர், கோஷ்டம் இவை எல்லாம் கூட்டி காய்ச்சிக் கொடுக்கவும் சேத்தும வாத சு[ரம்] நிற்கும்.

கொத்தமல்லி, முத்தக் காசு, நெல்லி முள்ளி, கடுக்காய், தானிக்காய், பேய்ப்புடம் வேப்பீர்க்கு இந்த ஏழும் இரண்டு காசிடை சமகை கூட்டி இரு நாழி தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய் காய்ச்சி வெட்டி வேர் தினம் காசிடை சர்க்கரையும் போட்டு குடிக்கவும்.

நாலு சுரத்துக்கு, காச்சலுக்கு, கடுங் காச்சலுக்கு:-

நன்னாரி வேர், அதிமதுரம், சந்தனம், தாமரை கிழங்கு, கோஷ்டங் கிழங்கு இது ஐந்தும் தண்ணீரில் ஒக்க இடித்து இரு நாழி நீர் வார்த்து உழக்காக காய்ச்சி சர்க்கரையும் தேனுங் கூட்டி கொடுக்கவும். தாது வேளை சூரணம் வெந்நீரில் கொள்ளவும். காச்சலுக்கும், வாந்திக்கும் கருஞ்சீரகம், சுக்கு, திப்பிலி பச்சரிசி இது வெல்லாம் பொடி செய்து துளசி பிட்டு இட்டு சாறு பிழிஞ்சு கொண்டு மூன்று செடியிலே. மூன்று தும்பை முப்புங் கூட்டிக் கொண்டு இந்தப் படி மூன்று நாள் கொள்ளவும்.

வாத பித்த சேத்தும சுரத்துக்கு சீந்தில் பற்படாகம், நிலவேம்பு, முத்தக் காசு சுக்கு இந்த ஐந்துங் கூட்டிக் கசாயமிட்டுக் கொடுக்கவும். வாத பித்த சேத்தும சுரந் தீரும்.

பித்த சேத்தும சுரத்துக்கு மருந்து:-

கடுகு ரோகணி, கடுக்காய், முந்திரிப் பழம், முத்தக் காசு, பற்படாகம், சுக்கு இந்த ஆறுங் கூட்டிக் கசாய மிட்டுக் கொடுக்கவும். பித்த சேத்தும சுரந் தீரும்,

குறுணி தண்ணீர் வார்த்து நாழி தண்ணீராக காய்ச்சி அதிலே சீந்தில் தண்டு இரண்டு காசிடையும், சுக்கு நாலு காசிடையும், கடுக்காய் ஆறு காசிடையுங் கூடப் போட்டு உரிய நீர்க் கசாயம் விட்டிறக்கி அதின் பக்குவத்தில் சர்க்கரை கலந்து குடிக்க விரோசனமாம். காச்சல் விடும்.

சுக்கு, திப்பிலி, சித்தரத்தை இது மூன்றும் இளவெந்நீரிலரைத்து காலமே கொள்ளவும். ராத்திரிக்கு கசாயம் சிறுகாஞ் சொறி பற்படாகம், முத்தக் காசு, சுக்கு சீந்தில் கொத்தமல்லி, அவரியிலை இலையும் ஆதண்டயிலையும் வாட்டித் தண்ணீரில் போட்டு அதிலே சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகணி இந்த நாலு முடிஞ்சு போட்டு காய்ச்சி ~~அதை~~ ~~ஐதர்~~ நீர் வார்த்தரைத்து அந்த நீரில் கொடுக்க சர்வ சுரமெல்லாந் தீரும்.

பெண் குதிரை சிடை கோரோசனையும் அரைத்து ஒன்றாக கலந்து கொடுக்க அத்தி சுரந் தீரும்.

கடுஞ் சுரம், கை கால் அசைவற்று இருக்கிறதுக்கு குளிரு காச்சலுக்கு:-

சிறு தும்பை சுக்கு, சதாமூலமும், திப்பிலி இது மூன்றும் கசாய மிட்டுக் கொள்ளவும் சன்னி வாத சுரம் நிற்கும்.

தென்னம் பாளை குடிநீர் இட்டுக் கொள்ளவும் சன்னி வாத சுரந் தீரும்.

கெற்பிணி, மேல் சுரத்துக்கு, விக்கலுக்கு:-

நன்னாரி வேர், பேராமுட்டி வேர், வட்டத் திருப்பி, சீந்தில் தண்டு, சுக்கு, கொத்தமல்லி இந்த ஆறும் கசாயம் பண்ணிக் கொள்ள கெற்பிணி சுரந் தீரும். கடுக்காய் வசம்பு; சிறுதேக்கு, கடுகுரோகணி இந்த நாலும் கசாயம் பண்ணி தேனுங் கூட்டிக் கொள்ள கெற்பிணி சுரம் நிற்கும்.

கெற்பிணி மேல் சுரத்துக்கு விக்கலுக்கு:-

சாட்டரணை வேர், சுக்கு, அசமதாகம், மஞ்சள் இந்த நாலும் கசாயமிட்டு கொள்ள கெற்பத்திலே விக்கல் தீரும்.

குளிர் காச்சலுக்கும், இருபத்தொரு நாள் சென்ற சுரத்துக்கும் வெள்ளாட்டுப் பாலும் உள்ளுக்கு கொடுத்து மேலுக்கு பசவும்.

குளிருக்கு கஸ்தூரி கொண்டு வந்து அரைத்து வெள்ளைத் துணியில் தடவி உலர்த்தி திரியாக்கி விளக் கேத்திக் கலத்தில் மை பத்தக் கூட்டி சிமிளில் வைத்து கண்ணிலிடப் போம்.

நாள் வேளை. விரை., வெள் உள்ளி வசம்பு கூட்டிப் பொடி செய்து கால் மடியில் நசியம் பண்ணவும். உள்ளி வசம்பு விட்டரைத்து வலது முன் கை நரம்பில் மருந்து இட்டு ஒடுப்

பொட்டு கட்டி ஒரு சாம மிருக்க விட்டு அவித்துப் போட குளிர் காச்சலும் தீரும்.

கோரைக் கிழங்கு தண்ணி மிட்டான் கிழங்கு, சந்தில் தண்டு நன்னாரி வேர், நல்ல சந்தனம், சுக்கு, கோஷ்டம், அதிமதுரம் இது கசாயம் காய்ச்சி தேனுந் திப்பிலியுங் கூட்டிக் கொடுக்கவும். முன்னை பாதிரி வில்வம் வேர், பெருங் குமிழ் தழுதாழை இது சமன் கூட்டி இடித்து உலர்த்தி கால் பலம் சுக்கு கூட்டி இடிச்சு சூரணம் பலம் கூட்டி இருநாழி தண்ணீர் இட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும் சகல காச்சலுந்தீரும்.

வட்டத் திருப்பி வேர், வெட்டி வேர், சந்தில் தண்டு, விலாமிச்ச வேர், பற்பாடகம், கோரைக் கிழங்கு, சிறுகாஞ்சொறி வேர், அனலில் வெதுப்பி நசுக்கி கொத்தமல்லி விரை இது கசாயம் காய்ச்சி கொடுக்க எல்லா சுரமுந் தீரும்.

கோரைக் கிழங்கு, பற்படாகம், சந்தில் தண்டு, இலவம் வேர், கொத்தமல்லி பேய்ப்புடல், கடுக்காய், குரோசாணி சித்தாமுட்டி வேர், திப்பிலி இது கசாயம் கூட்டிக் கொடுக்கவும் சுர மென்னப் பட்டவெல்லாந் தீரும்.

திப்பிலி, ஓமம், வாய்விளங்கம், இந்துப்பு, பெருங்காயம் வகை ஒன்றுக்கு விராகன்.க, கடுக்காய், தானிக்காய், நெல்லிப் பருப்பு, கஞ்சாயிலை, நொச்சிக் கொழுந்து இந்துப்பு, பெருங்காயம் அதிலே போட்டு இடித்துக் கொள்ளவும் பைத்திய சுரந் தீரும்.

<u>சீத சுரத்துக்கு இனிய கசாயங் கேளீர்</u>:

செழிக்குமாடா தோடை, பேராமுட்டி, சாதிக்காய், மிளகு, சுக்கு, திப்பிலி, வெள்ளுள்ளி, சால விஷ்ணு கிராந்தி, ஒட்டரை, ஓமம், ஒதரிய துளசி, கஞ்சாங் கோரை நாற்றையுதறந்த பிஞ்சு இலையும் பெரு மரத்துப் பட்டை வேதினை தீர் நொச்சி கண்டு பறங்கி ஆலாம் பழுப்பு இதுவுங் கூட்டில் வினை விட்டுப் போமே.

<u>பைத்திய சுரத்துக்கு கசாயம்</u>:-

கோரைக் கிழங்கும், பற்படாகம், குளிர்ந்த சந்தித் தண்டுடனே சாரமிகுந்த கொத்தமல்லி சதிராக் கூவளையின் வேரும் நேராம் பேய்ப்புடல் திப்பிலியும் நீர் கடுக்காய் கடுகுரோகணி, பாரீரிவை குடிநீர் கொள்ளில் பைத்திய சுரம் விட்டகன்றிடுமே.

<u>பைத்திய சுரத்துக்கு குளிகை</u>:-

சுக்கு, மிளகு, சாதிக்காய், செஞ் சந்தனஞ் சீரகங், கடுக்கா யொக்க திப்பிலி நெல்லி முள்ளி உரிய தானிக்காய் ருத்திராக்ஷம் தக்க வசுகல கஸ்தூரி மஞ்சள் தாகந் தீர்க்கும் அதிமதுரம் மிக்க ஓமம், அசுவ கெந்தி மீண்டு சொல்லக் கேளின்னம் நிம்பச் சாத்திலிவை யெல்லாம் நேரா அரைத்து உருண்டை செய்து தம்பாய் நிழலில் தானுலத்தி தன் கைவசமுதான் பின்பு வெம்பும் பித்த சுரத்துக்கு வேண்டுங் கசாயந் தனிலுரைத்து நம்பிக் கொடுக்கப் பித்த சுரம் நடுங்கித் திசை கெட்டு போமே.

கிரந்தி, நாயகம், சங்கங் குப்பி, வெள்ளருகு, செங்கத்தாரி, சித்திரமூலம், நாமப் பாலை ஆடு தின்னாப் பாளை; வெப்பாலை, கடுக்காய் கருந் தும்பம் வெள்ளைத் தும்பம், சீரகம், கருஞ்சீரகம், வெங்காயம், களிப் பாக்கு, காசுக்கட்டி எடை சமன் வறுத்து த்தின சித்தா மண்க் கென்னையில் காய்ச்சி வைத்துக் கொண்டு பத்து நாள் வாங் கவும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். பாலும், சோறும் உண்ணவும்.

பிரண்டை கணுவு போக்கி இரண்டு முட்டம் இடித்து இதுக்கு கருத்த கொள்ளு படி. உ கூடப் போட்டு இரண்டு வள்ளம் தண்ணீர் விட்டு நாலு சாமம் எரித்து அது ஊற விட்டு இடித்து சேர்த்து இதுக்கு திரிகடுகு, பெருங்காயம், சயிந்திலவணம், இந்துப்பு, சீரகம் விராகனிடை.ங கூட்டி மூவிரல் கொண்டது வெந்நீரில் வார்க்கவும் கை கண்டது.

சாறணை வேர் அரைத்து குகை பண்ணி ஊற விட்டு யிங்கிலிக்கம் விராகனிடை.ங பொடி செய்து குகையில் போட்டு ஒரு சட்டிக்கு உப்பு போட்டு நடுப்புறம் குகை வைத்து மேலும் உப்பு நிரவிச் சட்டி கொண்டு மூடி சீலை மண் செய்து அடுப்பில் வைத்து நாலு சாமம் எரித்து ஆற விட்டு மேல் சட்டியில் பத்தினத்தை ஓலையினால் வாங்கிக் கொண்டு அதுக்கு சீரகம்

விராகனிடை.உ, இந்துப்பு விராகனிடை.உ, கூடக் கலந்து கால் மண்டலம் பசு நெய்யில் வாங்கவும். பஞ்ச சூலை, அஉஷ்டம் குன்மம், நாபி, பக்க சூலை தீரும் கை கண்டது. பத்தியம் வெள்ளை சாறணைக் கொழுந்துக்கு, மிளகு, புண்டு உப்பு கூட்டி மசிச்சு சோற்றுக்கு கூட்டிக் கொள்ளவும். புளி ஆகாது. பசு மோர் ஆகும். கிரந்தி * அரை *

<u>கிறந்தி, அரையாப்பு, கரப்பான் விப்புருதிக்குமருந்து</u> :-

மணத் தக்காளிச் சாறு, சங்கங் குப்பிச் சாறு, சிலந்தி நாயகன் சாறு, சிறு செருப்படை சாறு, கொட்டைக் கிரந்திச் சாறு, கோழியவரைச் சாறு, காரையிலைச் சாறு, குப்பை மேனிச் சாறு, நொச்சியிலைச் சாறு நல்ல நொச்சிச் சாறு வகை ஒன்றுக்கு உழக்கு சாறு கடைச் சரக்கு உள்ளி, வசம்பு, விலைகரிச்சி, வெப்பாலை அரிசி, கடுகு ரோகணி, பூத கரப்பான் பட்டை இந்த அறு வகையும் ஒவ்வொன்றுக்கும் விராகனிடை. செங்கத்தாரிப் பட்டை விராகனிடை.உ, விளக்கெண்ணெயில் கூட்டி பதமாக காய்ச்சி நேரத்துக்கு உச்சி கறண்டி கொடுக்கவும்.

ரத்தம், துரிசு இவை இரண்டும் சமன் கொண்டு புளி இலைச் சாறு புழிந்து எலுமிச்ச சாறு முள்ளி யிலைச் சாறு இவை மூன்றும் வகை சாறு வெவ்வேறே வார்த்தரைத்து கத்தாள மடலை கீறி அரைச்ச மருந்தை அதுக்குள்ளே வைத்து கட்டி உமிக் காந்த விட்டு மூன்று நாளரைத்து உருண்டை பண்ணி நிழலிலுலர்த்திக் கொண்டு பப் பட்ட கண்ணுக்கு கத்தாளஞ் சாத்திலுரைத்துப் போடப் புப் பரியும்.

கண்ணுக்கு கையாந்த கரை ஒரு பிடி, அவுரி ஒரு பிடி, சாறணை ஒரு பிடி, சிறு பூளை ஒரு பிடி, நந்தியா வட்டம் ஒரு பிடி, கருவேலந் தலை ஒரு பிடி, அதின் பட்டை ஒரு பிடி இது வெல்லாம் சேரக் கூட்டி இடித்து கோமியத்தில் மூன்று நாள் ஊறப் போட்டு பிசைந்து பிழிந்து கொண்டு அதிலே சுக்கு, மிளகு பொடி கோழி முட்டை ஒடு இது வெல்லாம் போட்டு காய்ச்சி செப்புக் கிண்ணியில் மூன்று நாளிட்டு வைத்து மறுபடி எலுமிச்சஞ் சாறு விட்டரைத்து உருண்டை பண்ணி வைக்கவும். இதுக்குப் பற ரோகம் பிரிசில் புப்பட்டது யிறண சுக்கிரன் முதலானத்துக்கு ஆகும். ~~சோளக் * பயிர் * ஆமணக்*~~ *

<u>சோளப் பயிர் ஆமணக்கு தின்ன மாட்டுக்கு</u> :- Not useful

மாடுகளுக்கு அமுக்கிரா கிழங்கு ஊறாக்கி வைத்துக் கொண்டு வேண்டு மென்ற போது மூன்று விரல் கொண்ட அள் எடுத்துக் கொண்டு காடியாகுதல் புளிச்ச மோராகுதல் புளிக் கரைத்துக் கொண்டாகுதல் புளியிலைச் சாத்தில் ஆகுதல் அரைத்துக் கரைத்து நாலுக் கொட்டம் வார்க்கவும் விஷந் தீரும். மாடு பிழைக்கும்.

<u>பித்த பாண்டு ரோகத்துக்கு மருந்து</u> :-

அரப்பொடி உழக்கு, பழங் கிட்டம் பொடி உழக்கு சுக்கு பலம்.க, மிளகு உழக்கு வெள்ளுள்ளி பலம்.க, கடுகு பலம்.தெ, காந்தம் பலம்.வ், கோர்வில் பன்மய சாந்து பின்னைக் காய மாதிரி கடுக்காய்.சய், ஓமம் பலம்.ஞ, பெருங்காயம் விராகனிடை இந்துப்பு விராகனிடை. , தானிக்காய் பொடி ஆமாக்கு குப்பை மேனி யிலை ஒரு பிடி, பொடுதலை ஒரு பிடி, கருஞ் சீரகம் ஒரு பிடி, பிரமி ஒரு பிடி, நிலாவரை ஒரு பிடி, செருப்பட்டை ஒரு பிடி, வேலிப் பருத்தி ஒரு பிடி, சிவனார் வேம்பு ஒரு பிடி, அவுரி ஒரு பிடி, பிறமி ஒரு பிடி, நிலாவரை ஒரு பிடி, சங்கம் வேர் ஒரு பிடி, நிலக் குமிள் ஒரு பிடி, கீழா நெல்லி வேர் ஒரு பிடி, ஆவாரை வேர் ஒரு பிடி, வன்னி வேர் ஒரு பிடி, பழம் புளி பலம்.க, இந்த மருந்தெல்லாம் எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து கலசத்திலிட்டு அதின் பிறகு உரி எலுமிச்சஞ் சாறு விட்டு ஊறி வைத்துக் கொண்டு தினச்சரி எலுமிச்சங் காயளவு கொள்ளவும். இதுக்கு தீரும் வியாதி சோகை, பித்த பாண்டு, ஊது காமாலையும் போம்.

<u>செப்பு தகடு, சுத்தி, வயத் தெரிவுக்கு மருந்து, சீதக் கடுப்புக்கு உன்மத்துக்கு</u> :-

முருங்கைக் கீரை வெல்லம் கருப்புக் கட்டி பசுவின் பால் நெய் கூட்டவும். இது கை கண்டது. கெந்தகம் பொடி செய்து அதிலே எருக்கம் பால் விட்டு மத்திச்சு செப்புத் தகட்டிலே தடவி வெய்யிலிலே காய வைத்து எடுத்துக் கொண்டு புடத்தில் வைக்கப் பற்பமாம். இது கை கண்டது.

சத்தி சாறணைக் கிழங்கு சர்க்கரையில் கூட்டிப் பசும் பாலில் மூன்று நாள் கொடுக்கவும்.

<u>உஷ்ணத்துக்கு, எலும்புருக்கி நோவுக்கு, கொள்ளிக் கரப்பானுக்கு:-</u>

பச்சரிசி பச்சைப் பயறும் ஒரு பிடி அறுகம் புல்லுங் கூட்டிக் கசாயமாக காய்ச்சி பனியிலே வைத்து மறுநாள்குடிக்கவும்.

<u>சீதக் கடுப்புக்கு:-</u>

எருமைத் தயிர் ஒரு படி, ஆட்டுப் பால் ஒரு படி இது இரண்டும் எலுமிச்சஞ் சாற்றில் சாரித்து குடிக்கவும் தீரும்.

வேலிப் பருத்தி வேர் பலம்.ச, கொடி வேலி வேர் பலம்.உ இது சேரக் கூட்டி வேலிப் பருத்திச் சாறு விட்டு நேக அரைத்து அதின் பிறகு வெள்ளாட்டுக் கோமியத்தில் போட்டு நன்றாய் திரளக் காய்ச்சி வைத்துக் கொண்டு நித்தம் விராகனிடை கொண்டு வரவும். உஷ்ணத்துக்கு ஒரு பிடி, கொள்ளு படி தண்ணீர் விட்டு அரைப் படியாகக் காய்ச்ச அதிலே ஒரு பிடி தண்ணீர் இறுத்துக் கொண்டு கிழவைக்காய் இரண்டு படி காய் துவைத்து அதிலே பிடி சாறும் காடியிலே ஒரு பிடியும், நல்லெண்ணெயிலே ஒரு பிடியும் கூட்டிக் கொடுக்கவும் போம் குணமாம்.

பொன்னுங்கண்ணி வேர்; மாங்காய் மாதிரி அரைத்துப் பச்சைப் பாலிலே போட்டு காய வைத்துப் புரை யிட்டு மறுநாள் கடைந்து வெண்ணை எடுத்துக் கொண்டு அந்த வெண்ணையுடனே சங்கம் வேர், கருப்புக் கட்டியும் சந்தனமும் கூட்டிக் குடிக்கவும் குணமாம்.

<u>கொள்ளிக் கரப்பானுக்கு:-</u>

முத்தக் கோழி கருஞ் சேவர் முதுகைப் பிளந்து கடுகுப்ப் உத்த காய மென் களஞ்சு உழக்கு மிளகு வெள்ளுள்ளி பத்த அரைத்து அதனுள்ளிட்டுப் பகருங் கள்ளிப் பால் விட்டு சுத்திக் கட்டிக்கோ நீரால் சுருள வெந்து கொள்ளீரே.

சுருள வெந்த மருந்து தன்னைத் துகள எடுத்து தானுகந்தால் பிரமி குன்மம் பெருவயறு பெருத்தே ஏழங் குடல் வர்தம் மருகுஞ் சூலை அதிசாரம் மருமக்க வுசி மகோதரமும் உதறம் விட்டே ஏகு மென்று உண்மையாள் முத்தும் முரைத்தாளே.

<u>மலடி குணம் அறியும்படி:-</u>

மலடி யாகில் சரீரம் வத்தியிருக்கும். நாள் சென்றலாகிறத்க்கு வயிறு தடித்திருக்கும். புழுவுண்டானல் மாசம் ஒருக் கால் அடி வயறு நோகும். தேயல் ஒன்றயாகில் மல மிறங்கும் போது நோகும். இந்த நாலுக்கும் யேரவள் பேயினலும் பித்தத்தினலும் தெய்வத்தினலும் குணங் கூறவாள். பேயினல் வந்ததாகில் கீழ் வயறு பக்கம் நோகும்.

<u>இதுக்கு மருந்து:-</u>

பொன்னுங்கண்ணி வேர், சிறுபூளை வேர், நல்ல வெல்லம் இது மூன்றும் அரைத்து பசும் பாலில் குடிக்க நிற்கும். இப்படி ஏழு நாள் கொடுக்கவும். பத்தியம் பாலுஞ் சோறு கொடுக்கவும். பித்தத்தில் வந்ததாகில் கறைபடும் போது நீரிறங்கும் போது அழன்றிருக்கும் கண்ணீர் பாயும். தலை சுழன்று வரும்.

<u>இதுக்கு மருந்து:-</u>

சீந்தி தண்டு, வேப்ப யீர்க்கு, முத்தக் காசு இவை சமன் கொண்டு இரண்டு படி தண்ணீர் விட்டு கால் படியாக காய்ச்சி நித்தம் அரைக் களஞ்சு நெய்யுடனே கொடுக்க நிற்கும். பத்தியம் நீர் காச்சிக் குடிக்கவும். ~~புழுவுண்டானல்~~

புழு வுண்டானல் கறை படும் போது இறைச்சி கழுவின தண்ணீர் போலே படும்.

<u>இதுக்கு மருந்து:-</u>

சந்தி தண்டும், பொன்னுங் கண்ணி வேரும் பாலுடன் அரைத்து ஏழு நாள்குடிக்கவும்.

பத்தியம் பாலுஞ் சோறும் உண்ணவும்.

குளிர் காச்சலுக்கு:-

திப்பிலி பொன்னுங்கண்ணி பேய்புடல், முத்தக் காசு, பற்படாகம், சீந்தி, சுக்கு பய்யவே நய்யவே வந்து அப்பிநீர் தேனிரா அட ஆள் விளுரென்னக் கேட்டு வெப்பிநீர் குளுருளுரே விரு விநீர் விடை கொண்டாரே.

கண் பாராத மாட்டுக்கு:-

Not useful

ஆட்டொட்டி யிலையும் அரைத்துப் பாலிலே வார்க்கவும். கண்ணின் மேலேயுந் தடவவும்.

சகல ரோகத்துக்கு மருந்து:-

This recipe is worthy of consideration by the Committee

ரசம் களஞ்சு, கெந்தகம் களஞ்சு, அன்னுபேதி களஞ்சு, கடுகு ரோகணி களஞ்சு துரிசு களஞ்சு, கவுரி பாஷாணம் களஞ்சு, கடுக்காய் நெல்லி பருப்பு, தானிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, அக்கலாகாரம், சாதிலிங்கம், பச்சை நாபி, நேர்வாளந் சுத்தந், ஈருள்ளி ஆக வகையுங் கூட்டி ஒரு சமன் கூட்டி எலுமிச்சம் பழம் சாறு விட்டு ஏழு நாள் அரைத்து சிறு பயறளவு உருண்டை பண்ணி நிமலிலுலர்த்தி வைத்துக் கொண்டு கொடுக்கிறதுக்கு அநுபானம் விராகனிடை துத்தியிலைச் சாத்தில் கொள்ள உடம்பு பருக்கும். அவரையிலைச் சாற்றில் மூன்று மண்டலம் கொள்ள சரீரம் பொன்னிறமாம். எலுமிச்சம் பழச் சாத்திலுரைத்துக் கடி வாயில் பச விஷம் மீளும். இந்தப் படி பூச தேள் விஷந் தீரும். இஞ்சிச் சாத்திலிட சன்னி சுரந் தீரும். துளசி சாத்தில் கொள்ள திருகு சன்னி தீரும். நல்ல சீரகமும் காடியும் கூட்டிக் கொடுக்க தாப சுரந் தீரும். புளியிலைச் சாத்தில் கொடுக்க பித்த சுரந் தீரும். கடுக்காய் தானிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி இவை கூட்டி கோமியத்திலிட சோகை காமாலை விஷபாகம் பான்டுவ ரோகம் தீரும். தேனிலிட குனியந் தீரும். பூலா வேர் பட்டை சாத்திலிட அண்ட வாதந் தீரும். வெள்ளாட்டுக் கோமியத்திலிட காசி நோவு தீரும். தண்ணீரில் திலதமிட ரச வசியமாம். கையாந்த கரை சாத்திலிட காச சுவாதம் தீரும். எருமை தயிரிலிட வயறு கழிச்சல் தீரும். பச்சை நெல்லிக் காயிலிட ஈளை தீரும். நெல்லிச் சாத்திட வயத்து கடுப்புத் தீரும். சாதிக்காய் திப்பிலி கூட்டி இட மூலக் கிராணி தீரும். ஓமம் வசம்பு கூட்டி இட பவுத்திரந் தீரும். சர்க்கரை யிலிட பச்சை நாபி முதலான பதினெட்டு நஞ்சும் முறியும். எலுமிச்சம் பழச் சாத்தில் அஞ்சன மிட நஞ்சு தின்ன மயக்கமுந் தீரும். கழுதை லத்திச் சாத்திலுரைத்துக் கண்ணிலிட விஷமாஉந்சதி தீரும். பசுவின் பாலில் அசனத்துடன் கூட்டி உண்ண உடம் பெரிப்புத் தீரும். சாறணைச் சாத்திலிட பிற வலிப்பு தீரும். ஓமத்திலிட பிடி வாதம் தீரும். எலுமிச்சம் பழம் சாத்திலிட தலை நோவு தீரும். இஞ்சிச் சாத்திலாகுதல் தேனிலாகுதல் இட மாந்தம் தீரும். கருப்புக் கட்டியிலிட வெப்புப் பாவை தீரும். வேப்பிலைச் சாத்திலிட தாப சுரந் தீரும். வெத்திலை சாறு கழுதை லத்தி சாத்திலிட மூனக்கு மறுள் தீரும். காச்சலுக்கு அஞ்சனமிடத் தீரும். சாறுத் திலாகுதல் காடியிலாகுதலிட சன்னி தீரும். வேலிப் பருத்திச் சாறும் சாறுயும் கூட்டி இட மருந்தீடு தீரும். தலைப் பிள்ளை பெத்தவள் முலைப் பாலிலிட கண்ணிலாணி போம். வெப்பாலை சாத்திலிட சூலை வாய்வு மூலமும் தீரும். புளியஞ் சாம்பல் சுட்டு நீரிலே போட்டு அந்த நீரிலிட வெள்ளைப் பிறமியந் தீரும். கோரோசனையிலிட பறங்கிப் புண்ணுந் தீரும்.

ரத்த சீதக் கடுப்புக்கு மருந்து:-

பருத்திப் பிஞ்சு அந்தக் கொழுந்து யக. ஆவாரை அரிசியும் விடத்தேரிலை ஆலாம் விமஷங் கொழுந்தும் ஆக வகை ரு எருமைத் தயிலுரைத்துக் கூழப்பி எருமைப் பால் நாழ பீர் பீச்சிக் கொடுக்கவும். தயிரும் சோறும் உண்ணவும்.

(வேறு) எருமைத் தயிரில் ஒரு சுட்டெடை கருஊமத்தை சாறு மூன்று துளி விட்டுக் கொடுக்கவும். இப்படி ஒரு நாளையில் மூன்று விசை கொடுக்கவும்.

அஸ்வ கெந்தி சூரணம் அஸ்தி சுரம் வெட்டைக்கு நல்லது :-

அஸ்வ கெந்தி சேர் இரண்டு நிலமாவுளி சேர் ஒன்றுககு வேப்பிலை சேர்.வ, சீரகம் பலம்.உ, கருஞ்சீரகம் பலம்.உ, கொத்தமல்லி பலம்.உ, சுக்கு சேர்.½ இது எல்லாம் சூரணம் பண்ணிக் கொண்டு இது இரண்டு பங்கு சர்க்கரை ஒரு பங்கு கூட்டி நெய்யில் சாப்பிடவும். சாதிக்காய் விராகனிடை.க, சாபத்திரி விராகனிடை.க, லவுங்கம் விராகனிடை.க, அக்கலாகாரம் விராகனிடை.உ, கோஷ்டம் விராகனிடை.உ, திப்பிலி விராகனிடை.ங, மோடி விராகனிடை.ங, வாய் விளங்கம் விராகனிடை.ங, கஸ்தூரி மஞ்சள் விராகனிடை.ங, லவங்கப் பட்டை விராகனிடை.ங, லவங்கம் பத்திரி விராகனிடை.ங, முக்காவேளை விராகனிடை.ங, தும்பராஷ்டகம் விராகனிடை.ச, பறங்கிப் பட்டை விராகனிடை.ச, படுபாகல் கிழங்கு விராகனிடை.ச ஒன்றாய் கூட்டி இடித்து சூரணம் பண்ணி வச்சிர நீலி வேரும் பேய் சங்கப் பட்டை, நாரிஞ்சப் பட்டை அளிஞ்சிப் பட்டை, சுகந்தி பாலை, பாப்பார முள்ளி வேர் இதுகளை நருக்கி கசாயம் போட்டு அஷ்ட பாகமாக காய்ச்சி அந்த சூரணத்தை போட்டு கிளறி ஊணம் பால் ஒரு உச்சிக் கரண்டி பிரமாணம் விட்டு பிசைந்து சுண்டைக்காய் பிரமாணங் கொடுக்கவும்.

ரத்த காசிக்கு மருந்து அரோசிகத்துக்கு வெள்ளைக்கு மருந்து :-

தேத்தான் பட்டை சூரணம் பண்ணி எருமைத் தயிருடன் விராகனிடை பிரமாணம் கொடுக்கவும். பதினைந்து நாள் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். அரோசிகத்துக்கு கடுக்காய் இரண்டு சுட்டு பொடி பண்ணி அதிலே கிராம்பு பணவிடை.உ, திப்பிலி காசிடை.க, சுக்கு காசிடை.க, நெல்லிப் பொரி காசிடை.க, பருத்திக் கொட்டை பருப்பு காசிடை.க, கோரோசினை பணவிடை.க. இது வெல்லாம் எலுமிச்சம் பழச் சாத்திலாவது, நாரத்தம் பழச் சாத்திலாவது குமட்டி மாதளம் பழச் சாத்திலாவது அரைச்சு தேன் கூட்டி ளக பண்ணி கொள்வது. இதுக்கு வாந்தி அரோசிகம், பயித்தியம் என்னப் பட்டதெல்லாம் தீரும். இது தப்பாது..

வெள்ளை தூபம் விராகனிடை.க, பூரல் துத்தம் மாயிடை.க, பாதரசம் விராகனிடை.க, காரீயம் மாயிடை.க, களிப் பாக்கு காசுக கட்டி மாயிடை.க, கோழி முட்டை சுட்டது மனிதன் எலும்பு விராகனிடை.க, வெண்ணெ போட்டு கலஞ் செம்பு மேலுங் கீழும் உரைத்து வைத்துக்கொண்டு அரையாப்பு புண்ணுக்கு ஆறுத புண்ணுக்கு போடவும். செங்காலுப் பாச்சை கூட்டவும்.

கோரோசினை விராகனிடை.க, துத்தி விரை தாதகு விரை முயல் புழுக்கை, விடத் தேரின் தலை வகை ஒன்றுக்கு துட்டெடை ஒன்று, கோரோசினை விராகனிடை.க, இதுக்கு சரி சமமாக கம்பு பொரி மாக் கலந்து வெருகடி பிரமாணம் காலையிலே, மத்தியானம், அந்திக்கு மூன்று நேரமும் தின்னவும். பத்தியம் வெள்ளாட்டு மாங்கிஷம், துவரம் பருப்பு, மிளகு கொஞ்சமாய்க் கூட்டவும். நஞ்சு புளிப்பு, கிறந்திப் புண்டமாகாது. முத்து நிலப் பனைக் கிழங்கு, மெருகங் கிழங்கு காட்டுக் கறனைக் கிழங்கு மரவிக் கிழங்கு நல்ல கறனைக் கிழங்கு பிரண்டைக் கிழங்கு இவைவு ஒன்றுக்கு பலம்.க இவை யெல்லாம் பசுவின் பாலிலாகுதல் அவிச்சு உலர்த்தி சூரணம் பண்ணி புளியாரை சாறு விட்டு பிசறி காய வைக்கவும்.

சித்திர மூலம் பலம் ஒன்று, சீரகம் பலம்.க, ஏலம் பலம். , கொத்தமல்லி பலம். , கருஞ்சீரகம் பலம். , மிளகு பலம். , அதிமதுரம் பலம். , லவுங்கம் பலம் கோஷ்டம் பலம். , சாதிக்காய் பலம்.வ, சாபத்திரி பலம்.வ, அதிவிடையம் பலம். இவை யெல்லாம் சூரணம் பண்ணித் தேனிலாகிலும் நெய்யிலாகாகிலும் சர்க்கரையாகிலும், நாற்பது நாள் கொள்ளவும். கார்ப்பு, புளி தவிர்க்கவும்.

கண்ணுக்கு மருந்து :-

வெங்காரம் பொரித்து நல்லெண்ணையும் கிழிஞ்சி சாறும் சாரித்து கண்ணுக் கிடகன் தெரியும். இது கை கண்டது.

சந்திரோதையம் கடுக்காய், வசம்பு, கோஷ்டம், திப்பிலி, மிளகு, தான்றி

பருப்பு சங்கு நாபி மத்தித்த கன்னிலிட நீர்ப் பாச்சல் தினவு புல. மூளை அன்ன சோபம்.
அமோங்கிஷ தீராக் கன் ஐம்பது வருஷம் சென்ற பவும் பச்சை காயலளித்திய வெண் பாஷா
ணம் பகருஞ் சுண்ணம்பினல் அத்தி மயத்த சிறுகீரையினல் சுத்தி பண்ணி வன்மையுள்ள ஆவின் பாலி
னல். கழுவி மத்த சாத்தினல் உச்சிதமா ஒரு சாமம் ஊறல் செய்து உருண்டை பயறளவில் முலைப் பாலில்
கொள்ள அச்சமற வாந்தி பண்ணும். வயிறு போகும். அதவும் பின் பத்தியங் கேள் தயிரும்
சோறும்.

ஈளைக்கு கண்டங்கத்திரி சமூலங் கொண்டு வந்து உலத்திப் பொடி பண்ணி வஸ்திர
காயம் பண்ணி சூரிய புடமிட்டு தேனில் கொள்வும். ஈளை தீரும்.

சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், ஏலம், லவுங்கம், சாதிக்காய், சாபத்திரி
ஓமம், குரோசனி ஓமம் அதிவிடயம், பெருங்காயம், சிறுதேக்கு, வாய் விளங்கம், மோடி,
கடுகு வசம்பு நாகேசுரம், அக்கலா காரம், கோஷ்டம், தம்பருஷ்டகம், கடுகுரோகணி
கோரோசனை, கடுக்காய், தானிக்காய், நெல்லி, சித்திர மூலம் ஆமையோடு மயில் தலை,
பறங்கி. சக்கை கண்டு புறங்கி வகை ஒன்றுக்கு விராகனிடை.க, கூட்டி பசுவின் நெய்யில்
பதமாய் வறுத்துக் கொண்டு பாவட்டை யிலை உத்தாமணி இலை சூத்தை இலை சுண்டை இலை
பாகல் இலை, எழுத்தாணிப் பூண்டு இலை ஆவாரையிலை சூரை யிலை பொடுதலை இந்த இலை
யெல்லாந் தந்து வதக்கி பிழிந்து கொண்டு அரைத்துப் பருத்திக் கொட்டை பிரமாணம்
உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு சிறு பிள்ளைக்கு சத்தே பிணி. வந்தால். வெந்நீரில் வாக்கவும்.
பதினெட்டு வகை மாந்தமும் போம். இது கை கண்டது.

ரத்தக் கழிச்சலுக்கு இருமலுக்கு மருந்து:-

கஞ்சா வழித்துப் பொடி செய்து பண்டு ஒரு சேரை உரித்து இரண்டு மரைத்து
சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை பண்ணிக் கொடுக்கவும். இருமலுக்கு பேய்சிங்க பால் படி.
அபினி மருந்து விராகனிடை.ச, வெங்காரம் விராகனிடை. திப்பிலி பலம்.க கடுக்காய்
பலம்.க, வெண்காரம் பொரிச்சுக் கொண்டு யிங்கிலிகம் விராகனிடை.க, முலைப் பாலில்
ஊற வைத்து இரண்டு நாள் ஊறின பிறகு எடுத்துக் கழுவிப் போட்டு திப்பிலி கடுக்காய் சிவக்க
வறுத்துக் கொண்டு இது வெல்லாம் அம்மியில் வைத்து சங்கை பால் வார்த்து அந்தப் பால்
முழுதும் படிபட அரைத்து பிறகு பதமானல் எடுத்து மிளகு மருவாதி உருண்டை. பண்ணி எடுத்து
நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு அந்தி மாறு ஒரு உருண்டை போட்டுக் கொள்ளவும்
இருமல் தீரும்.

பித்த அதிசார கழிச்சலுக்கு மருந்து:-

பெரு மரத்துப் பட்டை அதிவிடயம், வில்வப் பத்திரி வேர், கோரைக் கிழங்கு,
மாதளை ஓடு இது ஐந்தும் கசாயம் போட்டு பெரு மரத்துப் பட்டையை வறுத்துப் போடவும்.
அஷ்ட பாகமாக காய்ச்சி ஐந்து நாள் கொடுக்கவும். பித்த அதிசாரந் தீரும்.

குழந்தைக்கு மாந்தைக் கட்டுக்கு எண்ணெய்:-

சித்தாமணக்கு எண்ணெய் சேர் இரண்டுக்கு கடைச் சரக்கு சாதிக்காய் விராகனிடை.க,
லவங்கப் பட்டை விராகனிடை.உ, சீரகம் விராகனிடை.உ, கடுகுரோகணி விராகனிடை.உ,
கவளக் கட்டி விராகனிடை.க, மஞ்சள் விராகனிடை.க, மிளகு விராகனிடை.க வெள்ளாப்
பூண்டு விராகனிடை.ச, வெங்காயம் பலம்.உ, கத்தாளை சோறு ஒரு சுத்து எழு தரம்
கழுவிப் போட்டு விளக்கெண்ணெய் கொஞ்சம் அடுப்பில் காய வைத்து கத்தாழஞ் சோத்தை
வதக்கி அதிலே எண்ணெய் விட்டு பிறகு ஈர வெங்காயம் அரிஞ்சு போட்டு பிறகு பாப்பார முள்ளி
வேர், வெள்ளை சாறணை வேர், சிறு தும்முட்டி வேர், சிறுகீரை வேர், அப்புக் கோவைக்
கிழங்கு, மணத்தக்காளி வேர் இதுகளை கருக்கி நசுக்கிப் போட்டு பிறகு வெள்ளுள்ளி கடை சரக்கு
பொடி செய்து போட்டு அளர்விக் காய்ச்சிக் கொடுக்கவும்.

பரணி மருந்து கூட்டும் படி:-

பால் நீர் விஷம் விராகனிடை.ச, நீலகண்ட நீர் விஷம் விராகனிடை.ச,
சூதம் விராகனிடை.ச, நாபி விராகனிடை.ச, நேர்வாளம் விராகனிடை.பக நிலக் கடம்பு

கிழங்கு விராகனிடை.ச, காட்டுச் சோளம் விராகனிடை.ச, பெருங்கிழங்கு விராகனிடை.ச, மறமெரி கிழங்கு விராகனிடை.ச கருப்பு கட்டி பலம்.உ, தேங்காய் ஒடு சுட்ட கருக்கு பலம்.உ இது வெல்லாங் கூட்டி முத்தத் தேங்காய் சுருவி நீஅந்தப் பால் வார்த்து மூன்று நாள் அரைத்து பரனிகளில் வைத்துக் கொண்டு பாம்பு கடித்தால் குன்டுமணி மாதிரி நாக்கில் தேய்க்கவும். கடித்த காயத்தில் மருந்து தேய்க்கவும் விஷ மிறங்கிப் போம். சர்வ சுர

சர்வ சுரத்துக்கு குளிகை:-

யிங்கிலிக்கம் விராகனிடை.க, லவுங்கம் விராகனிடை.க, சாதிகாய் விராகனிடை. க, குரோசாணி ஓமம் விராகனிடை.க, கூட்டி எலுமிச்சம் புளி விட்டு மூன்று நாளரைத்து சுண்டைக்காய் பிர்மாணம் குளிகை பண்ணி அதின் கூட சதகுப்பி மோடி அரைத்து வெதுப்பிக் கூட்டிக் கொடுக்கவும்.

முடுகு தாமரை பலம்.அ, ஆவாரை பட்டை பலம்.க, மாங்கொட்டை பலம். க, சாதிக்காய் விராகனிடை.ங, சாபத்திரி விராகனிடை.ங, லவங்கம் விராகனிட்.ங, கசகசா பலம்.உ அபினி விராகனிடை.க இது வெல்லாங் கூட்டி சூரணம் பண்ணி வேளைக்கு விராகனிடை.உ கொடுக்கவும். பத்தியம் புளி, மோர் தவிர்க்கவும்.

கிராணிக்கு சூரணம்:-

ரச கற்பூரம் விராகனிடை.உ. பாகல் சாறு தாசாளம் இலைச் சாறு செம்பருத்தி யிலை சாறு, சிறுகீரை இலைச் சாறு, வெள்ளை வெத்திலைச் சாறு, இந்த ஐந்து வகை சாறும் விட்டு அரைத்து அகல்க்குள்ளேவைத்து மேலும் ஒரு அகல் மூடி சீலை மண் செய்து குக்குட புடம் வைத்து ஆற விட்டு எடுத்துக் கொண்டு கருப்புக் கட்டி இரண்டு வெத்தி வெத்திலைச் சாறு விட்டரைத்து பதினைந்து குளிகை பண்ணி ஏழு நாள் இரண்டு நேரமுங் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். வென்னீருஞ் சோறும் எட்டா நாள் தலைக்கு தண்ணீர் விட்டு ஈரத் தலையோடே கருங் கோழி கொண்டு வந்து குடல் தலை கால் தள்ளி நசுக்கி மிளகு சீரகம் கொத்தமல்லி, லவுங்கப் பட்டை, வெள்ளுள்ளி கூட்டிச் சாறு கொடுக்கவும்.

கிறந்திக்கு மருந்து:-

பாண்டு காமாலை சோகைக்கு மருந்து:-

அரப்பொடி மோருக்குள்ளே தாம்பிரம் சேர்.உ, ஊறப் போட்டு கிட்டம் பொடி ஒரு படி இரண்டு படி தண்ணீரில் ஊறப் போட்டு எட்டு நாள் சூரிய புடம் வைத்து இரண்டும் ஒன்றாய் வடித்துக் கொண்டு பழைய ஆறிய மாவில் உமியிலாக்கி மூன்று நாள் கொடுக்கவும். கடும் பத்தியம். ஐந்து நாள் பிறகு ஆரோக்கிய கசாயம்.

ஆயில் பட்டை, வக்கணைப் பட்டை, பொட்டங்குரிப் பட்டை ஆடாங் கொடி பெருமருத்துப் பட்டை, கத்தாளஞ் சருகு, சிறு நெருஞ்சி, சிறுகீரை வேர்; கீழாநெல்லி, வேர், நீர் முள்ளி வேர், கருசலாங் கண்ணி வேர், கனம்பில்லு வேர், நிலிவேர், வச்சிர நீலி வேர், செம்முள்ளி வேர் கூட்டிக் கசாயம்.

கிராணிக்கு மருந்து கட்டுங் குளிகை:-

சீறுங் கிறாணிக்கு கட்டு குளிகை யதின் திரமையது தேளி தடைவே. சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், வாய் விளங்கமுஞ் செழிக்கும் குரோசாணி ஓமமும் பேரான அதி விடையம், லவங்கம், சாதிக்காயும், பெரு லவங்கப் பட்டை பத்திரி, பின்னுந் தாளிச பத்திரி ஏலஞ் சாபத்திரி பெரிய மாயி பழக் காயுமே.

நேரான யிலை, கடுக்காய், யக்கலாக் காரம் நெடிய மக்குட்டிய மொக்குடன் நிலையான காமப் பூ கோஷ்டந் தான்றிக்காயும் நெல்லி விரை, பெருங்காயமும், வீரான மாங் கொட்டை யிலவம் பிசின் களிப் பாக்கு வேர் மோடி காசுக் கட்டி வேரி சடைக் கஞ்சா ரேணுக மிவை யெலா வின்னம் விளம்புவேனது கேளுமே.

கச்சூர மதிரம் கசகசை கோரோசனை கவளமும் புளி வித்து தோல் காட்டுக் கொன்னைக் காய் மேல் புருணி நாகேசுரங் கனத்த பேரரத்தையுடனே மிச்சமாம் விளாம் பிசின் வேம்பிசின் மிகுத்த கருவேல் பிசின் முன் சொன்னதிவை யெல்லாஞ் சம பாகமாய்க் கூட்டி மேல் சூட வறுத்திடித்து வைத்து பின்னர சாத்தி மாவிரளி நாவலா வாரையின் பட்டை யுடனே வாழ் கதலி கோரைக் கிழங்கு லந்த பட்டை வளமான கஸ் பிஞ்சு மெயிச்சை பற்ப்டாகமுங் கூட்டி கசாயம் வைத்திறக்கி இது விட்டரைத்து இள நாவிலி லையிலே லெமு புடமிட்டதைக் கொள்ள எந்தக் கிருணியுந் தீரும்.

பளவறனைக் குளிகை:-

பளவறனைக்கு திப்பிலி, மிளகு, ஓமம், மோடி, தம்பராஷ்டகம், கஸ்தூரி மஞ்சள், கடுகுரோகணி, படுபாகல் கிழங்கு திய்ய நெல்லிப் பட்டை மணி புங்கங் காய், சாறனை வேர் மெருகு பாப்பட்டை வேர் பட்டை இது வெல்லாங் கூட்டி சீங்கை பால் உழக்கு வார்த்து அரைக்கவும். ஊனன் தண்டு உழக்கு ஊசி கறண்டி வார்த்து அரைத்து சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை பண்ணிக் கொடுக்கவும். திப்பிலி, மிளகு பொடி ஓமம் கடுகுரோகணி இந்த ஐந்து வகையும் பொன்னிறமாக வறுத்துப் போடவும். கடும் பத்தியமாயிருக்கவும்.

ஊது காமாலை, வறக் காமாலை, பாண்டு சோகைக்கு மருந்து:-

? பிரசினிகுரி போகைக்கு லோக பற்பம்:- அறு வருஷத்து பழைய சிட்டம் பொடி பலம்.தெ, வரமுள்ளி சாம்பல் பலம்.ரு கரிசிலாங் கண்ணி சாம்பல் பலம்.தெ, நீர் முள்ளி சாம்பல் பலம்.ரு, பிரமி சாம்பல் பலம்.தெ,. நாயுருவி சாம்பல் பலம்.ரு, திப்பிலி பலம். 1/2 மூலம் பலம். , தம்பராஷ்டகம் பலம். 1/2 சுக்கு பலம்.க, மிளகு பலம்.ச, கடு கடுக்காய் பலம்.ய, சித்திர மூலம் பலம்.க இது வெல்லாம் கசாயும் பண்ணிக் கொண்டு சூரணம் பண்ணிக் கொண்டு ஒரு குடுக்கையில் வைத்துக் கொண்டு ~~அந்திக்கும் விடிச்சுக்கும்~~ காலை மாலை கொள்ளவும். பத்தியம் பயத்தம் பருப்பு புளிப்பு தவிர்க்கவும். தட்டு மாதிரி கொள்ளவும்.

இங்கிலிகம் விராகனிடை.வ, லவங்கம் விராகனிடை. 1/2, காசுக் கட்டி விரா கனிடை.க, இது கூட்டி உத்தா மணி சாறு தும்பைப் பூ ரசம் முருங்கைப் பூ ரசம் விட்டு நன்றாய் அரைத்து மெல்லிய சீலையில் பிடித்து திரி பண்ணி ஏமு நாள் மூக்கு பிடிக்கவும். லோகமும் வேண்டிய போது எலுமிச்சம் பழஞ் சாத்தில் சுத்தி பண்ணி எடுத்துக் கொண்டு பீங்கானிலே வைத்து நாகப் பட்டை துவைத்து சாறு புளிஞ்சு லோகத்திலே விட்டு சூரிய புட மாக மூன்று நாள் வைத்தால் பற்பமாம். அந்த பற்பத்தை பித்த பாண்டுக்கு நீர் முள்ளி கசாயத்தில் அரைப் பணவிடை கொடுக்கவும். க்ஷயத்துக்கு அதிமதுர கசாயத்தில் கொடுக்கவும்.

கிறந்திக்கு மருந்து:-

6 செருங் கொட்டை படி, 3 எள்ளு படி.க, கொப்பரைத் தேங்காய்.ங, பறங்கிச் சக்கை சேர்.க, வெள்ளறுகு சூரணம் படி. சங்கங் குப்பி சூரணம் படி. பனை வெல்லம் சேர்.ங இது ஏமு வகையும் கூட்டி உரலிலே போட்டு நன்று லேகியம் போலே மர்த்தனம் பண்ணி வைத்துக் கொண்டு ஒரு வேளைக்கு பின்னைக் காய் மாதிரி உயரு 25 நாள்க் கொள்ளவும். எட்டு வகை கிறந்தியும் குணமாம். இதுக்குப் பத்தியம் நல்லெண்ணை பனை வெல்லம் கூட்டவும். கார்ப்பு, புளி ஆகாது.

ஊது மேகத்துக்கு வெள்ளையுந் தண்ணீர் போலே விழும். வாசனை யில்லாமலிக்கும். மிச்சை மேகத்துக்கு கரும்பின் ரசம் போலே விழும். மதுர மாயிருக்கும். வாசனையில்லா மலிக்கும். சந்திர மேகம் மஞ்சள் நிறமாயிருக்கும். மூன்று சுரமே நொய்யரிசி போலே விழும். சுக்கில மேகம் வெள்ளை கலந்து விழும். சுக்கில மேகம் தீபமாய் கொழுந்து விழும். உஷ்ணம் காண்ப்பிகமாவது புளி மேகம். கெடியான மந்தமாயிருந்து விழும். அலாபா மேகம் நூல் போலே விழும். அதிக மேகம் சரீரங் மறைஞ்சு போம். தாக மதிகமாய் உதடு வாய் உலர்ந்து இடுப்பு வலிக்கும். கண்ணெரியும். சரீர மெல்லாம் அனலா யிருக்கும்.

Not Required

சந்தி மேகம் சிலேஷ்மம் சரமேகம் சுண்ணாம்பு தண்ணீர் போலே விழும். நீல மேகம் நீல வர்ணமாய் விழும். கால மேகம் கூரைத் தண்ணீர் போலே விழும். இந்த ஆறும் பயித்திய சம்பந்தமா யிருக்கும். வாதமேகம் நெய் போலே விழும். கூடிய மேகம் விளக்கெண்ணை போலே விழும். மது மேகம் மதிவாய் தேன் போலே விழும். அஸ்தி மேகம் ததமேறின ஆனை மூத்திரம் போலே விழும். இந்த நாலும் வாதத்திநடைய சம்பந்தம் சிலேஷ்மத்திலே பத்து மேகம். ஆறும் அசாத்தியம் பித்த மேகம் ஆறும் சாத்தியம். வாத மேகம் நாலும் அசாத்தியம். இதுக்கு குணம் வயறு பொருமிக் கொள்ளும். மனம் சலிப்பா யிருக்கும். தலை பாரமா யிருக்கும். மேக வியாதி உபத்திரமே தென்றல் அங்க மெல்லாம் சயித்தியமாயிருக்கும். கழுத்து நோகும். உதடு உணர்ந்து போகும். உப்புசமா யிருக்கும். மூர்ச்சையும் வேர்வையுண்டாம். வெகு மூத்திரம் விழும். ஈயும் எறும்பும் மொய்க்கும். கை கால் எரியும். இது வெல்லாம் உஷ்ண மேகமென்று சொல்லப் படும்.

__இதுக்கு மருந்து__:- 28.3.63.

லவங்கம், தேவதாரி வேர் எட்டி, மதுகம், கருவேலம் பிசின், திரிபாலை, மஞ்சள் மரமஞ்சள் சம பாகம் சூரணம் பண்ணி அதுக்குச் சரி நிறை ஆவாரை பஞ்சாங்க சூரணம் பண்ணி அதுக்கு சரி கூட்டி தேன் விட்டு பிசைந்து வைத்துக் கொண்டு வேளைக்கு களஞ்சி மாதிரி இரண்டு நேரமும் ஏழு நாள் பதினொரு நாள் சாப்பிடவும்.

__எரிகுன்ம மருந்து__:-

பசலை

__வசளையிலை__ பரிச்சுக் கொண்டு வந்து ஐந்து மூன்று கழல் பிரமாணம் உருண்டை பண்ணி சக்கரை பலம். ½ சீரகம் காசிடை பொடி பண்ணி சர்க்கரை கலந்து உள்ளங் கையில்விட்டு இதிலொரு உருண்டை வைத்து ஒரு கழஞ்சுக்கு எருமை நெய் விட்டு இந்த மூன்று உருண்டையும் இந்தப் படி மூன்று நாள் கொள்ளவும். கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். பசுவின் பால் கூட்டவும். இதுக்கு குணம் மார் எரிவு, உடம்பு எரிவு, தலை சுத்தும். பயித்தியம் வாய்வு என்னப் பட்டதெல்லாம் தீரும். இது கை கண்டது. ~~கல்~~

__கல்லெரிப்புக்கு மருந்து__:-

ஏலம், தென்னம் பாளை, அரிசியும் அரைத்து இளநீரில் கொடுக்கவும். சேம்பு நெருஞ்சில் வேர் மாவிலிங்கம் வடக்குப் பேர்ற வேர் பெருமுட்டி வேர் ~~சிறு பீளை~~ இருப்பிலை வேர், கூட்டி இருநாழி நீர் வார்த்து உழக்காக் காய்ச்சி மூன்று நாள்குடிக்க கல் விழும். பேயும் கிளா வேர் நாயுருவி வேர், காவாளை வேர் மூன்று வேரும் பதமாக்கி அதிகாலமே எண்ணை வார்த்து முழுகி இந்தப் பரிபாகத்தை வாங்கிப் பாலில் கூட்டிக் குடிக்கவும் கல்லு விழும்.

__குண்டு மணி தின்ன பேருக்கு__:- not required

பருத்தியில் துவைச்சு சாறு கொண்டு நற் கரும்புக் கட்டி கூட்டிக் குடிக்கவும். நாவல் பட்டையும் வேர்க் கொம்பு சுட்டு அரைத்து தேங்காய்ப் பாலில் பிசைந்து குடிக்கவும் ஆறும்

__குழந்தைப் பிள்ளைக்கு கச்சாதி சூரணம்__:-

காட்டு மல்லிகை, வசம்பு, மஞ்சள் கச்சூரிப் பழம் பலம்.க, சுக்கு பலம்.க, திப்பிலி பலம்.க, மிளகு பலம்.க, சீரகம் பலம்.க, கொத்தமல்லி பலம்.க, தும்பராஷ்டகம் பலம்.க, சாதிக்காய் பலம்.க, லவங்கம் பலம்.க, தாளிச பத்திரி பலம்.க, தக்கோலம் பலம்.க, நாகேசரம் பலம்.க, லவுங்கப் பட்டை பலம்.க, லவங்கப் பத்திரி பலம்.க, அதிமதுரம் பலம்.க சந்தன சக்கை பலம்.க, வெட்டி வேர் பலம்.க, வில்வப் பத்திரி வேர் பலம்.க கடுக்காய் பலம்.க தானிக்காய் பலம்.க நெல்லிவிரை பலம்.க, வாய் விளங்கம் பலம்.க, செவியும் பலம்.க, பெருங்காயம் பலம்.க, கல்குண்டு பலம்.க வெள்ளரி விரை பலம்.க, கற்பூர சிலாசத்து பலம்.க, ஏலம் பலம்.க, பறங்கிச் சக்கை பலம்.க, தக்கோலம் விராகனிடை.க, ஏலம் விராகனிடை.உ, லவங்கம் விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.ங, மிளகு விராகனிடை.ச கண்டு பறங்கி விராகனிடை.அ, சுக்கு விராகனிடை.ய சர்க்கரை விராகனிடை.உயரு இது வெல்லாம் சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு அந்தி சந்தி கொள்ளவும்.

Not useful

நஞ்சு விஷத்துக்கெல்லாம் மருந்து:-

கடுக்காய் மஞ்சளு மரைத்து வெந்நீரில் கொடுக்கவும். தண்ணி மிட்டான் கிழங்கு கொண்ட பேருக்கு மாத்து சுக்கு அரைச்சு வெந்நீரில் கொடுக்கவும். செருங்க கொட்டை விழுங்கின பேருக்கு முரக்கு இடிச்சு தண்ணீரில் கரைச்சு தண்ணீர் உள்ளுக்கு கொடுத்து வண்டலை மேலே பூச அல்லது தேங்காய் உள்ளுக்கு மேலும் பூச அல்லது ஆமணக் கெலைய வாட்டி அமணக்கெண்ணை தடவி சர்வாங்கமும் போட்வும். எட்டிக் கொட்டையைத் தின்ன பேருக்கு நாவல் பட்டையை இடிச்சு தண்ணீரில் பிசைந்து அந்தச் சாரம் உள்ளுக்கு கொடுக்கவும். எருக்கம் பால் கொண்ட பேருக்கு அவரி யிலையை அரைச்சுக் கொடுக்கவும். நாகப் பழம் தின்று செரியாத பேருக்கு கடுகு அரைச்சுக் கொடுக்கவும். பச்சை நர்பிக் கெல்லாம் விஷத்துக்கு சிறுகீரை வெவிச்சுத் தண்ணியும் லக்கிரியுங் கொள்ளவும். வாழைப் பழம் தின்று செரியாத பேருக்கு மிளகு தின்னவும். பலாப்பழம் தின்ன பேருக்கும் அதின் கொட்டை தின்று சுக்கு தின்னவும்.

Not useful

பிராஷாண சுத்தி:-

பருத்திக் கொட்டை இடிச்சு பசுவின் பாலில் கரைத்துக் கொடுக்கவும். ஊமத்தங் காய் தின்ன பேருக்கு சீரகத்தை எலுமிச்சம் பழச் சாத்தில் அரைத்துக் கொடுக்கவும். கஞ்சா தின்ன பேருக்கு சுக்கு கசாயம் கொடுக்கவும். கண்ணுக்கு அஞ்சனம் போடவும். அபினி தின்ன பேருக்கு காங்கில் பொகை கொள்ளவும். கண்ணுக்கு அஞ்சனம் போடவும். பிள்ளை விழாமல் நோவாயிருக்கிற பேருக்கு கீழா நெல்லி சமூலமும் நல்லெண்ணெயிலரைத்து கொதிக்க வைத்து உள்ளே முழுங்க பிள்ளை விழும். ஒரிலைத் தாமரை காடி வார்த்து அரைத்து முலை கீழே வயிறு எங்கும் தடவவும். பிள்ளை விழும். வெள்ளெருக்கு வேரும் வெண்காரமும் வெந்நீரிலரைத்து தொப்புளின் மேலே உள்ளங் கை அகலம் தடவும் பிள்ளை விழும். விழுந்த வாறே மருந்தைக் கழுவிப் போடவும்.

Not clear

நீர்க் கட்டுக்கு மருந்து:-

இரண்டு வருஷங் சென்ற பனை வேருங் கொண்டு வந்து பச்சை அரிசி கழுநீர் வார்த்து அரைச்சு எலுமிச்சங் காயளவு தண்ணியில் வெண்காரம் மாடையிடையை பொரிச்சுக் கூட்டிக் கொடுக்க அல்லிப் பூ மலர் திவச்சு வெந்நீர் விட்டு சாறு பிழிந்து வெண்காரமாடை யிடை சர்க்கரை பலம் கூட்டிக் கொடுக்கவும். சங்க வேர் நெருஞ்சில் சிறுபூளை செடி நீர் முள்ளி முருங்கைப் பட்டை கொள்ளு இது வெல்லாம் இரு நாழி தண்ணீர் விட்டு உழக்காக காய்ச்சி வெண்காரம் மாடையிடை சர்க்கரை பலம். கசாயத்தில் கூட்டிக் கொடுக்கவும்.

நீலி இலை அரை ஆழாக்கு பசும் பாலில் கலந்து கொடுக்க பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். சகல ரோகத்துக்கு வடவாக்கினி சூரணம்:-

மெருகன்கிழங்கு, தூதுவளை, மாவிலிங்கி, சிறு குறிஞ்சா, பெருகுறிஞ்சா மிள கறணைப் பட்டை, முக்காவளை, பெருங் கிழங்கு, சிறு கிளா வேர், முள் சங்கம் பட்டை சங்கங் குப்பி வேர், ஆயில் பட்டை, கொடிவேலி, கோரைக் கிழங்கு, அமுக்கிருங் கிழங்கு இது வெல்லாம் வகை ஒன்றுக்கு பலம். க × காவாடு வேர் பலம். , நன்னாரி வேர் பலம். வெள்ளறுகு பலம். பாப்பார முள்ளி விரை நாழி, பேய்ப்புடல் பலம். வ, வில்வ வேர் பலம் கடுக்காய் நெல்லிக்காய், தானிக்காய் வகை ஒன்றுக்கு பலம் இது வெல்லாம் இடிச்சு சூரணம் பண்ணி இதுக்கு கடை சரக்கு செவியம் திப்பிலி மூலம் வாய் விளங்கம் முளகு தும்பராஷ்டகம் சாதிக்காய், சாபத்திரி கிராம்பு சிறுநாகப்பூ, சடாமாங்கிஷம், சிறுதேக்கு கச்சூரம், தீப தாளுகஷி, தேளேசி பத்திரி லவங்கப் பத்திரி கோஷ்டம் ஓமம், லவங்கப் பட்டை, கருஞ்சீரகம் நல்ல சீரகம், ஏலம் இவ்வகை ஒன்றுக்கு பலம். க, வெட்டு வகை சூரனமும் கடை சரக்கு சூரணமும் சரி சமானங் கூட்டி இள வெந்நீரில் மூன்று விரல் கடைப் பிரமாணம் இரண்டு நேரமும் கொள்ளவும். இதுக்கு குணம் சுவாச காசம், உள் காச்சல், ஈளை இருமல், மார் நோவு, கிருணி அக்கினி மந்தம் ஆரோக்கியம், சகல வாதமுந் தீரும். பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

× காவாடு – கொல்லுக்கா வேலி

பூஜை தயிலம் நாலு நாள் மாறலுக்கு:-

வசம்பு காசிடை.ஙு, வேப்பெண்ணை படி.க, கோழி முட்டை.ச ஒரு படி எண்ணையில் கோழி முட்டை ஊத்திக் காய விட்டு பின்பு மருந்தெல்லாம் போட்டு இறக்கச்சே புகைம் போட்டு இறக்கவும். பக்குவத்தில் வடித்து மேலுக்குப் பூசவும். சட்டி காய விட்டு இந்தக் கடுகும் எண்ணையும் குத்திப் புகை பிடிக்கவும் சன்னி தீரும். கறண்டி சுட வைத்து உச்சியில் விடவும். பல்லுக்கு விடம் தீரும்.

வெள்ளி ஞாயிறு செவ்வாயிலே ஒரு நாள் உத்தாமணி யில்லையாவது வேர் ஆவது காக்கை நிழலிலே விஷங் காட்டிவும் வாய் பேசாமல் பறித்து கட்ட தீரும்.

நிலாவரைச் சூரணம் துளசிச் சாறும் கொள்ளக் குளிரும் வெதுப்பு தீரும்.

பைத்திய வாய்வு நிற்கும் ஏலாதி சூரணம்:-

ஏலம், லவுங்கம், லவுங்கப் பட்டை, லவுங்கப் பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி திப்பிலி மூலம், கடுக்காய், தானிக்காய், நெல்லிக் காய், தானிக்காய், சாதிக்காய் கோரைக் கிழங்கு, செங்கழுநீர், கோஷ்டம், அதிமதுரம், கற்பூரம், பொதிக்க வேண்டினால் சிவத வேர் பேதிக்க வேண்டாத பேரது சந்தனம் இது எல்லாம் சமன் பாகமாக கூட்டி இடிச்சு வஸ்திர காயம் பண்ணி இந்த மருந்து இரண்டு பங்கும் சர்க்கரை ஒரு பங்கும் கூட்டி இள வெந்நீரில் கொள்ள பயித்திய வாய்வு நிற்கும். பைத்தியத்துக்கு பாண்டு காமாலைக்கும், சிலேஷ்மத்துக்கும் இதுகள் கொள்ளத் தீரும்.

கையாந்த கரை உலர்த்தி சூரணம் பண்ணி வெள்ளாட்டுப் பாலில் காய்ச்சி அசனத்துக்கு வேண்டின தெல்லாம் இரண்டு நேரமும் வாதத்துக்கு கொள்ளவும். பேதியாகாமலிருந்தால் விரேசினத்துக்கு நாலி லொன்றில் ஒரு நாளைக்கு செயலரிஞ்சு கொடுக்கவும். இதுக்கு மகோதரம் நீராமை நீர்க் கோவை, பெரு வயறு விஷ பாகம், வீக்கம், பாண்டு காமாலை தீரும். இப்படி இருபது நாள் கொள்ளவும். இதுக்குப் பத்தியம் காரப்பு, புளிப்பு பாக்கு புகை தவிர்க்கவும்.

கிறுனிக்கு உள் காச்சலுக்கு ரோகத்துக்கு ஈளை இருமலுக்கு மருந்து:-

கையாந்த கரை வேர் நருக்கி நிழல் உலத்தலாய் உலர்த்தி கூரெள்ளு எண்ணையின் படி எண்ணை காய வைச்சு தேங்காய் பாதிக் காய் திருவி எண்ணையில் போட்டு கருகாமல் முன்னே நிழல் உலர்ந்த வேர் பலம்.உ, எண்ணையில் போட்டு பதத்தில் வடித்து ஆழாக்காகிலும் உழக்காகிலும் உரியாகிலும் நாழி யாகிலும் ராக்காலம்அசனந் தவிரவு எண்ணை உள்ளுக்கு கொள்ளவும். விடிஞ்சவாறே பேதிச்சால் செயலரிஞ்சு பத்தியம் கொள்ள பேதியாமல் உபத்திரமானல் பேதிக்குக் கொடுக்க இந்தப் படி சீரங்கள் ரோகங்கள் அரிஞ்சு கொடுக்கவும். முதல் வீக்கத்துக்கு பாலில் கொடுத்த அவிஷதம் வீக்கங்கள் வத்தின பேருக்கு இந்த எண்ணை அவனுக்கும் செயலரிஞ்சு எண்ணை இரண்டு நேரமாகிலும் ராக்காலமாகிலும் செயலரிஞ்சு கொடுக்கவும் சகல ரோகங்களுந் தீரும். செயலரி மாங்கிஷம் மரக்கரி களாகிலும் விடவும்.

திப்பிலி ரசாயனம்:-

கோழை கட்டுகிறதுக்கு ஈளை இருமல் மார் நோவுக்கு:-

திப்பிலி பலம்., சர்க்கரை பலம்.அ, வாய்விளங்கம் பலம்.ச, சுக்கு பலம்.ச கண்டு பறங்கி பலம்.ச, சீரகம் பலம்.ச, மிளகு பலம்.ச, திப்பிலி மூலம் பலம் உ, திஅரப்பொடி பலம்.உ, கருசலாங் கண்ணி பலம்.உ, ஏலம் லவுங்கம் லவுங்கப் பத்திரி சிறுநாகப்பூ இவ்வகை ஒன்றுக்கு பலம். இடிச்சு சூரணம் பண்ணி தேனில் கொள்ளவும். சுவாச காசம் சேஷ்மம் எல்லாந் தீரும்.

அச்சம் பசுவின் நெய் ஒரு படி காயச்சே ஆழாக்கு கய்யாந்த கரை சாறு விட்டு பதமான வாறே கலக்கம் ஏலம், சீரகம், கருஞ்சீரகம், செங்கழுநீர், கோஷ்டம், லவங்கப் பட்டை, சாதிக்காய், சாபத்திரி, கிராம்பு, கோரோசனை இவ்வகை ஒன்றுக்கு பலம்.வ, சீரகம் பலம்.க இது வெல்லாம் இடித்து சூரணம் பண்ணி நெய்யில் தூவி பத

சர்க்கரை பலம்.௩ அதில் போட்டு இறக்கவும். புளிப்பு தவிர்க்கவும். பத்தியம் துவரைப் பருப்பு தண்ணீர் மிளகு பன்னீர் கூட்டவும். செயலரிச்சு பயறுகிலுங் கூட்டவும். செருக்கி தனக்கின நெய்யில் கொள்ளவும். கள்ளிப் பால் கள்ளிக் கொழுந்து தின்னவர்க்கு நாகல் பட்டை கொண்டு வந்து காடியிலாவது வென்னீர் தண்ணியிலாவது பட்டை இடித்து பிசைந்து வடி கட்டி ஆழாக்கு தண்ணீர் கொடுத்தால் குணமையாகும்.

மகா_விஷ்முடி_தயிலம்:-

எட்டிச் சாறு.௩, என்ணை.௩, முள்ளங்கிக் கிழங்கு எலுமிச்சம் பழம், முருங்கை வேர், தண்ணி மிட்டான் கிழங்கு, வெள்ளை குன்னி யிலை, விழுதியிலை வெங்கத் தயிலம் சாட்ட றணைச் சாறு சித்திர மூலம் நொச்சில் கொடிக் கள்ளி துளசி அமுக்கிறு யிலை, தழுதாழை யிலை ஆடாதோடையிலை பசு மஞ்சள் சாறு காந்த யிலை சீயிலை கையாந்த கரை உத்தா மணி வெள்ளை சாட்டணை பாகல் இலை, காவாளை துத்தியிலை, ~~துத்தியிலை~~, செம்பையிலை, விஷ்ணுகாந்தி, பொடுதலை பிறண்டை வாத நாராயண யிலை சதுரக் கள்ளி இலை, குப்பி மேனியிலை, மணத்தக்காளி இலை, குருந்த இலை, வேளையிலை, இவ்வகை ஒன்றுக்கு இலைச் சாறு நாழி வெட்டு மருந்த சித்முட்டி வேர் அய்வனம் ஆயில் பட்டை குருஞ்சாவகை.௩, உத்தாமணி தெசமூலம், வருளபுங்கு மணி புங்கு, சாட்டறனை செம்பிளிச்சம், கொடிவேலி, அமுக்கிற காகமாரி தோயில ஊமத்தை கொட்டைக் கரந்தை ஆடு தின்னப் பாளை, நொச்சில் கருநொச்சில் ஆடாதோடை முக்கா வாளை, கொள்ளுக் காவாளை காட்டாமணக்கு வட்டத் திருப்பி மிளகறணை குடசப் பாலை மட்டிப் பிராய், கிந்தை சிறு சித்தி வேர், சித்தி ஆதன்டை அழிஞ்சில் முருங்கை பம்பை துராய் வெள்ளைக் காக்கணம் கருங்காக்கணம் கிலுகிலுப்பை வட்டக் கிலு கிலுப்பை சங்கங் குப்பி கொடிப் பாலை நன்னாரி முள் சங்கு மகள ஆனர சகை கொன்றை பேயத்தி நிலக் கடம்பு வெட்பாலை அம்மையார் கூந்தல் மருதம் கடப்பங் கொட்டை பொருசு தில்லை வேர், சிறு தும்முட்டி வேர், பிறண்டை சித்திர முலம் காட்டுப் பாகல் குன்னி வனிக ௩ பெருங் காக்கணம் கஞ்சிங் கிழங்கு வேம்பு வகை.௩, களி வக்கணை வெள் வக்கணை இவ் வகை வேர் பலம்.அ இது வெல்லாங் குறுக நறுக்கி குழுரத் துவைத்து மூன்று காலுக்கு எடுத்த நாற்கலத் தண்ணீர் விட்டு அதில் குமுனி என்ணையும் குமுனி எட்டிப் பழம் சா ம் விட்டு எட்டி லொன்றாய் காய்ச்சி கசாயத்தை இறுத்து கசாயத்தில் முன் இலைச் சாறு எட்டிப் பழச் சாறும் என்ணையும் மூன்று நாள் எரிக்கவும். கலுக்கமுங் கூட்டி எரிக்கவும். இதுக்கு கலக்கம் சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், செவியம், வாய்விளங்கம், சடாமாஞ்சி, கிராம்பு, மந்திஉட்டி, அதிமதுரம், சிறுதேக்கு, கடுகுரோகணி, வசம்பு, செங்கழுநீர் கோஷ்டம், அகில் கட்டை, அதிவிடையம், சங்கு வேர், அரத்தை சாம்பிறணியும் பெருங்காயம், மஞ்சள், மரமஞ்சள், சதகுப்பி, மருளங் கிழங்கு, நிலவேம்பு, திப்பிலி மூலம், ஓமம், இலைக் கடுக்காய், குங்கிலியம் இந்துப்பு, வெள்ளை வெங்காயம் காட்டு வாகை தடல் நுரை பஞ்ச லவணம் செம்புராப் பட்டை அரக்கு சீரகம் கம்பி பிசின், கஸ்தூரி மஞசள் நல்ல பாம்பு கண்டம், அவரி பிசின் நேர்வாளம், வெட்டி வேர், விலாமிச்சம் வேர் இது வகை ஒன்றுக்கு பலம்.உ இடிச்சு சூரணம் பண்ணி அந்தக் கசாயத்தில் போட்டு மூன்று நாள் காலாக்கினி யாக எரி விட்டு அதில் பசுவின் பால் முக்குறுணி விடவும். பால் விட்ட பிறகு மூன்று நாள் தீபாக்கினியாக எரிவிடவும். பின்னை மூன்று நாள் கருகாமல் எரி விடவும். ஆக இருபத்திரண்டு நாள் எரி விடவும். கடுகு மிளகு பதம் இருக்க விட்டு இறுத்துக் கொள்ளவும். இதுக்கு குணம் அற்புத வாய்வு, பாரிச்ச வாய்வு, பாஷாசிகம் வாத மென்னப் பட்டதெல்லாம் தீரும். இதுக்கு காரப்பு, புளிப்பு தவிர்க்கவும். விளை யரிஞ்சு உள்ளுக்கு கொள்ளவும். மேலுக்குப் பூசவும்.

பான்டுவ_ரோகத்துக்கு_ஆரித்திர_லேகம்:-

இஞ்சி நாற்த்தம் பழம் அவிரி சாட்டறணை கற்பூர வள்ளி சடாமாஞ்சி பேயத்தி பெரு நெருஞ்சில் சிறு நெருஞ்சில், நீர் முள்ளி உத்தாமணி சிவதை நிலை ஆவாரை இவ் வகை ஒன்றுக்கு சாறு நாழி இவ்வகை எல்லாம் சீலை வடியிட்டு எட்டி லொன்றாக காய்ச்சி இதில்

பழைய வெல்லம் பலம்.உயரு, போட்டு பாகு பதத்தில் கலக்க சூரணம். ஏலம், கிராம்பு, சிறுநாகப்பூ, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு, தாளிச பத்திரி, சித்திர மூலம், கருஞ்சீரகம், லோக மண்டூரம், வங்க பற்பம் இது வெல்லாம் வகை ஒன்றுக்கு பலம்.க இடிச்சு சூரணம் பண்ணி முக்கால் சேர் தேன் விட்டு பதத்திலிறக்கவும் நேரம் ஒன்றுக்கு மூன்று விராகனிடை கொள்ளவும் புசி பாகும் விரோசனமாம். இதுக்கு குணம் விஷபாண்டு ரோகம் சூலை இளமாரில் உளைப்பு சுவாச காசம், இதுகளெல்லாம் தீரும். சேஷ்ம ரோகந் தீரும். இதுக்குப் பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

<u>புண் குட்டோர மென்னப்பட்டதுக் கெல்லாம் எண்ணை பண்ணும்படி</u>:-

சுத்தி கெந்தகம் பலம். கடுக்காய் நெல்லிக்காய், தானிக்காய், சிறுகீரை வேர், சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலம், கிராம்பு, சிறுநாகப்பூ, சணப்பம் விரை, சேராங் கொட்டை, சித்திர மூலம் வகைக்கு பலம்.ந இது வெல்லாம் இடிச்சு சூரணம் பண்ணி ரோகஞ் செயலறிஞ்சு விராகனிடையாவது அனுபானம் தேனிலாவது வெண்ணெயிலாவது வாழைப் பழத்திலாவது நெய்யிலாவது கொடுக்கவும். இது அனேகம் குணம். குணம் சூலைக் கட்டு எனப்பட்டதெல்லாம் புண் குட்டோரம் எல்லாம் தீரும். பத்தியம் எண்ணை, புளிப்பு, உப்பு கார்ப்பு, கடுகு, தவிர்க்கவும்.

<u>புண் கூடாததுக்கு</u>:-

மூசு சேர் கொண்ட படியில் ஒரு படி எண்ணை காயச்சே காசிக் கட்டி பலம்.உ, வெள்ளைக் குங்கிலியம் பலம்.தெ, துருசு பலம்.வரு, கருஞ்சீரகம் பலம். கடுக்காய் தூள் பலம். துளிப்பாக்கு பலம்.வ, கொட்டைக் கரந்தை இடிச்ச சாள் பலம்.உ, கருநொச்சில் பலம்.உ, இது வெல்லாம் இடிச்சு சூரணம் பண்ணி உன்னையில் தூவி கருகாமல் பதத்தில் இறக்கு பழைய வெல்லம் பலம்.உ கூட்டி இறக்கி ஒரு நேரம் ஒரு கறண்டி கொள்ள மேல் புண் உள் புண் சூலைக் கட்டு, கை கால் முடங்கல் தீரும். இதுக்கு பத்தியம் கார்ப்பு புளிப்பு தவிர்க்கவும். பருப்புத் தண்ணி எண்ணைப் புண்ணுக்கு கூட்டவும்.

<u>பெண்டுகளுக்கு புண் குட்டாரம். கெற்பிணி ஸ்திரீகளுக்கு நெய் பண்ணும்</u>

பசுவின் நெய் சேர், கோமியம் ஒரு படி, நெய் காயச்சே ஒரு குத்து கருநொச்சில் இலை போட்டு கருகாமல் வெந்தவாறே இலையை எடுத்துப் போட்டு பறங்கிச் சக்கை பலம்.ச. சிறுக வெட்டி நெய்யில் போட்டு கருகாமல் பழைய வெல்லம் பலம் கூட்டி பதத்தில் இறக்கி வடிச்சு கடுகை அரைத்து நெய்யில் கலந்து வெடிவாறே செரிக்கத் தக்கன நெய் எழு மாசம் கெற்பமான வாறே நெய் கொள்ளவும். இப்படி கொரை மூன்றுங் கொள்ள கழுவினது போல் பிள்ளை பிறக்கும்.

<u>மருந்தீடு விஷ எண்ணை பண்ணும்படி</u>:-

Not useful

உழக்கு எண்ணையில் ஒரு படி நாயுருவி வேர் சதைச்சு எண்ணையில் போட்டு கருகாமல் பதத்தில் வடிச்சு அஸ்தமான வாறே அசனம் பண்ணி பாக்குப் போட்டுக் கொண்டு வரிஞ்சு போட்டு படுக்கப் போகச்சே உழக் கெண்ணையுங் கொண்டு நித்திரை பண்ணவும். வெடிவாறே பேதி நாலஞ்சு தரம் மருந்தீடு உண்டானதெல்லாம் விழும். மேலுக்கு வென்னீர் வார்த்துக் கொண்டு கொள்ள தண்ணீர் மிளகுநீ கூட்டி மத்தியானத்துக்கு அசனம் பண்ணவும். இதுக்கு குணம் உடம்பு வகுத்தில் இருமல் சோறு இறக்கமில்லாததுக்கு எல்லாம் குணமாம்.

<u>மூர்ச்சை வாயு கால் கை அசையாமல் நினவு யில்லாத பேருக்கு தயிலம்</u>:-

எண்ணை உரியில் கொடி வேலம் பட்டை, பச்சைப் பட்டை பலம்.உ இடிச்சு மிளகு பலம். கூட்டி கருகாமல் பதத்தில் இறக்கி தட்டிடையாவது செயலறிஞ்சு இரண்டு நேரமும் கொள்ளவும். இதுக்கு மூர்ச்சை வாய்வும் வதுமுகணையில் பாஷாகிதம் பாரிச்ச வாய்வு தாள் பிடிப்பு பிடரி யிசிவும் எல்லாந் தீரும். இதுக்கு பத்தியம் கார்ப்பு புளிப்பு தவிர்க்கவும்.

<u>மூகா பஞ்சரக தயிலம்</u>:-

மகா பஞ்சாறக தயிலம்:-

எருக்கு சமூலமும் ஊ க்கு.உ, கசக்காய், சித்திரமூலம், சாட்டறணை அமுக்கிரு, ஆதண்டை நொச்சில் முருங்கை உத்தாமணி, சித்தாமுட்டி, மாவிலிங்கி அவிரி குப்ப மேனி இவ்வகை ஒன்றுக்கு வேர் பலம்.அ இது வெல்லாந் துவைச்சு இரு அ ணி தன்னீர் விட்டு எட்டிலொன்றுக காய்ச்சி கசாயத்தில் பால் நாழி எண்ணை நாழுி விட்டு கலக்கம் ஏலம், கிராம்பு, தகரை விரை, செங்கழுநீர், கோஷ்டம், இந்துப்பு, மிளகு, கற்சோரம் கம்பி, பிசின், கஸ்தூ ரி மஞ்சள், திப்பிலி மூலம், திப்பிலி, செவியம், மரமஞ்சள், மந்திஉஷ்டி இலை, கடுக்காய், சித்திரமூலம், ஓமம், வசம்பு, வெட்டி வேர், விலாமிச்சி வேர், நல்ல சந்தனம், சிகப்பு சந்தனம் இவ் வகைக்கு பலம். இடிச்சு எண்ணையில் கலந்து கருகாமல் பதத்தில் வடித்து இதுக்கு குணம் சுரனி வாய பக்ஷக்ஷி கீதம், பாரிச வாய், கீல் வாதம், ஐம்பத்தெட்டு வாதமும் தீரும். குணமறிஞ்சு தலைக் கவசதிக் கட்டவும். மேலுக்கு பசவும். இதுக்கு பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

குண்டலாதி லேகியம்:-

மூளச்சலகம் வேர் பலம்.ருய, கண்டங்கத்திரி வேர் பலம்.உரு, முன்னை குவளை பாதரி நன்னாரி நெரிஞ்சல் இவ்வகை இந்த எ வகைக்கு பலம்.ரு, கீழா நெல்லி பலம். ½ சிறு தேக்கு பலம்.ரு, திப்பிலி பலம்.½, திப்பிலி மூலம் பலம்.ய, இது எல்லாம் கருக நருக்கி குமர இடித்து தண்ணீர் விட்டு எட்டிலொன்றுய் காய்ச்சி இதில் பழைய வெல்லம் பலம்.நய, பாகு பதமான வாறே இதுக்கு கலக்கம் திப்பிலி புலம்.உ, கொடிவேலி பலம்.உ, கூந்தையஞ் நீர் பலம்.க, கற்கடாசிங்கி பலம்.க, மிளகு புலம்.க, சுகுகு பலம்.உ, இவ்வகை எல்லாம் இடித்து சூரணம் பண்ணி பாகில் தூவி இதில் வேண்டிய தேன் விட்டு பக்குவமான வாறே இறக்கி தினம் பின்னைக் காயளவு கொள்ளவும், சுவாச காசம், மார் நோவும் மந்தானிக்கினி கிராணி என்னப் பட்டதெல்லாம் தீரும். பத்தியம் கார்ப்பு புளிப்பு தவிர்க்கவும்.

சுரத்துக்கு மெருகென்னை பண்ணும்படி:-

மெருகன் கிழங்கு பலம்:சயஅ, முராய் பலம்.ய, அமுக்கிருய் பலம்.ய, அரத்தை பலம்.ரு, நெய் சட்டி பல்ம்.ரு, துளசி பலம்.ய, நொச்சில் வேர் பலம்.ரு, வெள்ளுளி பலம்.ய, நாறத்தை யிலை பலம்.ரு. இது எல்லாம் நருக்கி எட்டு வள்ளந் தண்ணீர் விட்டு நாலத் தொன்றுக காய்ச்சி இதில் கலக்கம் கடுகுரோகணி அதிவிடையம், வட்டந் திருப்பி, மந்திஉஷ்ட்டி, சதகுப்பி, மரமஞ்சள், செங்கழுநீர் கோஷ்டம், வாய்விளங்கம், கொத்தமல்லி, விரை, அதிமதுரம், வெள்ளுளி, ஒட்டரை, திப்பிலி, சந்தனம், வெட்டி வேர், விலாமிச்சம் வேர், இவ்வகை கூட்டி இடித்து சூரணம் பண்ணி கலக்கம் வகை ஒன்றுக்கு பலம். இடித்து சூரணம் பண்ணி கசாயத்தில் எண்ணை குறுணி பசுவின் பால் குறுணி விட்டு சூரணம் போட்டு எரித்து பதத்தில் வடித்து உள்ளுக்கு கொடுத்து மேலுக்குப் பூச சகல சுரமுந் தீரும்.

சிந்தாதி லேகம், வில்வாதி லேகம்:-

புளியிலை அ. க்கு.ங, பழ. இரும்பு ஊ க்கு.2 இதுக்கு தண்ணீர் தூறு வார்த்து எட்டிலொன்றுக காய்ச்சி இதில் பழைய வெல்லம் பலம்.நய, போட்டு பாகு பதமுக காய்ச்சி இதுக்கு கலக்கம் திரிபலம், திரிகடகம், திரிசாதம், திப்பிலி மூலம், பெருங்காயம், சத்திய சாரம், ~~யவக்ஷாரம்~~ யவாக்ஷாரம், இந்துப்பு, பெட்டிஉப்பு, கொத்தமல்லி விரை, செங்கழுநீர் கோஷ்டம், நல்ல சீரகம், கருஞ்சீரகம், சாதிக்காய், கிராம்பு, முந்திரி பழம் இவ் வகை ஒன்றுக்கு பலம்.உ, கூட்டி இடிச்சு சூரணம் பண்ணி இஞ்சி பலம்.ரு இடிச்சு சாறு புளிஞ்சு இந்த சாற்றை பாகில் விட்டு அதில் சூரணந் தூவி தேன் உரிய விட்டு லேகம் பக்குவமான வாறே இறக்கி லோகம் பலம்.க, மண்டூரதம்பலம்.க, கலகத்தில் கூட்டி பின்னைக் காயளவு கொள்ளவும் தீரும். இந்த லேகத்தை பதினைந்து நாள் தானிய புடத்தில் வைத்துக் கொள்ளவும். இதுக்கு பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

மகா பீதிகா தயிலம்:-

வில்வ வேர் பலம்.சய, யிழையச் சீவி பதக்கு தண்ணீர் வார்த்து எட்டிலொன்றுக

காய்ச்சி அதில் பழைய வெல்லம் பலம்.நய, கூட்டி பாகுபதமான வாறே இதுக்குக் கலக்கம் சுக்கு பலம்.ந, மிளகு பலம்.க, திப்பிலி மூலம் பலம்.உ ஏலம் விராகனிடை.உ, செவியம் பலம்.க, சித்திர மூலம் பலம்.க, தாளிச பத்திரி பலம்.தெ, சிறுநாகப்பு பலம்.வ, சீரகம் பலம்.உ, லவுங்கப் பத்திரி விராகனிடை.உ, சாதிக்காய் விராகனிடை.உ கிராம்பு விராகனிடை.க இது சூரணம் பண்ணி கசாயத்தில் தூவி பதம் பார்த்து தேன் விட்டு இறக்கவும். ரோகமறிஞ்சு நெய் விடுவது நாழியாவது உரியாவது விட்டு இதுக்கு குணம் அரோசிகம், வாந்தி, தலை சுத்து, மார் நோவு, எரிவு, கிறுணி பழ வெதுப்பு, சுவாச காசம் எல்லாம் தீரும். செலறிஞ்சு விராகனிடையாவது இரண்டு விராகனிடையாவது கொள்ளவும். இதுக்கு பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

தெசமூலம், செம்பிளிச்சம், சந்தனம், சிறுகாஞ்சொறி வேர், களாவிறுது, சித்திர மூலம், நொச்சில் வேர், அமுக்கிற முருங்கை வேர், சாறடை வேர் சுக்கு நன்னாரி வேர் கொள்ளுதினை அரிசி உழுந்து இது வெல்லாம் வகைக்கு பலம்.ய, விருக்காடு கூட்டி இதுக்கு சரியாக அரத்தை கூட்டி இது இரண்டு வகைக்கு சமனைகவும் வயில் பட்டை கூட்டி முக்கல தண்ணியில் போட்டு எட்டிலொன்றாக காய்ச்சி பத்துக்கு நாழி எண்ணை விட்டு பத்து மரக்கால் நாழி வெள்ளாட்டுப் பால் வார்த்து காயச்சே கலக்கம் குங்கிலியம், செம் புளிச்சந் சந்தனம், அகில், சந்தனம், வெள்ளைக் கடுகு, அரத்தை வட்டத் திருப்பி, ஏலம் கிராம்பு, சிறுநாகப்பு, சிறுதேக்கு, சுக்கு, திப்பிலி, மிளகு, பொன்னு மத்தை வேர், மந்திஉட்டி, செங்கழுநீர் கோஷ்டம், திப்பிலி மூலம், செவியம், கஸ்தூரி மஞ்சள், கம்பி பிசின், தகரை விரை, நழும்பிசின், சாதிலிங்கம், சடாமாஞ்சி, முந்திரிப் பழம், அஉட்டவ வாகும், நல்ல சந்தனம், மஞ்சள், காரீயம், கற்சோரம், நன்னாரி கஸ்தூரி, குங்குமப்பு, இவ்வுகை ஒன்றுக்கு பலம்.க, ஒன்றே கால் இடிச்சு தயிலத்தில் தூவி மூன்று நாள் கருகாமல் எரித்து புதத்தில் வடித்து உள்ளுக்கு கொள்ள மேலுக்கும் இட தலைக்கு இட்டு முழுக வசத்திக் கட்ட இதுக்கு குணம் நீர் வாய்வு பீசினம், தந்த வாய்வு, தலை சுத்து, குடசல் சகல பயித்திய காமாலை பாண்டு ரோகம் உ.ளக் காச்சல் சுவாச காசம் என்னப்பட்டதெல்லாம் தீரும். நசியம் பண்ணவும். இதுக்குப் பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். வாதம் என்பத்திநாலும் இந்த தயில மிடத் தீரும்.

வாந்தி பயித்திய வாய்வுக்கு ஆத்திரச் சூரணம்:-

எண்ணை படி.க க்கு அரக்கு படி.ச பொடி செய்து நயஉ படி தண்ணியில் ராவும் பகலும் ஊற விட்டு முக்கால் பிசறி யிறுத்துக் கொண்டு எமு வாட்டி வடியிட்டு அந்த தண்ணீரில் எண்ணை விட்டு நாலு படி தயிர் மேல் தெளிவு விட்டு நாழியால் விட்டு ஐந்து பலம் விலாமிச்சம் வேர் இடிச்சு விட்டு எரித்து பக்குவமான வாறே இதில் கலக்கம் அதிமதுரம் மஞ்சள் மரமஞ்சள் ஏலம் சடாமாஞ்சி அரக்கு கடுகுரோகணி நல்ல சந்தனம், செம்பிளிச் சந்தனம், சதகுப்பி செங்கழுநீர் கோஷ்டம், இந்துப்பு, மந்திஉட்ட கோரைக் கிழங்கு, கோரோசனை, வீனை கஸ்தூரி பச்சை கற்பூரம், குங்குமப்பூ, சீரகம், கொத்தமல்லி, சிறுநாகப்பூ வாய் விளங்கம், இவ் வகை எல்லாம் வகை ஒன்றுக்கு பலம்.வ இடிச்சு சூரணம் பண்ணி காசயத்தில் போட்டு மெழுகு பதம் ஆன வாறே இறக்கிக் கொண்டு இரண்டு விராகனிடை ஆழாக்கு பசுவின் பாலிலே காலம்பறக் கொள்ளவும். மேலுக்கு பூசவும். இதின் குணம் உள்க் காச்சல் சுவாச காசம், பாண்டு ரோகம் இதுகளெல்லாம் தீரும். இதுக்கு பத்தியம் கார்ப்,பபு, புளிப்பு, தவிர்க்கவும்.

இஞ்சி பலம்.16 மேல் பறணி சீவி சிறுக அரிந்து நெய்யில் கருகாமல் பொரித்துக் கொள்ளவும். இதுக்கு கலக்கம் சர்க்கரை பலம்.அ, சாதிக்காய் பலம்.1/2, ஏலம் 1/4 பலம். கொடிவேலி பலம்.1/2, ~~தவசு ஊரம்~~ நவச்சாரம் பலம்.1/2 பேரீச்சம் பலம்.1/2, சீரகம் பலம்.1/2 வில்வ வேர் பலம் 1/2 இது எல்லாம் கூட்டிச் சூரணம் பண்ணி இஞ்சி பொரியை அரைத்து இந்த நெய்யும் சர்க்கரையும் இந்த சூரணமும் கூட்டி பிசறி ஒரு கொட்டைப் பாக்களவு கொள்ள வாந்தி அரோசிகம் மார்நோவு எரிவு தலை சுத்து உள் காச்சல் இருமல் சுவாச காசம் சகல வாதங்களும் தீரும். இதுக்கு பத்தியம். கார்ப்பு, புளிப்பு, தவிர்க்கவும்.

மிளகு பலம் 1 1/4 திப்பிலி பலம் 3/4 சுக்கு பலம் 1/2

<u>தாளிச சூரணம்</u>:-

தாளிச பத்திரி, சாதி பத்திரி, புளியங் கொட்டை, லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி, காட்டெருமைப் பால், தீபதாளகம், கிச்சிலி சூரப் பழம், மாதளம் பழம், ஒடு சாதிக்காய், கற்கட சிங்கி, கடுக்காய், கருஞ்சீரகம், சீரகம், நெல்லி வத்தல், இது வெல்லாம் சரி சமானங் கூட்டி சூரணம் இரண்டு பங்கும் சர்க்கரை ஒரு பங்கும் கூட்டி இந்த சூரணத்தை தேனிலாவது வெந்நீரிலாவது செயலரிஞ்சு விராகனிடையாவது இரண்டு விராகனிடையாவது கொள்ளுவது இதக்கு குணம் பித்த காசம், ஆரோசிகம், அதிசாரம் சிரோவாயு மார் நோவும் இதகளெல்லாம் தீரும். இதுக்கு பத்தியம் கார்ப்பு, புளிப்பு, தவிர்க்கவும்.

மாதளம் பூ சாறு பசுவின் பால், பசுவின் நெய் இது மூன்றும் சமனுக கூட்டி கொதிக்க வைத்து இதில் கலக்கம் அதிமதுரம், செங்கழுநீர், கோஷ்டம், ஏலம், கிராம்பு, சிறுநாகப்பூ, வாய் விளங்கம், கருஞ்சீரகம், குங்குமப்பூ, கோரோசனமும் இது இரண்டும் பணவிடை மத்தது எல்லாம் வகை ஒன்றுக்கு காசிடை. 1/2 இது வெல்லாம் இடிச்சு நெய் அவிடிதத்தில் போட்டு பதத்தில் வடித்து நாசியில் கட்ட பீனிச மென்னப் பட்டதெல்லாம் தீரும். இதுக்கு பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

<u>பீனிச வாய்வு அசுவ கெந்தாதி சூரணம்</u>:-

கிராம்பு, சிறுநாகப்பூ, ஏலம், மிளகு, திப்பிலி, சுக்கு, அமுக்கிரா 1 ஒன்றுக் ஒன்று ரெட்டிப்பு விழுக்காடு கூட்டி இடிச்சு வஸ்திர காயம் பண்ணி, இவ்வகை பலம் 64க்கு சர்க்கரை. பலம். ௰௨ கூட்டி சூரணம் பண்ணி செயலரிஞ்சு கூட்டவும். இதக்கு குணம் உள் காச்சல் பழங் காச்சல் இருமல், மார்நோவு, சுவாச காசம், அக்கினி மந்தம், வாத மென்னப் பட்ட தெல்லாம் தீரும். இதுக்குப் பத்தியம், அவரைப் புருப்பு, பால் நெய் பயறு கூட்டவும்.

வச்சாதி லேகம் அமுவைக்கு கொடுக்கவும்.

<u>ஊது காமாலைக்கு</u>:-

ஆடாதோடை பலம்.௰௰, கரைத்து வடித்து குறுகக் காய்ச்சி இதில் கலக்கம் ஏலம், லவுங்கம், லவங்கப் பட்டை, சீரகம், இலவம் பிசின், சிறுநாகப்பூ, கொத்தமல்லி, சுக்கு; மிளகு, திப்பிலி இவ்வகை ஒன்றுக்கு பலம் 3 கூட்டி சூரணம் பண்ணி வெந்த கடுக்காய்க் கொட்டை போக்கி அரைச்சு பாகில் கலந்து கொள்ளவும்.

<u>ஊது காமாலைக்கு</u>:-

ஊசிக் கொத்தான் விரை, கருஞ்சீரகம், கெண்டை மீன் இது நாலுங் கூட்டி அரைச்சு உருண்டை பண்ணி களஞ்சிப் பிரமாணம் மூன்று நாள் கொடுக்கவும். பசுங் கோமியம் வெள்ளாட்டுக் கோமியம் வகைக்கு பலம்௮ மருத மரத்துப் பட்டை கெச்சக் காய், வேர், சாதிக்காய், விராகனிடை.௧, லவங்கம் விராகனிடை.௧, பட்டை வகை இரண்டுக்கு சேர்.௨ கூட்டி நன்றுய் அரைச்சு கோமியத்தை அஷ்ட பாகமாகக் காய்ச்சி பிறகு மருந்தைப் போட்டு எடுத்து வைத்துக் கொண்டு இரண்டு வேளைக்கும் களஞ்சிப் பிரமாணம் ஒன்பது நாள்க் கொள்ளவும். கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

<u>மஞ்சக் காமாலைக்கு</u>:- <u>வறக் காமாலைக்கு, சாம காமாலைக்கு, விரை வாதத்துக்கு அமிர்த நாராயண குளிகை</u>:-

கச்சக் காயிலை, புளியஞ் சிராய், கருஞ்சீரகம் பலம். 1/2 புழுங்கலரிசி, ரொட்டி சுட்டு ஒன்பது நாள் அந்தி சந்தி பனியாரம் அத்தினை கொள்வும். எருமைக் கோமியம் படி. ௨, முத்தின வேர்ப் பட்டை சேர்.௧ கொண்டு வந்து எருக்கம் வேர் சேர்.௫ சோறு உங்கிற முருக்கம் பட்டை சேர்.௧ சாதிக்காய் விராகனிடை.௧ யேகத்துக்கு இடித்து கலந்து அடுப்பில் வைத்து கொதிப்பித்து இறக்கி வைத்துக் கொண்டு ஒன்பது இரண்டு வேளையும் கொள்ளவும். உச்சிக்குப் பூசவும்.

பிரண்டை பலம். 4 நாழி தண்ணீர் விட்டு குறுனி நீராகக் காய்ச்சி பழைய கருப்புக்

பலம். கரைத்து குறுக காய்ச்சி மேல் பொடி வெள்ளை வெங்காயம் சுக்கு, மிளகு, கல்லுப்பு, வெத்திலை, காம்புரு பொடி யிலை, களச்சி சாறு வார்த்தரைத்து எலுமிச்சங் காய் அளவு முழுங்கவும். இது கை கண்டது.

நாபி விராகனிடை.க, சாதிலிங்கம் விராகனிடை.க, வேப்பங் கொழுந்து ஒரு பிடி எலுமிச்சம் பழச் சாத்தில் அரைத்து சிறு பயறு மாதிரி குளிகை பண்ணி இஞ்சிச் சாத்தில் ஒரு உருண்டை இட சுரந் தீரும். பத்தியந் துவரைப் பருப்பு, முருங்கைக் காய், மிளகு நீர், கூட்டவும்.

<u>அக்கினி குமார உஷ்ணத்துக்கு:-</u>

ரசம் விராகனிடை.க, நாவி விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, பெருங்காயம் விராகனிடை.க இது எருக்கம் பால் வார்த்தரைத்து குளிகை பண்ணி புத்து மணலில் கோணிப் பட்டையும் உமிக் காந்தலும் கூட்டி அரைத்து பெட்டியும் பேழையும் போலே பண்ணி அதில் குளிகை அடைத்து சீலை மண் செய்து ஒரு பானையில் மண்ணிட்டு அதிலே நடுவே குளிகை வைத்து சட்டி யிட்டு மூடி சீலை மண் செய்து அடுப்பிலே வைத்து முப்பது நாழிகை எரியிட்டு ஆற விட்டு எடுத்து வைத்துக் கொள்ளவும். சிவமயம்.

முத்தக் காசு பலம்.க, சந்தனம் பலம்.உ, வெட்டி வேர் பலம்.உ, கோஷ்டம் பலம்.க, ~~சிறு~~ சட்டு பலம்.க, அமுர்த வள்ளி சூரணம் பலம்.உ, இலுப்பைப் பூ பலம்.க, திராட்க்ஷ பலம்.க, கச்சூர் பலம்.க, பேய்ப்புடல் பலம்.க, சோறு உன்கிர முருங்கைப் பூ பலம்.க, வில்வப் பழஞ் சோறு பலம்.க, கஸ்தூரி மஞ்சள் பலம்.க, மஞ்சள் பலம். குசிமி ஜூஜு பலம்.க, ஏலரிசி பலம்.யஉ, சீனி சர்க்கரை பலம்.யஉ, தாமரை விரை பருப்பு பலம். , கத்தாளை வேர் ரசம் பலம்.ங இது வெல்லாம் இடித்து சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு இரண்டு நேரமும் ஒரு வேளைக்கு விராகனிடை.உ, கொள்ளவும். இதுக்கு தீரும் வியாதி ரத்த மேகம், சீத மேகம், நாலு மேகம், மஞ்சட்டி மேகம், உதய மேகம், சந்திர மேகம், சுக்கில மேகம், இன்னம் இப்படி உள்ள மேகம் பெற மேகம் இருபத்து நாலு வகை மேகமும் தீரும், வீரிய விர்த்தி உண்டாகும். தாது புஷ்டி உண்டாகும். அஸ்தி சுரம் போம். அன்னம் ருசி உண்டாகும். சரீரம் புஷ்டி உண்டாம். முகம் காந்தி உண்டாகும். இது ராஜ யோகம். இதுக்கு பத்தியம் உருந்து, பெருங் காயம், கத்தரிக்காய், பூசனிக்காய், கடுகு, மாங்கிஷம் அவ பத்தியம் இதுகள் ஆகாது. பழைய தண்ணீர் ஒரு மண்டலங் கொள்ளவும். இது கை கண்டது.

<u>காதில் சீ விழுகிறதுக்கு ~~ஆடாதோடை லேகியம்~~:-</u>

புளி பிறண்டைக் கிழங்கு, முத்தின புங்கம் வேர் பட்டையும், வசம்பு, வெள்ளை வெங்காயமும் நல்லெண்ணையில் எரித்து காதில் வார்க்க நிற்கும். இது கை கண்டது.

<u>ஆடாதோடை லேகியம்:-</u>

ஆடாதோடை சேர்.ய கொண்டு வந்து எட்டு படி தண்ணீர் விட்டு அஷ்ட பாகமாய் காய்ச்சி இறுத்துக் கொண்டு அதுக்குள் கடை சரக்கு வெல்லஞ் சேர்.ரு, தேன் சேர்.உ நெய் சேர்.க, சாதிக்காய் பலம்.க, சாபத்திரி பலம்.க, லவங்கம் பலம்.க, லவங்கப் பத்திரி பலம்.க, லவங்கப் பட்டை பலம்.க, பாப்பார முள்ளி சமூலமும் சூரண கிராய் ~~கற்பம் அமுக்கிருய் சமூலம்~~ பலம்.உ திப்பிலி பலம். சீந்திக் கொடி சூரணம் பலம்.உ (முடிவு சரியில்லை)

அமுக்கிருய் கற்பம், அமுக்கிருய் சமூலம் பிடுங்கி வந்து உலர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி தேனில் குழைத்து முழுங்க உடம்பு மெலியும். இப் பொடி எண்ணையில் கொதிப் பித்து உள்ளுக்கு கொடுத்து மேலும் பூச சன்னி தீரும். இப்பொடி க கொள்ள சோகை தீரும். இப் பொடியும் நல்லெண்ணையும் வெல்லமும் கூட்டிக் கொள்ள பெரும்பாடு தீரும். இப் பொடி இள வென்னீரில் குடித்து மேலும் பசுவது விரியன் கடி போம். இப்பொடி பிள்ளைகள் இளைச்சிருந்தால் பசுவின் பாலில் குடிக்கவும். இப்பொடி நாறத்தங்காயில் கொடுக்க சத்தி தீரும். இப்பொடி உப்பு நீரில் கொடுக்க சூலை தீரும். இப்பொடி பிரமியிலைச்

சாறும் நல்லெண்ணெயும் மிளகும் கொடுக்க பிள்ளை யுண்டாம். இப்பொடி வெத்திலையில் கொடுக்க மருந்தீடு தீரும். இப்பொடி ஆனை மாதாமுக்கு செம்பருத்தி சாத்தில் கொடுக்கவும். இப்பொடி தேனில் கொடுக்க எலிகடி சில் விஷந் தீரும். இப்பொடி இள_வெந்நீரில் கொடுக்க கீரை புழு விழும். இப்பொடி பாலில் கொடுக்க மிரியென்னும் புழு விழும். இப்பொடி வெத்திலை சாத்திலிட்டு கொடுக்க வயத்து நோக்காடு தீரும், இப்பொடி ஆட்டு மூத்திரத்தில் கொள்ள சிரங்கு தீரும். ஆட்டு மூத்திரத்தில் கொள்ள குஷ்டம் தீரும். இப்பொடி எருமை மோரில் கொடுக்க நரைக்காத பெண்கள் மூழ்குவார்கள். ~~ரத்த* பிரசிக்கு காமாலை~~

ரத்த பிரசிக்கு, காமாலைக்கு, மூலக் கிறுணிக்கு மருந்து :-

குங்குமப்பூ, பருத்திப் பூ, நந்தியா வட்டம், மல்லிகைப் பூ, கஸ்தூரி, அலரிப் பூ, பூலாவிரி விரை இதெல்லாம் பொடி பண்ணி பசுவின் நெய்யிலே ஆக்கி மூக்கிலே யரு நாள் கட்டவும் குணமாம். அரப் பொடியும், அம்மான் பச்சரிசியும் அரைத்து வெள்ளாட்டுப் பாலில் கொடுக்கவும். காமாலை தீரும்.

சுக்கு பலம்.க, மிளகு பலம்.க, வெள்ள வெங்காயம் பலம்.க, ஏலம் பலம்.க, திப்பிலி பலம்.க. பறங்கிப் பட்டை பலம்.க, லவங்கப் பட்டை பலம்.க, பெருங்காயம் நெல்லிப் பருப்பு சீரகம், வெந்தயம் அசமதாகம் வெங்காரம் கல்நார், சாதிக்காய், சாபத்திரி சாஸ்திர வேதி குகை நீர். கருஞ்சீரகம் செங்கழுநீர் கோஷ்டம், அதிமதுரம், ரேர்சனை கிராம்பு, அதிவிடையம், வாய் விளங்கம், கொத்தமல்லி, சந்தனம், ஓமம், இந்துப்பு, சதகுப்பை, காடு திப்பிலி இலவம் பிசின், இவை ஒவ்வொன்றுக்கு இரண்டு விராகனிடை எண்ணை நாழி தண்ணீர் நாழி வார்த்து வேக வைத்து வத்தின பிறகு எண்ணை நாழி விட்டு வேக வைத்து அரைத்து வைத்துக் கொண்டு விடியுங் காலமே கொள்ளவும் மூலக் கிறுணி தீரும்.

சூதம் விராகனிடை.ரு, கெந்தகம் விராகனிடை.ரு, சாதிலிங்கம் விராகனிடை.க, நாபி விராகனிடை.ரு, வெங்கல பற்பம் விராகனிடை.ரு, வங்க பற்பம் விராகனிடை.ரு. வெங்காரம் விராகனிடை.ரு, படிக்காரம் விராகனிடை.ரு, சாட்டரணை விராகனிடை.க கஞ்சா விரை விராகனிடை.க இந்த ஒன்பது வகையுங் கூட்டி கலத்தில் வைத்து எருக்கன் வேர் கசாயத்தில் மூன்று நாளரைத்து ஒரு உலை மூடியில் வைத்து மேலே ஒரு உலை மூடிக் கொண்டு மூடி சீலை மண் செய்து ஒரு புடம் போட்டு எடுக்கவும். அதின் பின்பு ஒரு சாண் குழி வெட்டி அதில் தண்ணீர் விட்டு உலை மூலையிலிருக்கிற மருந்தை அதில் எடுத்து வைத்து ஆற விட்டு எடுத்து கல்வத்தில் வைத்து செருப்படி இலை சாத்தில் ஒரு நாளரைத்து எலுமிச்சம் பழச் சாத்தில் ஒரு நாளரைத்து சங்கம் வேர் சாத்தில் ஒரு நாளரைத்து கய்யாந்த கரைச் சாத்தில் ஒரு நாள் அரைத்து, உழுந்து பிரமாணம் உருண்டை பண்ணி நிழலணத்தாய் உலர்த்தி சிமிளிலடைத்து ஒரு குளிகை வெந்நீரில் கொடுக்கவும். நவ சுரம் விடும். பிடை மல்லிகை வேர்க் கசாயத்தில் ஒரு குளிகை கொடுக்கவும். பதிமூன்று வகை தோஷமும் போம். பேருமுட்டி வேர் கசாயத்தில் ஒரு குளிகை கொடுக்கவும். பதிமூன்று வகை. தோஷமும் போம். பேருமுட்டி வேர் காசயத்தில் ஒரு குளிகை கொடுக்கவும் அதிசாரந் தீரும். கஞ்சா கசாயத்தில் கொடுக்க வாத அதிசாரந் தீரும். பேய் சுண்டை வேர் கசாயத்தில் ஒரு குளிகை கொடுக்க சுவாச காச மழமாம். நல்ல சுண்டை வேரும், சங்கம் வேரும் ஆதவளை அஞ்சல் பட்டை. அரத்தை இந்த வகையும் கசாயம் வைத்து ஒரு குளிகை கொடுக்க காச ரோகங்கள் அறமாம். ஆலாம் பழுப்பும் கத்தாளஞ் சருகு யிச்ச வேர், சுக்கு, பொடுதலைக் காய், கடுக்காய் இந்த கசாயத்தில் கொடுக்கவும். மகோதரந் தீரும். மிளகு திப்பிலி, பழம் புளி, நெய் இந்த நாலும் சமனுக கூட்டி ஒரு குளிகை கொடுக்க ஒன்பது நாள் கொடுக்க ஒன்பது வகை பீனிசமுந் தீரும்.

மண்டையில் புழு விழுகிறாப் போலே இருந்தால் சாதிலிங்கம் இரண்டு பணவிடை முலைப் பாலில் அரைத்து மெல்லிய சீலையில் தவட்டி உலர்த்தி திரி போல் சுருட்டி நாசியில் புகை உண்ண மண்டை குலை பீனிசமுந் தீரும்.

அமுக்கிராங் கிழங்கு ஒரு பலம், பெரு மரத்துப் பட்டை ஒரு பலம், பறங்கிப் பட்டை

ஒரு பலம், சிவனார் வேம்பு அரை பலம் கொடிவேலி வேர் கால் பலம் இந்த பஞ்ச வகை கசாயத்தில் ஒரு குளிகை கொடுக்க இப்படி ஒன்பது நாள் பதினெட்டு நேரங் கொள்ளகை கால், முடக்கம் சுபாலை சூலை தீரும். சுரங்களுக்கு முலைப் பாலில் கொடுக்க பல வித சுரமுந் தீரும். பத்தியம் இச்சா ~~போசனம்.~~ பத்தியம்

Not required

அரிதார சுத்தி:-

அரிதாரம் வேண்டியது பணம் போலே வெட்டி சீலையில் இரண்டாய் மடித்த அதிலே வைத்துப் பொட்டணங் கட்டி கோழ்த்திரத்தில் ஒரு நாழி காடியில் ஒரு நாழி பசுவின் பாலில் சுண்ணம்பு நீரிலும் பூசனிக் குடல் நீரிலும் ஒவ்வொன்றிலே ஒவ்வொரு சாமம் ~~தோலாளேத்திரமாய்~~ தோலாயந்திரமாய் வைக்க சுத்தியாய் பார்த்து அரசம் பட்டை கசாயத்தில் மூன்று நாளூறச் சுத்தி அரிதாரம் இப்படி சுத்தி பண்ணி அவிழ்தங்களுக்கு கூட்டிக் கொடுக்கவும்.

காரீய்ய பற்பம்:-

காரீயம் கத்தாளைச் சாத்தில் மூன்று தரம் காடியில் ஆவாரை வேர், சாத்தில் மூன்று தரம் உருகிற முகத்தில் எடுத்து உலர்த்தி அதின் பின்பு புது சட்டியிலிட்டு நாயுருவி சாம்பல் போட்டு வறுக்க புகையாமல் வறுக்க பற்பமாம். தண்ணீரில் ஒரு சாமம் அரைத்து செம் மண்ணரைத்து குகை பண்ணி அதில் இந்த பற்பத்தை வைத்து சீலை மண் செய்து எரு முட்டையில் ஒரு புடம் போடவும். ஆலம் பட்டை கசாயத்திலரைத்து ஒரு புடம் இடவும். இப்படிபுடம் போட்டால் காந்தம் செந்திரிக்கம் போலவும் ஆகும்.

பாண்டு ரோகம், காமாலை, வெகு மூத்திரத்துக்கு தேனில் கொடுக்க செலற்று மான வியாதி யெல்லாந் தீரும். சுயமுத்திலே எடுத்த க்ஷயம் இருமலானால் நெய்யில் கடுக்காய் பொடி விராகனிடை.ங அதில் பணவிடை கொடுக்கவும். பித்தத்தில் எடுத்தால் கூட கூட்டிக் கொடுக்கிற விபரம் நல்ல சீரகம் பலம். 1/2 எலம் பலம். 1/2 அதிமதுரம் பலம். 1/2 கல்நார் ஙூ பலம். 1/2, நெல்லி மொழி (முள்ளி) பலம். 1/2 முந்திரி பழம் பலம். 1/2, பேரீச்சம் பழம் பலம். 1/2, பருத்திப் பருப்பு பலம். 1/2, சர்க்கரை பலம். 1/2 இது வெல்லாம் இள வறையாக வறுத்துப் பொடி பண்ணி அதில் ஒரு பணவிடை பற்பம் கூட்டி கொடுக்கவும். நீர்க் கட்டி பிரமியம் சலம் எரிப்பு மேகம் உஷ்ண வாய்வு, அண்ட வாய்வு இவை யெல்லாந் தீரும்.

அப்புரகவுச்சை அழுவைக்கு கட்டி ரோகத்துக்கு:-

வரித் தும்முட்டிக் காய்ச் சாறு சேர்.க, வெள்ளருகு சாறு சேர்.க, பிறண்டைச் சாறு சேர்.க, வேப்பிலை சாறு சேர்.க, நல்லெண்ணை சேர்.க இந்த ஐந்து வகையும் கூட கூட்டிக் கொதிக்க வைத்து பதமான வாற்றே கல்க்கம் மோடி பலம்.க, புண்டு பலம்.க, கஸ்தூரி மஞ்சள் பலம். 1/2 பெருங் குரட்டிகை வேர் பலம்.க, அசுவகெந்தி வேர் பலம்.க; சித்திர மூலம் வேர் பலம்.க, பஞ்சலவணம் வகை ஒன்றுக்கு விராகனிடை.ங இது வெல்லாம் இடித்துச் சூரணம் பண்ணி லேகியம் பண்ணி வைத்துக் கொண்டு தினங் களச்சிக்காய் பிரமாணம் கொள்ளவும்.

குதிரை சீரகம் படி.உ; நஞ்சு விரை படி.உ; பெருதும்முட்டி விரை படி.உ, ஆமணக்கு முத்து படி.உ இது நாலும் கூட்டி பட்டத்தில் தயிலம் வாங்கி அந்த தயிலத்தில் வட்டத் திருப்பி வேர் கொண்டு வந்து இடித்துச் சூரணம் பண்ணி லேகியம் போலே பண்ணி தினம் ஒன்று பருஞ் சுண்டைக்காய் பிரமாணம் அரை மண்டலந் தின்னவும். க்ஷயரோகம், ஈளை இருமல், உப்புசத்துக்கு வங்கு நோவுக்கு என்ன சர்வ ரோகம் நிவாரணம்.

சஞ்சீவி சூரணம்:-

வெள்ளை சாட்டறணை வேர் இடித்து அந்த சாறு படி. 1/2 பெருந் தும்முட்டிக் காய் சாறு படி. ஈர வெங்காயம் சாறு படி . விளக்கெண்ணை படி . இது நாலுங் கூட்டி பதமாய்க் காய்ச்சி வைத்துக் கொண்டு ஒரு நேரத்துக்கு ஒரு உச்சிக் கரண்டி கொள்ளவும். பத்தியம். கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். பால படி. , கூட்டவும்.

அப்புக் கோவைக் கிழங்கு, நிலப் பீனைக் கிழங்கு, படுபாகல் கிழங்கு, சிறக்ரை வேர் சிறு தும்முட்டி வேர், குத்தை பட்டை, பேய் சிங்கைப் பட்டை, ஈர வெங்காயம், தம் பருஷ்டகம், கஸ்தூரி மஞ்சள், இத்தனையுங் கூட்டி விளக் கெண்ணையில் போட்டு பதமாக காய்ச்சிக் கொடுக்கவும்.

கடுக்காய் சூரணம்:-

கடுக்காய் நூறு கொட்டையைப் போக்கி பாவனை புளியிலைச் சாத்தில் ஒரு நாள் பிரமிச் சாத்தில் ஒரு நாள் கையாந்த கரை சாத்தில் ஒரு நாள், பொன்னாங்கண்ணி சாத்தில் ஒரு நாள் பிரமி சாத்தில் ஒரு நாள் பொடுதலை சாத்தில் ஒரு நாள் முடக் கொத்தான் சாத்தில் ஒரு நாள் மணத் தக்காளி சாத்தில் ஒரு நாள் இந்த ஏழு வகைப் பசரும் பாவனை ஆன பிறகு வெள்ளாட்டுப் பாலில் சுத்தி சட்டியில் வார்த்து ஏடு கட்டி மேலே வைத்து அது மேல் சட்டி மூடி எரியிட்டு பக்குவத்தில் இறக்கி எடுத்து வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொண்டு இதுக்கு சம பாகம் சர்க்கரை கலந்து அநுபானம் வென்னீரில் பேதிக்கு கொடுக்கவும். வேண்டுமென்றால் சரீரம் நிதானம் ~~அறிந்~~ அறிந்து களஞ்சி யிரு களஞ்சி கொடுக்கவும். சர்வ ரோகத் துக்கு விராகனிடை. க. ஒரு வேளைக்கு இந்தப் பிரகாரம் ஒரு மண்டலம் கொள்ளவும். தீரும் வியாதி உஷ்ணம் பமையம் புண்ணு ரணம் கிரந்தி சகல வாதங்களுந் தீரும். இது தை கண்டது.

உஷ்ணத்துக்கு மருந்து:-

புளியருணைக் கிழங்கு கடம்பல் ~~கதி~~ கதிரு இடித்த கோதும்பை அரிசி புறங்கலரிசி ஆக்கி தண்ணீர் வார்த்து அந்த பழந் தண்ணீரில் பிசைந்து ஒரு சேர் வடி கொண்டு பாவு ஏன்னை விட்டு காலமே காலமே மூன்று நேரங் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும்.

வலிப்புக்கு மருந்து:-

செக சோதிக் கிழங்கும், அந்த இலையும் பூனைக் காஞ்சொறி கொழுந்து பெரு மரத்துக் கொழுந்து கூடக் கலுத்த வெள்ளாட்டுப் பாலிலரைத்து ஐந்து நேரங் கொடுக்கவும். உப்பு, புளி தவிர்க்கவும்.

பள வறணைக்கு மருந்து:-

படுபாகல் கிழங்கு, புளியறணைக் கிழங்கு, பிறண்டைக் கிழங்கு, நாயுருவி வேர் பன்னை வேர், மணத்தக்காளி வேர், சீமா வேர், குத்தை வேர், சுண்டை வேர், சித்தவரை வேர், அப்புக் கோவை வேர், சாட்டறணை வேர், பழைய ஈர வெங்காயம் இதுகளை சரீரம் தகுதி அறிந்து விளக் கெண்ணையாகிலும் பசு நெய் ஆகிலும் கூட்டி எரிச்சு காஞ்சு ஒரு கறண்டி என்னை ஒரு உச்சிக் கறண்டி கூட்டி கொடுக்கவும். இதுக்கு தீரும் வியாதி பளவறணை ஒட்டு பளவறணை பக்க பளவறணை மங்கு பளவறணை வங்கு நோவும் செவுட வெங்கு நோவும் ஊமை வங்கு நோவும் இதுகளெல்லாந் தீரும். உப்பு, புளி தவிர்க்கவும்.

ஆனந்தக் களிப்பு:-

அத்தி முகனைத் துதித்து நல்ல அன்பான வல்லாதியின்பமாய்ச் சொல்வேன். சித்திர மூலம் வெள்ளறுகு நல்ல சிவனார் வேம்பு, சங்கம் வேர், குப்பி, முத்தின தேங்காய் நெத்து நல்ல மூல்மாங் கெருடன் அமுக்கிரான் வேர், புத்தில் முளைத்த வெள்ளெருக்கு நல்லர் போதவே சின்னி விளர்த்தி குமுள் வேர், சத்தி முளகரணை நல்ல் சாதக்மாஞ் செங் கத்தாரி குன்னி வேர் சித்திர மாங் கருஞ்சீரகம் நல்ல சிறப்பான கான சீரகந் தானும் முத்தியாம் பூத விருக்ஷ ஊத்பம் நல்ல மூலமாம் வாத கரப்பான் கட்டை உச்சிதமான வெப்பாலை வித்து நல்ல உறவான நீரோடி பிரப்பன் கிமங்கு சத்தே கெந்தகந் தருசு நல்ல சதிரான சூதமுந் தத்தமுஞ் சேர்த்து சித்திரமாகவே வெருத்து நல்ல சிறப்பாய் வகைக்கொரு பலமாய் நிறுத்து. வஸ்திரமாந் தலை வெல்லம் வாங்கிய யெள்ளு வகைக்கு சேர் கொண்டு முத்தின சேங்கொட்டை நாறு முதிரம் பறங்கிப் பட்டை இரண்டு கைத்தரமா யிடித்து நல்ல கணபதி முன் பாகத் தூபங் கொடுத்து சித்திர வல்லாதி யென்று முனி செப்பினார் சீஷர்க்

உபதேசமாக பத்திரமாக வெருத்து நல்ல பாண்டத்தில் வைத்தப் பாக்களவு உருண்டை மண்டலமிரு நேரங் கொண்டால் நல்ல மார்க்கமா வியாதியை வகுத்துரைப்பேனே.

முத்தின சூலை கிரந்தி நல்லா முடக்கு கடுப்பு பிடிப்பு திமிர்ப்பு பத்தின மேகங்கள் வாதம் நல்ல பாங்கான கையினில் ஊறல் வெளுப்பு வத்தி உடம்பு சிரங்கு நல்ல வகையான புழு வெட்டை கடி விஷ முதலாய் சுத்தி திமித்த வெங்குஷ்டம் சொல்லாமல் போகுமே வல்லாதி கண்டால் பொத்தி கடி போல் வெடித்து நல்ல புண் போலுடம்பெல்லாம் வன்பாயெரித்து கொத்திக் கிழித்தது போலே நல்ல கூரான பாதத்தில் கிராய் வெடித்த அத்தி குரந்தனு ளக்காய் நல்ல ஆராத பரங்கிய மருங் கிரந்தியும் சித்திர வல்லாதி கண்டால் திக்கின்ற பக்ஷி பறக்கின்றுப் போலே அடா பத்தியஞ் சொல்லுவேனிப்போ நல்ல பாசிப் பருப்பு துவரம் பருப்பு முத்த மீன் கத்திரிப் பிஞ்சு நல்ல முருங்கைக் காயின் பிஞ்சும் அரைக்கீரை தீர்னும் சத்தாவின் பால் நெய் மோரும் நல்ல சதிரான வெள்ளாடு மேயிவிரால் கோர்வை சித்தாமணக்கான எண்ணை நல்ல சீரான பொழுதில் முழுகுவாயண்ணே (அனந்த)

பிரளய_காலஆதி_ஆனந்தப்_பயிரவம்:- 29.3.63.

சூதம், மனோசிலை, கெந்தகம், நல்ல லிங்கமரிதாரம், சமனோடு நீலிய நிம்பழச் சாத்தில் நிச்சமா யுண்டை பயறளவே கொள்ள மேவுகின்ற குளிச்சி சாத்திலில் மிக்க சன்னி மூலைப் பாலில் கொண்டிட ஆவி தன்னை அழியாமல் காத்திடுமே ஆதி ஆனந்த பயிரவன் குளிகையே. அரை மண்டலங் கொடுக்கவும். குன்மம் பஞ்ச சூலை தீரும். இது கை கண்டது.

சன்னி_நிதானம்_கந்திகம்:-

உடம்பெல்லா மெத்த நொந்து ஒளியது சிறந்து காட்டி
திடம் பல புலனே யத்து தீயென வெதுப்பு தோணி
குடம் பட தாகம் காட்டி கூர் விழி குரக்க மத்து
ஊடம் பெற தாபம் விம்மில் கந்திக சன்னி தானே.

Not required

இதுக்கு_கசாயம்:-

கொத்தமல்லி, சிறுகிரா வேர், ஆனைத் திப்பிலி கசாயமிட்டு இந்துப்பு மேலே பொடி தூவி கொடுப்பது. ஏளதிமெ சீந்தல் கொடி மரமஞ்சள் கோஷ்டம் தேவதாரு சுக்கு, திப்பிலி தன்னி முட்டான் கிழங்கு, சுக்குலும் சமனாய் கசாயமிட்டு கொடுப்பது. சீந்தல் கொடி சித்தாமணக்கம் வேர் சுக்கு தேவதாரு குஸ்திமே கடுக்காய் சமன் கசாயமிட்டு கொடுப்பது. சீந்தல் கொடி சித்தாமணக்கம் வேர், சுக்கு, வேததேவதாரு குஸ்திமே கடுக்காய் சமன் கசாய மிட்டுக் கொடுக்க சகல சன்னியுந் தீரும். அந்தக_சன்னி_நிதானம்:-

சேத்துமம் சுரமும் வீங்கும், சிரப் பசிப் போலே தோணும். எத்மா பாதம் வீங்கும். எரைத்திடும். வயறு தாறும். நீத்துமேல் மூச்சியங்கும். நின்றுடல் நடுங்கி நிற்கும். சாத்திடா தடிக்கும். நாக்கு தாந்திக சன்னி தாவி தவிக்குமே யுளமும் நெஞ்சும் தாறு மாறு மாமை பேசும். அவிக்குமே தீபனத்தை ஆசிமை மீதில் மோகமாகும். செவிக்குர கண்கள் மிக நொந்து சிறுஞ் சூலை தாருவத்தும். மருவிக்கு மேல் மூச்சியங்கி மெருத்து பாக சன்னிதானே.

இதுக்கு_மருந்து:-

முத்தக் காசு, சந்தனமும், முளைந்த சுக்கு பற்படாகம், சுத்த விலாயிச்சை இருவேலி தலங்குந் திப்பிலி சமபாகம் இதைக் குடி நீராய்க் காய்ச்சி இதமாய்க் குடிக்க வல்லீராய் ருத்த பாக சன்னியது ரோசனை தூரம் தான் போமே. தாகமும் பிரமையுங் காட்டும். தன்னை யரியாத விப்பாகும். கோபம் பிறந்தால் முண்டார கூர் விழி யிருண்டு காட்டும். சோபமும சிறப்பு முண்டாகும். சொர்க்கவி பாடியாடுந் தேவ மென்றுடில் கொள்ளில் சிற்ற விப்பிரம சன்னி தானே.

இதுக்கு_கசாயம்:.

பிரமி திராக்ஷி பழம், முத்தக் காசு, வசம்பு, தன்னி மிட்டான் கிழங்கு, கடுக்காய், கொண்ணை வேர், கடுகு ரோகனி நெல்லிச் சட்டு தானிக்காய் சித்தா முட்டி வேர்

வேப்பம் பட்டை, பேய்புடல், இந்துப்பு, திரிகடுகு, சித்திர மூலம், தேவதாரி தெசமூலம் இவை சம பாகம் தெச மூலத்துக்கு வயணம் பெருவாகை முள் ஊ கும்ழ் பெரு மல்லி சித்தமல்லி வில்வம் நெருஞ்சி ஆவாரை வேர் பாதிரி வேர், கண்டங்கத்திரி இது தெசமூலம் கூட்டிக் கசாயமிட்டுக் கொடுப்பது. குங்கிலியம் சாம்பிரானி கூட்டி தீபமிடுவது.

சீதாங்க சன்னி நிதானம்:-

விக்கலெடுத்து நடுக்கமதாய் மெய்யுங் குளிர்ந்து மிகச் சோர்வும், கக்கும் வாந்தி யுண்டாகும். கம்மிங் குரலு மிடிய விழும். மிக்க மேல் மூச்சி வாங்கி யிடும். மெலியுங் கை கால் வசமழியும். மிக்க தவன வ்யரேடும். மீளா சீதாங்க சன்னியதே. இது அசாத்தியம்.

தாந்திரிக சன்னி நிதானம்:-

பசியது போலந் தோணி யிடும். பரித்தாகத்துடன் நழுவிக்கும். கசிவதில்லாமலே நாக்கில் கருக்கது போலே பொன்னிறமாம். அசை வத்துள்மே நடுங்கி யிடும். அதிசாரத்துடன் சுவாசமதாய் தசைவது தலையை நொந்திருக்கும். தாந்திரிக் சன்னி யிது தானே.

இதுக்கு மருந்து:-

சிறுதேக்கு, கடுகக்காய், கோஷ்டம், சிறவழுத லை, கண்டங்கத்திரி, சீந்தி தண்டு பிறத் தேகம், பலங் கூட்டி கசாயமிட்டு திப்பிலி பொடி மேலே தூவி கொடுப்பது. இது வெல்லாம் வெள்ளாட்டுக் கோமியத்தில் நசியம் பண்ணவும்.

கண்டங் குப்பி சன்னி நிதானம்:-

தலை நோவுடனே மோகமுதாய் தாப சுரமாய் மிடறு நொந்து அலை போலு உடலும் நடுங்கி யிடும். அங்கம் புழுங்கி மூர்ச்சிக்கும். ஒலை போல் வாயைச்சுக்கியிடும். வாயமதாக உடல் சோரும் கலை சேரிடையா யிது புாடுங் கண்டங் குப்பி சன்னியிதே.

இதுக்கு மருந்து:-

திரிகடுகு, வெட்பாலை அரிசி, கடுகுரோகணி திரிபாலை ஆடாதோடை மஞ்சள், மரமஞ்சள், இதுக்கு சமன் கசாயம் கற்காடக சிங்கி, நன்னாரி முத்தக் காசு, நிலவேம்பு சிறுதேக்கு, மரமஞ்சள், கடுகுரோகணி, கோஷ்டம், கொடிவேலி, வேர், செவியம், திரிகடுகு, பெருங்கும்மிழ் வேர், நெல்லி சட்டு தேவ்தாரு தானிக்காய் பிரமி வசம்பு இவை சமன் கசாயம் இட்டு கொடுக்கத் தீரும்.

கறணிக சன்னி நிதானம்:-

குரல் தான் நெரித்து நாவிழுந்து கூரிய மிடறு மிக நொந்து வரிவாய் மெய்யுத் தான் குளிர்ந்து வீக்கம் சரீர மிக நொந்து அரிவாயங்கம் புழுங்கிய பின் அனலாய் மிடறு மிகவுஞ் சுரந்து தோன்றில் கரி போல் நடையாய் செவிநோகில் கறணிக சன்னி இது தானே.

இதுக்கு வயத்திலே உருவிட்டு சுற்றம் வாங்கிப் போட்ட நெய் நக்க கொடுப்பது அர்த்தை சிறுவழுதலை வேர், கடுக்காய், முத்தக் காசு, கடுகுரோகணி திரிகடுகு, கோஷ்டம், வசம்பு, கற்கடக சிங்கி, திரிபாலை, சிறுதேக்கு இவை சமன் காசய மிட்டு கொடுக்கத் தீரும். பெருங்காயம், மஞ்சள், மரமஞ்சள், சிறு தும்மட்டி வேர் இந்துப்பு, கோஷ்டம், இவை எருக்கம் பாலிலரைத்து பூசவும்.

புக்கின நேத்திர சன்னி நிதானம்:-

சுரந்தான் மிகவுந் தோன்றியிடும். சுமலும் கண்கள் குழி விழும். மறந்தே யாகப் பிறமை பேசும். மதிற்ற காய மூள நடுங்கும். நிறந்தே மேக மீமா நெஞ்சுங் குஞ்சு உடலுலந்து பாருந்தே தெளியுமட மானே. புகு நேத்தி சன்னி யிது தானே.

இதுக்கு மருந்து:-

மரமஞ்சள், முற்றக் காசு, கடுகுரோகணி, திரிபாலை, கண்டங்கத்திரி, வேர் பேய்ப்புடல், நிலவேம்பு காய், திப்பிலி இந்துப்பு, பூண்டு இவை சமன் கசாயமிட்டுக் கொடுக்கத் தீரும்.

மிளகு அமுக்கிரம், திப்பிலி இந்துப்பு பண்டு இவை சாட்டரு ஊ வெத்திலை சாத்தில் நசியம் பண்ணவும். எல்லா சன்னியுந் தீரும்.

குடோறத்_தாஉஷ்சி_சன்னி_நிதானம்:-

வாந்தியுடனே மோகமதாய் மயங்கி விக்கல் தாகமதாய் சாந்த மில்லா லரி வழிந்து தடித்த நாக்கும் பெருத்த கண்ணும் மாய்ந்த சூலை பாய் வயரோடி மகிம் சில்லி சிறு முத்திரமதாய் சுந்தலிருண்ட மட மானே குடோற தாகூ சன்னியதே.

இதுக்கு_கசாயம்:-

பற்படாகம், சிறுகாஞ்சொறி, ஆடாதோடை, சித்தாமணக்கு வேர், கடுகுரோகனி ஞாழத்தாறு சர்க்கரை சமபாகம் கசாயமிட்டுக் கொடுக்கத் தீரும். இரு வேலி பற்படாகம் தாமரைத் தாது சந்தனம் சாதிக்காய் அதிமதுரம், வேப்பம் பட்டை இவை சமன் கசாயமிட்டு கொடுக்கத் தீரும். மாதளம் பூச் சாறும் அறுகு சாறும் மாவிலா வெள்ளுள்ளி இவை கூட்டி நசியம் பண்ணவும்.

பிரலாப_சன்னி_நிதானம்:-

அலைத்து முடலைப் பதவிக்கும். அய்க்கியானத்தடனே தான் நிற்கும். உலத்து முடலை நரம்பெடுக்க ஓடுங் குஞ்சரீரமுள் நடுங்கும். கலத்தே நெஞ்சங் கண்ணிருட்டும். காயமிக நோவெடுக்கும். நலத்தே மொழியுமட மானே நாடும் பிறலாப சன்னியிதே.

இதுக்கு_மருந்து:-

கெந்தி, நகரம், அபாகரதி சங்கு பற்பம், தேவதாரம், கடுகுரோகனி, அங்காவ வேர், நொச்சி சங்கு வேர், பொரும்பில் வேர் இவை சமன் கசாயமிட்டு நாலிலொன்று காய்ச்சி வடியிட்டுப் பசுவின் நெய்யில் வெள்ளாட்டுப் பால் குழினி கலக்கம் திரவியம் ஏலம், லவுங்க பத்திரி அரத்தை, திரிகடுகுஇரள் கிழங்கு, வருள்சுண்டை, மந்திடி ஓமம், முந்திரிகைப் பழம். வட்டத் திருப்பி, இந்துப்பு சடாமாங்கிஷமி, தற்கோலம் மிட்டி சந்தனம், சிறு தேக்கு சிறுபாலை கார்போக அரிசி முத்தக் காசு, சிறுகாஞ்சொறி வக ஒன்றுக்கு பலம்.க், பாலில்ரைத்துக் கூடக் கலந்து கருச்சலாங் கண்ணி தூதுவளை கண்டங் கத்திரி தேள் கொடுக்கு செருப்பட்டை தாழை விழுது நொச்சி சாட்டரு ஊ முதலான் சாற கொண்டு பதத்தில் வடித்து நக்கிட பிரலா சன்னி தீரும்.

சிம்மக_சன்னி_நிதானம்:-

நாக்குக் கறுத்து முள் போலாய் நடுக்கும். சுவாச காசமுடன் வாக்கறுத்து தளர்ந்து குரலழிந்து மயங்கிச் சரீரம் பாதவிக்கும் நோக்குங் கண்கள் தான் சுழன்று நொய்ய மனமும் பிறமை பேசும். தீக்குங் கண்ணிடை மானே சிம்மக சன்னி இது தானே.

இதுக்கு_கசாயம்:-

Incomplete

தேவதாரு, முத்தக் காசு, வேப்பம் பட்டை இருவேலி சீந்தில் தண்டு, கடுக்காய் தானிக்காய் பேய்ப்புடல், மஞ்சள், மரமஞ்சள், சுக்கு, சிறுவழுதலை, கோஷ்டம் இவை சமனாய் கசாய மிட்டுக் கொடுக்கத் தீரும். திரிகடுகும் இந்துப்பு, கடுகு ரோகனி கோஷ்டம் மாதளம் பூவு, (முடிவு இல்லை).

அபினியா_சன்னி_நிதானம்:-

நித்திரையுடனே மோகமதாய் நெடுவாய் திறக்க வொட்டாமல் முத்து நிறமாய் முகமலர்ந்து மூன்றுங் கோணுங் கூட்டி இடும். மெத்த சுவாசம் மேல் நோக்கும். மெய்யில் கடுப்பா மிகத் தோன்றும், அத்தி நடப்பா யினிக் கேளாய் அபின்னிய சன்னி யிதுதானே.

இதுக்கு_மருந்து:-

பம்பைத் தொராய் தெசமூலம் கோஷ்டம், சடாமாங்கிஷமும் ஆடாதோடை சீந்தில் தண்டு சிறுதேக்கு இருவேலி கற்கடக சிங்கி இவை சமன் கசாயமிட்டு கொடுக்கத் தீரும்.

தபன மிகவுந் தோன்றிடவே தன்னை யரியத் தவிப்பாகும் விபனமா மெய் வீங்கி வீழ் குரலா கிக்க ப மிஞ்சி அபன வாயு மிக நொந்து அங்கமுங் குமுர சிக்கும் சபனமது மறுருமாகில் சாவதுதானே நிஉஞ்சிப்பாயோ சன்னி - நிதான - முத்தும்.

பெருங்காயம் பழஞ்சி .௧, கடுகு கழஞ்சி.௪ மிளகு கழஞ்சி.௧, கொந்தாழைக் காய் கழஞ்சி.௨, கடுகுரோகணி கழஞ்சி.௧, சீரகம் கழஞ்சி ௪ இது வெல்லாம் பொடியாக்கி பேய்க் கொம்மட்டிக் காயிலடத்தி நாழி வெள்ளாட்டுக் கோமியம் காயில் சுவறி வேவிச்சு எடுத்து ஒரு குடுவையில் அடைத்து எருமை மாட்டுக் கட்டு தறியில் புதைத்து எட்டு நாளைக்கு பிறகு எடுத்து ஒரு கீந்து அரைத்து தவிட்டில் பிரட்டி தின்னவும். எல்லாக் கவிச்சைக்குமாம். பத்தியம் கார்ப்பு, புளிப்பு ஆகாது.

மகோதரம் பெருவயிற்று மருந்து :-

பெருங்கிழங்கு காட்டுக் கருணைக் கிழங்கு, புளியாரைக் கிழங்கு, பிரண்டைக் கிழங்கு சாட்டரணை வேர் மாருள் கிழங்கு சித்திரமூலம் வேர் இந்துப்பு பொட்டிலுப்பு கல்லுப்பு அட்டுப்பு வளையலுப்பு, சத்திசாரம், பெருங்காயம் வசம்பு சீரகம், கருஞ்சீரகம், கடுகு வேசரு கடுகு வெள்ளை பூண்டு பலம்.௩, கடை சரக்கு வகை.௧ ஒன்றுக்கு ௧ காசிடை கூட்டி வெட்டு மருந்து எல்லாம் இடிச்சு வஸ்திர காயம் பண்ணி இதில் சதிரக் கள்ளிப் பால் வார்த்தரைத்து சாட்டரணை வேர் கூட்டி அரைத்து ஒரு செப்பிலிட்டு சட்டியில் மூடி சீலை மண் செய்து கீழு மேலும் ஒருமுட்டை அடுக்கி புடமிட்டு எடுத்து பின்பு வெள்ளாட்டுப் பால் வார்த்தரைத்து தேத் தாங்கொட்டை பிரமாணம் குளிகை பண்ணி உலர்த்தி ஒரு குளிகை இள வெந்நீரில் கொடுக்க அல்லது தேனில் கொள்ளவும் பத்தியம் முருங்கைக்காய் அவரை ஆகும். கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். கசாய வகை:- சீந்தி தண்டு, கடுக்காயும், சிவதை வேரும், களிப்பாக்கு காந்தம், சுக்கு ரோகணியுங் கலந்தே நீர் எட்டொன்றாய் மாந்த சுரம் சீர வெதுப்பு வயிறு பேதி இது தானே.

முன்னை பாதிரி நிலவேம்பு முடுகிய சீந்தி நன்னாரி பன்னிய வேலி விலா மிச்சம் பரவுஞ் சாறணை குமுந் தொட்டி சின்னி முள்ளி சிறுதேக்கு சீடு மறத்தை சித்தமல்லி கன்னி கஞ்சான் கொத்தமல்லி கடிதாமங்கே யிருப்பைப் பூ தெரிதா இடித்து கலந்தொன்றாய் தெசவிடாத்தி யிது தானே.

கண்டங்கத்திரி யிருவேலி, கரிய விஷ்ணு வாய்விளங்கம் வண்டார்குழலேதுளசி குமுள் வடிதா கோஷ்டஞ் செங்கழுநீர் அண்டர்க் கரிய காஞ்சொறி அரியு தூவளை செவியம் தொண்டர்க் கரிய பித்த சுரம் தோஷாதிக சாயமிது தானே.

நல்ல முள்ளி தூதுவளைய முத்தம் பற்படாகம் வில்லப் பத்திரி நன்னாரி விரிவாய் முன்னை நிலவேம்பு வல்ல சித்தர் கொத்தமல்லி வகையால் சீந்தில் உடன் சுக்கு மல்ல திப்பிலி செவியம் பேணிக் காய்ச்சி எட்டொன்றாய் அதிக வாத பித்த சுரம் வளருந் தேனில் கொள்ளீரே.

சீந்தி முத்தம் நன்னாரி சீவிய சுக்கு திருளசியுடன் ஏரை நீரும் நாழி யிதமாக காய்ச்சிக் கொள்ளீரே.

அரத்தை திப்பிலி கொத்தமல்லி அன்னிய சித்தம் பேராமுட்டி பெருக்கியம் செவியம் நிலவேம்பு பாரிய முத்தம் புடோலிலையும் நிறம்பிய கஞ்சான் யிருவேலி சுரத்தைப் பத்திய யிரு சுரமும் சுகமாய்க் காய்ச்சிக் கொள்ளீரே.

கோஷ்டம், சீரகம் விலாமிச்சம் கொடிய முத்தங் கொத்தமல்லி தாஉஷ்ட தாப சுரம் மாறல் கடிகிய சேஷ்ட சுரந் தீருமிதே.

கொத்தமல்லி, யிரு களஞ்சி கொய்த சுக்கு கழஞ்சி இவை முத்தம் பெரிய குளிர் காய்ச்சல் அன்னிய வெதுப்பு அதிசாரம் மத்தா பித்த வாதமுடன் வகையால் உத்த நீர் விட்டு வத்தக் காய்ச்சிக் கொள்வீரே.

நல்லெண்ணை வேப்பெண்ணை புங்கெண்ணை யிலுப்பெண்ணை மிளகு சுக்கு;- வசம்பு வெள்ள வெங்காயம், கடுக்காய், செண்பகப்பூ, கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், திப்பிலி கோஷ்டம், சாதிக்காய், சிளாப் பருப்பு வலம் புரிக்காய் தாண்டிரிக்காய், வெளிச்சம்

பிசின், சங்கங் குப்பி; ஆடாதோடை இலை, தழுதாழை இலை, சீதேவி யரக்கு வேரும், வெலிப் பருத்தி வேரும், பொன்னாங்கண்ணி வேர், காய் தொட்டி வேரும், இலையும், குப்பை மேனி வேர், கொடிவேலி வேர், சத்தி சாறணை வேர், உப்பிலி வேர், மலைதாங்கி வேர், ஆகுதல் பெருமட்டி சடச்சி வேர் நீலி வேர், நரி விளாத்தி வேர் இவ்வை யெல்லாம் தன்னி லொக்கக் கூட்டி ஐந்து எண்ணெயிலே கொதிப்பிச்சு உள்ளுக்கு கொண்டு மேலும் பூசவும். சகல சன்னியும் விட்டோடிப் போம்.

தொண்டை வீக்கத்துக்கு, நரம்பு சிலந்திக்கு முலை சுரக்க, வயிறு கடுப்புக்கு:-

சிறுகிளா வேர், வடக்கு போன வேர், ஆதிவாரத்து நாள் கொண்டு வந்து கம்பு அரிச்சு தின்ன மட்டுங் கொண்டு வந்து இந்த மருந்துங் கூட்டி இடிச்சு பிட்டாக சுட்டு வெல்லமும் நல்லெண்ணெயும் வார்த்துக் கொண்டு தின்ன இப்படி மூன்று நாள் தின்னவும். பாலுஞ் சோறும் வெல்லமும் போட்டு உப்பு புளி தவிர்க்கவும். பாதிரி வடக்கு போன வே பசு வெண்ணெயில்ரைச்சு எலுமிச்சங் காயளவு கரைக்க கொடுக்க முலைப் பால் சுரக்கும்.

தாண்டரி வேர், பாதிரி வேர், பாலிலரைச்சுக் குடிக்கவும் சுரக்கும். கோரோசனம் பாலுடனரைச்சுக் குடிக்கவும். வெள்ளாட்டு பாலை குழம்பாக காய்ச்சி இலவம் பிசின் பொடி செய்து போட்டுக் குடிக்கவும் தீரும். நீர் முள்ளி விரையை எருமைத் தயிரில் குடிக்கத் தீரும்.

செவி நோவுக்கு கெறப்ப நில்லாததுக்கு மருந்து:-

முருங்கையிலை, எருக்கிலை, முருங்கை வேர் இலைக் களரி வேர் சிறு நண்டு வெள்ளை பூண்டு இது எண்ணெயில் கொதிப்பித்துக் காதில் புழியப் போம்.

இஞ்சிச் சாறு குப்பை மேனிச் சாறு வெங்காய மிளகு கூட்டி மூக்கில் நசியம் விடக் காதிற் புழு விழும். பன்னி (பண்ணி) விட்டையைக் கொதிப்பித்து செவியில் விட நோவு தீரும்.

சீந்தி தண்டையைச் சுட்டு வாழைப் பழத்தில் சுட்ட கரியை வைத்து தின்னவும். ஒரு தீட்டுக்கு நாலு பழந் தின்னவும். இப்படி மூன்று தீட்டத்துக்கு தின்னவும் கெற்பந் தரிக்கும் not useful

தாளிச வடகம்:-

திப்பிலி பலம்.உ, திப்பிலி மூலம் பலம்.க மிளகு பலம்.க, ஏலம் பலம்.க, லவுங்கம் பலம்.க, அதிமதுரம் பலம்.க, செங்கழுனி கோஷ்டம் பலம்.க, கடுகுரோகணி பல க.கடுக்காய் பலம்.க, நெல்லி முள்ளி பலம்.க, தாளி பலம்.க, தாளிச பத்திரி இது வெல்லாம் பொடி பண்ணி சர்க்கரை பலம். கூட்டி கலக்கம் பண்ணிக் கொண்டு ஆடாதோடை. கண்டங்கத்திரி இது அவைச்சு தண்ணீரிலே கலந்து புட்டு வேத வைதது பதமான வாறே எடுத்து உருண்டை பண்ணிக் கொண்டு தினம் காலமே ஒரு உருண்டை கொள்ளவும். இதுக்கு தீரும். வியாதி இருமல், காசரோகம், இரைப்பு, இவை தீரும்.

உன்மத்துக்கு:- may be considered

தாளிச பத்திரி, மிளகு, செவியம், சித்திர மூலம் இது வகை ஒன்றுக்கு பதிறை விராகனிடை, திப்பிலி விராகனிடை.உ, திப்பிலி மூலம் விராகனிடை.உ, சுக்கு விராகனிடை. 4 வெட்டி வேர் விராகனிடை. 4 திசபத்திரம் பலம்.உ, ஏலம் பலம்.உ கடுக்காய் விராகனிடை லவுங்கம் விராகனிடை. 8 இது சூரணம் பண்ணி சூரணம் ஒரு பங்கும் ராயபுரி சர்க்கரை மூன்று பங்கும் கூட்டி பாகு பதமாக காய்ச்சி கிளறி சூரணந் தாவி லேகியம் பண்ணி, நாலு விராகனிடை உருண்டை பண்ணி அஅ அந்தி சந்தி சாப்பிடவும். இதுக்கு தீரும் வியாதி வாத சிலேத்துமம், சுரம் பாண்டு ரோகம், சுவாச காசம் பாரிச வாய்வு குணமாம். இது தேவ அவிழ்தம்.

சகலமான கிருணிக்கு மருந்து:-

தேங்காய்ப் பால், நாழி அரிசி வேகத் தக்கின பால் வார்த்து உலை வைத்து நாழி அரிசியும் நாழி வெள்ளைப் பூண்டு திரியும் போட்டு பால் சோறுக்கி கொதித்து வாரபக்குவத்திலே மிளகு விராகனிடை.ய, கருஞ்சீரகம் விராகனிடை. 6 நல்ல சீரகம்

விராகனிடை.ங, ஏலம் விராகனிடை.அ, சாதிக்காய் விராகனிடை.ச, பேரரத்தை விராகனிடை.ய கண்டு பறங்கி வராகனிடை.எ, திப்பிலி விராகனிடை. அரப்பொடி விராகனிடை.உ செங்கழுனி கோஷ்டம் விராகனிடை., வாய்விளங்கம் விராகனிடை.ங, இது வெல்லாம் இடித்து சூரனம் பண்ணி பாலும் அரிசியும் வெள்ளுள்ளியும் வேகச்சே சூரணத்தைப் போட்டுக் கிறறி நாழி பசுவின் நெய் வார்த்து கிளறி இறக்கி வைத்துக் கொண்டு தினம் ஒரு எலுமிச்சங்காய் பிரமாணங் கொள்ள பதினெட்டு குன்மமும் போம்.

வாதக் கிராணி, மதுக் கிராணி, செயக் கிராணி, அடைக் கிராணி சீக்கிராணி, ரத்தக் கிராணி, உணக கிராணி பைத்தியக் கிராணி சேத்தும கிராணி மூலக் கிராணி இத்தனைக்கு மருந்து :-

வடக்கு போற அளிஞ்சி வேர் கொண்டு வந்து தண்ணீர் வார்த்தி அரைத்து எண்ணை வார்த்து அடையாகச் சுட்டு எருமைத் தயிர் வார்த்தரைத்து காடியில் கடுக்காய் பிசைந்து பொடி நாழி தண்ணீர் வார்த்து அழக்கு காய்ச்சி இந்த அடையில் ஒரு கொட்டைப் பாக்களவு கலந்து கொடுக்கவும். இந்தக் கிராணி யெல்லாந் தீரும். இதுக்குப் பத்தியம் துவரைப் பருப்பு உப்பு போடாமல் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். தயிருஞ் சோறுமிடவும்.

ஒடுக்க யிருக்கிற புண்ணுக்கு சகல வீக்கத்துக்கு மருந்து :-

வேப்பை மேனி வேரும், மஞ்சளும் சாம்பிராணியும் தேன் மெழுகும் வசம்பும் அரைத்து ஒரு பாயுற புண்ணுக்கு மேல் பச எந்தப் புண்ணும் ஆறும்.

சகல வீக்கத்துக்கு விதை பாக வீக்கத்துக்கு மருந்து :- Not useful

சிறுகீரை வேர் ஒரு பாக்களவு அரைத்து வெல்லத்தில் பிசைந்து உருட்டி முழுங்க வயறு கழிந்து லெகுவாம். கழிஞ்ச பிறகு பயறு போட்டு கஞ்சி காய்ச்சிக் குடிக்கவும். மருந்து மெத்தக் கொடுத்தால் மெத்தக் கழியும். வீங்கமும் வாங்கும். இது கை கண்டது.

வாழாத பெண்ணுக்கு சிவ் நார்யுருவி வேரைப் பாலிலரைத்து பாலுடன் குடிக்க வசமாம். பருத்திக் கொட்டை துவைச்சுச் சாறு பிழிஞ்சு பச்சரிசியை நனைச்சு இடிச்சு புட்டு சுட்டு எண்ணை வார்த்து தின்னத் தீரும்.

வாழாத பெண்ணுக்கு எலும்புருக்கிக்கு வெள்ளெடுப்புக்கு உள் மூலத்துக்கு மருந்து :-

நொச்சியிலைப் பொடி பலம். 3/4 கொட்டைக் கரந்தை சமூலம் பொடி பலம் 3/4, கரிசிலாங் கண்ணி பொடி சமூலம் பலம். 3/4, கஞ்சா யிலைப் பொடி பலம்.க, இது வெல்லாம் ஒன்றாய்க் கூட்டி வைத்துக் கொண்டு காலமே வெருகடிப் பிரமாணம் கொள்ளவும்.

காசு கட்டி கடுக்காய் சீரகம் பொடி செய்து நல்லெண்ணையில் வறுத்து முழுங்கவும். தும்பையிலை எண்ணையில் வதக்கி அரைத்து சுக்கு, மிளகு கூட்டி அரைத்துத் தயிரில் குழப்பி முழுங்கவும். தென்னம் பாளை அரைத்து தயிரிலே கொடுக்கவும். கரு வேலம் பட்டை ஆட்டுப் பாலில் ஊற வைத்துக் கொடுக்கவும். நெல்லி யிலை கடுக்காய் வேக வைத்து பீருழி தண்ணியே உரியாகக் காய்ச்சிக் கொடுக்கவும். பத்தியம் பனி பயறு பச்சைப் பயறு கூட்டவும்.

பழங் கேழ்வரகு இரு நாழி மாவாயரைத்து பிறண்டைச் சாறு ஒரு படி சாறு சட்டியிலே அதிதிக் களியாய்க் கிண்டி நாற்த்தங்காய் தனை உருண்டை கொள்ளவும். ஒரு நேரம்

சோகைக்கு மருந்து :-

சாறணைக் கிழங்கு, பாலிலே அவிச்சு உலர்த்தி பொடி செய்து கருப்புக் கட்டியுங் கூட்டி பசுவின் நெய்யில் குழைத்து ஒரு விரக் கடிப் பிரமாணம் கொள்ளவும். சோகை பாண்டு ரோகம் தீரும்.

கண்ணிறுக்கு மருந்து :-

வெள்ளைக் காக்கணம் வேர், கொண்டு வந்து பசுவின் பாலிலே வேக வைத்து நிழலுலத்தாய் உலர்த்தி கன்னி ருதுத்தக்கு கய்யாந்த கரைச் சாறு ஒரு காசளவு

Not clear

சாணைக் கல்லிலே பிழிஞ்சு வெத்திலை உரைச்சு கண்ணுக்கிட யிருஉந கடியும் பிரிச்சாலா கண்ணுக்கு அவரியிலை சாறு வார்த்து அரைத்திடக் குணமாம்.

பூப்பட்ட கண்ணுக்கு தேனில் உரைத்திட குணமாம். வெள்ளெழுத்துக்கு முலைப் பாலில் உரைத்திடக் குணமாம். கொன்னை வேர்ப் பட்டையை வெத்திலையுடனே மறைத்து தின்னவும் இந்துப்பு கடித்துத் தின்னவும். இது எட்டு நாள்க் கொள்ளவும்.

செவ்வட்டை கடிக்கு மருந்து மேல் கவிசைக்கு மருந்து:-

கவிச்சிக்கு பெருங்காயம் இரு கள்ஞ்சு மிளகு உழக்கு, மிளகரணை வேர் நாற் கழஞ்சு, கள்ளிப் பால் ஆறாக்கு பனை வெல்லம் நாற் கழஞ்சு ஆதண்டை வேர் முக்கழஞ்சு இவை சேரப் பொடி செய்து இது இரண்டும் நாற்த்தம் பழம் வளையமாக அறுத்து இந்தப் பொடியைத் திணித்து ஒரு கலசத்தில் வைத்து எட்டு நாள் எடுத்து தின்னவும்.

பொழுது பழம் புளியுங் கூட்டி பசுவின் கோமியம் வார்த்து அரைத்துக் கொட்டைப் பாக்கு மாத்திரம் உருண்டை பண்ணி ஒரு உருண்டை கொள்ளும் பொழுது முட்டி கருப்புக் கட்டி சத்து தின்று அதின் பிறகு உருண்டை கொள்ளவும். இப்படி பதினைந்து நாள் கொள்ளவும். மேற் கவிசை, பக்கக் கவிசை வெப்பாவை வீறுமை மத்து முள்ள வியாதியுந் தீரும்.

அடி பிறப்பிட்ட மூலத்துக்கு முசல் வலிப்புக்கு மருந்து:-

கழக கொடியிலை உருவி நல்லெண்ணையில் பிசைந்து உள்ளி வசம்பு போட்டு சூரிய புடமாக வைத்து வடித்துக் கொண்டு அந்த எண்ணையில் குழப்பி எட்டு நாள் கொள்ளத் தீரும். இதுக்கு பத்தியம் கார்ப்பு, பளிப்புத் தவிர்க்கவும்.

முசல் வலிக்கு மருக் காலைப் (காரை) பழம் உள்ளி வசம்பு கூட்டி சிறு நீரில் நசியமிடவும். புத்தாம் பழஞ் சோறு புகையைக் காட்ட நிற்கும்.

மான் புழுக்கை எடுத்து வந்து விறகு நெருப்பாக்கி அந்த நெருப்பிலே இந்தப் புழுக்கையைப் போட்டு வலி வந்த நேரத்திலே முதுகிலே புகை பட நன்றாய்க் காட்டி இடது கால் பெரு விரலிலே கவுத்தை ரெண்டு மூன்று சுத்து முறுக்கிக் கூட்டி பெருவிரல் உள் வெளுப்பிலே சத்தே வளையலோடு கொண்டு கீறி சிறுக ரெத்தம் புறப்பட்டவுடனே இரண்டு கன்னிலேயும் கலிக்கமிட நிற்கும். இது கிடையாவிட்டால் பேய்த் தும்பை யிலை நாலு அத்தியிலை பழுப்பு ஒரு பழுப்பு இது இடிச்சு இரண்டு நாசியிலேயும் நசிய மிடவும்.

குடல் வாதம், அண்ட வாதம், விரைவாதம் இந்த மூன்று வாதத்துக்கு மருந்து:-

முடக் கொத்தான் கொழுந்தும் வேரும் கழக் கொடிக் கொழுந்தும் வேரும், பேய்த் தும்மட்டி கொழுந்தும் வேரும் சாட்டரணை வேரும் உத்தாமணி வேரும் பிரண்டை வேரும் வெள்ளைப் பூண்டு ஒரு கர்சிடை மிளகு ஒரு கர்சிடை சுக்கு ஒரு கர்சிடை, அசமதாகம் கடுக்காய், கருஞ்சீரகம் ஒரு கர்சிடை, விளக் கெண்ணெயில் குழப்பி வைத்து ஒன்றை எரிக்கிற போது பேயத்தியிலையைப் பசுவின் பாலில் வேக வைத்து இலையை எடுத்துப் போட்டு கொடுக்கவும் பிச்செடுக்கும். தேத்தான் கொட்டையை சிறுக வீசி எலுமிச்சம் பழச் சாத்தில் ஊறப் போட்டு மத்த நாள் காலமே எடுத்து எலுமிச்சம் பழச் சாறு வார்த்து அரைத்து அந்த சாத்திலே கரைத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் குடிக்க பத்தியம் முறிஞ்சு பேரம். கார்ப்பு, புளிப்பு, தவிர்க்கவும்.

தவளையை உலர்த்திப் பொடியாக்கி தேவதாரம் நாய் விட்டை முத்தக் காசு தலைமயிர் இவை சமன் கூட்டி பொடியாக்கி இந்தப் பொடியிலே சத்து எடுத்து விறகு நெருப்பிலே போட்டு இந்தப் புக முகம் உடம்பு எங்கும் பிடிக்கவும் தீரும். Not useful

பெரும் பாட்டுக்கு, அரையாப்புக்கு, காமாலைக்கு:-

பெரும்பாட்டுக்கு நற்கோவைக் கிழங்கும் பருத்திக் கொட்டையும் மோரில் ஊறப் போட்டு அரைத்துக் கரைத்துக் கொடுக்கவும் தீரும். அவள் தலை மயிரும் புடவையின் முழுயுங் கூட முறுக்கி அவள் கையாலே கல்லை பரிச்சு இருவத்தொரு அரிசியும் வெல்லமும் வாங்கிக் கொண்டு திருமேனிச் செடிக்கு காப்புக் கட்டி வெல்லமும் அரிசியும் பூசை பண்ணி மூன்று தரம்

Not practicable

செடியைச் சுத்தி வந்து வேர் அறுமல் அவன் பேர் சொல்லிப் பிடுங்கிப் போட அரையாப்புக் கரையும். கீழா நெல்லிக்கு இந்தப் படி பண்ணவும் குணமாம்.

காமாலைக்கு வேர் பிடுங்கிப் போட மருந்து :-

அவன் தலை மயிரும் முந்தானி இழையும் முருக்கி உத்தாமணி வேருக்கும் புன்னை வேருக்கும் காப்புக் கட்டினவன் காமாலை வராமல் அவன் பேர் சொல்லி பிடுங்கி நீரில் போடவும். ஊது காமாலையானால் அந்த வேரை வெளியில் போடவும் தீரும்.

காமாலைக்கு :-

சிறு தும்மட்டி வேர் சிறுக் சிறுக நறுக்கி கன்னிப் பொன்னு த்த ராலை பூட்டாக முடிஞ்சு கழுத்திலே கட்டி பிறகு இந்த வேர் வாட வாட காமாலை இறங்கிப் போம். சங்கிலை கொண்டு வந்து பாலிலரைத்து குடிக்கத் தீரும். நிலப் பனைக் கிழங்கு பொடி செய்து தண்ணீரில் குழைத்து மிழுங் காமாலை தீரும். இப் பொடி பசுவின் மோரில் குடிக்கத் தீரும்.

ரத்தப் பிரமியத்துக்கு மருந்து :-

செம்பருத்திப் பூவும் நிலப் பனைக் கிழங்கும் பொடி செய்து சமனுக்கிக் குடிக்க மீளும். பிரமியந் தீரும்.

மது பிரமியத்துக்கு :-

நிலப் பனைக் கிழங்கு பசுவின் நெய்யில் இழைத்து முழுங்க மீளும். கல்லெரிப்புக்கு நிலப் பனைக் கிழங்கும் காசுக் கட்டியும் பொடி செய்து நீரில் குழப்பிக் குடிக்க கல்லெரிப்பு தீரும். வெள்ளைக் குட்டத்துக்கு நீர் முள்ளியைக் கொண்டு வந்து சுட்டுச் சாம்பலாக்கி இந்தச் சாம்பல் வேண்டின மட்டுங் கூட்டி சிறுநீரில் மூன்று நாளுறு வைத்து மத்தாளுள் உதையத்துக்கு முன்னே குடிக்க நாற்பது நாளையிலே குணமாம். இது கை கண்டது.

வயிறு கடுப்புக்கு :-

அத்திப் பால் உழக்கு கறந்து கோழி முட்டை உள் கரு எடுத்து அத்திப் பாலுடனே கலந்து மத்திச்சு கொடுக்கவும் கடுப்புத் தீரும். இந்த உள் கருவும் அத்திப் பாலும் கறண்டியில் வார்த்து சுட்டுத் தின்னவும்.

கழிச்சல் அண்டபடும் எலும்புருக்கிக்கு :-

பனைவேர், ஆலம் விழுது பருத்திக் கொட்டை பருப்பும் உளுந்து நாழி அரிசி உழக்கு மாவு நல்ல வெல்லம் ஒரு பலம் நல்லெண்ணை உழக்கு இதெல்லாம் அரைச்சுக் குழப்பி இரு நாழி பசுவின் பால் விட்டுத் திறக் காய்ச்சி வருகிறத்திலே அரிசி மா உளுந்து மா இது ஆவிக் கிளறி இறுகின் பக்குவத்தில் நல்லெண்ணையை விட்டுக் கிளறி புதுக் கலசத்தி லெடுத்து வைத்துக் கொண்டு தினம் ஒரு எலுமிச்சங் காயளவு தின்னத் தீரும்.

உள் மூலத்துக்கு :-

கோழி முட்டை நாலு முட்டை உடைத்து சட்டியிலே விட்டு அதிலே கழல் பொடி வெருகடி பிரமாணம் போட்டு நெய் வார்த்துப் பொரித்து தின்னவும் உள் மூலம் குணமாம்.

பைத்தியம் பிடித்து மருள் கொண்ட பேருக்கு மருந்து :-

தேத்தாம் பழத்தை மெல்லிய சீலையில் கட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு ஆறு விறக் கண்ட சீலை கிழித்து இள வென்னீரில் கசக்கி பிழிந்து உள்ளே கொடுக்கத் தீரும்.

வெள்ளெழுத்துக்கு :-

வெங்காரம் புளியிலைச் சாத்திலரைத்து கண்ணிலிட வெள்ளெழுத்து தீரும். மூ

மூலத்துக்கு :-

எருமைப் பாலில் கொடிவேலி அரைத்துப் போட்டுக் காய்ச்சித் தோய வைத்து மோர் கடைஞ்சு மோரை வயிறு நிறம்பக் குடிச்சு வெண்ணையை மூலத்தில் தடவ தீரும்.

ஒரு தலை வலிக்கு, காதில் ஈ பூந்தால் செவ்வட்டை செம்பூரான் குஷ்டம் பெருவியாதிக்கு:-

ஒரு தலை வலிக்குத் தேத்தாங் கொட்டையை கதிரிலே குத்தி விளக்கிலே கொளுத்தி மாறு பாகமான நாசியில் புகை ஏத்தவுந் தீரும்.

அகத்திப் பூ கொண்டு வந்து வெதுப்பிக் கசக்கி மாறு பாகமான நாசியில் நசியம் பண்ணவும். ~~ஒருதலை தீரும்.~~

காதில் ஈ பூந்தால்:- சித்தில மூலமும் நாயுருவி வேர் பட்டையும் பெருங்காயம் வெள்ளப் பூண்டு வசம்பு அரைத்து நல்லெண்ணையில் கொதிப்பித்து காதில் குத்தி வெயிலில் இருக்கவும். எண்ணை மருந்து:- நல்லெண்ணை.உ, செங்கொட்டை.ருய, நீரடிக் கொட்டை.ருய கொட்டையை சிறுக நறுக்கி வெட்டி நீரடி முத்து ஒடு போக்கி பொடி செய்து இந்த இரண்டு மருந்துங் கூட்டி சட்டியில் போட்டு எண்ணை விட்டு துளாவி எரிச்சு கடுகு மிளகு. பதமாகிய வேளையிலே கோவையிலைச் சாறு ஒரு மிக்க விட்டு எண்ணையிலே விட்டு மூடவும். மூன்று தரம் புடம் பண்ணவும். அமந்த வேளையிலே எண்ணையை வடித்து வைத்து இந்த எண்ணையை பத்து நாளைக்கு ஒரு ~~வேளை~~ நேரம் குடிக்கவும். நாலு நாள் இரண்டு நாளிலே மயக்க தியக்கமானால் கோவையிலைச் சாறு நக்க இடவும். சார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். கீரைத் தண்டு முருங்கைக் காய் இலை, அவரம் பருப்பு ஈர வெங்காயம் நெத்திலி மீக்கு மீளி கூட்டவும். பால், மோர் நெய் தவிர்க்கவும். நாலாறு நாளிலே புண்ணாறும். கை கண்டது. குளிர்ந்த தண்ணீர் தொட வேண்டாம். வென்னீர் அந்திக்கும் விடிஞ்சிக்கும் தப்பாமல் வார்க்கவும்.

நீறுப்பைக் கிரணிக்கு:-

ஊமத்தை வேர் ஒரு பிடி, பசு மஞ்சள் இரு நாழி, உப்பு இரு நாழி இது மூன்றுங் கூட்டி நறுக்கி ஒரு தோண்டிக் குடத்தில் போட்டு முக்குறுணி தண்ணீர் விட்டு மூடி எரிய விட்டு அந்த ஆவியை ஆறுத புண்ணுக்கெல்லாம் காலிலே கையிலே உடம்பிலே எங்கே இருந்தாலும் புண்ணுக்கு நீர் உப்பை ஆவியாய்க் காட்டவும். இப்படி மூன்று நாளைக்கொருக்கால் மூன்று விசை காட்டவும். புண்ணும் பத்தியில்லை. இது லாட வித்தை.

கிரணிக்கு:-

குப்பை மேனி சமூலம் பிடுங்கி வந்து இலையை உருவிப் போட்டு சிறுக நறுக்கி ~~நாலை~~ நாழுநாழி தண்ணீர் விட்டு உழக்காய்க் காய்ச்சி அரைக் கால் பலம் மிளகு ஒரு பூண்டு ஒரு பாக்களவு பழம் புளி கூட்டி மிளகு சாறு காய்ச்சிக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும் தீரும்.

கடுப்புக் கழிச்சலுக்கு:-

ஒரு வாழைக்காய் கொண்டு வந்து உமிக் காந்தலிலே நுஞுந்தி குமுற வேக விட்டு மிளகும், வெள்ளை வெங்காயமும் கூட்டி அரைத்து மூன்று நாள் கொடுக்கவும்.

காது செவிடு கொக்கை முட்டை* ஒடு கழஞ்சு உழக்கு, நல்லெண்ணையிலெரித்து காதிலே வார்க்க காது கேட்கும். இது கை கண்டது.

காது செவிடுக்கு எண்ணை பண்ண:-

~~குறிப்பு~~ காதில் சலம் விழுகிறதுக்கு வெள்ளாட்டுப் பாலும் இந்துப்பு மரைத்து காதில் வைத்து வந்து கவுத்துப் போடவும். இப்படி ஐந்து நாள் வார்க்க மாறும்.

எழுச்சிக்கு:-

வெள்ளுள்ளி வசம்பு வெளிச்சம் பிசின் முருங்கைப் பூவும் வேரும் நாய் வேளை வேரும் இவை வகை ஒன்றுக்கு கழஞ்சி கூட்டி அரைப்படி நல்லெண்ணையி லெரித்துக் காதிலடைக்க காது கேட்கும். செம்பிலி ஆட்டு மயிர் சுட்டு தண்ணீரில் கலக்கிக் காதில் பிழிய எழுச்சி நிற்கும்.

காதில் நாபட்டை விழுந்தால்:-

நவாச்சாரம் அதிவிடையம் ஆனை வணங்கி வேர் வகை ஒன்றுக்கு கழஞ்சி கூட்டி

* கொக்கை முட்டை என்பது என்ன?

குப்பை மேனிச் சாத்திலரைத்து உழக்கு வேப்பெண்ணை நல்லெண்ணையி லெரித்து காதில் பிழிய நீர்யட்டை காதில் புழுவிழும்.

கொடிக் கள்ளிக் கொழுந்து தீயில் வாட்டி அந்த தண்ணி காதில் பிழிய நிற்கும். அறுகங் கிழங்கு உள்ளி வசம்பு உழாக்கு நல்லெண்ணையி லெரித்து காதிலடைக்கப் புழு விழும்.

செவியில் புழு விழ நாகப் பாம்பு பாக்களவு வெள்ளைப் பூண்டு ஒன்று மிளகு கழஞ்சு கூட்டி நல்லெண்ணையிலெரித்து காதில் புழிய வலி நிற்கும்.

காவாளை வேரும் இலையும் இடித்து உள்ளங் கால் உள்ளடி முழங்காலிலேயுந் தடவ கிருமி விழும். உடம்பெரிப்புக்கு கூரெள்ளு இலை தவைத்து குளிர்ந்த தண்ணீரில் பிசைந்து குடிக்கவும் தீரும். மலட்டுப் புழுவிக்கு சங்கு சுட்டு பொடி செய்து தேனில் குழைத்து முழுங்க விழும். மருந்திடு மலத்தில் விழும்.

வெகு மூத்திரத்துக்கு: காரைக் கொழுந்து நீர்ப் பூலாக் கொழுந்தும் மோர் வார்த்து வேக வைத்து அரைத்து நல்லெண்ணையில் குமப்பி தின்னவும் நீர் நிற்கும்.

<u>சத்தி குன்மம், எரி குன்மம், வலி குன்மம், குன்மத்துக்கு மருந்து</u>:-

குன்மத்துக்கு சிறு அம்மான் பச்சரிசி சமூலமும் மண் போக கழுவிப் போட்டு சட்டியில் இரு நாழி காடி வார்த்து அதுக்குள்ளே வேண்டின மாத்திரம் அரப் பொடியுங் கூடப் போட்டு மூன்று நாள் ஊற வைத்து எடுத்து அந்தக் காடி வார்த்து நன்றாக மெழுகு பதத்தில் வழித்து சுண்டைங்கிப் போலே தட்டி புதுச் சட்டி காய வைத்து சட்டி சிவந்த பிறகு அந்த பொடி தட்டினதை காந்த சட்டியிலே போட்டு கரண்டி கொண்டு திருப்பித் திருப்பி வறுத்து சிவந்த பக்குவத்திலே காசளவு பிட்டு பிசைந்து உருட்டி வெல்லத்தை முன் தின்று பின்பு ஒரு நெல்லிக்காய் மாத்திரம் முழுங்கவும். பித்த குன்மம் போம்.

நல்ல வேளை சமூலமும் உலர்த்திச் சுட்டு சாம்பலாக்கிப் பொடி பண்ணி நெய்யில் குழைத்து முழுங்கவும் எரிகுன்மம் போம்.

வெள்ளைக் காக்கணம் வேர் கொண்டு வந்து பசுவின் பாலில் ஊற வைத்து நிழல் உலத்தலாக உலர்த்தி கணக்குருஉச்சிக்கு கையாந்த கரை சாத்திலரைத்து வெற்றிலையும் உரைத்து கண்ணிலிட கணக் குருஉச்சி தீரும். பிரிச்சல் கண்ணுக்கு இப்படி பண்ணவும்.

சர் மேக குணந்தான் சொல்லில் தக்க நீர் அதிகமாகும். வர வர உப்பிசந் தான் வருகுரை நீர் போலாகும். மாற நெஞ்சு திடுக்கிட்டே பல படி வாயுண்டாகும். குரவரை யரியச் சொன்னேன் குணமது கண்டிலீரே.

நோய் நிதானம்

உதிர பிரமேகத்தின் குணமது உரைக்கக் கேளீர்
பிதரவே பிலாலு நாறும் பெரு உப்ப சமதாகும்.
சதிர பேர் உரைப்பக் கேளும் சரீரமுந் தாங்கதாகும்.
மதினி முகத்திலுளே வந்திடு பிழு தானுமே.

இதுக்கு நேர் பிரமேகத்தின் யிதின் குணந் தும்பலாகும்
திக்கென நெஞ்சு தானும் திடுக்கிடும் பல காலெல்லாம்
கக்குமே கருப்பன் சாறுக் காமென நீர் இறங்கும்
ஒக்கு மென்று லவுள்ளோர்க்கு உண்மையாய் உரைக்கலாமே.

மது பிரமேகத்தின் குணம் வண்மையே உரைக்கக் கேளீர்
வெதுப்பதே அவியா நிற்கும் மெத்தெனக் குறுத்தி தேடும்
கதித்து நீர் தாகமுண்டாம் கரைத்திடும் உடம்பு தானும்
பொதுக் கென உடம்பி வீங்கும் புலாலது நாறு மண்ணே.

தந்திர பிர மேகத்தின் தானது உரைக்கும் போது
அந்த நீர் குறுந்திறங்கும் ஆனவாய் தித்திப்பாகும்
முந்திய பூளை சாறும் மோதியங் குரங்கு போல
முந்திய வலிக்கு மென்று மேதினி குரைத்தீரோ.

ரத்தமாம் பிரமேகத்தின் நவிகுணம் செப்பக் கேளீர்.
உத்த தண்டுடக்கும் உயிர் பல மெத்த வாகும்
மத்த நருத்த நோவாம் வருங் குணமிது வென்னுகும்
சத்தது அரியச் சொன்னேம் சகத்துள்ளோரடிலீரே.

சுக்குலப் பிரமேகத்தின் துய்யதோர் குணங்கள் சொல்லில்
கக்கிய சீயும் விழும் கடு உசி குதிகல் காட்டும்
ஒக்கவே தண்டு தானும் உதட்டிய தடி போலாகும்
மிக்கல மட நல்லாளே யிது குறி அறிந்திடீரே.

சதி பிரமேகத்தின் குணம் தானது உரைக்கக் கேளீர்
வருந்திட உடல் சிறக்கும் கதித்துக் குடல் தான் வெளுத்து கதித்துட வீர மென்னே.

யேலாகல பிர மேகத்தின் யிதின் குணமுரைப்பக் கேளும்
சாலவே பித்துப் போல சலித்துமே விதனங் காட்டும
போலவே அடிக்கடிக்குள் ெருந்து நீரிறங்கு மென்றி
கோலமே தலை வலிக்கும் கொண்ட நோய் யென்று கூறே.

நாமது பிற மேகத்தின் நலங் குணம் சொல்லக் கேளீர்
வாமது புடரி நோமும் வந்திடுங் கழுத்து நோகும்
கேமனக் கழியு மெத்த செரியாது என்று கூறே
ஓமென உலகத்தோர்க்கு உரைத்திடிற் உலகுள்ளோரே.

அவிலுச பிற மேகத்தின் நீரும் ஆறபம் மிகுவதாகும்
உழலை மேதற மிக்க நாவறளும் கண்டீர்
புவிதாக மூச்சு வாங்கும் புகன்ற விக்குறிகள் எல்லாம்
கவியுள்ளோர் சொன்னவாறு கதித்தீடீர் உலகத்தோரே.

விழுதி தன் பிற மேகத்தின் மென் குணம் உரைக்கக் கேளீர்
கபுதி தன் நீரே விட்டு கடையினில் சுண்ணம் போலே
நபுதி போல் சுண்ணம் போல நலிந்துடன் நீரிறங்கும்
தகுதி மேல் உப்பு பூக்கும் தானகம் வெளுக்குந்தானே.

சற்ப் பிரமேகத்தின் சார் குண முரைப்பக் கேளீர்
உறத்துமே அரைக் கீழ் நொந்து ஒழுகு நீர் கொண்டிறங்கும்
பரத்துமே எரிப்புறும் பல பல வாதை பண்ணும்
சிர்த்து நேர் முக வல்லோரே செப்பிடிர் சிகத்திலோர்க்கே.

நீலமாம் பிற மேகத்தின் நேர் குண முரைக்கக் கேளீர்
சால நீர் பசுந் திறங்கும் சத்துக் கண் பசுத்துக் காட்டும்
போலவே கண்கள் தானும் பொருத்துடன் வளைய மிட்டு
மூலமாம் சோகை போலும் முயந்துடனிருக்கு மென்றே.

ஙகயான் தகரை சாறு இளநீர் மட்டைச் சாறு, புளியிலைத் தண்ணீர் படி.க, பனமட்டைத் தண்ணீர் படி.க இது வெல்லாம் வத்தக் காய்ச்சிக் குழம்பான பிறகு இறக்கிக் கலத்திலே விட்டுத் தேன் விட்டு சங்கு கொண்டு கலமிறஞ் செய்து கற்பூரம் போட்டு இழைத்து சிமிளில் அடைத்துக் கொள்ளவும். உஷ்ணமான கண்ணுக்கெல்லாம் இட்டு வரவும் தீரும்.

"க்கு, திப்பிலி, மிளகு, எலம், சிறுநாகப்பூ, சாதிக்காய், சாபத்திரி சடாமாங்கிசி வெள்ளரி விரை லவங்கப் பட்டை வகை ஒன்றுக்கு பலம்.க, சக்கரை சேர்.ரு நெல்லிசி சமூலம் சேர்.ங கொண்டு வந்து இடித்து பதளையிலிட்டு எட்டு மரக்கால் தண்ணீர் விட்டு நாலிலொன்றாய் காய்ச்சி இறக்கி ஆற விட்டு பிசைந்து புழிந்து சட்டியில் வார்த்துக் குழனியாய்க் காய்ச்சி சர்க்கரை போட்டு பதமாய்க் காய்ச்சி சூரணத்தை தூவி லேகமாக பண்ணி பாக்கு மாதிரி கொள்ளவும் சகலமுந் தீரும்.

This is not clear as to in what diseases it is indicated

சர்வாங்க வாதத்துக்கு எண்ணெய்:- 30.3.63.

நொச்சியிலை, வாத மடக்கி யிலை, விழுதி யிலை, சதிரக் கள்ளி, வேளையிலை புங்கெலை, வேப்பிலை, எருக்கிலை, ஊமத்தை யிலை, வேலிப் பருத்தி இலை, சாட்டரணை யிலை மாவிலிங்க யிலை, செம்முள்ளி இலை, புளி இலை, ஆமணக்கெலை, நத்த யிலை, முடக் கொத்தானிலை இந்த இலை சாறு இந்த இலை வகை ஒன்றுக்கு சாறு நாழி கூட்டி ஐந்தெண்ணெயுங் கலந்து மருந்து வெண் கோஷ்டம், அரத்தை, தேவதாரம், மஞ்சிலை வகை ஒன்றுக்கு இரு கழஞ்சு மஞ்சிலை எலுமிச்சங் காயளவு இது வெல்லாம் அரைத்து எண்ணெயில் கலக்கி பதத்தில் வடித்துக் கொள்ளவும். உடம்பில் இட்டு ஊற விட்டு அரப் பிட்டு வெது வார்க்கவும். ~~~~ சர்வாங்க வாதமுந் தீரும்.

பூதிகாதி தயிலம்:-

நொச்சில் சாறு படி.உ, உத்தாமணிச் சாறு படி.உ, பொன்னங்கண்ணிச் சாறு படி .உ, குப்பை மேனிச் சாறு படி.உ, வேளைச் சாறு படி.உ, கரப்பு வெத்திலைச் சாறு படி.உ, பச்சை மஞ்சள் சாறு படி.உ, கையாந்த கரைச் சாறு படி. , ஆதண்டைச் சா படி.உ, முசுமுசுக்கைச் சாறு படி.உ, கரு நொச்சில் சாறு படி.உ, கடை மருந்து பூண்டு பலம்.ய, மிளகு பலம்.உ, வசம்பு பலம். 1/2 எண்ணெ படி.ரு, .க்கு இந்த சாறு விதமெல்லாம் கூட்டி எண்ணெயில் திட்டமாய் மருந்து கூட்டி காய்ச்சி மெழுகு பதமான வாறே இறக்கி தயிலம் வடிச்சுக் கொள்ளவும். இந்த தயிலம் எட்டு நாள் வட்டம் முழுகவும். இதுக்குத் தீரும் வியாதி சயித்திய மென்னப் பட்டதெல்லாம் தலை நோய் தாள் படுவன் சலகை இதுகள் தீரும்.

சகல கழிச்சலுக்கு மருந்து:-

அறுகீரை விரை குறுனி விரை கொண்டு வந்து இடித்து வஸ்திர காயம் பண்ணி ஒரு கலசத்தில் வைத்துக் கொண்டு இந்த மாவெல்லாம் எட்டு நாளையில் களிக் கிண்டி தின்னவும். நல்ல வெல்லம் நல்லெண்ணெ கூட்டி தின்னவும்:

குடிநீர்:- ஆவாரை பட்டை கடலிஞ்சி பட்டையும் கூட கலந்து குறுணி மோரில் ஊறப் போட்டு தாகமானால் இறுத்துக் குடிக்கவும் நிற்கும்.

பூலோக ஆக்கினி குமாரன் மாத்திரை:-

அரப்பொடி, செம்பு பொடி, வெங்கலப் பொடி, பித்தளைப் பொடி, திராப் பொடி, சாதிலிங்கம், கெந்தகம், ஊசிக் காந்தம், வெங்காரம் பச்சை நாபி, ரசம் இவை வகை ஒன்றுக்கு பலம்.க கூட்டி கத்தாழை சாறு விட்டரைத்து மூன்று நாளரைத்து அடையாகத் தட்டி ஒரு சட்டியிலிட்டு கத்தாழஞ் சாறு நீர் மேல் நெருப்பு கொடிவேலி சட்டி நிரம்ப விட்டு மறுபடி ஒரு சட்டி கொண்டு மூடி ஏழு சீலை மண் செய்து அடுப்பில் வைத்து மூன்று நாள் எரித்து நாலா நள் தீப் பிரித்து செந்தூரம் எடுத்துக் கொள்ளவும்.

இதுக்கு அநுபானம் இதில் அரைப் பணவிடையும் வெள்ளை வெங்காயம் தயிலத்தில் மூன்று நாள் கொள்ள சன்னி பதினெட்டும் சுரம் தொண்ணூத்தாறும் தீரும். இதில் அரைப் பணவிடையும் திரிகடுகும் வெதுப்பிப் பொடி செய்து தேனில் பத்து நாள் கொள்ள வாத மென்பத்தாறும் தீரும். இதில் அரைப் பணவிடையும், திப்பிலி பொடி ~~~~ வெரு கடிப் பிரமாணம் தேனில் கொள்ள தலை வலி, மூர்ச்சை, பித்த மூர்ச்சை, முசல கண்டன் மூர்ச்சை, சன்னி மூர்ச்சை, வாத மூர்ச்சை, பித்த மூர்ச்சை, பிற சன்னி மூர்ச்சை பல் கிட்டு இது வெல்லாம் தீரும்.

ரத்தக் கடுப்புக்கு:-

சுக்கு மேல் புறவி சீவிப் போட்டு உப்பு அரைத்து மேலே பூசிப் புடமிட்டு எடுத்து ள் எண்ணி நெய்யில் ஐந்து நாள் கொடுக்கவும்.

உள் மாந்தைக்கு மருந்து:-

~~மாம்பட்டை~~ மாமபட்டை வெட்டி வந்து மேல் புறணி சீவிப் போட்டு உரலில் துவைத்து ஒரு கலசத்தில் வைத்து முரிய உணர்த்தி கண்டங் கத்திரி சமூலமும் காட்டுக் குறிஞ்சா சமூலமும்

பிறண்டை வேர் இவை நன்றாய் முரிய உணர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி நாலு பொடியும் சரியாக நிறுத்து வைத்துக் கொண்டு வெருகடிப் பிரமாணம் தேனில் இரண்டு நேரமும் கொள்ளவும். கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். இதுக்கு தீரும் மார்ந்தை யீளை இருமல்; க்ஷயரோககம், சுவளை விப்புருதி, சிலேத்தும ரோகம் இது தீரும். கை கண்டது. பத்தியம் கார்ப்,பு, புளிப்பு, தவிர்க்கவும்,

<u>இருமல் சுவாசத்துக்கு மருந்து இரைப்பு உப்புசத்துக்கு மருந்து பிள்ளையில்லாமல் போக மரு.</u>

உசிலம் பட்டை துவைத்து இடித்து சீலை வடி கொண்டு குழம்பாக காய்ச்சி. இரண்டு வட்டுக் கருப் புட்டியும் கூடப் போட்டு சுக்கு, மிளகு, கூட்டி கொடுக்கவும். தீரும்

மணத்தக்காளி சாறு நாழி நெய் நாழி இதுக்கு மருந்து. திப்பிலி சிறுமூலம். செவியம் கொடிவேலி வேர், ஆடாதோடை அசமதாகம், கடுக்காய், சிறு தேக்கு, அதிவிடையம், இந்துப்பு, விழலரிசி, சிறு துளசி, கண்டங்கத்திரி வேர், முத்தக் காசு வகை ஒன்றுக்கு கழஞ்சு காய்ச்சி வடித்து நக்கவும் தீரும்.

<u>இரைப்புக்கு மருந்து :-</u>

அமுர்த வள்ளிக் கிழங்கும் லவங்கமும் கோஷ்டமும் சீலம் கூட அரைத்து. நெய்யில் கொதிக்க வைத்துக் கொள்ளவும். இரைப்பு, உப்புசந் தீரும். கெந்தகம் நெய் வார்த்தரைத்து சீலை உருட்டி கவறு திரியில் கட்டி வீட்டுக்கு விலக்க வந்த முதல் நாள், உள்பட மூன்று நாளைக்கு ஒவ்வொரு எத்தி நாலு நாழிகை ஆன பிறகு பிடுங்கிப் போடவும் நின்று போம்.

<u>தலையில் கடி வீக்கத்துக்கு மருந்து, மதன காமேசுரம், தாளக பற்பம், தாம்பிர பற்பப் பண்ணும்படி :-</u>

சங்கஞ் செடியில் நூல் பூச்சி பத்தெட்டு எடுத்து வந்து அதுவுடன் சிலந்தி நாயகம் வேர் கூட்டி வசம்பு பூண்டு கூடப் போட்டு நல்லெண்ணையிலெரித்துத் தலைக்கிட கடி தீரும்.

(வேறு) வறப் பலாக் கொழுந்து எலுமிச்சங் காயளவு மண்டலந் தின்ன வண்டு கடி எந்தக் கடியுந் தீரும். பத்தியம் இச்சா பத்தியம். கிராம்பு, சாதிக்காய், சாபத்திரி, குரோசாணி ஓமம், கசகசா, பேரீச்சம் பழம், முந்திரிப் பழம், சாரை பருப்பு, மத்தங் காய்ப் புல்லரிசி, நாரா பூண்டு விரை பனை விரை பூனைக் காஞ்சொறி விரை, அபினி, சமுத்திரா சோகி விரை, முருங்கை விரை, முருங்கைப் பூ, பச்சைக் கடலைப் இவை சமன் கூட்டிச் சூரணம் பண்ணி தேனில் மத்திச்சு தினம் பாக்கு பிரமாணம் கொள்ள அஷ்ட வீரிய முண்டு. கை கண்டது. சோற்றுக்குப் பால் வார்த்து சாப்பிடவும். கோழி முட்டை ஓட்டை உடைச்சு கரு வெல்லாம் எடுத்துப் போட்டு பொன்னரிதாரம் கொண்டு வந்து பொடி பண்ணி இரண்டு நாருங் கூட்டி சதிரக் கள்ளிப் பால் வார்த்துப் பிசைந்து குகை பண்ணி மேல் மூடி புடம் போடப் பற்பமாம்.

<u>(வேறு) தாம்பிர பற்பம் :-</u>

பழந் தட்டுக கொண்டு வந்து தயிரிலே மூன்று நாள் ஊறப் போட்டு கழுவிப் போட்டு நாலு துட்டெடை கெந்தகம் பொடி பண்ணி வைத்துக் கொண்டு வேப்பிலை நிழல் உலர்த்தாய் உலத்திப் பொடி பண்ணி இரண்டு பங்கு எடுத்து குகையிலே பாதிப் பொடியும் கீழேப் பாதி பொடியும் மேலே பாதிப் பொடியும் போட்டு மயூர புடமாகப் போடவும்

(வேறு). தாம்பரம் நாலு துட்டுக் கொண்டு வந்து மூன்று நாள் தயிரிலே ஊறப் போட்டு கூத்தன் குதம்பை யிலை, மணத்தக்காளி யிலைச் சாத்திலே மூன்று நாள் ஊறப் போட்டு, எடுத்து கழுவிப் போட்டு குதிரை மூத்திரத்திலே உலையிலே காய்ச்சி ஐந்து தரம் காய்ச்சவும். கூத்தம் குதம்பை யிலைச் சாறு வாங்கி அரைத்துக் கீழு மேலும் பொதிந்து இந்த இரண்டு இலையை நிழலில் உலர்த்தி எட்டு துட்டெடை பொடி கீழு மேலும் போட்டு புடமிட பற்பமாம்.

அரப் பொடி பலம்.௫ , வெங்காரம் பலம்.௧, திரிகடுகு பலம்.௩,

அ்சமதாகம் பலம்.க ஊசிக் காந்தம் பலம்.க இவை யெல்லாம் கையாந்த கரை சாறு வார்த்து ஒரு சாமமரைத்து எருக்கிலைச் சாறு விட்டு ஒரு சாமமரைத்து அடையாகப் பிடித்து கைய்யாந்த கரை இடித்து ஒரு சட்டியில் வைத்து அதின் மேலே மருந்தை வைத்து அதின் மேலே மருந்தை வைத்து மேலே சட்டி கொண்டு மூடி ஏழு சீலை மண் செய்து கஜபுடம் போடவும். மத்த நாள் எடுத்து பலம் அதைக்கு கொள்ளவும். அதின் மூன்று பணவிடையும், கைய்யாந்த கரை பொடி வெரு கடியும் திரிகடுகு பொடி வெரு கடியும் இது மூன்றும் பன வெல்லத்தில் பிறட்டி பத்து நாள் கொள்ளவும். வறவு காமாலை ஊது காமாலை வறள் காமாலை பாண்டு ரோகம், விஷ பாண்டு ரோகம் தீரும். இதுவும் இந்த பல முன் கொண்டாப் போலே தேனில் பத்து நாள் கொள்ளவும் சத்தி குன்மம் எரி குன்மம் வலி குன்மம் சுவாச யிருமல் இவை யெல்லாம் தீரும்.

வங்க செந்தூரம்:-

ஒரு பலம் வெடியுப்பும் சூயமும் சட்டியில் போட்டு வறுத்து அதின் பிறகு ஆவாரை வேரும் வட்டத் துத்தி வேரும் கண்டமாக நருக்கி அதிலே போட்டு வறுக்கவும். சிவக்க மட்டும் வறுத்து சிவந்தால் எடுத்துக் கொண்டு இதுக்கு அநுபானம் இதில் அரைப் பணவிடையும் சீனி வெரு கணியும் நற்சீரகமும் கூட்டி பசுவின் வெண்ணையில் இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ளவும். சிறு சின்னம் பதினெட்டும் கல்லடைப்பு பதினெட்டும் சதை அடைப்பன் பதினெட்டும் உஷ்ண ரோகம் மூனூற்றிருபத்தாறும் பித்த ரோகம், நா நதிருபந்தெட்டும் கழிச்சல் இருபதும் அதில் உன் டான தாகங்களும உழலைகளும் நீர்க் கடுப்பும் உள்ளுருக்கியும் எலும்புருக்கியும் பனிரெண்டு வகை சோப ரோகம்; முக எரிப்பும் கை எரிப்பும் கால் எரிப்பும் சுக்கிலப் பிரமியம் பதினெட்டும்

தீபித்த பற்பம், குமார சூரணம்:-

வாதம், கை கால் எரிவு, சயித்தியம், தாளி குத்தல் நிற்கும். அப்பிறக வக்கவும் வெள்ளாட்டுப் பாலில் மூன்று நாள் மற்தனம் பண்ணி வெள்ளாட்டுப் பாலில் மூன்று நாள் வார்த்தரைத்து ஐந்து புடம் போடவும். எருக்கம் பால் வார்த்தரைத்து பத்துப் புடம் போடவும். வெள்ளாட்டுப் பால் வார்த்தரைத்து பத்துப் புடம் போடவும். நொச்சியின் சாத்தில் இருபது புடம் போடவும். கையாந்த கரைச் சாத்தில் இருபது புடம் போடவும். ஆலங் கொழுந்து சாத்தில் பத்து புடம் போடவும். எலுமிச்சம் பழச சாத்திலரைத்து இருபது புடம் போடவும்.

சத்தி சாறணைக் கிழங்கு பலம்.ய வெட்டி வேர், விலாமிச்சம் வேர், பூலாங் கிழங்கு, மலக்காய், சந்தனம், நல்ல் சந்தனம், தற்கோலம், கோஷ்டம், அதிமதுரம், கொத்தமல்லி, ஏலம், சீரகம், லவங்கப் பத்திரி, பற்படாகம், வெரிஞ்சில் வேர், நரிப் பயத்தம் வேர், பேறும்ட்டி வேர், முசுமுசுக்கை வேர், நன்னாரி வேர், நிலப்பனைக் கிழங்கு, தண்ணி மிட்டான் கிழங்கு, தாமரை வளையம், நெய்தல் கிழங்கு, நிலவேம்பு, வில்வப் பத்திரி வேர், கிரம்பு இது வகை ஒன்றுக்கு பலம். 1/2 சீந்தி சர்க்கரை பலம்.க, இது வெல்லாம் சூரணம் பண்ணி பசுவின் பாலில் பச்சரிசி கழுநீரில், தேனில் சாப்பிடவும்.

கெந்தக ரசாயனம்:-

கொள்ளு, உலந்த கெந்தகம் பலம். 6 பறங்கிப் பட்டை பலம்.ய, சுக்கு, திப்பிலி, மிளகு, அரத்தை சீரகம், ஓமம், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, தாளிச பத்திரி, கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாபத்திரி, வாய்விளங்கம், கண்டு பறங்கி, கருஞ்சீரகம், தானிக்காய் வகை ஒன்றுக்கு பலம். 1/2 செங்கத்தாரிப் பட்டை பலம்.க, கொடிவேலி ஆள் பலம்.க, சக்கரை சேர்.கவ, நெய் சேர்.க, இது கூட்டி ரசாயனம் பண்ணி சாப்பிடவும். சகல சூலையுந் தீரும்.

ரச கற்பூரம், கிரந்தி சூலைக்கு மருந்து:-

ஒரு சட்டியில் அரைப்படி உப்புப் போட்டு நடுவே குழித்துக் குப்பைக் கீரை வேர் அரைத்து குகை பிடித்து அந்தக் குகையில் மூன்று விராகனிடை ரசம் குகையில் விட்டு அந்த

உப்புக் குழியில் வைத்து சட்டி கொண்டு மூடி அந்த சட்டி விளிம்பு (க்கு) (கக) தேத்த மூடி மண் செய்து வெள்ளாவி அடுப்பு போல் அடுப்பிலேத்தி கருவேல விறகு கொண்டு முப்பது நாழி எரிய விடவும். பின்பு அடுப்பில் மண் கொட்டி ஆத்தி இறக்கில் மேல் சட்டியில் எரியிருக்கிற பற்பத்தில் ஒரு பலம் புட்டி வெல்லம் போட்டு பிசைந்து ஐந்து உருண்டை பண்ணி முதல் நாள் நல்லெண்ணெ தேய்ச்சு தலை முழுகி மத்தா நாள் உருண்டை சாப்பிடவும். இப்படி ஐந்து நாள் சாப்பிடவும். வெந்நீர் சாப்பிட்டு வரவும். உடனே கால் பலம் கொள்ளும் கால் பலம் அரிசியும் கஞ்சி காய்ச்சிக் குடிக்கவும். வாயில் தாக்கிலை மருந்து விடவும். பத்தியம் மிளகு நெத்திலி முன் சட்டியில் இந்த உப்புக் கூட்டவும். பின்னை ஒன்றுமாகாது. ஒன்பதா நாள் நல்லெண்ணெயில் தலை முழுகவும். வாய் வெந்தால் ஆவாரம் பட்டை காய்ச்சிக் கொப்பளிக்கவும் வயிறு கடுப்பு ஆலம் கொட்டைப் பாக்கு சீவிப் போட்டுக் காய்ச்சிக் குடிக்கவும். ஒரு வருஷத்துக்கு மாங்காய் பன்னிக் கறி பசனிக்காய் பாகல் காய் ஆகாது. சகல சூலையும் கிரந்தியும் தீரும். கை கண்டது.

சங்கா கிரணிக்கு, சிரோ வியாதிக்கு மருந்து தயிலம் சங்கு வடகம்:-

சங்கர கிரணிக்கு:-

சுண்ணாம்பு தண்ணீர் சேர்.வ, நல்லெண்ணெ பலம். பலம்.க இது இரண்டுங் கூட்டி கலத்தில் வார்த்து மதித்து எழு நாள் கொடுக்க குணமாம். பத்தியம் நல்லெண்ணெ வார்த்து சாப்பிடவும். சங்கர கிரணி தீரும்.

கோஷ்டம், வசம்பு, எருக்கம் பால், ஓமம், வெள்ளாட்டுக் கோமியம், சேர்.வ கூட்டி எண்ணெ பண்ணி தலைக்கு தேய்ச்சு மூக்கு இலையாவது அரசிலையாவது கட்டி மறுநாள் முழுகவும். இப்படி எழு முழுக்கு முழுகவும் சிரோ வியாதி தீரும்.

சங்கு பற்பம் பலம்.க, நாயுருவி பற்பம் பலம்.க, பிரண்டை பற்பம் பலம்.க, புளியம் பட்டை பற்பம் பலம்.க இந்துப்பு பொட்டிலுப்பு வளையலுப்பு கல்லுப்பு, குச்சுப்பு சுக்கு திப்பிலி, மிளகு, சீரகம், ஓமம், சித்திர மூலம், கடுக்காய் தோல், தானிக்காய் தோல், நெல்லிப் பருப்பு இஞ்சி இதுகள் வகை ஒன்றுக்கு பலம்.க எலுமிச்சம் பழச் சாறு சேர்.க, இந்த மருந்தெல்லாம் இடித்து சூரணம் பண்ணி எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து பஞ்ச லவணமுங் கூடப் போட்டு பற்பங்களும் போட்டு இரண்டு விராகனிடை பெருங்காயம் பசுவின் நெய்யில் சுத்தி பண்ணி கூடப் போட்டு அரைத்து கழக்கொடி பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி அந்தி சாந்தி கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி தீபனமாம். குன்மம் வாங்கும். வாதக் கிரணிகள் வறள் வாய்வு தீரும். வயத்தில் யிரைச்சல் உப்பிசம் உமிநீர் ஊறல் வாந்தி அரோசிகம் ஒக்காளம் இது முதலான தெல்லாம் தீரும். இச்சா பத்தியம்.

சாதிலிங்கம் நீர் வாங்க அய வெத்தி ரசயானம் வாந்தி பண்ணுகிறதுக்கு மருந்து

சாதிலிங்கம் பசரியிலைச் சாறு வார்த்து அரைத்து அச்சமாக தட்டி வில்லையாய் பண்ணி புதுச் சட்டியில் வைத்து மூடி சீலை மண் செய்து மேல் சட்டி மேலே சாணியை வளைக் கட்டி தண்ணீர் வார்த்த அடுப்பிலே வைத்து தீப்ராக்கினியாக எரியிட்டால் மேல் சட்டியிலே இரசம் ஏறி யிருக்கும். அது வாங்கிக் கொள்ளவும்.

சிவதை வேர் ஙா க்கு நிலையாவாரை வேர் ஙா க்கு, கண்டங்கத்திரி ஙா க்கு அரை சங்க வேர் ஙா க்கு பிரமிப் பூண்டு ஙா க்கு கடுக்காய் ருய, நெல்லி முளி பலம்.அ, சாறடை சமூலம் ஙா க்கு 1/2 கூட்டி தண்ணீர்கள் ஒரு சாமம் காய்ச்சி கடுகுரோகணி பலம்.உ, சுக்கு பலம்.உ, திப்பிலி பலம்.உ, ஓமம் பலம்.க இந்துப்பு பலம்.க, கடுக்காய் பலம்.க, பெருங்காயம் பலம்.1/2, பிரமிப் பூண்டுச் சாறு படி.க, கய்யாந்த கரைச் சாறு படி.க, சாறடை சாறு படி.க, விழுதி சாறு படி.க, சர்க்கரை சேர்.உ, தேன் சேர்.ங, கூட்டி பண்ணி வைக்கவும். சர்வ வியாதியுந் தீரும். தானிக்காய் பிரமானம் கொள்ளவும்.

வாந்திக்கு:- ~~சும்மா யிருக்கச்சே வாந்தி பண்ணுறதுக்கும்~~, நீர் கட்டு, நீர் கடுப்புக்கும், இளநீர் குழம்பி, கண்ணுக்கு தொண்ணூறு த்தாறு வியாதிக்கு மருந்து:-

மிதிபாகலிலை ஒரு பிடி மாத்திரம் இரு நாழி நீர் வார்த்து உப்பு போடாமல்

வேக வைத்து உமக்கான வாறே சீலே வடி இட்டு கொடுக்க வாந்தி நிற்கும்.

கடுக்காய் நாலு நருக்கின பொடியும் பலம்.க, கற்காட சிங்கி விராகனிடை: உ காட்டு முருக்கம் பூ மூன்று விரல் கொண்டது போட்டு கசாயம் வைத்து ஒரு சிறங்கை தண்ணீர் கொடுக்கவும் நீர் விடும். மருள் கிழங்கு ஒரு குத்து பிடுங்கி வந்து அதன் புளிச்ச மோர் வார்த்து பிசைந்து ஒரு சிறங்கை பிழிந்து கொடுக்க நிற்கும்.

சிறுக்கீரை வேர் நாலு, நெரிஞ்சி வேர், இந்த இரண்டு வகையும் கசாயம் வைத்து இறக்கி இந்தக் கசாயத்தில் ஒரு விராகனிடை வெங்காரம் சுத்தி பண்ணிப் பொரிச்சு போட்டு கலக்கிக் கொடுக்கவும் இறங்கும்.

சிகப்பு நெருஞ்சில் வேரோடே பிடுங்கிக் கழுவிப், போட்டு பால் வார்த்தரைத்து பாலிலே கரைத்து சர்க்கரை போட்டு கொடுக்க நீர் கடுப்பு நிற்கும். மூன்று நாள் கொடுக்கவும்.

பொன்னங்காணி வேர்,. சிறுக்கீரை வேர், நன்னாரி. வேர் ஒரிலைத் தாமரை வேர், லவங்கம் மரமஞ்சள் யிருவேலி விலாமிச்சம் வேர், ஏலம், அதிமதுரம், செண்பகப்பூ, நற்சீரகம் செங்கழனிக் கோஷ்டம், முத்தக் காசு, நெல்லிக்காய் தானிக்காய், கடுக்காய், செங்கழுநீர் கிழங்கு சந்தனம் ஒவ்வொன்றுக்கு ஒரு கழஞ்சு இடிச்சு ஊறாக்கிக் குழினி நீரில் காய்ச்சி பாதியான வாறே. இறக்கி. பிழிந்துக் வடித்து ஒரு சட்டியில் விட்டு திரும்பக் காய்ச்சி கோல் தோய்த்தால் ஒட்டும். அந்தப் பதத்திலே இறக்கி ஒரு கலத்திலே தண்ணீர் வார்த்து வேறே கலமிட்டு மூடி வைத்த நயிலக் கலத்தின். மேலே அந்தக் குழம்பிட்டு இதில் கூட்டு மருந்து முத்தம், துரிசி, கடல் நுரை, பீதாதிஞ் சனு பீத ரோகணி, சங்கு வெண் கல்லு, ஓமம் ஒன்று அரைக் கழஞ்சு ஆற்கப் பொடி செய்து அந்தக் குழம்பிட்டு அம்மியில் அரைத்து மத்தக் கலசத்திலே தேன் விட்டு சாரித்த கலத்தோடு கலம் வைத்து தேய்க்க கருக்கும். இதில் பச்சைக் கற்பூரம் பதிவுடனே சேர்த்து பறணி தனில் பாங்குடன் வைத்தால் கலங்கும். வியாதி பித்த காசம், நீல காசம், வறட் காசம், குமர காசம், புகைச்சல் எரிப்பு நீர் முட்டு வெள்ளெழுத்து பிரிசல் பாண்டு படலம் தினவு திமிர் வலிப்பு யிறண சுக்கிரன் முழி கண் குருடு., செவ்வோர் படலம், மயிர் மாறல் கண் கண்ணில் உள்ள வியாதி எல்லாம் தீரும்.

வங்க_செந்தூ_ரம்:-

காரீயம் இருபது பலம் பசுவின் கோமியத்தில் இருபது தரம் உருக்கிச் சாய்க்கவும். பின்பு சட்டி வைத்து பதின் கழஞ்சு அவின் மருந்து ஒரு பலம் வெடியுப்பு இதைச் சட்டியில் போட்டு வறுக்கவும். அதின் பிறகு ஆவாரை வேரும் வட்டத் துத்தி வேரும், கண்டங் கண்டமாக நருக்கி அதிலே போட்டுச் சிவக்க மட்டும் வறுக்கவும். சிவந்த பிறகு எடுத்து வைத்துக் கொள்ளவும். இதுக்கு அநுபானம் இந்த செந்தூரத்திலே அரைப் பணவிடையும் சீன ஒரு வெருகடிப் பிரமாணம் நற்சீரகம் கூட்டி பசுவின் வெண்ணெயில் இரண்டு நேரமும் இருபது நாள் கொள்ளக் கிரிசினம் பதினெட்டு கல்லடைப்பான் உஷ்ண ரோகம் கல் சதை யடைப்பன் முன்னூத்திருப்பத்தாறு பித்த கோபம்.௪௨௮, சகல கழிச்சல் இருபது வகையும் உண்டான வகைகளும் தாகங்களும், நீர்க் கடுப்பும் உள்ளுருக்கி எலும்புருக்கி_பனிரெண்டு வகையும் க்ஷய ரோகம், பனிரெண்டு வகையும் முகம் எரிப்பும் கால் எரிப்பும் சுக்கிர பிரமியமுந் தீரும். இந்த செந்தூரத்தில் அரைப் பணவிடையும் காந்த செந்தூரம் ஒரு பணவிடையும் அட்ட காசம் ஒரு வெருகடியும் தேனில் குழப்பி பிறட்டி இரண்டு நேரமுங் கொள்ள முப்பது நாள் கொள்ள கிராணி ஆறு வகையும் அதிசாரம் பனிரெண்டு வகையும் வயத்துக் கடுப்பு பத்து வகையும் வயத்தில் பிள்ளை பெத்து சீய் விளைந்தது கிராணியுந் தீரும், இந்த செந்தூரம் அரைப் பணவிடையும் லோக செந்தூரம் ஒரு பணவிடையும், சுக்கு, மிளகு வெதுப்பி பொடி செய்து ஒரு வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்து இரண்டு நேரமும் இருபது நாள் கொள்ள வறக் காமாலை நீர்க் காமாலை, பயித்திய பாண்டுவ ரோகம், சோகை விஷ பாகம், சோமம், மேல் இரைப்பு, உப்புசம் யீளை இருமல் எலிகடி இதுவெல்லாம் தீரும்.

பிள்ளை இல்லாதவர்க்கு பிள்ளைப் புழு விழ:-

பத்துக் கடுக்கா அரைத்து மூன்று நாள் இள வெந்நீரில் கொள்ளவும். பொன்னு

வாரம்பு ஒரு பிடி, களச்சிக் கொழுந்து ஒரு பிடி துவைத்து சாறு மூன்று நாள் கொள்ளவும். பந்து முள்ளிப் பழத்தை தட்டித் தண்ணீர் ஊறப் போட்டு வடித்துக் கொண்டு மாறளவு தண்ணீரில் நின்று குடிக்க உடனே புழு விழுந்து போம். பிறகு கருத் தரிக்கும்.

உதிரக் கட்டுக்கு:-

நாழி நண்டுக் கொழுப்புக் கொண்டு வந்து பாலில் காய்ச்சி உறை குத்தி கடைஞ்சு வெண்ணெ எடுத்து அத்தி வீக்கத்தில் பூசவும். நாக்குள்ளே பாம்பு பாக்களவு அரைத்து பாலில் கலந்து கொடுக்கத் தீரும். கை கண்டது. பேய் தும்மட்டி ஐம்பது கொண்டு வந்து சாறு பிழிஞ்சு ஒரு சட்டியிலே காய்ச்சி இந்துப்பு நாழி போட்டு இறக்கிக் காசிடை வெள் வென்னீரில் கொள்ள முன் சொன்ன வியாதி யெல்லாந் தீரும்.

காமாலை, கல்லீச பிறநீர்க் கோர்வைக்கு நீர் இருப்பதமாக இழியுறத்துக்கு:-

ஆவாரை வேர், பங்கம் பாளை வேர், நாவல் பட்டை, மாம்பட்டை, கடல் முஞ்சிப் பட்டை, கொன்னை பட்டை, அரசம் பட்டை, புங்கம் பட்டை, தேத்தாம் பட்டை, விளாம் பட்டை வெள் வேல், கருவேல், கடுக்காய், நெல்லிப் பருப்பு, தேத்தாம் விரை தானிக்காய், ஆவாரம் விரை விறுன் சுண்டை பருத்திக் கொட்டை சிறுபூளை வேர், கோரைக் கிழங்கு இவை வகைக்கு அரைக் கழஞ்சு உரிய நீர் வார்த்து உழக்காய் காய்ச்சி காலமே நாற்பது நாள் குடிக்கத் தீரும். கருப்பஞ் சாறு போலே விழுகிறதும் தயிர் போல்வும் தேன் பால் போலவும் கறுநீர் போலவும், எண்ணெ போலவும் சிகப்பு, வெள்ளைப் பச்சை உப்பு போலவும் இப்படிப் பல பலவிதங்களாக நீர் இறங்கிறதெல்லாம் தீரும். இதுக்கு மேல் நீரழிவுக்கு ஆவாரையிலை ஒரு கொட்டைப் பாக்களவு அரைத்து பசுவின் பாலில் கொடுக்கவும். ஆவாரை இலை ஒரு நார்த்தங் காயளவு அரைத்து உரிய குறுவை அரிசியில் பால் சோறுக்கி எட்டு நாளைக்கு காலமே அசனம் பண்ணவும் நீரழிவு தீரும்.

சுராங்கிஉடீம், மகர் சுராங்கிஉடீம், பஞ்சன ரசம்:-

இரசம், கெந்தகம்.உ, வெங்காரம்.உ, நாபி.க, மிளகு.ரு, நேர்வாளம்.ரு இதையெல்லாம் கொடி வேலி வேர் சாத்திலரைத்து உளுந்து பிரமாணம் குளிகை பண்ணி சுரத்துக்கு யிஞ்சி சாத்திலிடவும். மிளகு பொடி பண்ணி இள வென்னீரில் ஒரு குளிகையிட வும் நிற்கும்.

ரசம் கழஞ்சி.க, அரிதாரம் கெந்தகம்.க, வெங்காரம்.க, மனோசிலை .க, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், நெல்லி முள்ளி, தானிக்காய் இவை வகைக்கு கழஞ்சுக்கு கடுகுரோகணி கழஞ்சு நேர்வாளம் கழஞ்சு.உ, சுத்தி செய்து இது பாகல் இலைச் சாத்திலரைத்து பனிப் பயறு பிரமானம் உருண்டை பண்ணி மிளகு நீருடன் இட மகா சுரந் தீரும்.

ரசம், கெந்தகம், நாபி, நேர்வாளம், சித்திரமூலம், சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய் நெல்லிக்காய் இதின் சமன் கூட்டி கையாந்தகரைச் சாறு வார்த்தரைத்து ஒரு நெல்லிடை குளிகை பண்ணி பசுவின் நெய்யில் கலந்து கொடுத்தால் உதிர மகோதரம், மாரில் நோவு பதினெட்டு குஉ்டம், சர்வ சுரமும், பஞ்ச காச பிரமியம் இதுகளெல்லாந் தீரும். ~~பிரளைய *கால *ருத்திர~~

பிரளைய கால் ருத்திர பிர சன்ன காலாக்கினி வாயிர வாசம். ரச செந்தூரம், கனக செந்தூரம்:-

சாதிலிங்கத்தில் வாங்கிய ரசம் கெந்தகம்.உ, அப்பிரகம்.ரு, அரிதாரம்.ரு, மனோசிலை.உ, வெங்காரம்.உ கற்பூர சிலாசித்து நேர்வாளம்.க, நாபி.ங, லோப பலம்.ங, (3) தாம்பிரம் பலம்.ங, இது வெல்லாங் கூட்டி அரைக்கிற அடவு. எருக்கம் பால் நொச்சிலைச் சாறு, கொடிவேலி சாறு, உத்தாமணிச் சாறு, எலுமிச்சம் பழச் சாறு, பாகலிலைச் சாறு, இது ஒவ்வொன்று பிரத்தியேகம் ஒரு ஒரு நாள் அரைத்து ஒரு நெல்லி டைப் பிரமானம் குளிகை பண்ணி அனுபானத்தில் கொடுத்தால் திரி தோஉ்முந் தீரும்.

ரசம், கெந்தகம் சமன் கூட்டி செருப்படை யிலைச் சாறு வார்த்தரைத்து வளையல் குப்பியிலிட்டு மேலே சீலை மண் செய்து பானையிலே மணலிட்டு நடுவே குப்பியை வைத்து அதின் மேலே நிறைய மணலிட்டு இரண்டு சாமம் புடமிடவும். செந்தூரம். இது அனுபானம் விசேஷத்தில் கொடுக்கவும்.

may be considered

நாக செந்தூரம்:-

சாதிலிங்கம், வெண்காரம், நாபி, மிளகு, திப்பிலி இதின் சமன் கூட்டி தண்ணீர் வார்த்து அரைத்து நெல்லு மாத்திரம் குளிகை பண்ணி இது கூடசாலை விரையிலை ஒரு குளிகை கொடுத்தால் தேனில் கொடுத்தால் காச்சலுடன் வயறு கழிச்சல் அதிசாரம் நிற்கும்.

ரசம்.உ, கெந்தகம் பலம் 6 சாதிலிங்கம்.உ, வெங்காரம்.4, நாபி.உ, மனோசிலை.உ, பொட்டிலுப்பு.4, சுக்கு.உ, மிளகு.உ, திப்பிலி.உ, லவங்கம்.உ, சாதிக்காய் சாபத்திரி.உ, பெருங் குருந்து விரை.8 இந்த பங்கு 40 ம் எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து மத்தா நாள் கையாந்தகரைச் சாறு நொச்சில் சாறு வெத்திலைச் சாறு கடுக்காய் கசாயம் தானிக்காய் கசாயம் நெல்லிக்காய் கசாயம் நாள் ஒன்றுக்கு ஒரு சாறு வார்த்தரைத்து நெல்லு பிரமாணம் குளிகை பண்ணி அனுபான அளவிலே கொடுத்தால் பதிமூன்று சன்னியுந் தீரும்.

திமிறுக்கு, சந்திர சேகர ரசம், திரிபுர வயிரவம், செவ்வட்டை கடிக்கு, பிள்ளையுண்டாக ரத்தக் கிரணிக்கு நாபி சுத்தி:-

ரசம், தாம்பிர பற்பம், கெந்தகம், திப்பிலி, நேர்வாளம், கடுகுரோகணி, கடுக்காய், சிவதை வேர், எட்டிக் கொட்டை இது சமன் கூட்டிச் சதுரக் கள்ளிப் பால் வார்த்தரைத்து சிமிழில் அடைத்து அரைப் பணவிடை தேனில் கலந்து உளுந்து மாத்திரந் கொடுக்க பழைய காச்சல் நில்லாத காச்சல் புதுக் காச்சல் நவசுரமும் விடும். இது கை கண்டது. செங்கத்தாரி தயிலமும் செங்கொட்டை தயிலமும் சமனாய் இறக்கி உள்ளுக்கு கொள்ள சிவப்பு மாறும். வாழைத் தண்டு தயிலமும் குப்பை மேனித் தயிலமும் சரியாய் கூட்டி உள்ளுக்குக் கொள்ள திமிறு தீரும். பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். வேம்பின் மேல் புல்லுருவியும் செங்கழுநீர்க் கிழங்கும் அரைத்து பசுவின் பாலில் குடிக்க வயத்தில் புழுச் சாகும். பிள்ளை உண்டாம்.

Not useful

காசுக் கட்டி விராகனிடை.4 பொடி செய்து உழக்கு எண்ணெயில் கலந்து கொடுக்கவும் கிரணி தீரும். நாபியை புளியங் கொட்டைப் பிரமாணம் நறுக்கி ஒரு நாள் பசுவின் மூத்திரத்தில் ஊறப் போட்டு மத்தா நாள் பசுவின் நெய்யில் ஊற விட்டால் நெய்யை தடவி மூன் நாள் வெய்யிலில் வைக்கவும். உலை மூடி நிறைக் கோமியம் வார்த்து அதிலே நாபியைப் போட்டு மூன்று நாள் வெய்யிலில் வைக்க சுத்தியாம். அதின் பிறகு அவிஷதத்துக்கு கூட்டவும்.

வாச்சாரம் சுத்தி, மனோசிலை சுத்தி, அரிதாரம் சுத்தி:-

Not required

வாச்சாரத்தை சட்டியில் வரகு யிட்டு அதிலே சாறு வார்த்து பிடவையால் வாய் கட்டி மருந்தை சிறுக நறுக்கிப் போட்டு உலை மூடி படிக யிட்டு நாலு சாமம் எரிய விட்டு சுத்தியாம். அதின் பிறகு வாசாரத்தை சிறுக நறுக்கி சாணி கரைத்து அதில் போட்டு நாலு சாமம் எரிய விடவும். சுத்தியாம். அதின் பிறகு அவிஷதத்துக்கு கூட்டவும்.

மனோசிலை, எட்டி யிலைச் சாறும், ஆடா தோடைச் சாறும், பானையிலே வார்த்து வாய் கட்டி அதின் மேலே மனோசிலையை சிறுக நறுக்கி வைத்து மேலே படிக யிட்டு மூன்று சாமம் அடுப்பிலே வைத்து எரியிட சுத்தியாம். பிறகு சிறு வழுதலைச் சாத்திலரைக்க சுத்தியாம். அதின் பிறகு அகத்திப் பூவிலே ஊறப் போட சுத்தியாம்.

அரிதார சுத்தி:-

பூசனிக்காய் சாறு பானையில் வார்த்து வாய் கட்டி அரிதாரம் தகடாக தட்டி அதின் மேலே வைத்து படிகமிட்டு மூடி மூன்று சாமம் எரியிட சுத்தியாம். அதின் பிறகு உலை நடுவே வைத்து துணியில் சுருட்டி பூசனி சாறு பானையில் வார்த்து டொளேந்திர புடமிடவும்.

Not useful

அதின் பிறகு கொள்ளு சாத்திலே போட்டு எரியிடவும் சுத்தியாம். சாதிலிங்கம், எலுமிச்சம் பழம், . சாத்தில் போட்டு மூன்று சாமம் எரியிடவும். வெள்ளாட்டுக் கோமியத்தில் போட்டு ஊற வைக்கவும் சுத்தியாம். வெங்காரம் உளுந்து சாத்திலேயும் பசுவின் பாலிலேயும் கழுவிலை சுத்தியாம். பொரித்துக் கொள்ளவும்.

நேர்வாளம் உள் விரை வாங்கிப் போட்டு மேல் ஒடு வாங்கிப் போட்டுப் பசுவின் கோமியத்தில் போட்டு வேக வைத்து பிறகு பசுவின் கோமியத்தில் போட்டு வேக வைத்து பிறகு பசுவின் பாலிலே வேக வைத்து எடுத்தால் சுத்தியாம். . அதின் பிறகு காடியில் சாணி கரைத்து டோளேந்திர புடம் போட்டால் சுத்தியாம். பிறகு சர்க்கரை தண்ணீரில் கலந்து போட்டு வேக வைத்தால் சுத்தியாம். பிறகு நெய்யில் இளம் பதமாக வறுக்க சுத்தியாம். குங்கிலியம் மூட்டை கட்டி கடுக்காய் தானிக்காய் நெல்லிக்காய் இந்த மூன்று காய் கசாயத்திலே ஊறப் போடவும் சுத்தியாம். எலுமிச்சம் பழம் சாத்தில் உலத்திலை சுத்தியாம். ஊமத்தை எலுமிச்சம் பழம் சார்த்திலை சுத்தியாம். சாதிலிங்கம் கொம்மட்டி மாதளம். காய்ச் சாத்தில் உலத்திலை சுத்தியாம். மயில் துத்தம் சுண்ணாம்பு நீரில் எரியிட சுத்தியாம்.

<u>கண் ஆணிப் பூவுக்கு:-</u>

இழுநுடுதலைச் சாறு கண்ணில் புழிய ஆணிப் பூ தீரும்..

அப்பிரகம் பலம்.க, கொண்டு வந்து காடி வார்த்து நாலு சாமமரைத்து புசு ஓட்டில் வாங்கி வில்லையாக வைத்து ஒரு எருமுட்டையாலே மூடி கெசபுடமிடவும். எருக்கிலைச் சாறு குப்பை மேனிச் சாறு எலிக்காது சாறு முன் சொன்னபடி பிரத்தேகம் நாலு நாள் எடுத்து அரைத்து நாலு புடம் போட்டவும். பின்பு சும்மா ஒரு புடம் போடவும். காந்த செந்தூரம் வேண்டினது ஓரிலைத் தாமரைச் சாறு வார்த்து அரைத்து அகலில் தடவி சீலை மண் செய்து வரளிலே புடம் போடவும். இப்படி பத்து புடம் போடவும் செந்தூரமாம். வயத்தில் சர்வ வியாதிக்குமாம். உள் மூலம் பிற மூலம் வயத்தில் விப்புருதி முதலானதுந் தீரும்.

2 தெசா ஒரு பலம் கொண்டு வந்து இள வென்னீர் வார்த்தரைத்து புடம் இட்டு உருண்டை பண்ணி அந்தி சந்தி. இரண்டு நேரமும் சாப்பிடவும் கிருணி கடுப்புந் தீரும்.

<u>வலிப்புக்கு:-</u>

செழு மலர் கொன்னை வேர் சந்தனம் உரைத்து சிறுநீரில் உரைத்து தவளையிடவும். அந்த வேர் மணி பண்ணி கழுத்தில் கட்டவும் போம். மூன்று நாள் தவளையிடவும். இந்த மணி கட்டியிருந்தால் வலிப்பு வாறதில்லை.

<u>திமிர் வாதத்துக்கு, ரத்த பித்தத்துக்கு, நாலா மாறலுக்கு மூன்றும் மாறலுக்கு:-</u>

சுக்கு பலம்.க, சீரகம் பலம்.க, ரூயபுரி சர்க்கரை சேர். 1/2 வேளைக்கு ஒரு பலம் நெய்யில் கலந்து கொடுக்கவும். முன் மருந்தும் வாய் விளங்கம் பலம் பலம்.வ, தெசாவரம் பலம். 1/2 கோஷ்டம் பலம். 1/2 அக்கலாக் காரம் பலம். 1/2 தும்பருஷ்டகம் பலம். 1/2 இடித்து வஸ்திர காயம் பண்ணி சூரணம் எடுத்து வைத்துக் கொண்டு தேத்தாங் கொட்டை ஒரு பலம் சூரணம் கலந்து கரிசிலாங் கண்ணி சாறு பதமாய்க் காய்ச்சி இது வெல்லாம் பசுவின் நெய் வார்த்து வேகப் பண்ணி அந்தி சந்தி சாப்பிடவும். பத்தியம் பிடிக்கவும். பாலு சாதம் சாப்பிடவும். வெள்ளாட்டு உப்புக் கண்டம் சாப்பிடவும்.

<u>நாலரான மாறல் மூன்று மாறலுக்கு:-</u> Not Required

Not useful

தும்பை முக்கோணம் பாத்து கீழண்டை செடி பிடிங்கி அவன் பேர் சொல்லி தலை கீழாய்ப் போட்டு விடவும். சுரத்துக்கு விடத் தேர் வடக்கு போற வேர் தூப தீபம் நைவேத்தியம். கொடுத்து அந்த நாரை உரிச்சு மஞ்சள் தடவித் தூபங் காட்டி கொஞ்சம் பிடி காதில் விடவும். . சுரத்துக்கு விடத் தேர் வடக்கு போற வேர் தூப் தீபம் நைவேத்தியம் கொடுத்து அந்த நாரை உரிச்சு மஞ்சள் தடவித் தூபங் காட்டி கொஞ்சம் பிடி காதில் கட்டவும். திரை மோர்திரம் பண்ணி கையில் போடவும்.

<u>மலட்டுப் புழுவுக்கு:-</u> Not required

ஆதிவார நாள் ஆடு தின்னாப் பாளை வேர் கொண்டு வந்து கருணையாய் நருக்கி

களிப் பாக்கும் பச்சை வெத்திலையும் பாக்குடனே கொடுக்கவும். மூன்று ருதுவுக்கு கொடுக்கவும். கருத்திருக்கும். இரண்டு வேளையும் சாப்பிடவும்.

(வேறு) வெள்ளெருக்கு மொக்கு அரைத்து நல்ல வெல்லம் விராகனிடை.உ கூடக் கலந்து முழுகின நாள் முதல் காலத்தாலே எட்டு நாள் கொள்ளவும். இப்படி மூன்று ருதுவுக்கு கொடுக்க கருவு தரிக்கும்.

<u>உஷ்ணத்துக்கு:-</u>

சித்திர மூலம் வேர் பட்டை அடை அரைத்து சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு சர்க்கரை விராகனிடை.ங, வெண்ணை விராகனிடை.ங, கூட கூட்டி அந்தி சந்தி சாப்பிடவும். உஷ்ணந் தீரும்.

<u>நீரழிவுக்கு, வெகு மூத்திரத்துக்கு விரை வாதத்துக்கு:-</u>

நல்ல வெல்லம் பலம்.ரு, சுக்கு பலம்.க, பச்சைக் கற்பூரம் விராகனிடை.க, கூட்டி கொட்டைப் பாக்குப் பிரமாணம் உருண்டை பண்ணி நெய் விராகனிடை 4 கூட கூட்டி இரண்டு வேளையும் சாப்பிடவுந் தீரும். கருத்தகம் பிளி சுட்டு பொடி பண்ணி விராகனிடை ௱ள் உத்தாமணிச் சாறு பலம். 1/2 கூட கலந்து காலமே சாப்பிடவும். முடக் கொத்தான் இலையும் கழற்சி யிலையும் விளக்கெண்ணெயில் வருத்து விரை மேல் வைத்துக் கட்டவுந் தீரும்.

<u>வளிக்கு தாளிச வடகம்:-</u>

எருக்கம் பழுப்பு வெத்திலையில் மடித்து மென்று முழுங்கவும். சட்டியில் விளக்கெண்ணெ வைத்து கோழி முட்டை உடைத்து வார்த்து பணியாரம் பண்ணி அதின் மேல் கழல்பருப்பு பொடி செய்து போட்டு அது மேல் பின்னையும் ஒரு முட்டை உடைத்து வார்த்துப் பணியாரம் பண்ணி தின்னக் கொடுக்கவும். வளி குணமாம்.

தாளிச பத்திரி, மிளகு, திப்பிலி, தன்னுடன் குகை நீர் தான் பலம் ஒன்றாக லவங்கம் பட்டை, அதின் பத்திரி சிறுநாகப்பூ கேளீர். விலாம் பச்சை வேர், செவியம், சித்திர மூலம், ஏலம், மத்தும் வுங்க அரைப் பலம். இரும்பு மேல் கால் பலம். சத்திர வியாள நிறுத்தரைத் தூளது செய்து சமராம புரிச் சர்க்கரை கலந்து கொள்ள சுவாச மொடு காசமும், பீசினை கிருணியுமி சுரம் வாந்தியும் மார் வலியும் நாளது சில பாண்டு ரோகம் அதிசாரமும் வியாதி தீரும்.

<u>நாடி வரத் தினையாம்.</u>- <u>ஏலாதி சூரணம்:-</u>

ஏலம், தாளிச பத்திரி, திப்பிலி மூலம், அரத்தை, சிறுதேக்கு, கற்காடக சிங்கி, கிராம்பு, சுக்கு, மிளகு, செவியம் இது எல்லாம் சமனாக கூட்டி சூரணம் பண்ணி இதுக்கு சமன் திப்பிலி எல்லாத்துக்கும் சமன் சர்க்கரை கூட்டவும். இதுக்கு தீரும் வியாதி வாந்தி, விக்கல் ருத்திர ரோகம், காசம், சுவாசம், அரோசிகம், க்ஷயம், காமாலை, பீனிசம், பித்தம் பயித்தியம் தீரும் இது வெல்லாம் தீரும்.

<u>தாளிசாதி சூரணம்:-</u>

தாளிச் பத்திரி விராகனிடை.ச, மிளகு விராகனிடை.அ, சுக்கு விராகனிடை.ய திப்பிலி விராகனிடை.ஙயஉ, தவாக்ஷீரம், விராகனிடை. 64 ஏலம் விராகனிடை.உ, கிராம்பு விராகனிடை.உ, திப்பிலி மூலம் அரத்தை, சிறுதேக்கு, கற்காடக சிங்கி வகை ஒன்றுக்கு பலம் க இதுக்கு சமன் சர்க்கரை கூட்டவும். இந்த சூரணந் தேனில் கொள்ளவும். இதுக்கு தீரும் வியாதி விக்கல், வாந்தி, அரோசிகம், வயிற்றுப் புலி யக்கட்டி, யஉம பாரிச்ச வாய்வு, சூலையும் சுவாசம், பாண்டு குன்மம் பீனிசை இது வெல்லாம் தீரும்.

திப்பிலி பலம்.அ, சர்க்கரை பலம். 4, வாய்விளங்கம்.க, சுக்கு பலம்.க, கண்டு பறங்கி பலம்.க, சீரகம் .க, மிளகு, கஇ.லவங்கம்.க, ஏலம்.க, லவங்கப் பட்டை.க, சாதிக்காய்.க, ஓமம்.க, சடாமாங்கிஷசம்.க, தாளிச பத்திரி .க, தானிக்காய்.உ, முத்தக் காசு.க, கடுக்காய்.க, நெல்லி முள்ளி.க, கரிசிலாங் கண்ணி தூள்.க, இது வெல்லாம் சூரணம் பண்ணி தேனில் மத்திச்சு தின்னவும். தீரும். உப்புசம் சுவாசம், காசம் இருமல்

சேத்துமம், உள்மாந்தை இவைகள் குணமாம். அதிவிடையம் காட்டாத்தி குகை நீரும் அபினி மருந்து சாதிக்காய், கிரும்பு, ஏலம், பெரு மரத்துப் பட்டையுடன் காசுக் கட்டி, மாதளை பழத்தோடு இலவம் பிசின் வகை ஒன்றுக்கு சமஎடை நிறுத்துக் கட்டி மாதளங் குசாயத்திலரைத்து ஞா குவிளங்காய் பிரமாணம் இலங்க உருட்டி தயிரிலிட அதிசார வெள் கடுப்பும் சீனியுடனே போய் விடுமே.

மெருகு எனவிக்கு :-

மெருகு சாறு சமூலமும் பேராமுட்டி வேர், தண்ணி முட்டான் கிழங்கு வகை ஒன்றுக்கு பலம்.ரு இடித்து ஞா ண பதக்கு தண்ணீர் வார்த்து நாழியாக காய்ச்சி இறுத்துக் கொண்டு இதில் அரக்கு பலம்.ய, குறுணி தண்ணீரில் போட்டு இருநாழியாகக் காய்ச்சி இறுத்துக் கொண்டு எண்ணை.உ, தயிர் தண்ணீர்.உ, பால்.உ, யேகத்துக்கு கலந்து இதில் அதிமதுரம், சதகுப்பை, அரத்தை, கடுகுரோகணி, சந்தனம், அகில் கட்டை, மஞ்சிட்டி, தற்கோலம், ஏலம், லவுங்கப் பட்டை, லவுங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, விலாமிச்சம் வேர், வெள்ளி லோத்திரம், புபுஷ்பம், தேவதாரம், பெருங்குரும்பை வகை ஒன்றுக்கு விராகனிடை.க, அரைத்து கரைத்து பத்தில் வடித்து உள்-க்கு கொண்டு மேலுக்கும் பூசி தலையு முழுகி வர சுரத்தினால் இளைத்த சரீரமும், விஷமும், சுவாசமும் இரண்டு நாளையில் மாறல் மூன்று மாறல், பதினைந்து மாறல், ஒரு மாத்தை மாறல், ஒரு வருஷத்தின் மாறல், ஒரு வருஷத்தின் சுவாசம் சர்வ சுரமும் இளைத்த சரீரமும் பருக்கும். சர்வ வியாதியுந் தீரும். இந்த சரீரம் பருக்க மெருகெண்ணை ~~[illegible]~~ பண்ணவும்.

குக்குட சூரணம்:-

பறங்கிப் பட்டை பலம்.ய, வெள்ளைப் பூண்டு பலம்.க, ஓமம் பலம்.க, திப்பிலி பலம்.க, திப்பிலி மூலம் பலம்.க, சித்திரமூலம் பலம்.க, அரத்தை பலம்.க, கண்டு பறங்கி பலம்.க, மயிர் சாஷ்சி (மயிர்சாலடி) பலம்.க, சாதிக்காய் பலம்.க, வாய் விளங்கம் பலம்.க, ஏலம் பலம்.க, குரோசானி ஓமம் பலம்.க, நல்ல சீரகம் பலம்.க, கருஞ்சீரகம் பலம்.க மிளகு பலம்.ந, மஞ்சள் பலம்.க, அக்கலக்காரம் பலம். $\frac{1}{2}$, கோஷ்டம் பலம். $\frac{1}{2}$, தாளிச பத்திரி பலம். $\frac{1}{2}$, லவங்கம் பலம். $\frac{1}{2}$, சாபத்திரி பலம்.வ, சங்கங் குப்பியிலை, சங்குவேர் அமுக்குரா வேர், கூளா த்தி வேர், சிறுகீரை வேர் இது வகை ஒன்றுக்கு பலம். $\frac{1}{2}$ இது எல்லாம் இடித்து சூரணம் பண்ணிக் கருங் கோழி ஒன்று கொண்டு வந்த ~~[illegible]~~ (சிறகு) இறகுடனே அறுத்து குடல் வாங்கிப் போட்டு சூரணத்தை கூற கொண்டு சதிரக் கள்ளி ஒரு பதளையில் அடைத்து குறுணி நீர் வார்த்து வேடு கட்டி வேடு மேல் கோழியை வைத்து மேலே ஒரு சட்டி மூடி முப்பது நாழிகை எரிய விட்டு வைத்துக் கொண்டு காய வைத்து இடித்து சூரனம் பண்ணி தின்னவும். புண், கிரந்தி, எட்டுக் கிரந்தியும், சகல வாய்வுகளும், சூலைகளும் குணமாம். பத்தியம் கோழிக் கறியும், சாதமும் சாப்பிடவும். சகல கிரந்தியும் தீரும்.

நீரழிவு மேகத்துக்கு குளிகை, குன்ம கட்டிக்கு என்னை :-

விலாம் பிசின் முள்ளி லவங்கம் பிசின் வேப்பம் பிசின், கருவேலம் பிசின், மஞ்சள் தேத்தாங் கொட்டை, நெல்லிப் பருப்பு, கலைக் கொம்பு புளியங் கொட்டைத் தோல், காசுக் கட்டி, வில்வப் பழம் சதை, அதிமதுரம், இலுப்பைப் பூ, விலாமிச்சம் வேர் சீந்தி சர்க்கரை இது வகை ஒன்றுக்கு விராகனிடை.க, ஆவாரம் விராகனிடை.யஉ, நல்ல சந்தனம் விராகனிடை.அ, அல்லி விரா விராகனிடை.யஉ இது இடித்து சூரணம் பண்ணி தண்ணி மிட்டான் கிழங்கு சாறு தெளிச்சு உயக திரம் ஊற வைத்து தாழைக் கிழங்கு சாத்தில்.உயக தரம் ஊற வைத்து ஒரு சாமம் அரைத்து இலந்தைக் கொட்டை பிரமாணம் உருண்டை பண்ணி தேனில் மோரில் கொடுக்க நீரழிவு உடம்பு உழத்தல், ரத்த பிரமியம் உயக வகை மேக குன்மம் அந்தி சந்தி கொள்ளத் தீரும்.

சதிரக் கள்ளிப் பால். $\frac{1}{2}$, தும்முட்டிக் காய் வறவைக்கல் பேரட்டு சுட்டு துவைச்சு சாறு படி. $\frac{1}{2}$, நெய் படி.க, கல்மதம் பலம்.க, மிளகு பலம்.க, இது வெல்லாம் நெய்யில்

போட்டு ஆக்கிக் குடிக்கவும். வல்லைக் கட்டி, அழுவைக் கட்டி, பீலிகை ஆமகக் கட்டி இது வெல்லாம் குணமாம். இதுக்கு பத்தியம் மோரும், சாதமும் சாப்பிடவும். சகல குன்மக் கட்டியும் குணம்மாம்.

நீர்க் கட்டுக்கு:-

காட்டு வாசனைக் கிழங்கு அரைத்து எலுமிச்சங் காயளவு சாந்து அரைப்படி பசுவின் பாலில் குடிக்கவும் கல்லு விழும்.

மிளகு பலம். 3/4 புளி பலம். 3/4 பனைவெல்லம் பலம். க இது மூன்றும் அரைத்து அரைப்படி தண்ணீரிலே போட்டு கலக்கிக் குடிக்க நீர் இறங்கும்.

வெள்ளரி விரை அரைத்து வெண்காரம் பொரித்து இள வெந்நீரில் கலந்து குடிக்கவும். நீர்க் கட்டுத் தெறிக்கும். முடக் கொத்தான் இலையும் வெள்ளப் பூண்டும் அரைத்து கொடுக்க கட்டு விடும்.

ஆருக் கடுப்புக்கு:-

சிறுபுள்ளடி ஒரு விசை சமூலமும் பிடுங்கி வந்து ஞாயிற்றுக் கிழமை நாள் அல்சி இரண்டு நாள் உலர்த்தி ஒரு பங்கு தனியுமாக அக்கினி பிரவேசம் பண்ணி வெளேய் வைத்து அம்மியில் நன்றாய் அரைத்து பரணியில் அடைத்து வைத்து அருக் கடுப்பாய் வயறு கழியற் பேருக்கு பசுவின் வெண்ணை எலுமிச்சங்காய் மாதிரி சுவரிலே எரிஞ்சு வைத்து அதிகாலமே கொட்டப் பாக்கு பிரமாணம் வெண்ணையில் சூரணத்தில் இரண்டு கர்சிடை எடுத்துக் குழப்பிக் கொடுக்க அன்றைக்கு தானே கடுப்பு நிற்கும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும் தீரும். கடுப்பு நிற்கும். ரத்தக் கடுப்பு, ரத்த வயிற்று வலி நிற்கும். இந்த பற்பம் பசுவின் நெய்யில் குழப்பி கொடுக்க பெரும் யாடாக இருக்கிறது. பெண்டுகளுக்கு இருபது நாள் கொடுக்கத் தீரும். இந்த இலையை சமூலம் தவைத்து உழக்கு சாறு பிழிஞ்சி அரைப் பலம் சர்க்கரையும் போட்டு மூன்று நாள் குடிக்க தீரும். இது சுத்த மூலிகை ஒரு வருக்கும் சொல்ல வேண்டாம். கை கண்டது.

விஷத்துக்கு, இரைப்பு, உளைப்புக்கு, அஷ்ட குன்மத்துக்கு மருந்து:-

விஷத்துக்கு:-

பேய்ப் பீர்க்கு விரையை எடுத்து உலர்த்தி உடைத்து பருப்பை இடித்து எருக்கம் பழுப்பு சாறு வார்த்தரைத்து கலத்திலே தப்பி வெய்யிலிலே வைத்துத் தயிலம் இறங்கும். அந்த தயிலம் சாரித்து பரணியில் வைத்து வெத்திலையில் தடவி உள்ளுக்கு கொடுக்க விஷம் மீறும். கலிக்கம்போடப் பேய் ஓடிப் போம். இது கை கண்டது.

கொட்டைக் கிரந்தை, நொச்சில் கரிசிலாங் கண்ணி இது மூன்றும் தாள் பண்ணி சமன் கூட்டி நெல்லிக்காய் பிரமாணம் தேனில் கொள்ள இரைப்பு நிற்கும். கை கண்டது.

கண்டங்கத்திரி, நாயுருவி, சிறுநீர் வார்த்தரைத்து, புட்டு புளிஞ்சு, திப்பிலி பொடி கூட்டிக் கொள்ளவும் உளைப்புத் தீரும்.

தமுட்டிக்காய் தவைச்சு சாறு பிழிஞ்சு கொண்டு விரை எடுத்துப் போட்டு பாகு பதமாக காய்ச்சிக் குழம்பான வாறே உழக்கு தேனும் உழக்கு ஆமணக்கெண்ணையும் விட்டு கிளறி பாகு பதமாம். அந்தப் பாகு பதத்திலே இந்துப்பு பலம். க, பெருங்காயம் பலம். க, இது மூன்றும் பொடி செய்து போட்டு கிளறக் கடுகு பதமாம். இறக்கி ஆமணக்கெண்ணை இருந்த பல்லாதையில் வார்த்துக் கொண்டு ஒன்றை விட்டு ஒரு நாள் சுண்டைக்காய் பிரமாணம் கொள்ளவும். பத்தியம் தயிர் மோர் வார்த்து அசனம் பண்ணவும். அஷ்ட குன்மமுந் தீரும்.

ஆமணக்கெண்ணை உ வெங்காய சாறு. உ; தமுட்டிக்காய் சாறு உ, சாறு வேளை வேர்ச் சாறு. உ, அளந்து விட்டு எண்ணை மாத்திரம் நின்ற மட்டிலே இறக்கி வைத்துக் கொண்டு ஒன்றை விட்டொரு நாள் தட்டு மாதிரி எண்ணை குடிக்கவும். பத்தியம் தயிர், மோர் கூட்டவும் அஷ்ட குன்மந் தீரும். அழுவை வல்லை வாய்வு, இவை எல்லாந் தீரும்.

<u>கண்ணுக்கு:-</u> 1.4.63.

நந்தியா வட்டம் வேர், வெள்ளைக் காக்கொணம் வேர், புங்கம் விரை, மடல் அத்தி துரிச மதுநீர், பச்சைக் கற்பூரம், கால் காசிடை ஒரிலைத் தாமரை வேர், வறப்புலா வேர், காவிக் கல்லு இவை எல்லாம் சமன் கொண்டு எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து உருண்டை பண்ணி இடவும். இதுக்குத் தீரும் வியாதி பிழிச்சக் கண், முழி முழுங்கி துன்மாங்கிஷ சம், புகைச்சல் உள்பட தீரும்.

<u>தாச்சலும், குளிரும் வரும். இருமல் வரும் இதுக்கு மருந்து:-</u>

காந்தக் கல்லும், பொன்னவுரை வேரும் அரைத்து சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து முழுங்கத் தீரும். முருக்கிலை துவைத்துக் காடி வார்த்து பிழிந்து எலுமிச்சம் பழம் கூட்டி குடிக்க விக்கல் மாறும். விக்கலெடுத்தால் கடுக்காய் பொடி செய்து சர்க்கரை கூட்டி நெய்யில் தின்னவும்:

<u>வெண் குட்டத்துக்கு:-</u>

கையாந்த கரை அரைத்து மேலே பூசி வெண் குட்டந் தீரும். வெண் குட்டத்துக்கு தண்டு சிவந்த நாயுருவி சமூலமும் இந்துப்பும் அரைத்து பசுவின் பாலில் குடிக்க தீரும். கோரைக் குருத்து அரிதாரம் பணவிடை கெந்தகம் பணவிடை சிறுகோரைக் கிழங்கு இவை எண்ணையில் சாரித்துப் பூசத் தீரும்.

வெண் குட்டத்துக்கு இலைக் கள்ளி பட்டையை சமூலமும் உலத்திப் பொடி பண்ணி அதுக்கு சமனாக மஞ்சள் பொடியும் கலந்து கோமூத்திரத்தில் வெருகடிப் பிரமாணம் மண்டலங் கொள்ளப் பதினெட்டுக் குட்டமுந் தீரும். கரந்தைக் கற்பம்

கற்பம் நாம கரந்தை சமூலமும் கொண்டு வந்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு பத்து நாள் நெய்யில் ~~செவி கடிப்~~ வெருகடிப் பிரமாணம் கொள்ள மின்று பாடு இருபது நாள் கொள்ள சாரநஞ் செங்கழுநீர் தண்டு மணக்கும். முப்பது நாள் கொள்ள யிளமை பிறக்கும். நாற்பது நாள் கொள்ள தன்னை ஆருக்குந் தெரியாது.

<u>சகல வலிக்கு:-</u> Not useful

உலர்ந்த நாய்த் தலை இரண்டு மூன்று கொண்டு வந்து சத்தே நருக்கிக் கொண்டு ஒரு குடுவையில் போட்டு தயில மிறக்கி முதலை உப்புக் கண்டம் கொண்டு வந்து அந்த தயிலத்தில் தோய்ச்சு சுட்டு இரண்டு மூன்று நாள் தின்ன குமர கண்ட வலிப்பு எல்லாம் போம்.

<u>இதுக் கெல்லாம் மருந்து:-</u>

காட்டுக் கருணை கரிக் கருணை செம்பிரண்டை வேர், மணி பிரண்டை வேர், வெள்ளை சுண்டை வேர், வெள்ளை சாரணை வேர், நிலப் பனைக் கிழங்கு, கண்டங் கத்திரி சமூலம், சித்திர மூல வேர், ஒரு பிடி இதுக்கு கடைச் சரக்கு நெருஷசம் ஒரு காசிடை பச்சை நாபி கால் காசிடை வெள்ளைப் பாசாணம் அரைக்காசிடை துத்தம் ஒரு காசிடை துருசு ஒரு காசிடை துபாக்கி கெந்தகம் நாலு காசிடை, சாதிக்காய். ச, கடுக்காய். ரு பொன்னரிதாரம் காசிடை, ரசம் ஒரு விராகனிடை இது வெல்லாம் கூட்டி வஸ்திர காயம் பண்ணி வென்னீரில் ஒரு வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். இப்படி பனிரெண்டு நாள் கொள்ளவும். கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

<u>பக்க வவுத்திரம், கொடி பவுத்திரம், ஆசன கண்டமாலை, தண்டு புத்து, தண்டு புளவை, உள் மூலம், பித்த மூலம்:-</u>

புண்ணுக்கு களிம்பு கோழிக் கொழுப்புலே கூட்டுகிறது. நிலவாகையை நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி கலசத்தில் வைத்துக் கொண்டு தேனில் கொள்ள உடம்பு மெலியும். நெய்யில் கொள்ள உடம்பு பருக்கும். எண்ணையில் கொள்ள விஷம் போம். வென்னீரில் குடிக்க சீழ் விழும். மோரில் குடிக்க செரியாக் குணம் போம். கோமூத்திரத்தில் கொள்ள சிரங்கு தீரும். ஆட்டு மூத்திரத்தில் கொள்ள அழுங்குட்டந் தீரும்.

எருமை சாறு பிழிஞ்சு அதில் குடிக்க பித்த பாண்டு ரோகந் தீரும்: பாகல் சாத்தில் குடிக்க செய்யான் கடி தீரும்.

சூலை_நோக்காடு_செய்யுங்_குணம்:-

வயறு குன்ற பிடிக்கும். விட்டு விட்டு நோவும். கொட்டாவி கொள்ளும். நிமிர்ந்த குனவன் அதுக்கு_மருந்து:-

பெரு மரத்துப் பட்டை பீனரித் தழையைத் துவைத்து பிழிந்து சீலை வடி கொண்டு இள வெள் வெங்காயமரைத்து குழப்பி மூன்று நள் கொள்ளவும். தினம் உழக்கு கொடுக்கவும். பத்தியம் பாலுஞ் சோறும் உண்ணவும். உத்தம தாளிச் சாறும் பசுவின் பாலும் குடிக்கத் தீரும்.

மண்டை_சூலைக்கு:-

இரதம் களஞ்சி, அவுரியிலை குப்பை மேனியிலை இலை, முறித்து அவுரி குப்பை மேனியிலை, முறித்து அவுரி குப்பைமேனி, மாவுலிங்கை கழஞ்சி நொச்சில். இந்த இலை தன்னிலொக்க அரைத்து அரைப்படி எண்ணையில் கலந்து கொதிக்க வைத்து தலைக்கிட்டு நாலு நாளைக்கு ஒரு கால் முழுங்கவும். இந்தப் படி முழுகி வர மண்டை சூலை தீரும். வாய் நொந்து கிட்டிப் பூட்டினுப் போலே இருக்கும்.

பல்லு_வாதத்துக்கு_கடுக்கும்._இதுக்கு_மருந்து:-

வேலம் பட்டை, நாகல் பட்டை, அத்திப் பட்டை ஆவாரம் பட்டை ஊற வைத்து தண்ணீர் வார்த்து கொப்பளிக்கத் தீரும். முக வாதத்துக்கு முகங் கடுக்கும். தோள் வாதத்துக்கு கழுத்துப் பிடரி கடுக்கும். வாய்_வாதத்துக்கு_மருந்து:- வாதம், நொச்சி தழு தாழை யிலையை துவைச்சு இடிக்கவும். தண்ணீர் விட்டு பிடிக்கவும். மிளகுறணை வேர், இடித்து மேலுக்குப் பூசவும் தீரும்.

சந்து_வாதத்துக்கு:-

சந்து கடுக்கும். செங்கத்தாரி வேர், குறுவை அரிசி, களி கிண்டி தின்னத் தீரும். இடுப்பு வாதத்துக்கு:- இடுப்புக் கடுக்கும். விழுதியிலை கம்பரிசியில் களி கிண்டி தின்னத் தீரும். உண்டை வாதத்துக்கு:- உறுளை கடுக்கும். ஊமத்தையிலை சட்டியில் யிட்டு தண்ணீர் வார்த்து வேடு கட்டி அதின் மேலே குறுவை அரிசி மாவைத் தப்புட்டாக சுட்டு தின்னத் தீரும். நடை வாதத்துக்கு நடை கடுக்கும். நடக்க வொட்டாது. அதுக்கு புத்து மண் நண்டு புத்து மண் உவர் மண் சுக்கான் சுண்ணம்பு கூட்டி அரைத்து குழம்பாய்க் கரைத்து கொதிக்க வைத்து வெதுப்புடனே பூசத் தீரும் நாகப் பாம்பு ஏழு பிடித்துக் கழுவிப் பேரட்டு முலைப் பாலில் அரைத்து முலைப் பாலில் குடிக்கத் தீரும்: முழங்கால் வீங்கிக் கடுக்கும், ஆதண்டை இலை துவைத்து பிழிந்து கொண்டு சுக்கான் சுண்ணம்பு புளியிலைச் சாத்தில நீத்து அது வெதுப்பத்துடனே பூசி கொதை வைத்துக் கட்டி மூன்று நாள் அவிழ்க்க வீக்கம் வாங்கும். வாங்காமல் நொந்த விடத்தில் அறுவிக்கவும்.

கெண்டை_வாதத்துக்கு:-

அடிக்கடி கெண்டை பிறட்டும். நோகும். அதுக்கு இலைக் கள்ளி யிலை வெதுப்பி பிளிந்து கெண்டைக் காலில் முறுக்கத் தீரும். குதி வாதத்துக்கு வீங்கி வலி எடுக்கும். சித்தா மணக்கெண்ணை பூசி நொச்சியிலை அவிச்சுக் கட்டத் தீரும். குடல் வாதம் குடல் முறுக்கி, யிரையும். அதுக்கு குறிஞ்சா யிலை அரிஞ்சு சாறு காய்ச்சி சாறு குடிக்கத் தீரும்.

கழல்_வாதத்துக்கு:-

விரை ஏறச் சொருகிடும். அதுக்கு கழல் பருப்பு நுறுக்கி சீலையில் பொட்டணங் கட்டி சட்டியில் தண்ணீர் வார்த்து அந்தப் பொட்டணம் உள்ளே போட்டு அந்த மருந்து வெந்த வுடனே வெதுப்புடனே எடுத்து இறுத்துக் குடிக்கத் தீரும்.

அண்ட வாதத்துக்கு கழல் பருப்பு நஞ்சு எடுத்துப் போட்டு பாக்கு வெத்திலையுடன் தின்னவும். கழக் கொடியிலையை வறுத்து ஒத்திக் கட்டவும் தீரும். அண்டங் கீழே இறங்கிக் காத்தும் பொருமியிருந்தால் பருத்திக் கொட்டை கூள் காய்ச்சிக் குடிக்கவும். முடக் கொத்தான்

இலை ஒத்திடத் தீரும்.
தண்டு வாதத்துக்கு தண்டு பொருமியிருக்கும். கோவைத் தண்டு, சீனி தண்டு, பறனி தண்டு துவைத்து சாறு குடிக்க தீரும். துவைத்த கோது வந்த்த வீக்கத்தில் கட்டவும். வளி

<u>வாதத்துக்கு மருந்து:-</u>

வளி வாதம் பிற வலியாக வலிக்கும். மரண வாதத்துக்கு கால் கை சுருங்கும். சர்வாங்க வாதம் சர்வாங்கமெல்லாம் வலிக்கும்.

<u>இதற்கு மருந்து:-</u>

திருகு கள்ளி வேர், கழற் கொடிவேர், செங்கத்தாரி வேர், வசம்பு, மிளகு உள்ளி பூண்டு இவை நறுக்கி நல்லெண்ணெயில் உழக்கு வார்த்து எரித்து இட்டு பிடிப்பிக்கவுந் தீரும்.

திருகு கள்ளி வேர் மேல் தோல் சீவிப் போட்டு முள்ளிக்காய்ப் பிரமாணம் அரைத்து கல்லுப்பு கூட்டி மூன்று நாள் எருமை மோரில் கொடுக்கவும். பத்தியம் துவரைப் பருப்பு மிளகு நீர் கூட்டவுந் தீரும்.

<u>சுரத்துக்கு:-</u>

பாசணத்தை மூன்று தரம் சுண்ணாம்பில் சுத்தி பண்ணி மூன்று தரம் பாகல் காயில் வைத்து அவித்துப் போட்டு அதுக்கு ஒத்த எடை பச்சரிசித் தவுடு கூட்டி பச்சரிசி வடிச்ச கஞ்சியிலே வார்த்தரைத்து பயறு பிரமாணங் குளிகை பண்ணி கெற்பிணி சுரமானால் பாலில் கொடுக்கவும். எந்த சுரத்துக்கும் முலைப் பால் சர்க்கரை நெற்பொரி தண்ணீராகுதல் கொடுக்கவும்.

சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், கடுகுரோகணி, கருஞ்சீரகம், கார்போக அரிசி, மஞ்சள் கஸ்தூரி மஞ்சள், இந்துப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, பொட்டிலுப்பு, எவச்சாரம், ஏலம், சாதிக்காய், சாபத்திரி, லவங்கம், லவங்கப் பத்திரி, செஞ்சந்தனம், செவ்வள்ளிக் கொடி, செவியம், கொடிவேலி, திப்பிலி மூலம், ரசம், கெந்தகம், மனோசிலை, காந்தம், அரப்பொடி, அரிதாரம், கொட்டைப் பாக்கு நாபி, நிறவிஷம், சடாமாஞ்சி, அன்ன பேதி, பெருங்காயம், சவுக்காரம், வெங்காரம் அக்கராகாரம், இவை யெல்லாம் வகை ஒன்றுக்கு விராகனிடை.க, கோரைக் கிழங்கு கண்டங் கத்திரி வேர், சிறுவழுதலை வேர், ஆடாதோடை, தூட்டெடை இரண்டு நேர் வாளம் விராகனிடை.ச, இரதம் கெந்தகம், நாவி பாஷாணம், இதுகளை சுத்தி பண்ணிக் கொள்ளவும். இந்த மருந்துகளெல்லாம் அமாவாசைக்கு முன்னைக் அஷ்டமி முதலாகவும் அமாவாசையளவும் கையாந்த கரை சாத்திலரைக்கவும். குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலே உலர்த்தி வைத்துக் கொண்டு சவ வியாதிகளும் அநுபானம் வேறே விபரம் விளக்கெண்ணெயில் குழைத்து வெல்லத்தில் கொடுக்க விரோசனமாம். முலைப் பாலில் குடிக்க உடனே சுரம் போம். வென்னீரில் கொடுக்க சர்வ சுரமும் போம். சுக்கு, மிளகு, திப்பிலி கூட்டிக் கொடுக்க சீத சுரம் போம். நொச்சிலையும் வேரும், பெருங்காயம் கூட்டிக் கொடுக்க முசல் கடை போம். நொச்சி சாறும் சுக்குப் பொடியும் கூட்டிக் கொடுக்க சூலை போம். இப்படிக் கொள்ள விஷம் போம். வாய்வு போம்.

வெள்ளாட்டுக் கோமியத்தில் கொடுக்க மண்ட சூலை போம். வெள்ளாட்டுக் கோமியத்தில் கண்ணிலிட பூப் போம். சர்க்கரையில் கொடுக்க பித்தம் போம். மூத்திரக் கிரிச்சி போம். அசமதாகத்தில் கொடுக்க இச்செயம் போம். இரண்டு மூன்று வருஷத்துக் கிரணி போம். இப்படிக் கொள்ள வயத்திலுள்ள பூச்சி போம். கடுக்காய், சுக்கு பசுவின் நெய்யில் மத்திச்சுக் கொடுக்க வெள்ளைக் குஷ்டம் நொச்சிலையும் வேப்பம் பட்டையும் கூட்டிக் கொடுக்க பாண்டு போம். கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, கூட்டிக் கொடுக்க சகல வியாதியுந் தீரும். நாற்த்தங் கசாயத்தில் நசியம் பண்ண ஒரு தலைவலி போம். வெள்ளைக் காக்கணம் சாத்திலரைத்துக் கண்ணிலிட நீல காசம் போம். மாதளம் சாத்திலரைத்துக் கண்ணிலிட கண்ணுப் புழு போம். ஊசி மல்லிகை சாத்திலரைத்திட

கண் படலம் போம். முலைப் பாலிலுரைத்துக் கண்ணிலிடக் கண்ணோவு போம். சிறு புள்ளடி சாத்திலுரைத்திட செகப்பு போம். வேப்பெண்ணெயிலிடக் கண்ணில் பூ போம். வேப்பிலைச் சாத்திலிடக் கண்ணு அமரம் போம். ~~பெரிய கோடாசூரி உருண்டை மு~~

குருலோக்கிய சிந்தாமணி:-

ரசம் விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, தாளகம் விராகனிடை.க, வெங்காரம் விராகனிடை.க, நேர்வாளம் விராகனிடை.க, சுக்கு விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, கடுக்காய் விராகனிடை.க, தானிக்காய் விராகனிடை.க,. நெல்லிக்காய் விராகனிடை.க, இது சமன் கூட்டி கரிசலாங் கண்ணி சாத்தில் பதினொரு நாளரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு இதுக்கு அநுபானம் நெல்லிக்காய் சாத்தில் பத்து நாள் கொள்ள மூலவியாதி தீரும். எருமைத் தயிரில் மூன்று நாள் கொள்ளவயறு கழிச்சல் நிற்கும். சீரகம், சர்க்கரையில் மூன்று நாள் உஷ்ணம், பிரமிணம்,. போம். எலுமிச்சம் பழம் சாத்தில் மூன்று நாள் கொள்ள தலை நடுக்கந் தீரும். முள்ளிக் காயில் வைத்துக் கையில் கட்ட பிலில் குனியமும் தீரும். வேப்பிலை சாத்தில் மூன்று நாள் கொள்ளக் குளிரு காச்சல் தீரும். சாராயமாவது காடியாவது உரைத்து கண்ணிலிட சன்னி வாதந் தீரும். தன் மூத்திரத்தில் ஐந்து நாள் கொள்ள சகல கழிச்சல் தீரும் சர்க்கரையில் கூட்டி உய நாள் கொள்ள ஏழு வகை குன்மந் தீரும். வெள்ளாட்டு பாலும் சர்க்கரையும் ஏழு நாள் கொள்ள சுக்கில் பிரமியம் தீரும். சர்க்கரையிடல ஏழு நாள் கொள்ள ரத்தப் பிரமியந் தீரும். புளியம் பட்டை சாம்பலில் உய நாள் கொள்ளப் பாண்டு காமாலை, சோகை, தீரும். தேத்தாங் கொட்டை ஒன்று மிளகு, தக்காளி சாத்திலுரைத்து ங நாள் பூச வீக்கந் தீரும். எருக்கம் பூ மூன்று பூவும் கழற் காயத்தினை வெல்லமுங் கூட்டி உய நாள் கொள்ள் வெழு மூத்திரந் தீரும்.

கோரோசினை அம்மான் பச்சரிசியுங் கூட்டி திலதமிட முக வசீகரம் வெத்திலைச் சாத்தில் ய் நாள் கொள்ள இருமல் தீரும். முலைப் பாலிலரைத்து பத்து நாள் கண்ணிலிட பூ மாறும். கரு ஊமத்தஞ் சாத்தில் மூன்று நாள் நசியம் பண்ண முயல் வலிப்பு, தீரும். கழுதைப் பாலில் சர்க்கரையுங் கூட்டி உய நாள் கொள்ள பயித்தியந் தீரும். இஞ்சி சாத்தி லுரைத்துக் கண்ணிலிட குளிர் காச்சல் தீரும். இளநீரில் கொள்ள விரோசனம். வென்னீரில் கொள்ள் வயறு கழிச்சல் நிற்கும். தேனில் மூன்று நாள் கொள்ள உப்புசந் தீரும். இஞ்சி சாத்திலுரைத்துக் கண்ணிலிட குளிர் காச்சல் தீரும். தேனில் உயசு நாள் கொள்ள கூஷயம், இருமல் தீரும். இஞ்சி சாசம். சர்க்கரையும் கூட்டி 24 நாளில் உஷ்ண சுரந் தீரும். கரிசிலாங் கண்ணிச் சாறு சர்க்கரையும் கூட்டி நாள் கொள்ள குன்மம் தீரும். சீரகமும் அகத்தி விரையும் பொடி பண்ணி மூன்று நாள் கொள்ள தாப சுரந் தீரும். ஊமத்தஞ் சாத்தில் மூன்று நாள் கொள்ள் நாலா மாறல் தீரும். சாதிக்காயில் உய நாள் கொள்ள மூலக் கிராணி தீரும். எருமை மோரில் அரைத்துக் கொள்ள் வாந்தி தீரும். ~~எருக்கும்.~~

எள்ளுத் தழை சாத்தில் ஏழு நாள் கண்ணிலிட படலந் தீரும்.

வறக்_காமாலைக்கு:-

சுக்கு, மிளகு, கடுகு, ரோகணி, திப்பிலி, கடம்பல் கதிர் கரிசிலாங் கண்ணி, தழை சிட்டங் கல்லுப் பொடி பனை வெல்லம் சம பாகங் கூட்டி இடித்து களச்சிக்காய் பிர மாணம் ஏழு நாள் கொள்ளவும். கார்ப்பு,. புளிப்பு தவிர்க்கவும்.

பிள்ளைக்கு முலைப் பால் சுரக்க:-

வெங்காயம் ஒரு படி, பனைவெல்லம் இருபலம் நாள் ஒரு வேளைக்கு அரைப்படி பசும் பாலில் வேகப் போட்டு கொடுக்கவும். மூன்று நாள் கொடுக்கவும். வெள்ளை வெங்காயம் முருங்கைப் பட்டை உப்பு இந்த முருங்கைப் பட்டையும் உப்பும் நேக அரைத்து வெள்ளை வெங் காயத்தின் மேலே பசி ஏழு சித்தாமணக்கு இலையில் வைத்துப் போட்டு பொட்டணங் கட்டி சுட்டு எடுத்துக் கொண்டு வெள்ளை வெங்காயத்தை உள்ளுக்கு கொள்ளவும். களச்சி வேர் கொண்டு வந்து அரைத்துக் கோழி முட்டையில் போட்டு வேக விட்டு மூன்று நாள் உள்ளுக்கு கொள்ளவும். கார்ப்பு, புளிப்பு விடவும்.

செற்குட்டுக்கு, அந்திர வட்டுக்கு, யிறவர்ய் கட்டினத்துக்கு திப்பசத்தக்கு:-

சீந்தில் கொண்டு வந்து இடிச்சு இரண்டு பானை தண்ணீரில் போட்டு பிசைந்து வடி கட்டி வெய்யிலிலே வைத்து தெளிய தண்ணீர் யிறுத்துப் போட்டு அந்த ரசத்தை எடுத்து பரணியில் வைத்துக் கொள்ளவும். இதுக்கு இரு வாயுங் கட்டின பேருக்கு மூன்று மாடையிடை எடுத்துக் குப்பை மேனிச் சாத்தில் குழப்பி உள்ளுக்கு வாங்கிக் கொள்ளவும். வென்னீர் தண்ணீர் உள்ளுக்கு வாங்கிக் கொள்ளவும். உப்பு, புளி தவிர்க்கவும்.

பாஷாணம் உடம்பிலிருந்து பேருக் முறிக்கவும்:-

காவளம் வேர் பட்டை, நீலி வேர், பட்டை, பிறண்டை வேர்ப் பட்டை முருங்கை வேர், பட்டை துவரை உளுந்து பயறு உப்பு இந்த ஒன்பது வகையும் கருக வறுத்து மூன்று படி தண்ணீரில் வார்த்து உழக்காக காய்ச்சி உள்ளுக்கு கொடுக்கவும். இதுக்கு பாஷாணம் முறியும்.

ரத்த மூலத்துககு மருந்து:-

மிளகு, செங்கத்தாரிப் பட்டையும் இது இரண்டும் சரி கூட்டி தண்ணீரில் கொடுக்கத் தீரும். பத்தியம் முருங்கைக் காய் இலையும் துவரப் பருப்பும் கூட்டவும்.

வெள்ளைப் பாஷாணம், ரசம் இது இரண்டும் சமன் கூட்டி ஊமத்தைச் சாத்திலே அரைத்து பின்பு பாகல் இலைச் சாறு விட்டு அரைத்து அடையாகத் தட்டி செப்புக் குப்பியிலிட்டு மேலுஞ் செப்பு மூடிச் சீலைமண் செய்து நெருப்பு மேல் வைத்து வெடிக்கு மட்டும் மருந்து வாங்கி கலுவத்தில் அரைத்து பயறு மாதிரி குளிகை பண்ணி திரும்பக் குப்பியிலே போட்டுச் சிறுது காயவிட்டு இறக்கிக் கொண்டு சகல சுரங்களுக்கும் பாலிலிடவும். மிளகு விடவும். இஞ்சி சாத்திலிடவும். சீரகத்திலிடவும். இதுக்கு பத்தியம் பாலுஞ் சோறும்.

ரசம் விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, நாபி விராகனிடை.க, சுக்கு விராகனிடை.உ, திப்பிலி விராகனிடை.உ, கூட்டி கரிசிலாங் கண்ணி சாறு விட்டு ஐந்து நாள் அரைத்து குன்றி மாதிரி உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு அறிந்து கொடுக்கவும்.

ரத்தக் கடுப்புக்கு:-

தாளிச பத்திரி விராகனிடை.க, சன்ன லவுங்கப் பட்டை விராகனிடை.க, சாதிக் காய் விராகனிடை. கூட்டி அரைத்து ஒரு குளிகை கூட்டிக் கொடுக்க ஐந்து நாள்.

சீதக் கடுப்புக்கு:-

வெள்ளுள்ளி புடமிட்டு ஐந்து நாள் ஐந்து குளிகை கொடுக்க நிற்கும். இரத்தக் கடுப்புக்கு பனை வெல்லத்திலிடவும். பாவிந்த சன்னிக்கு மிளகு கசாயத்திலிடவும். பித்த வாய்வுக்கு சீரகம் வறுத்து கூட்டிக் கொடுக்கவும். குளிர் காச்சலுக்கு இஞ்சிச் சாத்திலாகுதல் தும்பருஷ்டகத்திலாகுதல் கொடுக்கவும். அதிசார கிறுணிக்கு சுக்கு.உயரு நாள் கொடுக்கவும். தாளிச பத்திரி, மிளகு, செவியம் இது மூன்று வகை ஒன்றுக்கு பலம்.க, திப்பிலி பலம்.க, திப்பிலி மூலம் பலம்.க, சுக்கு பலம்.ங, ஏலம், கிராம்பு, லவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, விலாமிச்சம் வேர் இது ஐந்தும் வகை ஒன்றுக்கு விராகனிடை இடித்து சூரணம் பண்ணி பழைய வெல்லம் பலம்.க அந்த பாகில் போட்டு பதத்திலிறக்கி விராகனிடை உருண்டை பண்ணி அந்தி சந்தி வேளைக்கு க குளிகை கொள்ளவும். அக்கினி மந்தம், அரோசிகம், மார் நோவு, இருமல் சுவாச காசம், உழைப்பு, கழிச்சல் எனப்பட்டதெல்லாந் தீரும். பத்தியம் கார்ப்பு, புளிப்புந் தவிர்க்கவும். பால், நெய் கூட்டவும்.

சுக்கிலப் பிரமியத்துக்கு:-வரக் காமாலை நீர்க் காமாலைக்கு மருந்து:-

சுகுல குறுமூறலைக்கும் மருந்து:-

ஆனை நெருஞ் சமூலம் உலர்த்தி இடித்து தூள் பண்ணி வைத்துக் கொண்டு பிசறி வந்த நாழி தண்ணீர் விட்டு உரியாய் காய்ச்சி அந்தப் பொடியை நாலு விராகனிடை போட்டு மூன்று நாள் குடிக்கவுந் தீரும். உடம்பு உலர்ந்து கண் பசந்து கால் வீஞ்சு வரும்.

அதுக்கு மருந்து:- கீழா நெல்லியும் மணத்தக்காளி சமூலமும் அரைத்து எருமைத் தயிரில் கொடுக்கவும். எட்டு நாள் கொடுக்கத் தீரும்.

நீர்க் காமாலைக்கு கண் பசிராயிருக்கும். கால் வீக்கம் வரும். வாய் நீர் விழும்.

அதுக்கு மருந்து :-

செருப் படிக் கொழுந்து மிளகு, மஞ்சள் கூட்டி வெள்ளாட்டு மூத்திரத்தில் எட்டு நாள் குடிக்கத் தீரும்.

சகல காமாலைக்கு மருந்து :-

மிளகு பலம். வசம்பு தேறு மூன்று மஞ்சள் தேறு மூன்று, அரப் பொடி, பாவட்டங் கொழுந்து ஒரு பிடி இவை கூட்டிய அரைத்து மூன்று உருண்டை பண்ணி மூன்று நாள் பசுவின் மோரில் கொள்ள சகல காமாலையுந் தீரும்.

மருந்தீட்டுக்கு எடுக்க மருந்து :-

காடியும், எலுமிச்சம் பழச் சாறும் காசு செம்பிலே ஊற வைத்து மருக்காரை வேர் [illegible]* முள்ளிக் காயளவு அரைத்துக் கரைத்து கொடுக்க எடுக்கும் மருந்து விழும். மோருஞ் சாதமும் சாப்பிடவும் தீரும்.

வலி குன்மம், வாய்வு, பக்க சூலை, வயிற்று சூலை, பஞ்ச குன்மத்துக்கு, ஈளை இருமல், உள் முறந்தை, காசிரோகம், இருமலுக்கு மருந்து :-

காந்தம், இரதம், அரிதாரம் கழற்சி பருப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகு நெல்லி தானி நேர்வாளம், வெங்காரம் இந்துப்பு, வசநாபி, சூனிக்காரம் இது வெல்லாம் சமன் கூட்டி நீலிச் சாறு வார்த்து மூன் நாளரைத்து வைத்துக் கொள்ளவும். பசுவின் வெண்ணையில் கொடுக்கவும். முதல் நாள் சொன்ன வியாதி யெல்லாந் தீரும்.

மேல் வயத்து வாய்வுக்கும், பக்க சூலைக்கு, வயற்று சூலைக்கு பஞ்ச குன்மத்துக்கு இதிலே மருந்து பண்ணவும் :-

தேத்தாங் கொட்டை முப்பது அரைத்து மூன்று நாள் குடிக்கவும். அதின் பிறகு மருந்து கொள்ளுகிறது. பசுவின் நெய்படி.உ கொண்டு வந்து தினம் முப்பது கொட்டை நனையப் போட்டு விடியக் காலமே அரைத்து இரண்டு கறண்டி நெய் விட்டு அந்த நெய்யிலே மருந்தைப் போட்டுக் கிளறிச் சிவந்து வருகிற போது ஒரு வட்டு கருப்புக் கட்டி நருக்கிப் போட்டு அடி பத்தாமல் கிளி பசிஞ்ய் வருகிற பக்குவத்திலே கடுக்காய் பொடி செய்து போட்டுக் கிளறி அந்தப் பிசின் பக்குவத்திலே எடுத்து கலத்திலே இட்டு மீந்த நெய்யில் வார்த்துக் கொண்டு சுடச் சுடத் தின்னவும். மீந்த நெய்யிலே கால் குழைச்சு கைக் குழைச்சு கழுத்து மார்பிலே தடவி ஒரு நாழிகை மல்லாந்து படுத்துக் கொள்ளவும். இந்தப் படி பத்து நாள் கொள்ளவும். இதுக்கு பத்தியம் தினம் கோழி யடிச்சு அவியல் சாறு அரைப்படி கொள்ளுகிறது. பசுவின் பாலில் நெய் கூட்டி வார்க்கவும். கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும் தீரும்.

சகல கழிச்சலுக்கும் :-

புழுங்கலரிசி மாவு ஒரு படி புன்னைக்குப் பொடி மாவு ஒரு படி இந்த இரண்டு வகையும் கூட்டிப் பிசைந்து அந்தி சந்தி ஒரு சிறங்கைக்கு தின்று வரவும். பத்தியம் தயிரும் சோறும் சாப்பிடவும். தேங்காய்ப் பாலும் ஆவாரை யிலையும் இரண்டுங் கூட்டி நசியம் பண்ணவும். மூன்று நாள் பண்ணவும் தீரும்.

வர்தமடக்கிச் சாறு நாழி இலைக் கள்ளிச் சாறு நாழி, திருகு கள்ளிச் சாறு நாழி, தாழம் விழுதுச் சாறு நாழி இந்த நாநாழி சாறும் எண்ணையில் வேக வைத்து தினம் ஒரு காசிடை கொண்டு வரவும்.

காதில் ஏதாகிலும் விழுந்தால், முடங்கின வாதத்துக்கு மருந்து : சர்வ வாதத்துக்கு மருந்து :-

கள்ளி வேர் பலம்.ரு. முலைதாங்கி வேர் பலம்.ரு, வெண்கோஷ்டம் பலம்.ரு, வெள்ளை வெங்காயம் பலம்.ரு வேப்பங் கொட்டைதண்ணீர் யீராழி ஆமணக்கெண்ணை இதில் முன் சொன்ன மருந்தையெல்லாம் அரைத்து எண்ணையில் போட்டு அடி பத்தாமல் வேக வைத்து பதத்தில் வடித்து காசளவு உள்ளே கொள்ளவும். உடம்புக்கு இட்டுப் பிடித்த பொழுது பூதவே தவைத்துக் கொள்ளவும் தீரும்.

வேலம் பட்டை ஊற வைத்து மூன்று நாள் பல்லடியில் தேய்க்க வாய் நாத்தம் போம். மேல் நாத்தத்துக்கு கருஞ்சீரகமும் கார் எள்ளும் அரைத்து உடம்பில் பூச மேல் நாத்தம் போம். கத்தாழை நாத்தத்துக்கு கால் வளைக் கிழங்கு சாம்பல் சங்கு சீரம் பூசக் கத்தாழை நாத்தம் போம். நாலு நாளை மாறலுக்கு கஞ்சாங் கோரை கொண்டு வந்து தண்ணீர் வார்த்து அவைத்து உரி சாறு கொண்டு சட்டியைக் காய வைத்து பசுவின் வெண்ணெய் பாக்களவு போட்டு இந்த சாத்தை ஊத்தி இறக்கி சீரகம் அரைக் கழஞ்சு பொடி செய்து போட்டு குடிக்க நிற்கும். பல்லியை உயிரோடே பிடித்து கத்தாழை வடக்கு போற வேரையும் வெட்டி இது இரண்டையும் தலை மயிரிலே சொருகி விட நிற்கும். இல்லாதிருந்தால் கையிலும் கழுத்திலும் கட்டவும். நில்லாவிட்டால் இரண்டு வேர் வடக்கு வேர் வெட்டி இந்தப் படி கட்டவும் நிற்கும். சுக்கு மிளகு திப்பிலி கற்கடக் சிங்கி சிறுதேக்கு சடாமாங்கிஷம் இந்துப்பு கருஞ்சீரகம், கடுக்காய், தானிக்காய், நெல்லிப் பருப்பு செங்கழுநீர் கோஷ்டம் இதுக்கு வேர் வகை தூதுவளை வேர் ஆடாதோடை இலை கண்டங் கத்திரி வேர், சிறுவழுதலை வேர் பொடி பண்ணி தன்னிலொக்கக் கொண்டு கூட்டி வெகு கடிப் பிரமாணம் தேனில் கொள்ளவும். இதுக்கு தீரும் வியாதி ஈளை இருமல், உள்மாந்தை இளைப்பு, தரப்பு, காசம் இது வெல்லாந் தீரும்.

<u>சிங்கார சூரணம், எலும்புருக்கிக்கு மருந்து :-</u>

நறுவில் பழந்தோல் வாங்கிப் போட்டு பிசைந்து களியாகத் திரட்டி உலர்த்தி இதிலே கவிச்சி போக வாங்கி ஆழாக்கு நெய்யில் எரித்து நக்கத் தீரும். பாவட்டை சமூலங் கொண்டு வந்து அவைத்து பசுவின் பாலில் கலந்து கருப்புகட்டி போட்டு நெய்யுங் கலந்து கொடுக்கத் தீரும்.

(வேறு) நாழி பசுவின் பாலில் மனிதரைச் சுட்ட எலும்பு எடுத்து வந்து அரைத்து ஒரு எலுமிச்சங் காயளவு கரைத்து பாலில் குடிக்கத் தீரும். இந்தப் படி மூன்று நாள் குடிக்கவும்.

நாள் ஒன்றுக்கு புது எள்ளு ஒன்றரை ஆழாக்கு பொடி செய்து அரைப் பலம் கருப்புக் கட்டியுஞ் சேர்த்து மூன்று நாள் தின்னவுந் தீரும். கண் திறவாத பலகரை ஒன்பது கொண்டு வந்து ஒரு சட்டியிலிட்டு ஒன்பது எலுமிச்சம் பழச் சாறு விட்டு மூடி விக்க அந்த பலகரை விரியும். அதிலே மூன்று பலகரை எடுத்து அறுபது நாழிகை கெட்டித் தயிரில் வைத்து முழுங்கவும் தீரும்.

<u>பாலெ---துவேவும், உடம்பு வீக்கத்துக்கு :-</u>

விடத் தேர் யிலை அரைத்துகுடிக்கத் தீரும். நெருஞ்சிக்காய் அரைத்து உள்ளுக்குக் கொள்ளத் தீரும். அத்திப் பட்டையை ஊற வைத்து ஊறின தண்ணீரிலே தூதுவளைப் பூ ஒரு பிடி வேக வைத்து கடுகு, மிளகு, ஒரு பிடி அரைத்து கலந்து குடிக்கத் தீரும். விழுதியிலைச் சாறு உரியன் வெட்டு ஒன்று கூட்டி கொடுக்கத் தீரும்.

<u>எலும்புருக்கி முத்தமிழ் எண்ணை பண்ண :-</u>

தூதுவளை வேர், கண்டங்கத்திரி வேர், சிறுகீரை வேர், சீந்தித் தண்டு, முன்னை வேர் பட்டை, வெள்ளைக் காக்கணன் வேர், சாறு வேளை வேர், சிறு முடக் கொத்தான் சமூலமும் இலைக் கள்ளி வேர், கொடிவேலி வேர், நெருஞ்சில் வேர், பிரமியிலை வேர், சாறு வேளை வேர், பழுபாகல் கிழங்கு, புளியறளைக் கிழங்கு இவை யெல்லாம் வெட்டி தூணி தண்ணீர் வார்த்து இந்த வேரெல்லாம் போட்டுக் காய்ச்சி குறுணியான வாறே வடித்துக் கொண்டு அந்தக் கசாயமும் யீர வெங்காயமும் அவைத்து அதின் தண்ணீர் யிரு நாழியும் இரு நாழி திவிளக்கெண்ணையும் இது வெல்லாம் கூட்டிக் காய்ச்சி மெழுகு பதமாக வாறே வடித்து ஒரு கறண்டி எண்ணை உள்ளுக்கு கொள்ளவும். இரண்டு மூன்று தரம் வயறு கழியும். வீக்கமும் வாங்கும். உடம்பு மெத்த வீங்கி யிருந்தால் அந்த எண்ணை ஆக்கச்சே இரண்டு பேய்த் தும்மட்டிக் காய் நறுக்கி அரை ஆழாக்கு சாறு பிழிஞ்சு கொண்டு எண்ணையுடனே கூட்டி ஆக்கிக் கொள்ளவும். பத்தியமாக நடக்கவும்,

<u>ஒட்டிய புண், சூலை, காணங்கட்டி, தாமரைக்கு, எரிகுன்மத்துக்கு, வலி குன்மத்துக்கு, கவி</u>

மருந்து:-

இரசம் பலம்.௧, கர்ந்தம் பலம்.௧, சுத்தி பண்ணி வேர்வாளம் பலம்.௧, வெண்காரம் பலம்.௧; திப்பிலி பலம்.௧, மஞ்சள் பொடி பலம்.௧, கடுக்காய் பலம்.௧ இவை தன்னிலொக்கப் பொடி செய்து இருப்பு பரணியிலே அடைத்து தினம் ஒரு பணவிடை தண்ணீரில் கொள்ளவும். ஒட்டிய் புண்இ சூலை காணங் கடி ப்டர் தாமரை குணமாம். விடி வேறு வயறு எரியும்.

அதற்கு மருந்து:-

பொன்னுங்கண்ணி, சிறுகீரை வேர், அரைத்து கறப்பாட்டுப் பாலில் குடிக்க கருப்புட்டி கரைத்து குடிக்கத் தீரும்.

வலி குன்மத்துக்கு:- அடிவயறு வலிக்கும். அதுக்கு மருந்து:-

மருக்காரை வேர், வெள்ளை வெங்காயம், பெருங்காயம், அசமதாகம், சுக்கு, மிளகு அரைத்து எருமை மோரில் குடிக்கத் தீரும். கவிசை மேல் வயத்திலே திரண்டிருக்கும். அதுக்கு நொச்சியிலை தும்பை யிலை, மிளகு, தக்காளி துளசி, கஞ்சாங் கோரை, வெள்ளை குளஞ்சி, செருப்படி, கைய்யான் தகரை, பொடுதலை குப்பை மேனி வேலிப் பருத்தி, கோழிய வரை இது வெல்லாந் துவைத்துச் சாறு கொண்டு கடுகு, மிளகு, வசம்பு, சுக்கு, கடுக்காய், வெள்ளை வெங்காயம் இந்துப்பு பெருங்காயம் இவை அரைத்துக் கரைத்து இறுகக் காய்ச்சி கழக் கொட்டி அளவு உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி தினம் உருண்டை இள வென்னீரில் குடிக்கவும். இப்படி ஒரு மண்டலங் கொள்ளத் தீரும்.

வெப்பு பாவைக்கு:-

ஒரு புறத்திலே மீரலைப் பத்தி நோகும். பத்திக் கொண்டு இருக்கும். அதுக்கு வெள்ளாட்டு கோமியமும் கடுக்காயும் மூன்று நாள் கொள்ள வயறு கழியும். அதின் பிறகு காலமே கருப்பட்டியை தின்று பசும் புண்ணக்கு தின்னத் தீரும்.

அழுவைக்கு:-

அடி வயத்தை பத்தி திரண்டிருக்கும். அதுக்கு ஆட்டுக் கோமியமும், கடுக்காயும் மூன்று நாள் குடிக்க வயறு கழியும். கச்சைக் கருவாடு உப்பு போடாமல் அரைச்சு காலமே தின்ன மாறும். பெரு வயத்துககும் இந்தப் படி தின்னத் தீரும். பிறநீர் கோவைக்கு வயறு நீறுரு வயறு பெருத்திருக்கும். அதுக்கு சாறணைக் கிழங்கு எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து முள்ளிக் காயளவு உருண்டை பண்ணி இட வயறு கழியும். பின்பு சாறணைக் கொழுந்தும் அரைத்துக் கொடுக்கத் தீரும். பேய்க் கொம்மட்டி வத்தல் இள வென்னீரில் குடிக்க வயறு கழியும். மோருஞ் சோறுந் தின்னத் தீரும். புண்ணுக்கு உப்பு போட்டு ராத்திரி அடுப்பிலே வேக வைத்து காலமே எண்ணை வார்த்துக் கொண்டு தின்னவும். இப்படி இருபது நாள் தின்ன பெருவயறு தீரும். இதுக்கு மேல் என்ன கரியாகிலும் இட்டு உண்ணவும். பெரு வயறு போம். புழுங்கலரிசி, சாறணைக் கொழுந்து சுக்கு, மிளகு, உப்புக் கூட்டி அரைத்து அடை சுட்டு தின்னத் தீரும். செரியாக் குணத்துக்கு சுககு சுட்டு அரைத்து உரிய நீர் உழக்காக காய்ச்சி குடிக்கத் தீரும்.

இலைக் கள்ளி வேர் மேல் தோல் சீவிப் போட்டு சட்டியிலிட்டு மேலுங் கீழேயும் ஆவாரையிலை படுத்து பசுவின் பாலில் நாழி தண்ணீர் இருநாழி வார்த்து வேக விட்டு எடுத்து வெந்த வேர் பதினறு காசிடை சுக்கு நாலு காசிடை தண்ணீர் வார்த்து அரைத்து சுண்டைக் காயளவு உருண்டை நிழலில் உலர்த்தி ஒரு உருண்டை இள வென்னீரில் கொடுக்க வயறு கழியும். சுரம், குளிர் மகோதரம் தீரும். பத்தியம் மோரும், சாதமும் சாப்பிடவும்.

நீர்ப் பாட்டுக்கு, கோப்பாட்டுக்கு, குடல் சேறத்துக்கு, குடல் பிரட்டுக்கு, பிரமியத்துக்கு மருந்து-

நீர்ப் பாட்டுக்கு வயரோடும். அதுக்கு அசமதாகம் ஆரை வேர், சுக்கு தேறு கூட்டி அரைத்து இள வென்னீரில் கொடுக்கத் தீரும்.

கோப்பாட்டுக்கு வயரோடி வாயால் எடுக்கும். அதுக்கு சுக்கு சுட்டு கம்பிளி சுட்டு சுண்ணம்பு கூட்டி அரைத்து வென்னீரில் குடிக்கவும். ஊணங் கொழுந்தும் அசமதாகமும் வெடியுப்பு

கூட்டி அரைத்து இள வென்னீரில் கொடுக்கத் தீரும்.

குடல் வாதத்துக்கு குடல் சொருகி வயறு கழியும். எண்ணை யிட்டு வழிச்சு பழம பாசியை குளிர்ந்த நீரில் சுலாவிக் குடிக்கத் தீரும்.

பிரமியத்துக்கு சலம் எரிந்து சுக்கிலம் விழுந்தால் அதுக்கு ஆவாரங் கொழுந்து அரைத்து வெல்லங் கூட்டிப் பாலுடன் குடிக்கத் தீரும். ரெத்தம் விழுந்தால் செம்புரத்தை யிலை நீரில் சுலாவி வெல்லங் கூட்டிக் கொடுக்கத் தீரும்.

பிரமியம் சீழ் வியாழுந்தால் சிறுபூளை வேர் அரைத்து பாலில் வெல்லங் கூட்டிக் குடிக்கத் தீரும். பத்தியம் கும்பரிசி மாவு இடித்து கஞ்சி காய்ச்சிக் குடிக்கத் தீரும்.

பிரமியத்துக்கு:-

கருப்பம் பாலும், தேங்காய்ப் பாலும் சரி கூட்டி குடிக்கத் தீரும். கடக்கப் பிரப்ப புட்ட மூன்று நாள் பாகல் இலைச் சாறு மூன்று நாள் உள்ளுக்கு கொடுக்க விழும். நீரை புழுவுக்கு சுண்டை வேர் மிளகு இள வென்னீரில் கொடுக்கத் தீரும். மிளகரணை வேர் வெட்டி உலர்த்தி ஒரு மிட எருவிலிட்டு வெள்ளாட்டு எருவில் புடமிட தயிலம் விழும். இந்த தயிலம் ஒரு பணவிடை உள்ளுக்கு கொள்ள குட்டம் குணமாம். இப்படி ஒரு மண்டலம் கொள்ளவும்.

பித்தத்துக்கு, ரத்த பித்தத்துக்கு மருந்து:-

பித்தத்துக்கு வாய் வறண்டு கை கால் எரிந்து தலை சுழன்று தியக்கம் மயங்கி வரும். அதுக்கு மருந்து தேத்தாம் பழம் இள வென்னீரில் பிசைந்து குடிக்கத் தீரும். முசுமுசுக்கைச் சாறு பசுவின் பாலில் குடிக்கத் தீரும். சத்து வெல்லம் கூட்டிக் கொள்ளவும் தீரும். பாசிப் பயறு இள வென்னீரில் ஊற வைத்து பிசைந்து தண்ணீரில் சத்து வெல்லங் கூட்டி குடிக்கத் தீரும்.

ரத்த பித்தத்துக்கு வாயாலே ரத்தம் விழும். இதுக்கு மருந்து:- அத்திப்பழம் உலர்த்திப் பொடி செய்து தேனில் குழைத்துத் தின்ன ரத்தம் போம்.

சேத்துமத்துக்கு மருந்து:-

சேஷ்ப்பம் தொண்டையை கட்டிக் கொண்டு செருக்கும். இதுக்கு வெப்பாலைக் கொழுந்து மிளகும் மென்னு முழுங்கத் தீரும். மந்தார கால்மாரல் கிறு கிறுன்று இரைக்கும்.

அதுக்கு மருந்து:- குயனி பாலில் ஒரு படி நெய் விட்டு ஒரு பலம் மிளகும் முப்பது முள்ளிப் பழமும் நாலு பலம் கருப்புக் கட்டியும் கூட்டி குறுக காய்ச்சி மூன்று நாள் கொள்ளத் தீரும்.

எலி கடிக்கு மருந்து:-

Not useful.

கழுஞ்சி வேர், ஞாயற்றுக் கிழமை நாள் வடக்கு போற வேர் பிடுங்கி உலர்த்தி வைத்துக் கொண்டு அந்த வேரைத் தண்ணீரிலரைத்து நல்லெண்ணையில் கரைத்து மூன்று நாள் கொள்ள பத்து வருஷத்து எட்டு வருஷத்து எலி கடிகளெல்லாந் தீரும். கார்ப்பு புளிப்பு தவிர்க்கவும்.

வலம் சலம் அடைப்பட்டால்:-

வெங்காரங் கொண்டு வந்து இள வென்னீரில் கலந்து கொடுக்கவும் விடும். குறிஞ்சி வேரும் நொச்சில் கொழுந்தும் முள்ளிக் காயளவு அரைத்து இள வென்னீரில் குடிக்கவுந் தீரும்.

உள் வலி பிற வலிக்கு மருந்து:-

பேய்க் கொம்மட்டிக்காய் கொண்டு வந்து தவைத்து நாழி சரத்தில் உரி காடி விட்டுக் காய்ச்சி பாகு பதத்தில் அதில் கூட்டுகிற மருந்து இருபது கடுக்காய், இரண்டு விராகனிடை, பெருங்காயம், வெந்தயம் ஒரு சிறங்கை வெங்காயம் ஒரு சிறங்கை சீனக் காரம் இந்த மருந்து எல்லாம் பொடி பண்ணி அந்த மருந்திலே போட்டுத் துளாவி கருகு பதமாய் எடுத்து வைத்துக் கொண்டு ஒரு தேத்தாங் கொட்டை பிரமாணம் சாப்பிடவும். இதுக்குப் பத்தியம் தயிருஞ் சோறும் சாப்பிடவும்.

கதளி கந்தம் கிறுதம் பண்ணும்படி :-

வட்டத் திருப்பி, திரிபா லே தேவதாரம், ஏலரிசி, விலாமிச்சம் வேர், கொத்தமல்லி, பசு மஞ்சள், நன்னாரி வேர், மாவிலிங்கம் வேர், செண்பகப்பூ, நெய்தல் கிழங்கு, மஞ்சிட்டி, மாதளங்காய், பூளவி, சிறுநாகப்பூ, வாய் விளங்கம், நல்ல சந்தனம் பலம்.க, கல்லுப்பு, தாளிச பத்திரி, சிறுவழுதலே, ஆத்து முள்ளி, மலே அத்தி கரு அகத்தி குமர கற்பூரம், சிறு செண்பகக் கொழுந்து வாழைத் தண்டு, வாழைக்காய், வாழைப் பழம் இது இருபத்தெட்டு வகையும் வகைக்கு நாலு விராகனிடை கூட்டி குழனி தண்ணீர் விட்டு படியாகக் காய்ச்சி இதில் பால், நெய் விட்டு இளகின பக்குவமாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு அந்தி சந்தி கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி ஆவிற பித்தம், சுரம், ஈளே இருமல், சோகை மந்தாக்கினி, க்ஷய பித்தம், தாப சுரம், நாற்பது வாதம் என்பது வாய்வு, வெள்ளோக்காசம், மூத்திரக் கிருச்சம் இது வெல்லாந் தீரும்.

விரோசினக்குளிகை, கழல் வாதத்துக்கு, குன்மத்துக்கு :-

சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய் இந்த நாலு மருந்தும் நேர்வாளம் சுத்தி பண்ணி சமன் கூட்டி எலுமிச்சம் பழம் சாறு வார்த்தரைத்து சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி இள வென்னீரில் கொள்ளவும். கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். மெத்தக் கழிஞ்சால் குளிர்ந்த தண்ணீரில் குளிச்சுப் போட்டு மோருஞ் சாதமுஞ் சாப்பிடவும்.

கத்தாழை ஒரு பிடி, பாகல் இலே ஒரு பிடி, கழல் பருப்பு உலனே வெட்டும் அந்தளவு நல்ல வெல்லம் பசுவின் பாலில் மூன்று நாள் குடிக்க அந்த வாதம் வலியும் அடங்கி வீக்கமும் வாடி இசிக்கிறது நின்று வரும். தலே முழுகவும். முழுகினால் ஒரு நாளும் வராது. குலம் காத்தது மிது வென்று கடைகள் தோறுந் திரியாதே. தென்னங் காயில் உப்பை யிட்டு தீயச் சுட்டு ஆறின பின் பின்னேக் காயில் பாதி கொள்ளப் போ குன்மம் போய் விடுமே.

வசிகரத்துக்கு :-

Not useful

சங்கம் வேர் வெள்ளிக் கிழமை நாள் காப்புக் கட்டிச் சாவல் பலி கொடுத்து மந்திரம் பூத பேதி மகா பேதி என்று பிடுங்கவும். பிசாசு பிடித்தவர்களுக்கு கட்டப் போகாத பூதமும் போம்.

நீர் மேல் நெருப்புக் கன்னி கழியாப் பெண் நூத்த நூலேக் காப்புக் கட்டி தேனும் திணே மாவும் நைவேத்தியம் பண்ணி செஞ்சாவல் பலி கொடுத்து அக்கினி ரூபி அக்கினி சுகை வல மஉறநிவ்வாறனி சறுவே வரி என்று பிடிங்கிக் கட்ட சமஸ்தமான பீடைகளுந் தீரும்.

சீந்தில் கொடிக்கி வெள்ளிக் கிழமையில் கப்புக் கட்டி அந்த செடி யருகே சென்று ரா. ரா ர. ரா ரா வென்று செபித்து எட்டு நாள் பிடுங்கி குளிசமாடி தலேயிலே தரித்துக் கொண்டு சத்துருவுடனே எரித்துப் பேசினல் எதிர்த்துப் பேசப் பயப்படுவான்.

மருதாணி மரத்தைக் கிராணந்தோடேச் சேகாப்புக் கட்டி விடச்சே வெட்டி விழுக் காட்டி கண் துண்டமாக நருக்கி உலர்த்தி ஒரு பானேயில் அடைத்து தயிலம் வடித்து அந்த தயிலத்தை தூ ப தீபங் கொடுத்து புரகரி முரகரி சுவாகா உம் பட்டு என்று பன்னீ ராயிரம் உருச்செவித்து இந்த தயிலத்துக்கு முப் பலியுங் கொடுத்து சுத்தமான தலத்திலே வைத்துக் கொள்ளவும். யாதா மொருத்தர் பேய் பிடித்து வந்தார்களானல் அவர்களுக்கு பார்க்க வேண்டுமென்றால் அந்த தயிலத்தைத் தொட்டு நெத்தியிலே திலதமிட்டுக் கொள்ள அந்தப் பிசாசு எதிரே குதி கொள்ளப் பார்த்துக் கொண்டு இருக்கப் போறேன் போறேன் என்று அபாய மிட்டுக் கொண்டு போம்.

வாழாத பெண்ணுக்கு சிவந்த நாயுருவி வேரைப் பால் வார்த்தரைத்து பாலுடன் குடிக்க வாழாத பெண் வாழும்.

சுரம் விழுந்த நாள் நட்சத்திரம் :-

அஸ்வனியில் சுரந் தோன்றில் நாலு நாளில் விடும்.
பரணியில் சுரம் கொல்லும்.

கிருத்திகையில் சுரம் .உய நாளில் விடும்.
ரோகிணியில் சுரம் அ நாளில் விடும் அல்லது உய நாளில் விடும்
மிருகசீரம் நாளில் விடும் அல்லது நாளில் விடும்.
திருவாதிரை சுரம் ச நாளில் கொல்லும் அல்லது நாற்பது நாளில் கொல்லும்.
புனர் பூசம் சுரம் ங நாளில் விடும். அல்லது உய நாளில் விடும்.
பூசம் சுரம் ங நாளில் விடும்
ஆயிலிம் சுரம் நாளில் கொல்லும்.
மகம் சுரம்.யஉ, நாளில் கொல்லும் அல்லது உய நாளில் கொல்லும்.
பூரம் சுரம்.உ நாளையில் கொல்லும் அல்லது ய நாளில் விடும்.
உத்திரம் சுரம் ய நாளையில் விடும் அல்லது உய. நாளையில் கொல்லும்.
அஸ்தம் அ நாளையில் விடும்.
சித்திரை உய நாழிகையில் விடும். அல்லது அ நாளையில் விடும்.
சோதி.அ நாளியில் விடும். அல்லது சய நாளையில் விடும்.
விசாகம் உய நாளில் கொல்லும்.
அனுஷம் எட்டு நாளையில் விடும். அல்லது யஉ நாளையில் கொல்லும்.
கேட்டை.யஉ, நாளையில் விடும்.
மூலம் ய நாளையில் விடும். அல்லது உய நாளையில் விடும்.
பூராடம் நாளையில் கொல்லும் அல்லது ய நாளையில் விடும்.
உத்திராடம் அ நாளையில் கொல்லும் அல்லது யஅ நாளையில் கொல்லும்.
திருவோணம் அ நாளையில் விடும். அல்லது ய நாளையில் விடும்
அவிட்டம் ய நாளையில் விடும்.
சதையம் நாளையில் விடும் அல்லது யஉ நாளையில் விடும்.
பூரட்டாதி கொல்லும்.
உத்திரட்டாதி ஏழு நாளையில் விடும். C
ரேவதி நாளையில் விடும் அல்லது அ நாளையில் விடும். இப்படி அறியும்படி.

Not useful

<u>கெற்பம் நில்லாதாருக்கு மருந்து: முகவசிகரம், குன்மத்துக்கு மருந்து:-</u>

சிறுபாகல் சாறு ஆழாக்கு ஒரிலைத் தாமரைச் சாறு ஆழாக்கு இது இரண்டு சாறும் கூட்டி அதி பகவானைப் பார்த்துக் குடிக்க கெற்பந் தரிக்கும். இது கை கண்டது.

சீலைத் துணியை சுட்டு வாழைப் பழத்திலே சுட்ட கரியை வைத்து தின்னவும். ஒரு தரத்துக்கு நாலு பழம் தின்னவும். இப்படி மூன்று தரத்துக்கு தின்னவும், கெற்பந் தரிக்கும்.

வெள்ளெருக்கம் வேரும் வேலிப் பருத்தி வேரும் சந்தனத்திலரைத்து உருண்டையாக்கி வழக்குக்குப் போற பொழுது திலதமிட் வழக்கு செல்லும்.

அரை வரசிக் கடுக்காய் பிளந்து கொட்டை வாங்கிப் போட்டு காயான பேடி கல் லுப்பு குடுவையில் போட்டு படிக்கமிட்டு குப்பையில் புதைத்து எட்டு நாள் இருக்க எடுத்து உணர்த்தி வைத்துக் கொண்டு வியாதி குன்மம் வந்தவர்க்கு ஒரு கீத்து அந்திக்கு ஒன்று வெடிஞ்சக்கு ஒன்று நாற்பது நாள் தின்னவும். கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். குன்ம வியாதி தீரும்.

<u>காச்சல், மேல் வாந்தி நிற்கமருந்து, சுரத்தின் மேல் வயிறுப்பி வயறு வலித்தால் கசாயம்:-</u>

பருத்திக் கொட்டைப் பருப்பு, ஏலம், திப்பிலி, நெல்லுப் பொரி மா, சர்க்கரை தேன் நெய்யில் குழப்பி கொடுக்க காச்சலின் மேல் வாந்திக்கிறது. அரிசியாக வாந்திக்கிறது. இது வெல்லாம் நிற்கும்.

கண்டங்கத்திரி சீந்தில் கொடி வேலி யனைச் சான் சாதேவி முத்தக் காசு முந்திரி கைப் பழம், கண்டு பூறங்கி, சுக்கு, திப்பிலி இது வெல்லாம் கசாயம் காய்ச்சி மூன்று நாள் குடிக்க வயறு தலும்பும். வலியுந் தீரும். பொடுதலைக் கொத்தும் காயும், மிளகு, கடுகு, ஓமம், வெள்ளை, வெங்காயும், வசம்பு கூட்டி அரைத்து மூன்று குளிகை பண்ணி மூன்று நாள் வார்க்கவும். மருந்து அரைத்து பாலில் கரைத்து வேக விட்டு வார்க்கவும்.

பெரு மலக் கழிச்சலுக்கு:-

சிறு பிள்ளைகள் வெள்ளெடுப்புக்கு, வீக்கமும் சுரமும் கூட மருந்து:-

செம்பிரண்டைக் கிழங்கு வேர்ப் பட்டை நறு நாழியிலை நார், ஐந்து மாசத்து பிள்ளைகளுக்கு மூன்று இலை, ஒரு ~~வருஷத்து~~ வருஷத்துப் பிள்ளைகளுக்கு ஐந்து இலை வெண்ணையில் வேக வைத்து அரைத்துக் கொட்டைப் பாக்களவு முலைப் பாலில் வார்க்கத் தீரும்.. முத்தக் காசு வெப்பாலை அரிசி இது கிடையாவிட்டால் வெப்பாலைப் பட்டை கூட்டவும்.. சாட்டறணை வேருஞ் சிறுகாஞ் சொறி வேரு தேவதாரி சுக்கு இது வெல்லாம் சமனுக கசாயம் காய்ச்சி மூன்று நாள் கொடுக்கவும் சுரமும் வீக்கமுந் தீரும்..

சுரத்தின் மேல் தோஷத்துக்கு:-

அதிமதுரம், கண்டுபறங்கி, சங்கடை, திப்பிலி, இது நாலும் முலைப் பாலிலரைத்து நாக்கில் தடவி ஈறும், பல்லும் எல்லாந் தேய்ச்சு இப்படி சாமத்துக் கொருக் கால் மூன்று பதம் போடவும். சலமூறும். நாவு திரும்பும். அகத்திப் பட்டை, விஷ்ணு காந்தி சிறுபுள்ளடி இது மூன்றும் கசாயம் காய்ச்சி இறுத்துக் கொண்டு வாயில் விட்டுக் கொப்பளிச்சு உமிழத் தோஷம் முறியும்.

காச்சல் மேல் தோஷத்துக்கு, நரவு விழுந்தால் காச்சல் மேல் கண்ணோவுக்கு, விக்கலுக்கு:-

திரிணிக் கட்டை முலைப் பாலிலரைத்து நாக்கில் அடிக்கடி தேய்ச்சு உள்ளுக்கு கொடுக்கவும். இதுக்கு தீரும்: நாவு திரும்பும். கொட்டைப் பாக்களவு கிருவைப் பட்டையை நெய்யத் தட்டி பழஞ் சோத்தில் கண்ணீரில் பிசைந்து இறுத்துக் கொண்டு. ஒரு பணவிடை சீரகம் அரைத்துக் கலந்து சத்து காவிக் கல்லுரைத்து குடிக்கவும் கண்ணோவு தீரும்.

நீடு மாதளை நெல் பொரி சர்க்கரை தேடு திப்பிலி தேனுடன் கொண்டிட பீடையான பெரிய விக்கலும் சயித்தியம் லோட்ட லோட்ட துரைத்திடு வண்மையே.

பூளை வேர்த் தளை போத வுரைக்கொரு நாளை மோர்த்தனை நல்கிட வலிராய வரநேகப் படர்ந்திடும் விக்கலும் வேளை வல்லே விரைந்தடநேடுமே..

சகல சுரத்துக்கும் கலிக்கம்:-

மயிலிறகு உட் புறம் விட்டு நுனிப் புறம் எடு சுட்டு தேனில் குழப்பி நாவில் தடவி தொண்டைக் குழியில் தவ விக்க நிற்கும். சுக்கு, திப்பிலி, கடுகுரோகணி, வாய்விளங்கம், சிராம்பு, கொத்தமல்லிகை பெருங்காயம் இது வெல்லாம் எலுமிச்சஞ் சாத்திலரைத்துக் கம்பி உருண்டை செய்து நிழலிலுணத்தி மறுபடி எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து கண்ணில் அஞ்சனமிடவும். இதுக்குந் தீரும் வியாதி விடா வெதுப்பு மாறல் வெதுப்பு இவை யெல்லாந் தீரும்.

மூங்கிலைத் தின்று நஞ்சேறினல் நஞ்சு முறியும், தலை நோவு பிடனி யிசிப்பான சன்னி சுரத்துக்கு:-

ஒரு அப்பு புளியிலை ஒரு அப்பு பொன்னங்கண்ணி சிறுகீரை வேர், பருச்சாக கொண்டு இது வெல்லாம் ஒரு சட்டியில் போட்டு இரண்டு படி தண்ணீர் விட்டு கசாயம் காய்ச்சி அரைப்படியாக இறுத்துக் குடிக்கவும். நஞ்சு முறியும். Not useful

எலுமிச்சங் காய் மாதிரி புளியம் பட்டையை நைய்யத் தட்டி ஒரு படி எருமை மோரில் ஒரு சாமம் ஊறப் போட்டு குடிக்க உடனே நஞ்சு முறியும். வொட்டு சுரமும் விடும். கொத்து கொத்தாக ஒடிச்ச வேப்பிலை ஒரு முச்சியில் அடங்கினது கொண்டு வந்து சிறுக சிறுக அருவாமணையில் அரிஞ்சு சட்டியிலிட்டு மூன்று படி தண்ணீர் விட்டு முக்கால் படியாய்ச் சுண்ட விட்டு இதை இறுத்துக் கொண்டு ஒரு சேரை மிளகு உரிச்ச வெள்ளைப் பூண்டு ஒரு சேரை, கடுகு ஒரு சேரை இது வெல்லாம் அரைத்து கசாயத்தில் கலந்து அரைப்படியா யிறுகக் காய்ச்சி மூன்று பச்சை குப்பியிலரைத்துக் கலந்து மூன்று நாள் குடிக்கவும் நோவு தீரும். நெல்லிப் பருப்பு வாய் விளங்கம், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, கோரைக் கிழங்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய் இவை யெல்லாம் ஒரு பங்குக்கு கடை மூன்று பங்கு கூட கூட்டி இடித்து சூரணம் செய்து இதுக்கு சரி சர்க்கரை கலந்து வைத்துக் கொண்டு வெரு கடிப் பிரமாணம் திங்கவும். இதுக்கு தீரும் வியாதி வாய் நீர் கோழை, வாந்தி அரோசிகம், இருமல் அக்கினி மந்தம் இவை யெல்லாந்

தீரும்.

பசி தீபனத்துக்கு தாளிசை சூரணம்:- 3.4.63.

ஆயில் பட்டை தூள் ஒரு பிடி, புங்கம் பட்டை தூள் ஒரு பிடி, வெள்ளைப் பூல வேர் பட்டை தூள் ஒரு பிடி, பாலைப் பட்டை தூள் ஒரு பிடி, மிளகு தூள் ஒரு பிடி, கல்லுப்பு ஆழாக்கு இவை யெல்லாந் தூள் செய்து வைத்துக் கொண்டு சோறுண்ட பிறகு ஒரு பிடி அசனத்தில் ஒரு பிடி தூள் போட்டு பிசறி அசனம் பண்ணவும். தீபனமுண்டாகும்.

தாளிச பத்திரி, ஏலம், பழம் புளி, நீலப் புளி, கிராம்பு, சிறுநாகப்பூ, மிளகு திப்பிலி, குறைநீர், பேரீச்சம் பழம், முந்திரிகைப் பழம், மாதளை ஓடு, சாதிக்காய், கடுக்காய், கற்கடக சிங்கி, நற்சீரகம், கருஞ்சீரம், கஸ்தூரி மஞ்சள், வெட்டி வேர், விலாமிச்ச வேர் இது வெல்லாம் சமனைக் கூட்டி தூள் செய்து கரி பாகஞ் சர்க்கரை கூட்டி வெருகடிப் பிரமானம் சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி காய சுவாசம், இருமல், பைத்தியம், க்ஷயம், மூர்ச்சை, சயித்தியம், பிரமை, ரெத்த பித்தம், சத்தி சுரம், வயிற்று வலி இவை யெல்லாந் தீரும். பத்தியம் உப்பு, புளி விடவும்.

சவுபாக்கிய சிந்தாமணிக் குளிகை:-

பிதாம காபி கெந்தகம், வெங்காரம், சீரகம், சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், நெல்லி முள்ளி அப்பிர செந்தூரம் இது வெல்லாம் சுத்தி செய்து சமபாகமாக கூட்டி நொச்சி சாற்றில் மூன்று நாளரைத்து வரைப் பிரமானம் குளிகை செய்து நிழலிலுலர்த்தி சன்னி முதலான வியாதிக்கு இஞ்சிச் சாற்றிலாவது சுக்கு சாற்றிலாவது ----

நாராயண குளிகை சன்னி வாத வயிரவதும்:-

சுத்தி செய்த நேர்வாளம் கொட்டை காசிடை, நெல்லிக்காய்க் கெந்தகம், காசிடை, வெங்காரம் காசிடை, நொச்சிலிலை காசிடை, சுக்கு காசிடை, மிளகு காசிடை இது வெல்லாம் கடுக்காய் ஊற வைத்துத் தண்ணீரில் அரைத்து குண்டு மணி பிரமானம் குளிகை செய்து நிழலில் உணர்த்தி வெண்ணெயில் வைத்து முழுங்க சீத சுரம் தீரும். முந்திரிகைப் பழம் நெய் இது மூன்றும் கலந்து நாவியிட சன்னி வாதந் தீரும். சன்னி வாத சுரத்திலிட ஒடு காதிலே செவி பத்தி வீங்கும் குறி.

ரசம், நாபி, கெந்தகம், அரிதாரம், மனோசிலை, வெங்காரம், சாதிலிங்கம், இதுவெல்லாம் வகைக்கு காசிடை இது வெல்லாம் ஒன்யைக் கூட்டி சித்திர மூலம் கசாயத்தில் ஒரு சாமமரைத் இஞ்சிச் சாற்றிலொரு சாமமரைத்து உளுந்து பிரமானம் குளிகை செய்து நிழலிலுலர்த்தி கொடிவேலி கசாயத்தில் மூன்று நாளைக்கு மூன்று குளிகையிட சன்னி வாத சுரம் தீரும்.

வாதகுளிடகம்:-

நார்வி, கெந்தகம், குரோசானி, ஓமம், கடுக்காய், தானிக்காய், சந்திசாரம், எவச்சாரம், சித்திரமூலம், இந்துப்பு, சீரகம், செவ்வியம், லவணம், வாய்விளங்கம், ரசம் வெங்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, எட்டிக் கொட்டை இது வகைக்கு காசிடை. கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு நாள் அரைத்து உளுந்து பிரமானம் குளிகை பண்ணி நிழலி லுலர்த்தி எந்த கசாயத்திலிடவும் வாத சுரந் தீரும்.

அக்கினி குமாரி, சகல சுரத்துக்கு சஞ்சீவி குளிகை:-

சித்திர மூலம், வட்டத் திருப்பி, சுட்ட கரி, பெருங்காயம், சுக்கு, மிளகு, திப்பி லி, சாதிக்காய், ஓமம், கொத்தமல்லிகை, திப்பிலி மூலம், கல்லுப்பு, விடாலவணம் சயந்த லவணம் இது வெல்லாம் வகைக்கு கழஞ்சியிடை கூட்டிக் கெந்தகம் ஒருபணவிடை இது வெல்லாம் எருக்கம் வேர் கசாயத்தில் பதினைந்து நாழிகை அரைத்து மிளகு மாதிரி குளிகை செய்து நிழ லிலுலர்த்தி வாதசுரத்துக்கு எந்த கசாயத்திலுமிடத் தீரும். சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய் நெல்லி வத்தல் நெல்லிக்காய்க் கெந்தகம், அரிதாரம் இதுவரம் வெங்காரம் இது வெல்லாம் இதுக்கு சரி சமன் நேர்வாளம் கூட்டி திபுரசம் பட்டை கசாயத்தில் மூன்று நாளரைத்து பெரும்

பயறளவு குளிகை பண்ணி துளசி இலை புட்டு வைத்து பிழிந்து அந்த கசாயத்தில் மூன்று நாள் கொடுக்கவும் இதக்கு பத்தியம் முருங்கைக் காய் முருங்கையிலை துவரம் பருப்பு, மிளகு நீர் இதக்கு சகல சுரமுந் தீரும்.

தாப சுரத்துக்கு, சீத சுரத்துக்கு:-

ஏலம், லவங்கம், அதிமதுரம், கோஷ்டம், சகஸ்திரம் பேதி, திப்பிலி, வாகை விரை இது சமன் பாகமாகக் கூட்டி முலைப் பாலிலரைத்து துவரைப் பிரமாணம் குளிகை செய்து நிழலிலுணர்த்தி சர்க்கரையிலாவது முலைப் பாலிலாவது எலுமிச்சம் பழச் சாத்திலாவது மூன்று நாளைக்கு மூன்று குளிகை இடத் தாப சுரந் தீரும்.

வெள்ளைப் பாஷாணம் சீரகம் சமன் கூட்டி ஊமத்தன் சாத்திலரைத்து பயறளவு குளிகை செய்து மிளகு பொடி கலந்து வெந்நீரிலரைத்துக் கொடுக்கவும். இல்லாவிட்டால் சுக்கு சாத்திலிடவும். குடித்திக்கு கஞ்சி காய்ச்சிக் குடிக்கவும் நிற்கும். மோருஞ் சோறுமாம்.

சீத சுரத்துக்கு ராம பாணம், ஆனந்த வயிரவம்:-

கெவுரி பாஷாணம், வெள்ளைப் பாஷாணம், சுத்திர நாவி, கெந்தகம், இந்துப்பு கடுக்காய், உத்தாமணி வேர் இது வெல்லாம் சமன் கூட்டி குப்பை மேனி சாறு விட்டரைத்து சிறு பயறளவு குளிகை செய்து இஞ்சி சாத்திலிட சீத சுரந் தீரும்.

திப்பிலி, வெங்காரம், மிளகு, சாதிலிங்கம், சுத்திர நாபி, நேர்வாளம் இது வெல்லாம் சம பாகமாக கூட்டி எலுமிச்சம் பழச் சாத்தில் நாலு சாமமரைத்து சிறு பயறளவு குளிகை செய்து நிழலிலுணர்த்தி இஞ்சி சாத்தில் மூன்று நாள் கொடுக்கவும். இல்லாவிட்டால் சுக்கு சாத்தில் மூன்று நாள் கொடுக்கவுந் தீரும்.

கொடி கொடு சுரத்துக்கு, சுராங்கிஉசம், சஞ்சீவி நாயன் குளிகை:-

ரசம், நாபி, வெங்காரம், அரிதாரம், சுக்கு, திப்பிலி, கடுக்காய், நெல்லி வற்றல், தானிக்காய், நேர்வாளம், இது வெல்லாம் சமனாக கூட்டி நொச்சியிலைச் சாத்தில் அரைத்து முடக் கொத்தான் விரை அளவு குளிகை செய்து நிழலிலுணர்த்தி இஞ்சி சாத்தில் மூன்று நாள் மூன்று குளிகை கொடுக்கவும். இந்தப் படி சுக்கு சாத்திலிடவும். பத்தியம், உப்பு, புளி விடவும்.

ரசம், கெந்தகம், வெங்காரம், நேர்வாளம் இது நாலும் விராகனிடை.ங, மிளகு விராகனிடை.ங, சங்கு சுட்ட நீர் விராகனிடை.ங, புளியம் பட்டை சுட்ட நீர் விராகனிடை.ங, இது வெல்லாம் கெண்டை மீன் பிச்சிலரைத்து குண்டு மணி பிரமாணம் குளிகை செய்து நிழலிலுணர்த்தி இஞ்சி சாத்திலிடவும். முலைப் பாலிலிடவும் சகல சுரமுந் தீரும்.

பைத்திய வாந்தி சுரத்துக்கு குளிர் வெகுப்புக்கு ராம பாணம்:-

பேய்ப் புடல் முசுமுசுக்கை நரிப் பயத்தங் கொடி வேப்பங்குச்சி வங்கக்குப்பி மிளகு நாம்பல் கூட்டி இரண்டு படி தண்ணீர் விட்டு உழக்காக காய்ச்சிக் கொடுக்க வாந்தி வயற் கழிச்சல் நிற்கும். சாதிலிங்கம் விராகனிடை.உ, வெள்ளை பாஷாணம் விராகனிடை.ங ஊமத்தன் சாத்தில் இரண்டு சாமம் அரைத்து சிறு பயறளவு குளிகை செய்து இதிலொரு உருண்டை சர்க்கரையிலாகுதல் பொரியிலாகுதல் கருப்புக் கட்டியிலாகுதல் இடவும். கஞ்சி காய்ச்சிக் குடிக்கவும். சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லி முள்ளி, தானிக்காய் இது வெல்லாம் சம பாகமாய்க் கூட்டிக் கையாந்த கரை சாத்தில் ஒரு சாமமரைத்து குண்டு மணிப் பிரமாணம் குளிகை பண்ணி நிழலிலுணர்த்தி குளிர் சுரத்துக்கு திப்பிலியில் மிளகிலிடவும். சேத்தும சுரத்துக்கு இஞ்சி சாத்திலிடவும்.

பித்த சுரத்துக்கு முலைப் பாலில் சீரக கசாயத்திலிடவும். ஆடாதோடை கசாயத்திலிடவும். தொழுத்து முலைப் பாலில் வெதும்ப வைத்து விடவும். அதிசார சுரத்துக்கு கிராம்பு சாதிக்காய் கசாயத்திலிடவும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி ஆகாது. இளங்கீரை சாத்தண்டு மிளகு ஆகும். எழு நாள் மாத்திரை கொடுக்கவும்.

கிராம்பு விராகனிடை.க, சாதிக்காய் ஒன்று, சதகுப்பை விராகனிடை.க, லவங்கப் பட்டை, அதிமதுரம் விராகனிடை.க, ஏலம் விராகனிடை.க, இது வெல்லாம் எலுமிச்சம்

பழஞ் சாத்தில் ஒரு சாமம்ரைத்து அவரை பிரமாணம் குளிகை செய்து இதுக்கு அநுபானம் பழமாகுதல், வென்னீரிலாகுதல், நல்லெண்ணையாகுதல்; ஒரு குளிகை கொடுக்கவும். இதுக்கு பச்சரிசி பச்சை பயறு போட்டு கஞ்சி காய்ச்சி சத்தே நெய் விட்டு கொடுக்கவும்.

பொன்னுங்கண்ணி பொடுதலை உள்ளங் காலில் தேய்க்கச் சகல சுரங்களும் தீரும்.

<u>தோஷமான சுரத்துக்கு:-</u>

வங்காளப் பச்சை இரண்டு பணவிடை, வெண்காரம் இரண்டு பணவிடை, பெருநாகப்பூ இரண்டு பணவிடை, சாத்திர பேதி இரண்டு பணவிடை, ஏலம் இரண்டு பணவிடை, இது வெல்லாம் சுக்கு கஷாயத்தில் இரண்டு சாமமரைத்து முடக் கொத்தான் விரை அளவு குளிகை செய்து சுக்கு தண்ணீரில் கொடுக்கவும். சுக சரீரத்துக்கு தேனில் கொடுக்கவும். பனிரெண்டு நாள் பத்தியமிருக்கவும். அதின் பிறகு கொள்ளு மிளகு நீர் கொடுக்கவும். சித்திர மூலம் விராகனிடை.க, சாதிலிங்கம் விராகனிடை.உ, நொச்சிஇலை விராகனிடை.ங. அரிதாரம் விராகனிடை.4 தூரிசு விராகனிடை.ரு சமுத்திராப் பழம் விராகனிடை.6 சங்கு சுட்ட சாம்பல் விராகனிடை.6 சாதிப்பிலி விராகனிடை.4 இது வெல்லாம் பாகலிஇலைச் சாத்தில் முப்பது நாழிகை அரைத்து பயறு பிரமாணம் குளிகை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு சர்க்கரை திப்பிலியிலிட பித்த சுரந்தீரும்.

சுக்கு, மிளகு, திப்பிலி அரைத்து வென்னீரிலிட குளிர்சுரம் விடும். இஞ்சி சாத்திலிட சேற்றும சுரம் தீரும். பயறு கஞ்சி காய்ச்சிக் குடிக்கவும்.

<u>கற்பூர வாதிக் குளிகை:-</u>

இரதம் பலம்.க, கெந்தகம் விராகனிடை.க, பச்சைக் கற்பூரம் விராகனிடை.க, லவங்கம் விராகனிடை.க, சாதிக்காய் விராகன்.க, நல்லெண்ணையில் வெவிச்சு சுத்தி பண்ணின செருங் கொட்டை விராகன்.உ; இவை யெல்லாங் கத்தாழை சாத்தில் நாலு சாமமரைத்துப் பிரமாணம் குளிகை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு சரீரத்திராணி அறிந்து சர்க்கரையில் குளிகையிட எந்த சுரமும் மூன்றரை நாழிகையில் விடும். இச்சா பத்தியம்.

<u>நீ கென்டா சாயனம்:-</u>

சத்தி நாவி விராகன்.க, நெல்லிக்காய்க் கெந்தகம் விராகன்.க, ஊமத்தம் விரை விராகன்.க இது வெல்லாம் பொடி செய்து மூன்றரை நாழிகை ஊமத்தஞ் சாத்திலரைத்து மூன்றரை நாழிகை கையாந்த கரை சாத்தில் அரைத்து இரண்டு நாளைக்குப் பிறகு குண்டு மணிப் பிரமாணங் குளிகை செய்து நிழலிலுலர்த்திக் கொண்டு உஷ்ண சுரத்துக்கு இஞ்சி சாத்திலிடவும்.

ஒரு நேரம் வருகிற சுரத்துக்கு நாலாம் நாள் வருகிற சுரமும் நிற்கும்.

<u>விஷ சுரத்தின் குணம்:-</u>

ஒரு நாள் விட்டு ஒரு நாள் வரும். மூன்று நாளைக் கொருக்கால் நாலு நாளைக்கொருக்கால் வரும். இது முதலான சுரமும் விடும். பத்தியம் வென்னீருஞ் சோறும் உண்ணவும். உப்பு, புளி தவிர்க்கவும்.

<u>அர்தஜுரி ரிஷபன், மகாவாரி சஞ்சீவி குளிகை:-</u>

யிரதம் விராகனிடை.க, வெள்ளி விராகனிடை.½ மனோசிலை விராகனிடை.½ கெவுரி பாஷாணம் விராகனிடை ½ இது வெல்லாம் அரைத்து கெட்டிச் சீலையில் முடிஞ்சு வெள்ளறுகு சாத்தில் துளா பந்தமாக கட்டி வேக் விட்டு எடுத்து பொடி பண்ணிக் கொண்டு காதிரா த சுரங்களெல்லாம் விட்டுப் போம். ஐந்து நாள் முலைப் பாலில் சுத்தி செய்த சாதிலிங்கம் விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, சவன மிளகு விராகனிடை.உ, கடுகுரோகணி விராகனிடை.உ மிளகு விராகனிடை.உ சீரகம் விராகனிடை.உ; ஓமம் விராகனிடை.உ கருஞ்சீரகம் விராகனிடை.உ பற்படாகம் விராகனிடை.உ, முள்ளி விராகன்.உ கட்டு கிராம்புவிராகன்.உ நல்ல கிராம்பு விராகன்.உ சாதிபத்திரி விராகன்.உ;

சுத்த நாபி விரர்களிடைக் இது வெல்லாம் எலுமிச்சம் பழச் சாத்தில் இரண்டு சாமமரைத்து பயறு மாதிரி குளிகை செய்து எந்தெந்த வியாதிக்கும் கொடுக்கலாம்.

சுரத்துக்கு வாகடம் கசாயம் ஒடி குளிகை :-

ஆடாதோடை, பேய்ப்புடல், அன்றி சீந்தில் பற்படாகம், சீடா கண்டங்கத்திரி வேர், நிலவேம்புடனே சமன் கூட்டி வாடா குடிநீர் தேன் கலந்து வடித்துக் கலக்கிக் கொள்வீராய், கோடி கோடி சுரம் விட்டு குளிரும் தாகம் நீங்கிடுமே. சுத்தி பிறக்கும் சுகமுண்டாம். தோன்று மிருமலிளையும் போம். பித்தம் கழியும். பலமுண்டாம். காலும் ஒடி போமே. யுகந்தாற்கு. சித்தி விளையு மலங் களிற சிறந்த கடுக்காய் தின்பவற்கே.

பிரம தண்டு இலை ஏழு நெட்டைப் பேய்மிரட்டிக் கொழுந்து .எ வட்டத் திருப்பி இலை.எ, ஊசி தூரத்தி இலை.எ, பெரிய அகல் இலை யார யிருக்கிற உத்தாமணிக் கொழுந்து உயக ஒருக் கொட்டை வெள்ளைப் பூண்டு.எ, பெருங்காயம் விராகன்.உ, விடத் தேரியிலை விரர்கன்.உ இது வெல்லாம் எலுமிச்சம் பழஞ் சாத்தில் நன்று அரைத்து பசுமை யெல்லாம் போம். மஞ்சள் நிறமான பக்குவத்தில் பெரிய சங்கம் பழம் போலே குளிகை செய்து நிழலிலுணர்த்தி வைத்துக் கொண்டு ஒடி பில்லி சூனிய மசியிருந்தால் வென்னீரில் ஒரு குளிகை உரைச்சுக் கொடுக்கவும். மீறும்.

செரியாக் குணத்துக்கு வென்னீரில் கொடுக்கவும்.

சன்னிக்கு குளிகை :-

பூதாழச்சிராய் அரைப் பலம், மிளகுறணைப் பட்டை அரைப் பலம், திப்பிலி கால் பலம், திப்பிலி மூலம் கால் பலம், பெருங்காயம் விராகன்.ரு இந்துப்பு விராகன்.உ, மிளகு பலம். அரை ஓமம் அரைப் பலம், வெள் வெங்காயம் ஒரு பலம், சுக்கு கால் பலம், கண்டங்கத்திரிப் பட்டை, கூகை நெல்லிப் பட்டை, வட்டத் திருப்பி வேர் பட்டை, எருக்கம் வேர் பட்டை, பெருங் குறிஞ்சா வேர், பட்டை பாலைப் பட்டை, இந்த மருந்தெல்லாம் சமதைக் கூட்டி கல்லுரலி லிடித்து நாள் செய்து எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து சுண்டைக்காய் போலே குளிகை செய்து நிழலிலுணர்த்தி அந்தி விடிஞ்சு இரண்டு நேரமும் இரண்டு குளிகை வென்னீரில் குடிக்க சன்னி முதலானதெல்லாந் தீரும்.

சித்திர மூலம் வேர், எருக்கம் வேர், பறத்தொம வேர், புங்கம் பட்டை, ஆயில் பட்டை, சுக்கு, மிளகு, வசம்பு, ஓமம், வெள்ள வெங்காயம் நல்லெண்ணெ, வேப்ப எண்ணெ யிலாக்கி சுவளையிட்டு உள்ளுக்கு கொள்ளவும். சன்னி தீரும்.

சகல குட்டத்துக்கு ரத்தஜோதி குளிகை :-

சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், வசம்பு, கருஞ்சீரகம், வெள்வெங்காயம், குரோசாணி ஓமம், பெருங்காயம் ஒன்பது வகையும் ஒன்பது விரர்களிடை சாட்டறணை வேர் ஒன்பது விராகனிடை இவை யெல்லாம் வென்னீரிலரைத்து சுண்டைக்காய் போலுருட்டி வென்னீரிலொரு குளிகை கொடுக்க சகலமான குட்டமும் தீரும்.

வரிச் சுருமத்தம் பழச் சாறு ஒரு படி பனை வெல்லம்.ச முன்தான் காச்சல் பொட்டிலுப்பு அரைப்பலம் சித்தாமணக்கெண்ணெ ஒரு படி இது வெல்லாம் பொடி செய்து போட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி வைத்துக் கொண்டு ஒரு கறண்டி கொடுக்கவும். வயறு வேதிக்கும். இந்தப்படி மூன்று நாள் கொடுக்கவும். மூன்று மாசத்துக்கு ஒன்பது நாள் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும்.

மேக சன்னிக்கு திருகு சன்னிக்கு எண்ணெ :-

நார்வேளை வேர் ஒரு பிடி, நல்ல வேளை வேர் ஒரு பிடி, கம்பி பிசின் கொழுந்து வேலிப் பருத்தி வேர்ப் பட்டை பிடி.அரை, சித்திர மூலம் வேர்ப் பட்டை பிடி கால், வெள்வெங்காயம் ஒரு பலம், கொத்தமல்லி பிடி கால், திப்பிலி பலம் கால், திப்பிலி மூலம் கால் பலம், வசம்பு கால் பலம், நல்லெண்ணெ படி.க இந்த எண்ணெயைக் கொதிக்க விட்டு பிறகு சாதிக்காய் விராகனிடை.உ, தும்பருஷ்டகம் விராகனிடை.உ,

அதிமதுரம் விராகனிடை.உ, மராட்டி மொக்கு விராகன்.உ, கடுக்காய் விராகன்.உ, சுக்கு விராகன்.உ, அபினி, மிளகு விராகன்.உ, ஓமம் தூள் விராகன்.க வெள் வெங்காயம் விராகன் உ இது வெல்லாம் தூள் செய்து விரை தள்ளிப் போட்டு மாதளங்காயில் வைத்து சீலை மண் கட்டி சூரிய புடம் வைத்து ஒருவில அக்கினி புடம் வைத்து சீலை மண் வாங்கிப் போட்டு இந்த மாதளங்காய் மருந்து கூட எலுமிச்சம் பழஞ் சாத்திலரைத்து நாலு சாமஞ் சென்ற பிறகு சுண்டைக்காய் பிரமாணம் குளிகை செய்து நிழலிலுணத்தி வைத்துக் கொண்டு இள வெந்நீரில் மூன்று நாளைக்கு ஒரு குளிகை கொடுக்கவும் கடுப்பு நிற்கும். மோரில் தயிரில் தேனில் கொடுக்கவும் நோவு தீரும். ஒரு வருஷம் இரண்டு வருஷம் கடுப்பு ஆனல் ஒரு நாளைக்கு இரண்டு குளிகை கொடுக்கவும். புளியாத நீர் மோர், தயிரும் ஆகும்.

<u>தீராத கடுப்புக்கு:-</u>

சாதிக்காய், தானிக்காய், சாபத்திரி, லவங்கம் சன்னி லவங்கப் பட்டை, அதிவசம்பு, சடைக் கஞ்சா, அபினி மருந்து, காடி, இலவம் பிசின், நன்னாரி வேர், விலாரிவேர் நீர்முள்ளி விர்ர பொடி செய்து மாதளம் பூ மாதளம் பிஞ்சு, மாதளம் வேர் பட்டை மாதளம் இலை முன் மருந்துக்கு தக்கதாக மட்டும் பார்த்து முன் தூளும் இதுவும் விரை தள்ளிப் போட்ட மாதளங்காயிலடைத்துச் சீலைமண் கட்டி வெய்யிலிலுலர்த்தி எருவில் அக்கினி புடமிட்டு சீலை மண் வாங்கிப் போட்டு எருமைத் தயிர் விட்டு இரண்டு சாமமரைத்து சுண்டைக்காய் பிரமாணம் உருட்டி நிழலிலுணத்தி எருமைத் தயிரில் மூன்று நாளைக்கு மூன்று குளிகை கொடுக்கவும். தீராத கடுப்புத் தீரும்.

<u>உஷ்ண வாய்வு, சயித்திய வாய்வு, உடம்பு உலந்து ஏப்பமிட்டால் இதுக்கு கசாயம்:-</u>

பறங்கிப் பட்டை விராகனிடை.உ, சுக்கு விராகனிடை.உ, ஓமம் விராகனிடை உ படி தண்ணீர் வார்த்து சுண்டக் காய்ச்சி ஒன்றரை படி கசாயம் இறுத்து இரண்டு படி பசுவின் பாலாவது வெள்ளாட்டுப் பாலாவது ஒன்றரைப் படி கூடக் கலந்து கசாயம் குடிக்கவும். இப்படி அந்திக்கு குடிக்கவும். இந்தப்படி அரை மண்டலங் குடிக்கவும் உஷ்ண வாய்வு சீதவாய்வு தீரும். உடம்பு தடிக்கும்.

<u>விப்புருதிக்கு மருந்து:-</u>

விப்புருதியுடைய குணம் வலப் புறத்திலே நோகும். தும்பை யிலை அரைத்து இரண்டு முள்ளிக் காயளவு ஆயப் பட்டை அரைச்சது இரண்டு முள்ளிக் காயளவு ~~ஆயப் பட்டை அரைச்சது இரண்டு முள்ளிக் காயளவு~~ இது வெல்லாம் ஒரு படி எருமைப் பாலில் கலக்கி வைத்துக் கொண்டு ஒருபடி கருங் குறுவை அரிசி புதுப் பானையில் சோறு வேவிச்சுக் கொண்டு சோறு சேர்ந்து வருகிற போது முன் கலக்கின மருந்தை ஊத்திக் கலந்து சோறு சமைச்சு ஒரு நாள் திங்கவும். இந்தப் படி மூன்று நாள் திங்கவும். கருங்குறுவை அரிசி கிடையாவிட்டால் இளவாகரிசியிலாக்கி மூன்று நாள் திங்கவும். சோறு திங்கமாட்டா விட்டால் முன்னரைச்ச மருந்தெல்லாம் எருமைப் பாலில் கலக்கி குடிக்கவும். இதுக்கு கட்டு விப்புருதி ஒடு விப்புருதி ஒடையும். நோவுந் தீரும். கை கண்டது.

<u>மேக சன்னிக்கு:-</u>

தேத்தாம் வேர், பின்னைக் காயளவு அரைத்து பச்சைப் பால் அரைப்படி பசுவின் பாலில் கலக்கிக் குடிக்கவும். இப்படி மூன்று நாள் குடிக்கவும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி விடவும். விப்புருதிக் கூடு விழும்.

இலுப்பைப் பட்டைச் சாறு கால் படி வேப்பம் பட்டைச் சாறு கால் படி, ஊஞ்சு பட்டை சாறு அரைப்படியாக ஒரு படி சாறும் அரைப் படியாய்க் காய்ச்சி இதில் போடுகிற கற்கம் சுக்கு பலம். 1/2, மிளகு 1/2, திப்பிலி. 1/2, ஓமம். 1/2, கருஞ்சீரகம்.க, குரோசானி ஓமம்.க, தும்பருஷ்டகம். 1/2 இந்த எழு காரமும் பொடி செய்து அந்த கசாயத்தில் கலந்து வெள் வெங்காயம் பருப்பு இரண்டு பலம் நருக்கி பழைய பனைவெல்லம் பெரிச்சாக எழு. வட்டு தூள் செய்து கூடக் கலந்து அரைப் படி பசுவின் நெய் விட்டு அந்தி விடிஞ்சி இரண்டு நேரமும் இரண்டு உருண்டை சாப்பிடவும். இந்தப் படி பதினெட்டு

நாள் சாப்பிடவும். மருந்து கொண்ட பதினைந்து நாளைக்கு மேல் நச்சுப்பிடிக் கூட்டவும். மேக சன்னி தீரும்.

<u>சிறந்தி வெட்டைக்கு எண்ணை:-</u>

சங்கங் குப்பி யிலை, (நாற் சங்குலை, ஊசித் தூதுவளை, கோவை) யின்ட செடியிலை, வெங்காய சசாறு, சித்தாமணக்கு கொண்டு வந்து வழக்குத்தின யெண்ணை ஒரு விறகிலே ஆக்கின யெண்ணை செறுக்கு ஆற வகை சாறுக்கு ஆறுக்கு சாறு ரசத்தை சேரு யெண்ணையிலே கூட வார்த்து சட்டியிலே கலந்து அடுப்பு மேலே வைத்து ஒரு விறகிலே ஆக்கி ரசம் சுண்ட் விட்டு வாசனை யெடுத்து குளிர்ந்து வருகிற பக்குவத்திலே இறக்கி உள்ளுக்கு ஒரு கரண்டி சாப்பிடவும். ஒரு நாள் விட்டு சாதிக்காய், சாதிபத்திரி, லவங்கம் விராகனிடை. பொடி பண்ணி யொரு நாள் சாப்பிடவும். உப்பு, புளி விடவும். ஒன்பது நாள் விடவும். Not clear

<u>ராச் புண்ணுக்கு பழையபுண்ணுக்கு:-</u>

? சீதோக்கி மயில் துத்தம் விராகன். உ; சங்கால பஷீசி விராகன். உ, கடுகு ரோகணி விராகன். உ கருணைக் கிழங்கு விராகன். உ இது வெல்லாம் அரைத்து பண்ணி புங்கெண்ணை நல்லெண்ணையில் கலந்து இடவும். புண் மாறும்.

பழைய நோவுக்கு மாமரத்து பிசின் அத்தி மரத்து பிசின் அரச மரத்து பிசின் இது வகைக்கு இரண்டு விராகன் போட்டு படி தண்ணீரில் கசாயம் காய்ச்சி உழக்கு தண்ணீர் இறுத்து உள்ளுக்கு எட்டு நாள் கொடுக்கவும். <u>மேலுக்கு தடவறது:-</u> ஊமத்தை யிலை கருக்கு பண்ணி வெண்ணையில் கலந்து போட புண்ணு நாள் பட்ட புண்ணும் மாறும்.

<u>வீரிய விர்த்திக்கு:-</u> Not useful

வெள்ளை குண்டு மணி வேர், முட்டு தாமரை வேர், வெலி காறம், தேனில் அரைச்சு பூசறது. வீரிய சுத்தி வட்டி வெழக்கு கெந்தகம் பொடி பண்ணி தேனில் கலந்து பூசரது. ஆணைதொண்ட ஆகும். வீரிய சுத்தி.

தாஊக சிக பழம் தண்ணீரில் அரைச்சு பசுவின் நெய்யில் ஆக்கி உள்ளுக்கு சாப்பிடவும் வீரிய சுத்தி. பசுவின் பாலிலே, அரிசி நெல்லரிசி பாச ஆக்கி மேலே வேடு கட்டி சாதிக்காய் பலம் இரண்டு ஒப்பு பண்ணி புட்டு இட்டு பாலிலே ஒருக்காய் அரைச்சு தின்னவும். நூறு தடவை ஆகும் வீரியம் கட்டுப் படும். முறிவு புளி தின்னவும்.

<u>பைத்தியம் தழும்பு எழுந்திருந்தால் அதுக்கு மருந்து:-</u>

சீரகம் ஒரு பலம் பலம் கொண்டு வந்து ஒரு ஓட்டிலே போட்டு அதிலே கொளிஞ்சிக் காய் சாறு விட்டு பிசைந்து ஆற விட்டு இந்தப் படி மூன்று வாட்டிலாவது நிழலிலே ஆறவிட்டு இரண்டு புரை துணியிலே வைத்து கவுறு சுத்தி சுண்ணாம்பு கல்லு நடுவே வைத்து வேகப் போட்டு ஆற விட்டு எடுத்து வைத்துக் கொண்டு தினம் பணவிடை திங்கவும் பைத்திய தழும்பு எல்லாந் தீரும்.

<u>பதிமூன்று வகை பீனிசத்துக்கு:-</u> not useful

பெரு வெளவாலுடைய மாங்கு சதையை எடுத்து குங்குமப் பூ கஸ்தூரி திப்பிலி, சுக்கு, கையாந்தகரைச் சாறு ஒரு பிடி, பொன்னாங்கண்ணி சாறு வேறு ஒரு பிடி தண்ணீர் விட்டான் கிழங்கு சிறுகீரை நொச்சி ஆவாரை இவை யெல்லாம் இடித்து அரைப்படி சாறு மாத்திரம் பிழிந்து கொண்டு ஒரு படி பசுவின் நெய்யிலே எரித்து கடுகு பதத்திலே இறக்கிக் கொண்டு இரண்டு நாசிக்கும் விடவும். பீனிசமென்னப் பட்டதெல்லாம் தீரும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி விடவும்.

(எடு முறிந்து சிதைந்துள்ளது)

<u>உன்மத்துக்கு மருந்து:-</u>

இருநாழி கையாந்தகரைச் சாத்தில் வரகரி சிப்புக்கையாக ஆக்கி மத்திச்சு இதுக்குப் பொடி மிளகு பொடி ஒரு சிறங்கை சமம் பொடி ஒரு சிறங்கை கருஞ்சீரகம் பொடி நாலு சிறங்கை இந்துப்பு கால் பலம் கடுகு பொடி நாலு சிறங்கை, திப்பிலிப் பொடி

இரண்டு சிறங்கை சாட்டணை வேர்ப் பொடி நாலு சிறங்கை சித்திர மூலம் வேர்ப் பொடி ஒரு பிடி, கழற்சிக்காய் பருப்பு யரு இது வெல்லாம் நன்றாய் பொடி செய்து சீலை வடி கொண்டு ஆக்கின வறகரிசி சோத்தில் கூட போட்டு மசிச்சு வடுவடுவாய் சில்லுப் போலே பிடிச்சு நிழலுலர்த்தி ஒரு வேளை ஒரு வடகம் விளக்கெண்ணையில் பொரித்து தின்னவும். இதுவும் குன்ம மென்னப்பட்ட வியாதியெல்லாந் தீரும். இதுக்கு பத்தியம் பசுவின் நெய், துவரைப் பருப்பு மிளகு நீராகும். உப்பு, புளி விடவும்.

வலிப்புக்கு நசியம், மேலுக்குத் தவளை:-

ஓமம், திப்பிலி, மிளகு, வெள்ளுள்ளி, குப்பைமேனியிலை வேளையிலை கணம் புல்லு சாட்டணை, பழுபாகல் கிழங்கு கூட்டி மூக்கில் நசியம் விடவும். வெள்ளாட்டுக் கோமியம் வள்ளம். ச பாட்டயிலை போட்டு அழிய வெவிச்சு இதுவெல்லாம் புழிஞ்சு கொண்டு தயிலமாக காய்ச்சி தவளை போடவும்.

மண்டை சன்னி மண்டை குடைச்சலுக்கு, முக சன்னி பீனிசத்துக்கு:-

ஆதண்டை சாறு ஒரு படி நல்லெண்ணை அரைப் படி இது இரண்டுங் கூட்டிக் காய்ச்ச சாறெல்லாம் வற்றி எண்ணை நின்ற பிறகு பத்து விராகனிடை சீரகம் போட்டு கால் நாழிகை நேரம் கொதிப்பித்து எண்ணை யிறுத்து வைத்துக் கொண்டு பத்து முழுக்கு, எண்ணை தேய்ச்சு ஆஞ்சு அரப்பிட்டு குளிர்ந்த தண்ணீர் வெளவாத வென்னீரில் முழுகவும். இதுக்கு தீரும் வியாதி மண்டை சன்னி, மண்டை குடைச்சல் மண்டை யிரைச்சல், மண்டை யிடிப்பு இவை யெல்லாந் தீரும்.

ஆதண்டை வேர் பட்டை அள் மூன்று பலம் மிளகு பலம்.க, அரைப்படி நல்லெண்ணையில் போட்டு சூரிய புடம் வைத்து இந்த எண்ணை தலைக்கு தேய்ச்சு அரப்பிட்டு வென்னீரில் முழுகவும். மிளகு, கருங்குங்கிலியம் மஞ்சள் இவை பொடி செய்து சீலையில் சுருட்டிப் புகை பிடிக்கவும். ~~உள் வலிப்பு, புற வலிப்பு~~,

உள் வலிப்பு, புறவலிப்பு, சன்னி வலிப்பு, ஊது காமாலை வறக் காமாலைக்கு:-

ஆயில் பட்டை, வெள்ளங்க மர பட்டை, பீமரப் பட்டை, பாலட்டை, புலி தடுக்கிப் பட்டை இது ஐந்து வகையும் ஐந்து பிடி பட்டை போட்டு ஒரு வள்ளத் தண்ணீர் விட்டு முக்கால் படியாக கஷாயம் காய்ச்சி இறக்கி வைத்துக் கொண்டு மூன்று நாளைக்கு மூன்று பிடி கசாயம் கொடுக்கவும். இதுக்கு தண்ணீர் தவனம் எடுக்கும். தண்ணி குடியாமல் கட்டு பண்ணவும். மூன்று நாளைக்கு உப்பு, புளி கொடாமல் புழுங்கல் அரிசி சாதம் சாப்பிடவும் தீரும். புறச் சட்டியில் பண்ணவும். வலிப்பு எல்லாந் தீரும்.

இரும்பு?

கடுக்காய் பலம்.க, வெள்ளை வெங்காயம் பலம்.க, பழைய கோழா கிட்டம் பலம்.க, அரப்பொடி பலம்.க கையாந்தகரை ஒரு பிடி, சிவனார் வேம்பு ஒரு காசு இந்த மருந்தெல்லாம் பொடி பண்ணி எலுமிச்சம் பழச் சாற்றில் ஊறப் போட்டு நிழலுலர்த்தில் வைத்துக் கொண்டு மோருஞ் சோறும் குடித்து வெருகடிப் பிரமாணம் தேனில் கொடுக்கவும். இந்தப்படி மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் உப்பு; புளி விடவும் கை கண்டது.

கல்லுப்பு மூன்று படி, சதிரக் கள்ளிப் பட்டை, சிறுக நறுக்கி உலர்த்தினது ஒரு பிடி, வாய் குவிஞ்ச கலசத்திலே ஒன்றரைப் படி உப்பு பரப்பி அதில் நறுக்கின பட்டையை வைத்து அதின் மேலே மறுபடி ஒன்றரைப் படி கல்லுப்பு வைத்து அடக்கி இதின் மேலே படிக்கா மிட்டு மூடி சீலை மண் பூசி பூமி மேல் விரிவு மூன்று ஒட்டை அகலம் பூமிக்குக் கீழ் சாண் முச்சாண் அகலம் குழி வெட்டி இரண்டு சாடு எருமுட்டை போட்டு அக்கினி புடமிடவும். பின்பு பற்பமாம். இதை வைத்துக் கொண்டு ஒரு பலம் சுக்கு, ஒரு பலம் மிளகு, ஒரு பல அசமதாகம் இரண்டு காசிடை பெருங்காயம் இந்த கடை சரக்கு யெல்லாம் வெதுப்பிக் கொண்டு பொடி செய்து பசுவின் நெய்யில் ~~பதமிட்டு~~ பதமிட்டு முன் பற்பத்தில் கூட்டிக் கலந்து சரீர மறிந்து வெருகடிப் பிரமாணம் வென்னீரில் கலந்து குடிக்கவும். இதுக்கு தீரும் வியாதி சூலை குன்மம், பிசிகுன்மம், வலி குன்மம், வாயு குன்மம், குன்மம் கட்டு இது முதலான வியாதியுந் தீரும்.

ஈளை

ஈளை, இருமல், க்ஷயம், காசி நோவுக்கு :-

வெங்காரம் விராகனிடை.யஉ, ஓமம் பலம்.க, வெள்ளுள்ளி பலம். 1/2 சுகை நெல்லிப் பட்டை பலம். 1/2 சுக்கு பலம். 1/2 மிளகு பலம். 1/2 திப்பிலி பலம். 1/2 தம்பருஷ்டகம் பலம். , அக்கலாகாரம் விராகனிடை.ரு, கோஉஷ்டம் விராகனிடை.ரு, சமுத்திரப் பழம் விராகனிடை.ரு சாறணை வேர் விராகனிடை.ரு இது வெல்லாம் இள வறையாக வறுத்து வஜ்திர காயம் செய்து இத்துடன் லோக செந்தூரம் விராகனிடை.ங கூட்டிக் கலந்து இலைக்கள்ளி அடி மரத்தை துளைத்து இரண்டு கடுக்காய் அடைத்து எட்டார் நாள் எடுத்து சுட்டு கொட்டையை எரிஞ்சு போட்டு சதைப் பத்தெல்லாம் பொடி செய்து பருத்திக் கொட்டை மாத்திரம் சுத்தம் பொடி செய்து கலம் கவித்து அதின் மேலே வைத்து எலுமிச்சம் பழச சாறு விட்டு ஒரு சாமம் கலத்தொடைமைச்சு கொட்டைப் பாக்களவு பசு வெண்ணெயுங் கூட்டி இழைச்சு சிமிழில் வைத்துக் கொண்டு கண்ணிலிட வாய்வும் புழு வெட்டையுந் தீரும்.

எருக்கு ஒரசு படி, கள்ளிப் பால் படி. 1/2 வாதமடக்கி சாறு படி.க, நொச்சி சாறு படி.க, காட்டு முருங்கைச் சாறு படி.க, வெள்ளாட்டுப் பால் படி.க, நல்லெண்ணை படி.க, வேப்பெண்ணை படி. 1/2 சித்தாமணக்கெண்ணை படி.க, இலுப்பை எண்ணை படி க, இது வெல்லாம் ~~அரை~~ அளந்து ஒரு தாழியில் விட்டுக் காய்ச்சி அதிமதுரம் பலம். 1/2 கோஷ்டம் பலம். 1/2, சதகுப்பி பலம். 1/3, தேவதாரம் பலம். 1/2, ஓமம் பலம். 1/2 வாய்விளங்கம் (முடிவு இல்லை) Incomplete

வில்வாதி லேகியம் :-

வில்வப் பத்திரி பட்டை பலம்.ங, இதிலுட காய் ஙய இது இரண்டுங் கூட்டி இடித்து மூன்று வள்ளந் தண்ணீர் விட்டு நாலத் தொன்றாய் வரக் காய்ச்சி வடித்துக் கொண்டு இந்தக் கசாயத்தில் முப்பது பலம் நல்ல வெல்லம் போட்டு புதிபாகம் பண்ணி இறக்கி வைத்துக் கொண்டு இஞ்சி பலம்.ங, மிளகு பலம். , திப்பிலி பலம்.உ, கொடிவேலி பலம்.உ, ஏலரிசி விராகனிடை.ரு, லவங்கப் பட்டை பலம்.க, பச்சிலை விராகனிடை.ரு, சீரகம் பலம்.உ, அதிமதுரம் பலம்.க இது வெல்லாம் சூரணம் செய்து முன் ~~காசத்~~ கசாயத்தில் கலந்து தேன் உழக்கு விட்டு பாதி பாகம் செய்து வைத்துக் கொண்டு இந்தக் கிருதம் நெஞ்சுக் கட்டுக்கு காமாலைக்கு அசீரணத்துக்கு பிலிசைக்குமிடத்து வியாதிக்கு கிருணிக்கு மூலத்துக்கு மூலக் கிருணிக்கு பாண்டுவ ரோகத்துக்கு வயறு பிரம்பலுக்கு, சுக்கில பிரமியத்துக்கு மூத்திர கிரிச்சுக்கு இப்படிக் கொத்த வியாதிக் கெல்லாம் இரண்டு நேரமும் ஒரு பின்னைக் காயளவு சாப்பிடவும். பத்தியம் வாழைக் காய், வாழைப்பூ கூட்டி பெரு வியாதிக்கு அழுபத்துக் கட்டவும்.

கண் புகைச்சலுக்கு :-

சமுத்திரப் பழம், கடல் நுரை, மயிரோசனை, தேத்தாங் கொட்டை இது வெல்லாம் முலைப் பாலிலுரைத்துக் கண்ணிலிட புகைச்சல் மாறும். வெள்ளையும் போம்.

வில்லைப் பத்திரி வேர் ~~பிளைச்சக~~ கிழநத்து பலம்.ய, மேலட்டிக்காய் பலம்.ய, குமுழம் வேர் பலம்.டு, கத்தாழை வேர் பலம்.ரு, விடாவேர் பலம்.கு, புடங்கிரி வேர் பலம்.டு, இதுவெல்லாம் ஒரு பானையில் போட்டு ஆறு வெள்ளந் தண்ணீர் விட்டு சுண்டடிச்சு இரண்டு படி நிக்க யிறுத்துக் கொண்டு யிதில் பத்து பலம் மணல் வெல்லம் போட்டு பாகு பதமாகக் காய்ச்சி இறக்கி வைத்துக் கொண்டு இதில் போடுகிற கற்கம் சுக்கு பலம். 1/2 மிளகு பலம் 1/2 சீரகம் பலம். 1/2 ஏலம் பலம். 1/2 கொத்தமல்லி பலம். 1/2, வல்விளங்கம் பலம். 1/2, கிராம்பு விராகனிடை.ங சாதிக்காய் விராகனிடை.ங, சாதிபத்திரி விராகனிடை.ங, குரோசாணி ஓமம் விராகனிடை.ரு ஓமம் பலம்.தெ, திப்பிலி பலம். 1/2, திப்பிலி மூலம் பலம். 1/2 கல்நார் பலம் 1/2 ~~பலம்~~. அதிமதுரம் விராகனிடை.உ அக்கிலாகாரம் விராகனிடை.உ சிறுநாகப்பூ விராகனிடைஉ தம்பருஷ்டகம் விராகனிடை.ங பேரீச்சம் பழம் பலம்.க கருஞ்சீரகம் பலம். 1/2 சாதிபத்திரி லவங்கம் பேரீச்சம் பழம் இது மூன்றும் தவிர மற்றெல்லாம் இள வறையாய் வறுத்து சூரணம் பண்ணி முன் கசாயத்தில் கலந்து ஒரு படி பசுவின் நெய் விட்டு சுளாவி இறக்கி வைத்துக் கொண்டு தினம் கீரிமுள்ளிக் காயளவு தின்று வரவும். இதுக்கு தீரும் வியாதி வெள்ளைப் பிரமியம் மாற்றப் பிரமியம் மாற்ற சாயப்பூ, சுக்கிலப் பிரமியம் வெண்மாசு வெண்ணெத்திலவு

சுரம் வறச்சிப் பொடி இரும்பல் அதிசாரம் வறகுன்மம் வயறு எலிமடி வாதம் மதமூர்ச்சை வறக்குலைக் கட்டு சூலை முதலான வியாதியெல்லாந் தீரும்.

<u>அரக்கெண்ணைத் தயிலம்</u> :-

பத்து படி பசுவின் பாலில் பத்து பலம், அரக்கு வெவிச்சு மறு பானையிலிறுத்துக் கொண்டு இதில் இளநீர் ஒரு படி பசுவின் நெய் ஒரு படி சர்க்கரை பலம்.க, ஏலம் பலம் 1/2 சுக்கு பலம்.வ, சாதிக்காய் பலம்.வ, சாதிபத்திரி பலம்.வ, தம்பலுத்டகம் பலம்.வ, உருத்தம் பருப்பு பலம்.வ, சீரகம் பலம்.1/2, அதிமதுரம் பலம்.வ, அக்கிலாகாரம் பலம்.வ மருட்டிய மொக்கு பலம்.3/4 கற்பூர மிளகு விராகனிடை. ச, சீனிக் கடுகு விராகனிடை.உ, சந்தனம் விராகனிடை.ங, லவுங்கப் பட்டை விராகனிடை.ங, இலுப்பைப்பூ விராகனிடை. தாமரை. வளையம் பலம்.1/2 சாம்பிராணி பலம்.1/2 ஒரு படி பசுவின் நெய்யில் வெவிச்சு இறுத்து முன் தயிலத்தில் விடவும். முன் கடைச் சரக்கெல்லாம் ஏழுநாளட்டு அரைத்து முன் தயிலத்தில் கூட்டி காய்ச்சி மெழுகு பதத்துடனே யெடுத்து வைத்துக் கொண்டு பின்னையளவு தின்று வரவும். இதுக்கு தீரும் வியாதி அழுக்காச்சல் வறக்காமாலை, உள்ளுருக்கி, எலும்புருக்கி, வறட்சி உள்மூலம், பிறமூலம், குன்ம வாய்வு, சுரோனித வாய்வு, பெரும்பாடு மூலக் கடுப்பு கல உஷ்ணம் விடாசுரம் மடிவாதம், சூசிகா வாய்வு, வயற்று வலி இளைப்பு யிடுப்பு நோவு சோகைப் பயித்தியம் காமாலை, மதமூர்ச்சை வாய்வு, பித்த காமாலை, ரெத்தப் பிரமியம், இவை யெல்லாந் தீரும்.

<u>இரை குடல் வாதம், ஊது குடல் வாதத்துக்கு</u> :-

குறவாட்டம் பில்லு வேர் ஒரு பிடி, சுக்கு, மிளகு, வெள்ளைப் பூண்டு, வென்னீர் விட்டரைத்து ஆழாக்கு வென்னீரில் கொடுக்கவும். இந்தப்படி மூன்று நாள் கொடுக்கவும்.

<u>வாயில் ரத்தம் விழுகிற காசி நோவுக்கு பயித்தியம் மூக்காலும் வாயாலும் மாசரம் விழுந்தால்</u> :-

ஒருக் கொட்டை வெள்ளைப் பூண்டும், வசம்பும் அரைத்து வெள்ளாட்டுப் பால் எலுமிச்சம் பழச் சாறு யிஞ்சிச் சாறு இது மூன்றும் கலந்து சர்க்கரை கலந்து குடிக்கவும். ரத்தக் காசி தீரும். பசுவின் பால், எலுமிச்சம் பழச் சாறு, யிஞ்சிச் சாறு இது மூன்றும் கலந்து சர்க்கரை கலந்து குடிக்கவும். எந்தப் பயித்தியமுந்தீரும். இது கை கண்டது.

<u>வெள்ளெடுப்புக் கழிச்சலுக்கு, கிருணிக் கழிச்சலுக்கு</u> :-

யிருவிரல் பெருமன் வெள்ளங் கொடிமேல் பிறுணி சீவினது ஒரு சேரை இதனுட இலை ஒரு அப்பு இது இரண்டையும் கூட்டி இடித்து வென்னீரில் பிசைந்து ஒரு படி இறுத்துக் கொண்டு இதில் ஒரு கறண்டி நல்லெண்ணை விட்டு கலந்து குடிக்கவும். உடனே வெள்ளெடுப்புக் கழிச்சல் நிற்கும். இது கை கண்டது.

பீமரம் பட்டை முள்ளிக் காயளவு நய்யக் தட்டி ஒரு சேர் எருமை மோரில் பிசைந்து வடித்துக் கொண்டு சுண்டைக்காயளவு கடுக்காய் சுண்டைக்காயளவு களிப்பாக்கு உரைத்து கலக்கிக் கொடுக்கவும்.

<u>சமுத்திர பழத்தி கற்பம்</u> :-

சமுத்திரப் பழத்தை பசுவின் பாலில் வெவித்து எடுத்து உலர்த்தி வைத்துக் கொண்டு நொச்சி சாத்திலுரைத்து நசியம் மூக்கிலிட பாம்பு கடி விஷந் தீரும்.

வெள்ளாட்டு சலத்திலாவது மனுஷன் அமுரியிலாவது உரைத்துப் பூச தேள்கடி மீளும்

முலைப் பாலில் திப்பிலி உரைத்து மருந்து உரைத்து கண்ணிலிட கண்பூவு மாறும்.

பசுவின் நெய்யிலுரைத்துக் கண்ணிலிட பழைய கண் வியாதி தீரும்.

கத்தரி பழச் சாத்திலுரைத்திட கண்ணிலுண்டான சிவப்பு கண்ணோவு தீரும். செருங் கொட்டைத் தயிலத்திலுரைச்சு பூச புண்ணும் நோவுந் தீரும். வெத்திலைச் சாத்தில் திரிகடுகு அரைத்து முன் மருந்து மரைத்துப் பூச நாள் பட்ட புண்ணு மாறும். நீலிச் சாத்திலுரைத்துப் பூச தீராத புண்ணும் தீரும். பழஞ் சோத்து கண்ணியிலுரைத்து நசியம் பண்ண காதில் சீ

வடிஞ்சிருக்கிறது தீரும். நொச்சி சாத்தில் நசியம் பண்ண மண்டை குலை தீரும். எருக்கம் பாலிலுரைத்துப் பச மறவைக் கட்டுத் தீரும். சின்ன வெள்ளாட்டுக் கோமியத்திலுரைத்த பூச கட்டு மறவை தீரும். முலைப் பாலிலுரைத்து நசியம் பண்ண சன்னி பாதந் தீரும். பச்சனி வேர் சாத்திலுரைத்த நசியம் பண்ண சன்னி பாதந் தீரும். வாழைச் சோத்து தண்ணியிலுரைத்து நசியம் பண்ண ஒரு தலை நோவு தீரும். கையாந்தகரை சாத்திலுரைத்து கசாயம் பண்ண தலை வலி தீரும். சமுத்திரப் பழம் கற்பம் முற்றும்.

இடுப்பு நோவுக்கு, நெஞ்சு முறிவுக்கு, அவுரதாழிக்கு:-

உருத்தம் பருப்பு ஒரு படி, புழுங்கலரிசி மாவு ஒரு படி, சாமை அரிசி மா அரைப்படி, பருச்சா.க. பத்து வெட்டு கருப்புக் கட்டி ஒரு வள்ளந் தண்ணீரில் காய்ச்சி இரண்டு படி பாகான வாறே முன்மா வெல்லாம் போட்டு களிக் கிண்டி இதில் ஒரு படி நல்லெண்ணை விட்டுத் தாளாவி சுக்கு பலம். 1/2 மிளகு பலம். 1/2 திப்பிலி பலம். 1/2 ஓமம் பலம். 1/2 போளம் பலம். கம்பருஷ்டகம் பலம். 1/2 கருஞ்சீரகம் விராகனிடை. ரு சாதிக்காய். க ஒரு தேங்காய் மாதிரி சாமை சோறு பழைய கருங்கம்பிளியில் கட்டி அடுப்பில் போட்டு நெருப்பாக எரித்து மருசட்டியில் போட்டு ஒன்றரைப் படி தண்ணீர் விட்டு ஒரு படியான வாறே பிழுத்துக் குடிக்கவும். உடனே வயறு கட்டுப் படும்.

எரிகுன்மத்துக்கு, காமாலைக்கு:-

இந்துப்பு விராகனிடை. க, அரை விராகனிடை. ங, நவாச்சாரம் விராகனிடை. வ, பெருங் காயம் இது மூன்றும் எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து முழுங்கவும். கொடுத்தவுடனே தீரும். கையாந்தகரை யிலை ஒரு பிடி, கீழா நெல்லி சமூலமும் ஒரு பிடி, சுக்கு, திப்பிலி, மிளகு ஓமம், வெள்வெங்காயம், கையாந்தகரை சாத்திலரைத்து இதுக்கு பழைய பனைவெல்லம் பழைய நல்ல வெல்லமாகுதல் பாகு காய்ச்சி அது கூடக் கலந்து மத்திச்சு சுண்டைக்காயளவு உருண்டை பண்ணி நல்லெண்ணையில் பிரட்டி எடுத்து ஒரு நாளைக்கு இரண்டு உருண்டை சாப்பிடவும். இதுக்கு தீரும் வியாதி வாய்வு, காமாலை, வறக்காமாலை, ஊது காமாலை, பயித்தியக் காமாலை, சோகைக் காமாலை, பாண்டுவ காமாலை, பொய்யூதல், கும்மை யிவை எல்லாந் தீரும். உப்பு, புளி விடவும்.

Explanation necessary

குன்ம முதலான சகலத்துக்கு:-

நாலு குத்தம் சீலை உண்டு நல்ல கெந்தகம் நாலிரண்டு கால கந்தம் பதினறு கலையிலேற்றும் ரட்டிப்பு ஏலங் குழலாள் அம்மியிலே யிளங்குமரிச் சாத்திலல் தாழ்ந்த தன்னிலது விட தனலா எரியும் கண்டீரோ.

கண்டீர் குன்மம் பீலிகை நோவு கனத்த பித்தம் பாண்டுவ ரோகம்
வுண்டாந் தன்னை பிளிக்கு செப்பம் ஒட்டுங்குளிரும் உடன் சுரமும் ·க்கை
கண்ட கண்ட் குடுவறய கருதிக் கண்டு செய்வாரே.

குதிகா வாய்வுக்கு தேத்தான் கற்பம்:-

பிரண்டை வேர்ப் பொடி அரைப்பலம், பிரண்டைப் பொடி ஒரு பலம், உள்ளி ஒன்றரை பலம், பழைய வெல்லம் மூன்று பலம், ஏழு தரம் கோமியத்தில் சுத்தி பண்ணி அரைத்து க கழக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுணத்தி வெந்நீரில் ஒரு குளிகையிட இதுக்கு தீரும் வியாதி காமாலை, பாண்டுவம், விஷப் பாகம், ஆதிகர் கிருனி, குதிகா வாய்வு இவை எல்லாந் தீரும்.

ஞாயிற்றுக் கிழமை நாள் ஒரு கூடை தேத்தான் பட்டை கொண்டு வந்து நிழலுணத்தி ஒரு நாள் வெய்யிலில் போட்டு உணர்த்தி இடித்து சீலையில் வடி கட்டி வஸ்திர காயம் செய்து வைத்துக் கொண்டு இது கொள்ளுகிற அநுபானம் பசுவின் நெய்யிலாவது வேப்பெண்ணையிலாவது கொள்ளப் பதினெட்டு வகை குட்டமுந் தீரும். உப்பு, புளி விடவும். இப்பொடி மஞ்சா சாத்திலிட ஈளை இருமல் தீரும். வேப்பஞ் சாத்தில் குடிக்க வெதுப்பு மாறும். பனைவெல்லத்தில் தின்ன ஈளை தீரும். நல்லெண்ணையில் கொள்ள சூதக வாய்வு தீரும். எருமை மோரில் குடிக்க பெரும்பாடு தீரும். காடியில் நசியம் பண்ண உதிர மண்டல தீரும். கழுநீருடன் குடிக்க பெரும்பாடு தீரும். கோமியத்தில் குடிக்க வோக்காளந் தீரும்.

இதனுடன் காயும், பழமும் வஸ்திர காயம் செய்து பசுவின் நெய்யில் கொள்ள நசியம் பண்ண எல்லாக் கட்டியும் முயலகனுந் தீரும். இதின் வேரு ஆவின் பாலில் குடிக்க வெகு முத்திரம் தீரும். வென்னீரில் குடிக்க கவிசை கட்டி கரையும். தண்ணீரில் குடிக்க பெரும்பாடு தீரும். நல்லெண்ணெயில் குடிக்க முயலகன் எலிகடி தீரும். நெய்யில் குடிக்க பெம்வயறு குலேநோவு தீரும். கோமியத்தில் குடிக்க சோகை பாண்டுவந் தீரும். யிதினுடன் வாதந் தீரும்.

வேப்பெண்ணெயில் குடிக்க நசியம் பண்ண வொருதலே நோவு தீரும். மஞ்சா பொடி கூட்டி நெய்யில் முழுங்க குலே குன்மம் விடாமல் கொண்டால் ஆயுசு விருத்திக்கும்.

ஒரு மொந்தை செம்பில் அரசம் பட்டை சாம்பல் பலம்.4, விரற் கடை பரம்பம் யிதின் மேல் பத்திர தாளகம் பரப்பி பின்பு நாலு விரற்கடை சாம்பல் பரப்பி இந்தப் படி முன்று புரையா வைத்துமேலுக்கு படிகமிட்டு மூடி சீலே மண் செய்து நடை மட்டு எருவில் புடமிட்டு ஆறவிட்டு எடுத்து பரணியில் வைத்துக் கொண்டு ஒருநாள் தீராத சுரத்துக்கு பணவிடை பற்பங் கொடுக்க சுரந் தீரும்.

<u>வெளுள் சன்டி விழுந்த சுரத்துக்கு, கிரந்தி அரையாப்புக்கு என்னெ பண்ண</u>:-

பறங்கிப் பட்டை பலம்.க, சிறுகிரா வேர் ஒரு பலம், சித்திர மூலம் வேர்ப் பட்டை ஒரு பலம், சாதிக்காய்.க, சாபத்திரி விராகனிடை.க, குரோசாணி ஓமம் விராகனிடை.க, கருஞ்சீரகம் விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, நல்ல சீரகம் விராகனிடை.க, வெள்ள வெங்காயம் பலம்.க, நல்ல வெல்லம் பலம்.க, ஆக பதிமூன்று வகையும் ஒரு படி நல்லெண்ணெயிலாக்கி இருபத்தொரு நாள் சாப்பிடவும். உப்பு, புளி விடவும் நோவு தீரும்.

ஈனெ வந்திருமல் வந்திளைப்பு வந்தபோது
நானெ நல்ல உத்தாமணி நல்ல சாறுமுக்குடன்
வேளெ ப்லி சுக்குடன் வெந்த நீரில் கொள்வீராய்
காளையார்வர் வயறு நாறு காசி ரோகந் தீருமே,

<u>இருமலுக்கு வாகடம், கசாயம், சிரங்கு குட்டத்துக்கு</u>:-

வெள்ளைப் பாஷாணம் கெவுரி பாஷாணம், யிரதம், தோழிக் காரம், குப்பமேனிச் சாறு, எருக்கும் பால், எருக்கம் பழுப்பு, அலரிப் பழுப்பு, கோழிமுட்டை, மாச்சது இதுவெல்லா மரைத்து நல்லெண்ணெயில் கொதிப்பித்து வைத்துக் கொண்டு மறுநாள் சூரிய உதையத்திற்கு குடித்து உடம்பு சர்வாங்கமுந் தடவி மோருஞ் சோறுந் தின்று சாயங்காலத்துக்கு எருமை சாணியிட்டு குளிர்ந்த தண்ணீரில் முழுகிப் போடவும் குட்டந் தீரும்

<u>மூர்ச்சை போற் சன்னிக்கு வாகடம்</u>:-

யிரதம், கெந்தகம், அரிதாரம், ~~ஏஞ்~~ மனேசிலே, நேர்வாளம், மதுரசம் அரிசி தத்தமுடன் மன்று நாவி வெண்காரம், நிரைவேர் போர்டிலிவைச் சாரம் நீடும் சத்தி அவச்சாரம் வரித்தகப் பிறக கற்பமுடன் உண்ணுமே ல்ரிசி கொள்ளே கொள்ளீர் பாம்பின் பிச்சோறனை கொல்லு மற்றஞ்சாரொரு நாள் மெள்ள எருமை பிச்சுட்டுள் மிகவே ரெண்டு நாளரை மசுக் கொள்ள சன்னி விஷ மூர்ச்சை கொலற்றலேயில் குடோரி படு மெள்ளப் பண்டை மருந்தை யிட ஏகும் காயவியாதியிதே.

<u>கரு நொச்சி கற்பம்</u>:-

கருநொச்சி கற்பம், சமூலமும் துவைச்சு தன் சாரா புதப் பாண்டத்தில் இரண்டு வள்ளம் புழிஞ்சு கொண்டு யிதில் கொம்புத் தேன் ஒரு பிடி விட்டு மேலுக்கும் படிக்கமிட்டு சீலே மண் செய்து பூமியில் ஒரு மாதம் புதைத்து சாம்புறாணி தூபம் பாக்கு வெத்திலே பழந் தேங்காய் நெமித்தியங் கொடுத்து அதை எடுக்கிற போது கோழி பலி கொடுத்து வைத்துக் கொண்டு இந்தச் சாறு ஒரு பணவிடையும் தேன் சரி கூட்டி ஒரு மாசங் கொள்ள அழுவை குட்டந் தீரும். பின்னையும் ஏழு நாள் கொள்ள சரீரம் ஒளி விடும். பின்னையும் ஏழு நாள் கொள்ள நெருப்பு சுடாது. வறட் அமரியில் செம்பைக்

காய்ச்சித் தோய்க்க உதிர நிறமாம். பின் ஊயும் எழு நாள் கொள்ள ஆகாசத் திவ ஊயும் இப்பொடி காராம் பசுவின் மோரில் ஒரு மாசங் கொள்ள சரீரம் சொரண நிறமாயாகும். பின் ஊயும் இரண்டு மாசங் கொள்ள பரிமளசுகந்த வாடையாய்ப் பரிமளிக்கும். பின் ஊயும் மூன்று மாசங் கொள்ள நரை திரை மாறும்.

தெய்வ காயமாய் காயமிருக்கும். எங்கெங்கே தன் மனசில் தியானிச்சால் அங்கங்கே வாய் வேக மனவேகமாய்க் கொண்டு போய் விடும். யின்னம் வியாதிகாரர் பேர்க்கு எழு நாள் கொள்ள சகல வியாதியுந் தீரும். திட்டமாக கை கண்டது.

மிடறு பாடலாகடம்:-

நீடிய வாமகிரந்தை நெடுகிற பிரமி தாளும்
நாடிய சுக்கு மிக்க நல்ல திப்பிலியுஞ் சேர
கூடிய வசம்பு வாளமுவை கொம்பு தேனுடன் கூட்டியுண்ண
பாடலே மிடறு நன்றாய் கின்னர சாரம் பாடும்.

சர்வ வாதத்துக்கு தயிலம், சங்கிடு கிருனிக்கு பாம்பு கடிச்சு மாண்டாருக்கு:-

எருக்கம் பால் படி 1/2, வெள்ளாட்டுப் பால் படி 1/2, நொச்சி சாறு படி 1/2, புளியிலைச் சாறு படி 1/2, நல்லெண்ணை படி 1/2 இது வெல்லாம் மெழுகு பதமாக காய்ச்சி வ ஊயிடவும். இதுக்கு சர்வாங்க வாதம், பிடனி பிடிப்பு, இடுப்பு சிரோ பாரம் சர்வ வாதமுந் தீரும்.

அக்ர கிராகனிட வசம்பு, மிளகு, எள்ளு, கருவேப்பிலை, முள்ளிக்காய் மாத்திரம் இது வெல்லாம் அரைத்து மூன்று உருண்டை பண்ணி மூனறு நாள் கொடுக்க நிற்கும். இது கை கண்டது. நெல்லிக்காய்க் கெந்தகம், பொன்னரிகாரம், பெருங்காயம், வெங்காயம் இது வெல்லாம் சமஎடைக் கொண்டு தில்லைப் பாலில் அரைத்து குளிகை செய்து நமலலர்த்தி சிறுநீரில் நசியம் பண்ண செத்த பிணம்எழுந்திருக்கும். Not required

பின்னெடுப்புக்கு நஞ்சுக்கு:-

வில்லப் பத்திரி பூலாஞ்சி யிடிச்ச சாள் முன்றாத்தரப நாளும் நாள் பத்து விராகனிடை சாள தேனில் கொண்டால் உடம்பிலுண்டான பிணியெல்லாம் நீங்கி வச்சிராயிசாய் சரீரம் யிருப்பு கடப்பாரை போலே ஆகும். புளி விடவும்.

எட்டி தின்ன பேருக்கு:- விஷமுறிவு

நாவல் கொட்டையாலும் நாவல் பட்டையாலும் இடித்து காடியில் பிசைந்து கொடுக்க மீரும்.

ஊமத்தை தின்ன பேருக்கு தாமரைக் கிழங்கு காடியில் பிசைந்து கொடுக்க மீரும்.

கள்ளிப் பால் குடித்த பேருக்கு அவரைப் பவிலியை காடியிலரைத்துக் கொடுக்க மீரும். அலரி வேருக்குக் காய் அரைத்து காடியில் கொடுக்கவும். இல்லாவிட்டால் பாலில் கொடுக்கவும் மீரும். பச்சை நாபிக்கு மிளகு கரைச்சு தண்ணீரில் கொடுக்கவும் மீரும். எருக்கம் பாலுக்கு மூன்று வுடுஉதத்து பருத்தியிலை காடியிலிரைத்துகுடிக்கவும் மீரும். கழுதை வண்டுக்கு சங்கம் பழஞ் சாறு கொடுக்கவும் மீரும். சுண்ணாம்பு தின்னவருக்கு மஞ்சளரைச்சு நல்லெண்ணையில் குழப்பிக் கொடுக்கவும். பேய்ப் பீர்க்கு தின்னார்க்கு முத்தக் காசு காடியில் ரைத்துக் கொடுக்கவும். ஒடுவை தின்னார்க்கு பச்சரிசிக் கழுநீர் கொடுக்கவும். சேவுகனார் கிழங்கு தின்னார்க்கு சுக்கு அரைச்சுக் கொடுக்கவும். அப்பினி பாஷாணம் தின்னார்க்கு மூன்று வருஉ வருஉதத்து கத்தரி வேர் பட்டையை அரைத்து குடிக்கவும். எல்லா நஞ்சுக்கும்

எல்லா நஞ்சுக்கும் மருந்து:-

மருக்காரன் கிழங்கு பழம் இவை ஒவ்வொன்று மூன்று நாளாக ஒன்பது நாள் சீலையில் கட்டி உலர்த்தி வைத்துக் கொண்டு சத்த சீலை கிழித்து இள வெந்நீரில் பிசைந்து கொடுக்கவும். மருந்தீடு விஷ பித்தமெல்லா மெடுத்துப் போமே. அந்தி விட ஒரு செப்பு

சட்டியில் அரைப் படி காடி விட்டு எலுமிச்சங் காயளவு புளிப் போட்டு ஒரு விராகனிடை சீரகம் போட்டு ஒரு விராகனிடை மிளகு போட்டு இது பொடி செய்து போட்டு விடியக் கரைச்சு கொடுக்கப் பித்தமெல்லாம் வாயாலெடுத்துப் போகும்.

தம்பன குளிகை, லேபன குளிகை:- 4.4.63.

பிலாவிரை, பூனைக் காய்விரை, சமுத்திரா சோகி விரை, நீர்முள்ளி விரை, நாய்ப் பாகல் விரை, யிலைக் கள்ளி வேர், சத்தி சாறணைக் கிழங்கு, அமுக்கிருக் கிழங்கு, குரோசானி ஓமம், அதிமதுரம், சாதிக்காய், சாதிபத்திரி எள்ளு உழுந்து அத்திப் பால் இவை யெல்லாம் மவுரி யிரதேன் வார்த்தரைத்து பச்சைப் பாக்களவு உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு சாயங்காலம் ஒரு உருண்டை தின்னவும். பசுவின் பாலில் கலந்து குடிக்கவும். மூன்று நாள் ஆறுநாள் ஒன்பது நாள் போகம் விடாது.

காட்டு முருங்கை வடக்கே போற வேர் கொண்டு வந்து நல்ல பழந் தேங்காய் கண் திறந்து நீரை வூத்திப் போட்டு ஒரு விராகன் அபினி மருந்தும் அரை விராகன் சாதிலிங்கமும் ஒரு விராகன் சடைக் கஞ்சாப் பொடியும் ஒரு விராகனிடை கஞ்சா விரை அரை விராகனிடை குரோசானி ஓமமும், சாதிக்காய்.க இது வெல்லாம் தேங்காயிலிட்டு முன் முருங்கை வேரில் பாய்ச்சி நாலு நாளைக்கு மேலெடுத்து மேலோட்டை வாங்கிப் போட்டு ஒரு பானையிலிட்டு ஒரு வள்ளம் வெள்ளாட்டுப் பால் விட்டுக் காய்ச்சி அரைப் படியாய் சுண்டினவாறே எடுத்து இந்தப் பாலும் தேங்காயுமரைத்து சுடலைப் பிரமாணம் குளிகை பண்ணி நிழலிலுணத்திரி பாலிலாவது வெல்லத்திலாவது கொள்ளவும். மாற்று சுக்குத் தின்ன விடும்.

Not useful

சன்னி சயித்தியம் முதலான வாய்வுக்கு ரத்த கணத்துக்கு:-

புங்க மரத்துப்பூ யிடித்து தூள் பத்து பலம், திப்பிலி ஒரு பலம், திப்பிலி மூலம் ஒரு பலம், சுக்கு ஒரு பலம், மிளகு ஒரு பலம், ஓமம் ஒரு பலம், தானிக்காய் ஒரு பலம், கடுக்காய் ஒரு பலம் இதுவெல்லாம் தூள் செய்து முன் தூளுங் கூட்டிக் கலந்து வைத்துக் கொண்டு இந்தத் தூளில் வெருகடிப் பிரமாணம் காலமே சாப்பிடவும். வெந்நீரீர் குடிக்கவும் இந்தப் பிரகாரம் இருபது நாள் சாப்பிடவும். உடம்பு வச்சிர சரீரம்.

சிறு பிள்ளைகள் வயத்தை நோகும். முரிக்கும். நோகும், வயத்தில் ரத்தம் விழும் அசந்து கிடக்கும் இதுக்கு முருங்கை நாவில் பட்டையை நய்ய நசுக்கி தண்ணீராய்ப் பிழிந்து காய்ச்சின பாலில் கலந்து கொடுக்கவும் குணமாம்.

வறக் கெணத்துக்கு:-

பொன்னாங்கண்ணி சிறுகீரை ஆரை வருள் ஆரை வல்லாரை யிலைந்தை யிலை நில விளாயிலை தகரை யிலை சிறு புள்ளடி நரிப் பயத்திலை அம்மான் பச்சரிசி குருதை வாரி யிலை கருவேலம் இலை, கமல் கொடிக் கொழுந்து இது வெல்லாம் ஒரு அளவாகக் கூட்டி துவைத்து விளக்கெண்ணை ஒரு படி விட்டு அந்த மறு நாயத்துக்கு கூட்டி வேலம் பட்டையும் பஞ்ச திரவியமும் எண்ணைக்கு இது வெல்லாம் பலம்.கு கூட்டி அரைத்து கரைத்து பதத்தில் வடித்து உள்ளுக்கு இரண்டு காசத்தனை கொடுத்து உச்சி புடனி நரம்புத் தாரை யெல்லாந் தடவத் தீரும்.

கண நோவுக்கு, அக்கரம், பத்து வகை கணத்துக்கு:-

பெரு துத்தி வேர், உள்ளி, வசம்பு, இதெல்லாம் நசுக்கி சூரிய புடம் வைத்து நரம்பு தாரை யெல்லாம் தடவவும். உள்ளுக்கு ஒரு காசத்தினை கொடுக்கவும்.

நீர்க் கண்ணுக்கு:-

விடத் தேர் வேர், விடத்தேரியிலை, சிறுகீரை, வேர், பொன்னாங்கண்ணி வேர் நரிப் பயத்தம் வேர், வல்லாரை வேர், உள்ளி வசம்பு, ஐந்து பஞ்ச திரவியமும் இது வெல்லாமரைத்து பசுவின் நெய்யில் போட்டு சூரிய புடம் வைக்க உள்ளுக்கு கொடுத்து நரம்பு தாரைக் கெல்லாம் தடவத் தீரும்.

உ ஏலரிசி லவங்கப் பட்டை, அதிமதுரம், செண்பகப்பூ, செங்கழுநீர்க் கோஷ்டம், சீரகம், ஒவ்வொன்றுக்கு விராகனிடை.கு, ஒரு பிடி ஈர வெங்காயம் பசுவின் நெய்யில் பொன்னாங்கண்ணி வேர், சிறுகீரை வேர், கீழா நெல்லி வேர், அம்மான் பச்சரிசி சமூலமும் குளி மீட்டான் வேர் நன்னாரி வேர், தண்ணீர்விட்டான் கிழங்கும் இலையும் வல்லாரை சமூலமும் ஆவாரம் பட்டையும் விரையும் ஒரிலைத் தாமரையும் சிறுபுள்ளடி சமூலமும் நரிப் பயத்தங் கொடி சமூலமும் இது வெல்லாம் சமஎடை கட்டி அம்மியில் வைத்து நருக்கி நெய்யில் போட்டு பதத்தோடே தாளிக் காய்ச்சி வைத்துக் கொண்டு நெய்யில்லாதிருந்தால் அந்தக் கடுகில் பசுவின் நெய் விட்டு தாளிக் காய்ச்சி எடுத்து வைக்கவும். அந்தி வெடிஞ்சு இரண்டு நேரமும் முட்டைக் கரண்டி க தூரண்டி போட்டுக் கொண்டு வரவும். நரம்புத் தாரை எல் லாம் தடவவும். நீர்ச் சொரியும். ஈர வெங்காயமும் மூன்று நாள் கொடுக்கவும்.

<u>கண நோவு, குண்டிக்கை, அக்கரத்துக்கு:-</u>

சட்டித் தகரை வேர், பொரும்பின் வேர், ஊசி தகரை வேர், பன்னை வேர் கிவைப் பட்டை, சிறுபுள்ளடி பற்படாகம் அகத்திப் பட்டை, அதிமதுரம், ஏலரிசி, கருஞ் சீரகம், நற்சீரகம், காலிக் கல்லு இந்தப் பதின்மூன்று வகையும் தண்ணீர் விட்டு அரைத்து மிளகு பிரமாணம் குளிகை செய்து நிழலலர்த்தி சிறு பிள்ளைகளுக்கு முலைப் பாலில் வார்க்கவும். பெரியவர்க்கு சோத்துத் தண்ணீரில் கொடுக்கவும். தோஷ முரியும்.

(முடித் தோஷம் தோஷம், பறவை தோஷம், பட்சி தோஷத்துக்கு (எமஅங ஏடுகள்) இவ்வு மந்திரம் விடப்பட்டன)

<u>மாந்தை குளிகை:-</u>

நொச்சியிலை நெட்டைப் போய்மிரட்டி யிலை சங்கங் கொழுந்து உத்தாமணி யிலை நரிவுரர் பொரி அரிசியிலை கோபக் கொழுந்து ஊரவரை யிலை இந்த மருந்தெல்லாம் வறுத்துப் பொடி செய்து சுக்கு, மிளகு, ஓமம், வெள்ள வெங்காயம், கடுகு இது வெல்லாம் சட்டப் போட்டு வருத்து வெங்காயத்தைத் தோலுரித்து கூட அரைத்து வெள்ளாட்டுத் தோலு -ரிட்டு ஆமையோடு கரியாக்கிப் பேய்க் கருப்பஞ் சாறு வொரு கறண்டிகை வார்த்து அரைத்து உருண்டை பண்ணி பிள்ளைய்க்கு வார்க்கவும். மாந்தைகளெல்லாந் தீரும்.

<u>பல சுரத்துக்கு கசாயம்:-</u>

<u>சிறு பிள்ளை பிரிச் பிரிச்சென்று பீச்சலுக்கு:-</u>

வேப்பம் யீர்க்கு ஒரு பிடி; புளியம் யீர்க்கு ஒரு பிடி, விளாம் பிசி யீர்க்கு அரைப் பிடி, பேய்ப்புடல் ஒரு பிடி, சீந்தித் தண்டு அரைப் பிடி, சித்தாமுட்டி ஒரு பிடி பெருமுட்டி ஒரு பிடி, கடுகுரோகணி பலம்.வ இது வெல்லாம் ஒரு பானையில் போட்டு ஒரு வள்ள தண்ணீர் விட்டு சுண்டக் காய்ச்சி முக்கால் படி இறுத்துக் கொண்டு மூன்று நாளைக்கு மூன்று பிடி கொடுக்கவும். திப்பிலி இரண்டு பொடி செய்து சத்து சர்க்கரை கலந்து கொடுக் கவும். இந்தப்படி மூன்று நாள் குடிக்கவும். பத்தியம் உப்பு, புளி விடவும். சர்வ சுரங்களுந் தீரும். வாய் பேசாமல் நிலக் கடம்பு வேர் கொண்டு வந்து ஒருக் கொட்டை வெள்ளைப் பூண்டு வசம்பு மிளகு சத்துக்கூட்டி வாய் பேசாமல் அரைத்து முலைப் பாலில் காசளவு வார்க்கவும்.

<u>சிறு பிள்ளைகள் வயறு கழிச்சலுக்கு குரை மாந்தை வங்கு நோவுக்கு:-</u>

சத்து கருவேப்பிலை அறுத்து இரண்டு நெல்லிக்காயளவு புழுங்கலரிசி கூட்டி அரைத்து ஒன்றரை படி எருமை மோரில் கூழாக்கி இப்படி மூன்று நாள் வார்க்கவும். வயிறு கழிச்சல் உடனே கட்டுப் படும்.

அரைப்படி பச்சை நெல் உமிக்கு அரைப்படி தண்ணீர் விட்டு ஊற வைத்து ஒரு சாமத் துக்கு பிறகு இறுத்துக்கு கொண்டு இசு சங்கிடை தண்ணீரில் திப்பிலி ஒன்று, மிளகு மூன்று பழகு மூன்று அவரைப் பருப்பு மறுவாதி சுக்கு, ஓமம் சத்து ஒரு தலைப் பூண்டொன்று ஆமையோடு சுட்ட சத்து இது வெல்லா மரைத்து முன் தண்ணீரில் கலக்கி வார்க்கவும். இப்படி மூன்று நாள்

ஆம்பொழுது வார்க்கவும். இதுக்கு எரை மாந்த வங்கு நோவு தீரும்.

<u>வங்க நோவுக்கு எரை மாந்தலுக்கு வங்கு நோவுக்கு என்ணை:-</u>

அஞ்சப் பட்டை கொண்டு வந்து உள்ளு நார் உரிச்சது முள்ளிக்காய் முறவாதி. எடுத்துக் கொண்டு பச்சை நெல்லுமி ஒரு படி இது வெல்லாம் ஒரு ~~படிகால்~~ படி தண்ணீரிலே பப் போட்டு எடுத்து ஒரு சாமத்துக்கு பிறகு ஒரு கறண்டிகை தண்ணீர் எடுத்து ஒரு சங்கடை பசுவின் பாலில் கலக்கி ஒரு காசிடை யிட்டல் விட்டு அவரை யளவு சுக்கு வெள்ளை பண்டு ஒன்று மூன்று மிளகு திப்பிலி ஒன்று பத்து ஓமம் இது வெல்லாமரைத்து வார்க்கவும். இப்படி மூன்று நாள் வார்க்கவும் நோவு தீரும். சித்வரைக் கிழங்கு ஆகாச கெருடன் கிழங்கு அப்பைக் கிழங்கு பழுப்பாகல் கிழங்கு ஈசீவ ஊப் பழம் வறுத்த த்தின சிந்தாமணக்கென்ணை யீர வெங்காயம் சாதிக்காய், சாபத்திரி, லவங்கம், கடுகுரோகணி, கண்டுபறங்கி, திப்பிலி, திப்பிலி மூலம், கோஷ்டம், கசகசாய் ஏரோசாணி ஓமம், கருஞ்சீரகம், சுக்கு மிளகு, வெள்ளை வெங்காயம் கூட்டி ஒரு காசிடை என்ணை வார்க்கவும். நோவு தீரும்.

<u>வங்க நோவுக்கு பொருமலுக்கு:-</u>

சங்கு வடக்கே போற வேர் பட்டை முத்தின அஞ்சப் பட்டை உள் நாரு வாங்கிப் போட்டு மத்தளைத் தட்டி யிண்டம் பட்டை தட்டி யீர வெங்காயம் வறுத்து விளக்கென்ணையில் எரிச்சு ஒரு சங்கிடை இரண்டு சங்கிடை வார்க்கவும். விரேசனமாம். வங்க நோவு தீரும்.

எரு முள்ளுப் பட்டை முக்குருந்தன் பட்டை, கூகை நெல்லிப் பட்டை, இண்டம் பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி ஓமம் வெள்ளைப் பூண்டு இவை யெல்லாம் ஒன்றாய் கூட்டி இண்டம் பால் விட்டு நேக அரைத்து மிளகு மாதிரி உருட்டி சுண்டைக்காய் மாதிரி உருட்டி நிழலில் உலர்த்தி சிறு பிள்ளைகளுக்கு மிளகு மாதிரி முலைப் பாலில் வார்க்கவும். சுண்டைக் காய் மாதிரி இண்டம் பாலில் கலக்கி வார்க்கவும். பெரிய பிள்ளைகளுக்கு வார்க்கவும்.

<u>கடுவாளம் புண்ணுக்கு:-</u>

ஒரு ஊலக் கறண்டியில் ஒரு பிடி விளக்கென்ணை விட்டு காய்ச்சின பின்பு எலுமிச்சங் காயளவு கொசு தேன் மெழுகு போட்டு அரைப்பலம் வெள்ளைக் குங்கிலியம் போட்டுக் காய்ச்சி கலத்தில் ரொம்பத் தண்ணீர் விட்டு இதில் அந்த என்ணையை ஊத்த மேலே மிதக்கும். அதை எடுத்துக் கொட்டங்கச்சியில் வைத்துக் கொண்டு புண்ணுக்கு தடவவும்.

<u>பெரிய கரப்பன் புண்ணுக்கு கீரிப் பூச்சி விழ மருந்து:-</u>

ஒரு தாம்பல் அவரை நெருப்பாக வறுத்துப் பொடி செய்து வறுத்தா த்தின விளக்கென்ணை ஒரு பிடி, விட்டு குழப்பி சூரிய புடம் வைத்து கோழி யிறகு போட்டு புண் கண்ட விடமெல்லாம் தடவவும். பொன்நஞ்சு போம்.

ஞாயிற்றுக் கிழமை நாள் சமூலம் நிலாவரை கொண்டு வந்து நிழலிலுலர்த்தி தூள் செய்து வைத்துக் கொண்டு கோழி கூப்பிடுகிற நேரத்திலே மூன்று விரக்கடை தூள் வெந்நீரில் கலக்கிக் குடிக்கவும். கீரிப் பச்சி எல்லாம் விழுந்து போம்.

<u>மலட்டு பூச்சி விழ மருந்து:-</u> not useful

சிறு வரித்தும்மட்டிச் சாறு படி ½, எலுமிச்சம் பழச் சாறு படி ½, நல்லெண்ணை படி ½ இது மூன்றும் ஒரு சட்டியில் விட்டு நாலு பணக் கருப்புக் கட்டி உடைச்சு போட்டு ஒரு விராகன் சுக்கு ஒரு விராகன் மிளகு ஒரு விராகன் திப்பிலி ஒரு விராகன் ஓமம், வெள்ளை வெங்காயம் பலம் ½ இது வெல்லாம் தூள் செய்து முன் மருந்தில் போட்டு கொதிப்பித்து லேகியப் பதத்திலே இறக்கி அதின் பிறகு ஒரு கறண்டி உத்தாமணிச் சாறு விட்டு கிளறிக் கொட்டைப் பாக்கு மாதிரி உருண்டை பண்ணி தினமொரு உருண்டை சாப்பிடவும். இந்தப் படி ஏழு நாள் சாப்பிடவும். மலட்டுப் புழு செத்து விழும்.

செத்து விழாதிருந்தால் ஊரென்னப் பட்ட ஊருக்கு மேற்கே குறங் காட்டுக் கொழிஞ்சியை வாய் பேசாமல் பருங் கொழிஞ்சியாய் பாயவேரு அருமல் பிடிங்கி இதின்

யெல்லாம் தட்டிக் கொண்டு ஈர வெங்காயம் இரண்டு கட்ட் போட்டரைத்து மூன்று உருண்டை பண்ணி மூன்று நாளைக்கு மூன்று உருண்டை முழுங்கவும். அதின் பிறகு எலுமிச்சங் காயளவு பசு வெண்ணை உள்ளங் கையில் வைத்து குழைத்து இதில் உத்தாமணிச் சாறு ஒரு காசத்தனை விட்டு வெண்ணையில் முழுங்கவும் வீட்டுக்கு பொரத்தியான பொழுது முழுங்கவும் மலட்டுப் புழு விழும். இதுக்கு பத்தியம் வறுத்த துவரைப் பருப்பு, முருங்கைக்காய், முருங்கையிலை பசுவின் நெய் பசுவின் பால் பசுவின் மோருங் கூட்டவும்.

சிறு பிள்ளைகள் பெரியோர்கள் உளர்ந்து போஉல் அந்த உடம்பு தளிர்க்க மருந்து:-

உஷ்ணம் அதிக வறண்டு போஉல் அந்த உடம்பு தளிக்க மருந்து: சித்தாமணக் கொட்டை ஒரு புதுப் பானையில் ஒரு வள்ளம் இரண்டு வள்ளம் தண்ணீர் விட்டு அறுபது நாழிகை ஊற விட்டு வடிச்சுப் போட்டு மறு தண்ணீர் விட்டு வேக விட்டு நிழலிலுலத்தி மூன்று நாள் உலர்த்தி ஒரு நாள் வெய்யிலிலே உலர்த்தி இடித்து ஒரு வள்ளந் தண்ணீர் விட்டு இளநீர் ஒரு வளளம் விட்டு எண்ணையை ஆக்கி பதத்தில் வடித்துக் கொண்டு வாய் குவிந்த கலசத்தில் விட்டு படிக்க மிட்டு மூடிச் சீலை மண் செய்து ஆற விட்டு நெல்லுப் புழுக்கிற பானையில் புதைத்து நெல்லுப் பானை வாய்ப் பாட்டுக்கு மேல் மூவிரக்கடை உயரம் எண்ணைக் கலசம் நிற்கச் செய்து சட்டியிட்டு மூடி நெல்லெடுக்கிற பதத்தில் எண்ணை கலசத்தை எடுத்து இந்தப்படி நெல் லுப் பானையில் மூன்று விசை வைத்து எடுக்கவும். பின் 4 எண்ணைக் கலசந் திறந்து இதில் அரைப்பலம் சர்க்கரை போட்டு கால் பலம் சீரகம் போட்டு கால்பலம் ஏலரிசி பொடி செய்து போட்டு எண்ணையை ஒரு நாள் சூரிய புடம் வைத்து எடுத்து வைத்துக் கொண்டு தினமொரு காசிடை கொள்ளவும். இந்தப் படி ஒரு மண்டலங் கொள்ளவும். இதுக்கு தீரும் வியாதி சகல உஷ்ணம் சித்திரப்பு மேலுப்புசம் பொடி பிடுமல் வறச்சி அத்தி சுரம் சோபை பாண்டுவம் காமாலை இடுப்பு நோவு கால் கை கடுப்பு சிரோபாரம் கண் சிவப்பு மூக்கு நீர்ப் பாச்சல் காதடைப்பு யிவை யெல்லாந் தீரும். இச்சா பத்தியம். உடம்பு வுழகிடும்.

விரோசனக் குளிகை நேர்வாளம் சுத்தி:-

முத்தின தேங்காயைக் கண் திறந்து பாதி தண்ணீரை வடித்துப் போட்டு இந்தத் தேங்காயில் ஒரு பிடி பொட்டிலுப்பு போட்டு சுத்தி செய்த நேர்வாளம் ஒரு பிடி போட்டு ஆப்பு அடைச்சு செம்மண் கூட்டி வெய்யிலில் உலர்த்தி ஒரு மிடா எருமுட்டையில் உருண்டையை புதைத்து அக்கினி புடமிட்டு எடுத்து ஆறவிட்டு தேங்காய் ஒட்டை யெல்லாம் எரிஞ்சு போட்டு மிக்க தெல்லா மரைத்து மிளகு பிரமாணங் குளிகை செய்து நிழலுலர்த்தி ஒரு குளிகை கொடுக் கவும். வயறு திக்ழியும். அதிகமானல் மோருஞ் சோறும் கூட்டவும்.

வெப்பாள கொட்டை பலம்.உ கொண்டு வந்து கறண்டியிலே போட்டு எருமைச் சாணி கரைத்து வார்த்து வேக விட்டு கலக்கி எடுத்து மெள்ள பல்லா வாங்கி பருப்பு மோரில் கலக்கி கந்தாழை சோறு கழுவி நெய்யில் கழுவிக் கொள்ளவும்.

நாகப் பாம்பு என்ணை அண்ட வாய்வுக்கு:-

வறுத்தா த்தின சித்தா மணக்கெண்ணை ஒரு படி திருகு கள்ளிப் பால் ஒரு படி ஆவரஞ் சாறு அரைப்படிநொச்சிச் சாறு படி 1/2 இந்தச் சாறு பாலெல்லாம் வைத்துக் காய்ச்சி எண்ணையை வடிச்சுக் கொண்டு சிறு பிள்ளைகளுக்கு ஒரு காசிடை கொடுக்கவும். பெரியவர்களுக்கு இரண்டு காசிடை கொடுக்கவும்: வயிரோட இள வென்னீரில் கொடுக்கவும். கடுச்சானல் குளிர்ந்த தண்ணீரில் கால் கழுவி மோருஞ் சோறுங் கொடுக்கவும்.

வறுத்தா த்தின சித்தாமணக்கெண்ணை படி!.௧, கழற்சிக்காய் கொழுந்து ஒரு அப்பு நொச்சிக் கொழுந்து அதுக்கு 3/4 சுண்டையிலை ஒரு அப்பு முடக் கொத்தான் இலை ஒரு அப்பு குப்பை மேனியிலை ஒரு அப்பு வெள்ள வெங்காயம் பலம்:௧ இந்த ஐந்து வகை யிலையும் இடித்து எண்ணையில் கலந்து கொதிக்க வைத்து வெள்ள வெங்காயம் தப்ப போட்டு பதத்தில் வடித்துக் கொண்டு ஒன்றை விட்டொரு நாள் வாங்கவும். புளியும் பகையும் விடவும்.

நல்ல சாதிப் பெருங்காயம் ஒரு விராகனிடை பொடி செய்து வெள்ள வெங்காயம் தயிலத்தில் குழைத்து முழுங்கவும். இப்படி ஐந்து நாள்முழுங்கவும். பத்தியம் உப்பு, புளி விடவும். அண்ட வாய்வு தீரும்.

ரசம் விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, கழுந்த திர விஷம்.க, இது மூன்றும் பொடி செய்து சீலையில் சுருட்டி விளக்கெண்ணெயில் தோய்ச்சு இதைப் பொருத்தி கவுந்த கலத்தின் மேலே திரியை நலை கீழாய் பிடிக்கவும். தயிலம் விழும். அதை அண்டை வாயில் தடவவும். இப்படி ஐந்து நாள் தடவவும்.

<u>அண்ட வாய்வுக்கு அத்தி கசாயம்:-</u>

கழற்சிக்காய் பருப்பு.க, சுக்கு விராகனிடை.உ, வசம்பு விராகனிடை.உ, வெள்ளி விராகனிடை.ரு பெருங்காயம் விராகனிடை.½, ஆதண்டம் பட்டை விராகனிடை. மொட்டக் கொத்தான் ஒரு பிடி இது வெல்லாம் ஒரு சட்டியிலிட்டு ஒரு படி தண்ணீரிலிட்டு ஒரு படியாய்க் காய்ச்சி இறுத்துக் கொண்டு அந்தி மாறு சோறு உண்ட பிறகு குடிக்கவும். இப்படி மூன்று நாள் குடிக்கவும்.

பொடுதலையும் கழற்சியிலையும் கருங் கமுதை லத்தியும் பிசைந்து வறுத்துக் கட்டவும். இப்படி மூன்று நாள் கட்டவும்.

கழற்சியிலை கொத்தனிலை பொடுதலை கருங் கழுதை லத்தி இது நாலு இடித்து சிறுநீர் வார்த்து வறுத்துக் கட்டவும். இப்படி மூன்று நாள் கட்டவும். அண்ட வாய்வு தீரும்.

சுண்டைக்காய் வத்தல் ஒரு சேருக்கு நாழி தண்ணீர் வார்த்து அவிச்சு ஆழாக்கா காய்ச்சி பிசைந்து வடித்து அரைக் கழஞ்சு பெருங்காயம் கூட்டிக் கொடுக்கவும்.

<u>பக்க வாதத்துக்கு, உள்மூலம் ரத்த ஜெனிக்கு வண்டு கடிக்கு மருந்து:-</u>

நாயுருவியிலை இரண்டு பிடியும் அரைப்படி கம்பரிசியும் கூட்டி இடித்து மாவாக்கி பிட்டு வைத்து நல்லெண்ணை பனைவெல்லங் கூட்டி திங்கவும். இப்படி மூன்று நாள் திங்கவும் தீரும். வெள்ளாட்டுக் கோமியம் ஒன்றரைப் படி பசுவின் பால் ஒன்னரைப் படி இதை உலை கட்டிக் காய்ச்சி ஒன்றரைப் படியாய்க் காய்ச்சி சுண்டின பிறகு இதில் அரைப்படி கருங் குருவை அரிசி போட்டு கிண்டு பதமான வாறே நிலாவரை தூள் வெள்ளறுகு தூள் விழுதி தூள் இது மூன்று சால பிடித் தூள் கூடப் போட்டு கிளறி பனை வெல்லங் கடிச்சுக் கொண்டு மூன்று நேரம் திங்கவும். வேறு

ஒரு வள்ளம் பிடிக்கிற பானையில் காட்டு முட்டை அடக்கி வைத்து பானைவாய்ப் பாட்டில் இரண்டு தட்டு வைத்து பானை வாயில் நெருப்பு வைத்து பானை வாய் மேல் வட்டி வைத்து வட்டியில் தண்ணீர் விட்டு இரண்டு நாழிகைக்குப் பிறகு வட்டி அடியில் தயிலம் பத்தும் இதை தடவவும். இப்படி பத்து நாள் தடவவும். வண்டு கடி தீரும்.

<u>பிள்ளை குருக்கிடவில் பொல்லா குழமாய் வீக்கமாயிருந்தால்:-</u>

இலைக் கள்ளி இலையை வேக விட்டு விளக்கெண்ணை தடவிக் கட்டவும். மாதளந் தழை அவிச்சுக் கட்டவுந் தீரும்.

Not useful

<u>குத்திருமல், பொடி யிருமல் ஈளை இருமல் சயித்திய இருமலுக்கு:-</u>

அரைப்படி கருங்குருவை அரிசியில் இரண்டு பிடி செங்காஞ் சொறி வேர் கூட்டி இடித்து மாவாக தெள்ளிக் கொண்டு வென்னீர் விட்டு பிசைந்து அடை தட்டி பொரி வோட்டில் சுட்டுக் கொள்ளவும். இந்தப் படி ஏழு வாட்டி அரைச்சு ஏழு வாட்டி சுட்டுக் கொண்டு துட்டெண்ட தட்டெடையாய் முரிச்சு ஒருபடி தேனில் ஊறப் போட்டு தினம் துட்டெடை தின்னவும். இந்தப் படி அரை மண்டலந் திங்கவும். இதுக்குத் தீரும் வியாதி இருமலோடே கூடின காசியெல்லாந் தீரும். அரைப் பலம் பனைவெல்லம் பாகாக காய்ச்சி ஒரு சேரை பாகு இறுத்துக் கொண்டு சுக்கு தூள் விராகனிடை.க, திப்பிலி தூள் விராகனிடை.க, மிளகு தூள் விராகனிடை.க இது மூன்றும் தூளும் பாகில் கலந்து குடிக்கவும். இப்படி மூன்று நாள் குடிக்கவும். சயித்திய யிருமலெல்லாம் உடனே தீரும். இது கை கண்டது.

பசி எடுக்க மருந்து :-

வடு வடுவாய் நறுக்கின பிரண்டை ஒரு வள்ளம் மோரில் வேகப் போட்டு நன்றுய் வெந்த பிறகு ஆட்டுக் கல்லிலாட்டி இதில் போடுகிற சுற்கம் திப்பிலி ஒரு பலம் சுக்கொரு பலம் ஓமம் ஒரு பலம், வெள்ள வெங்காயம் பருப்பு ஒரு பலம், பெருங்காயம் அரைப்பலம் கல்லுப்பு ஒரு பலம் இது வெல்லாம் சில்லுப் போல் வடகம் செய்து சீலையில் போட்டு காயவைத்து எடுத்து அந்திக் கொன்று வெடிச்சிக் கொன்று திங்கவும். ஐந்து நாள் திங்கவும். பசி தாபமெடுக்கும்.

பாம்பு கடிச்ச மாட்டுக்கு நசியம் :- *Not useful*

வசம்பு, மிளகு, உப்பு, வெத்திலை எருக்கம் பூ, குப்பை மேனி பாச்சாங் கொழுந்து இது வெல்லாம் நருக்கி சிறுநீரில் நசியம் விடவும்.

பாம்பு கடியாமல் வாய் கட்டு பாம்புக்கு வாகடம் :-

செவ்வாய்க் கிழமையாகுதல் வெள்ளிக் கிழமை யாகுதல் முதல் நாள் காப்புக் கட்டி கோவைக் கிழங்கு வடக்கே போற வேர் பிடுங்கி வெள்ளி செம்பில் சுத்தி பண்ணி கையிலிருக்க பாம்பு கடியாது. வாய்க் கட்டு. முருக்கெருக்கிலை தும்பை துளசியும் நருக்கி உப்புடன் நாசியில் விட்டு பெருக்கவும். வேண்மொ பேதை மனிதர்கள் யிருக்கிற விஷங்கள் யில்லை யென்றோடுமே.

சுக்கொடு குப்பை மேனி சூழ் பெருங்காயம் உள்ளி மிக்கதோர், வசம்பு உப்பும் ~~மென் வயி~~ மெய் வலி நீரில் மூக்கில் பக்கமே கொண்டு சொல்லப் பாம்பின் வாய்ப் பட்டாரெல்லாம் அக்கணம் விஷமுந் தீர்ந்து அவரெழுந்திருப்பார் தாமே.

அமுக்கிறுக் கற்பம் :-

காயம் காயம் அரிதாரம் கலைவாய் பூதாம இந்துப்பு பேயன் பேயன் தண்ணீருடனே பேணி அரைத்து குழம்பு செய்து மாய கலத்தில் புறந்தேய்த்து மாண்டார் கண்ணிலிடுவீராய் காலனில்லை விஷந் தீரும் கிருதி காணுங் கை மேலே.

மண்ணைும் வேந்தன் மலையில் வயிரவன்
ஒன்றும் சோத்து முதிரைவுடையவன் கையிதை
கண்ணில் மூக்கில் செவியில் புழிந்திட
விண்ணில் போன விஷங்களும் மீளுமே.

அமுக்கிற சமூலம் வஸ்திர காயம் செய்து வைத்துக் கொண்டு பசுவின் நெய்யில் கொள்ள உடம்பு பருக்குந் தேனில் கொள்ள உடம்பு யிளைக்கும். ஆவின் சலத்தில் கொள்ள எலி கடி தீரும். இத்துடன் திப்பிலிப் பொடி கூட்டிக் கொள்ள இருமல் தீரும். எருமை மோரில் கொள்ள பித்த பாண்டு ரோகந் தீரும். வேப்பெண்ணையில் பூச தேள் மீளும். வெள்ளாட்டு சலத்தில் கொள்ள சோகை தீரும். நல்லெண்ணையில் நல்ல வெல்லம் கூட்டித் தின்ன பெரும்பாடு தீரும். வெந்நீரில் குடித்து மேலுக்கு பூச கடியன் கடி தீரும். எருமைக் கோமியத்தில் உள்ளுக்குக் கொண்டு மேலுக்கு பூச செய்யான் கடி தீரும்.

பாம்புக்கு வாகடம் : விரியன் பாம்பு கடிக்கு :- *Not useful*

அஞ்சு ஆறு எழுக்கு அரிய யிலுப்பை பழங் கொட்டை தஞ்ச வருத்து அயிரியினை சுவர செய்து சுரி குாலி பஞ்சாட்டி பதமாக்கி பதையார் மூக்கில் விடுவீராய் நஞ்சுமில்லை விஷமு மில்லை நமனும் வந்து அணுகாரே.

பங்கம் பாளை புங்கம் வேர், பருத்த சாட்டறணை இந்துப்பு, சிங்க பெருமாள் மூலியுடன் சீலிய சுக்கு பெருங்காயம் அங்கத்து நீர்து வார்த்து அரைத்துக் கரைத்து குடிப்பீராய் சங்கு கடியாற் தம்மானை சாகா விரியன் கடித்தாலே யிந்திர கோபம் பச்சை பாம்புளிலார சேந்தைதெழு பூசகம் அந்தமாம் அறுபுள்ளி ஆயிரங் காலி யிவை கூட்டி கொந்தால் குழலி பொடி செய்து குழலில் அடைத்து மூக்குத வெந்த பிறமு மெழுந்திருக்கும்.

~~பின்னை உண்டாக :-~~

<u>பிள்ளை உண்டாக</u>:-

Not useful

தோடக முதிய சீந்தி தொல் புதிபிரமி பாகல்
ஆடிய கழல்கள் தாசம் அனேக நாள் குரிஞ்சி கூலை
கூடிய சாறு கொண்டு மூடிமுள் குடிப்பீராகில்
பேடியும் பிள்ளையுண்டாம் பிராயமும் மூதகோரார்மே.

சென்னியுருவி சிறுபீளை தேவதாரி திமுர்தாரி, தின்னை பச்சை கற்பரம் சேரும் புழுகு தேனுடனேமுன்னே லிங்கம் தனில் பூசி மோகமுடனே சேர்வீராய் பின்னே வருவாள் பேய் போலே பெருமாளானை சத்தியமே.

<u>வாத கரப்பானுக்கு வாகட மருந்து</u>:-

தலையும் கறுத்து குரல் கம்மி தறு காலடம்பு திமு முண்டாய் முலையுங் காலும் வீக்கமுமாய் இளையாதிருக்கும் உயிர் வத்தும். அலை சடுதியில் மீளாது வலுவை கரைத்து வறண்டு வரும். குலையுஞ் செரியாக் குணங் கோடில் வாத கரப்பானிதுவாமே.

சந்து தான் முளி பெருத்து தானங்கள் வூளைந்து வீங்கி வந்து தான் பிணம் போல் தார்து வருந்தியே யிந்து வாக்கும் நொந்து தான் தீம் போல நோவுடன் வெதுப்பு தோணு(லை)ம் இந்த நோய் வரிலோ வாத கரப்பானென்றறியலாமே.

உடம்பெல்லாம் வெதுப்பு நொந்து உளைந்து கால் கைகள் சந்தும்
அடங்கலும் சுரந்து வீங்கி அவத்தைகள் மிகுதி ஆகில்
முடங்கவே வறண்டு தான முத்தியே வெடித்துப் பின்னும்
மிடங்களால் கரப்பான் வாதமென்றியம்புலாமே.

யிந்த மந்திருக்கும் போது யீந்து கால் அசந்து சந்து
வருந்தவே திமித்து மயங்கியே பரித்திடியில் வெடித்து புண்மை
திகத்திய அங்கந் தானும் திம்புமாய் பொருமுமாகில்
வருந்து மிக் குணங்கள் கண்டால் வாதமாம் கரப்பனுமே.

சத்தி சாரணை, மிளகு(சிறு) சிறு குறிஞ்சா பெரு மருந்து நன்னாரி பெரு காவாளை நாவளை சடைச்சீ சிவ்தை, சிறுவழுதலை, கண்டங் கத்திரி, சித்தாவரை, சிறு குரோட்டை, சீந்தி அப்பை, புற்று மணி, இவை வேர்கள் வகைக்கு கரு பலம் கூட்டி நறுக்கி பதக்கு நீரில் நாலொன்றாய்க் காய்ச்சி அதிசுரத்தை சதகுப்பை இந்துப்பு பூத கரப்பான் பட்டை, உள்ளி வசம்பு, கடுகு இது வகைக்கெல்லாங் கூட்டி உள் சலம் விட்டரைத்து நொச்சி சங்கு சங்கங் குப்பி குப்பை மேனி மணத்தக்காளி சாறு ஒரு படி விளக்கெண்ணை ஒரு பங்கு இது வெல்லாங் கூட்டி எரித்து வடித்துக் கொண்டு இரண்டு காசிடை எண்ணை உள்ளுக்கு கொடுக்கவும். மேலுக்குப் பூசவும் போம். சகல கரப்பானும் போம்.

<u>முறுவு பிளவைக்கு</u>:-

கள்ளி வேர்ப் பட்டை, நறுக்கிப் போட்டு, கழுதைாட்டுப் பால் விட்டு வேக வைத்து, உள்ளி வசம்பு நறுக்கிப் போட்டு வேக வைத்து நல்லெண்ணை விட்டு ஆக்கி யிறுத்துக் கொண்டு மேலுக்கு தடவி உள்ளுக்கு குடிக்கவும். துளசியிலை சுண்டையிலை பாலை யிலை பொரி சீலை முக்குருந்தை யிலை முள்ளி யிலை பொடுதலை வட்டங் கிலுகிலுப்பை யிலை இதெல்லாம் சமன் கொண்டு வந்து அவைத்து பானையில் வைத்துக் கொண்டு புண்ணுக்கு கட்டும் போது சிறுநீர் வார்த்து வைத்துக் கட்டப் புண்ணு வாய் (ஆறி)சி முளி மெலின பிறகு இதுக்கு எண்ணை விளக்கெண்ணை நல்லெண்ணை புங்கெண்ணை வேப்பெண்ணை நாலுங் கூட்டி இதில் கடை சரக்கு வெம்பாட பட்டை, திப்பிலி, திப்பிலி மூலம் வாய்விளங்கம், கொத்த மல்லி அரத்தை சிறுநாகப்ப, சமுத்திரப் பழம், காசுக் கட்டி, கடுக்காய் இது வெல்லாம் சமனாக கூட்டி தானிக்காய் பலம் போட்டு வரவும். இதுக்குத் தீரும் வியாமி முதுகு பிளவை பக்கப் பிளவை ராச பிளவை பரிச்ச கண் பீனிச்சை இது வெல்லாம் ஆ(கு)ம். இதுக்கு பத்தியம் உப்பு ஆகும். உப்புக் கண்டம் இந்கொலி, முருங்கைக்காய், சுவரைப் பருப்பு

பால், நெய் ஆகும்.

கண்டமாலை முதலான நோவுக்கு :-

பேய்ப் பீர்க்கன் விரை படி. உ, சுத்தம் காசிடை, தாரிசி காசிடை, நாவி காசிடை வெள்ளைப் பாசானம் காசிடை, கெவுரி பாஷாணம் காசிடை இந்த ஆறு வகையும் பொடி செய்து அரைப்படி வேப்பெண்ணெயில் கலந்து எரித்து மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு மோருஞ் சோறுங் குடித்து புண் கண்ட விட மெல்லாம் பசவும். சாயங்காலம் எருமை சாணி யாவது இலுப்பைப் புண்ணாக்காவது இட்டு முழுகவும். இதுக்கு தீரும் வியாதி எரிகண்டமாலை, சரகண்டமாலை, அரி கண்டமாலை, எலி கடி, புலி கடி, மூஞ்சூறு கடி அரணை கடி காணங் கடி, செவ்வட்டை கடி பொரி வண்டு கடி எரி வண்டு கடி நீர் வண்டு கடி செய்யான் கடி மண்டைக் கரப்பான் அழி குட்டம், குருங் குட்டம், கருங் குட்டம், வெண் குட்டம் முதலான வியாதி முதலான வியாதியுந் தீரும். ~~[illegible]~~

பெரும் வியாதிக்கு நசியம் :-

தேங்காய் நெய்யில் மாதளம் பூப் போட்டு எரித்து நசியமிடவுந் தீரும். ஆயிலம் பட்டை வெள்ளறுகு மாதளம் பூ மாவிலிங்கம் பட்டை இது நாலும் சமஎடை சூரணம் பண்ணி பசுவின் நெய்யிலெரித்து நாசியில் நசியம் பண்ணவும். பெரும் வியாதி தீரும்.

செவ்வட்டை கடிக்கு மருந்து : பொரி வண்டு கடிக்கு :-

சிறுகுறட்டை வேர், வட்டத் திருப்பி வேர், ஈர வெங்காயம், வெள்ளைப் பூண்டு இது வெல்லாம் வகைக்கு ஒரு படி அரைத்து அப்ப ஆக்கின விளக்கெண்ணெய் ஒருபடியில் ஆக்கி மேலுக்கு பூசி உள்ளுக்கு நக்கவும். இப்படி இரண்டு நாள் கொள்ள மூன்று நாள் தலை முழுகி உடனே சவளையிட இப்படி மூன்று முறை இட்டவ தீரும்.

வெளாம்பட்டை, எருக்கம் பட்டை எட்டி சமூலம் இது போட்டுக் கலந்து வைத்துக் கொண்டு தினம் காசிடை கொள்ளவும். இந்தப் படி எட்டு நாள் கொள்ளவும். செவ்வட்டை கடிதீரும். பேய்ப் பீர்க்கம் விரை காசிடை கும்முட்டிக்காய் சாறு ஊமத்தங்காய் சாறு மஞ்சி சாறு வெள் வெங்காயம், குப்பை மேனிச் சாறு வசம்பு, வெண்ணெயில் முன் மருந்தெல்லாம் கூட்டி சூரிய புடம் வைத்துக் கோழி இறகில் பூசவும். பொரி வண்டு கடி தீரும்.

~~பழையங் கோவைக் கிழங்கு அப்பைக்~~

மாந்தவாலுக்கு நெய் :-

பழையங் கோவைக் கிழங்கு, அப்பைக் கிழங்கு, மணத்தக்காளிச் சாறு, கோவைக் கிழங்கு ஆகாசக் கெருடன் கிழங்கு வசம்பு ஒருக் கொட்டை பூண்டு மிளகு இதுவெல்லாம் பசு வெண்ணெயிலெரித்து கோவையிலையில் தடவி போடவும் ஆகும்.

கெற்ப விப்புருதிக்கு: ~~கெற்ப விப்புருதிக்கு~~ :-

அக்கிலாக் காரம் விராகனிடை. உ, வெங்காரம் விராகனிடை. உ, சவுக்காரம் விராகனிடை. உ இதை சூரணம் செய்து வெண்ணெயிலாகுதல் கருப்புக் கட்டியிலாகுதல் கொடுக்கவும். வயறு மெத்த நோகும். வாந்திக்கும். வயறு உடைந்து சீ வாய் விழும். இதுக்கு பேரிச்சங் கஞ்சி கொடுக்கவும்.

வயத்துப் புண் ஆற மருந்து :-

பொருமித் திரண்டு கீழ் வயற்றில் புண் பட்டருந்தம வாக்கும் மருவிப் பளகியிருந் தாக்கால் மயக்கம் செய்வது மாறாது உருவிப் புளிதல் போல் மேனி உளைந்து திரண்டு ஒடுப் பாயும். கருவேக் கெடுமெ மட நல்லீர் கருதுங் கெற்ப ரோகமிதே.

திரண்டே விருகை உருண்டு வரும் தீராச் சலமும் பிரிந்து விடும்
வறண்டே உடம்பு வத்தி விடும் வயறுங் கெட்டுத் தாறக்கும்
திறண்ட தனத்து மட நல்லீர் தீராக் கெற்ப விப்புருதி உ
உருண்டு விருகை உள்மூலம் முளையுங் கெற்ப ரோகமிதே.

மிளகு இரு கழஞ்சு வாய்விளங்கம் விராக கருப்புக் கட்டி இதெல்லாம் காயமாய் பண்ணி நெய்யிலாகுதல் நல்லெண்ணெயிலாகுதல் கூட்டிக் கொடுக்கவும்.

பிளவைக்கு குணம் வாகடம்:-

நாணல்த்திப் பட்டையை மிளக அரைத்து இளநீரில் கொடுக்கவும். புளியரணைக் கிழங்கு மாவுடனே யிடித்து மோருடனே குழாக்கி தின்னத் தீரும். வெற்புடன் குத்த மூச்சு விடாத லையுள்ளதே. சோபம் தப்பிட நாவறச்சி கறு திடதத்தத்தின் வாட்டை, முப்புரத்தி கனன்பே முறை யிதில் வியர்தி தாவும் இப்படிக் குணங்களெல்லா மிருவி கண்ப் பிளவையாமே.

பக்கப் பிளவையின் குணம்:-

மார்பினில் விரல்கள் தன்னில் மயப்படா தென்று போலே
நேர் செம்மையாகப் பெருகுதல் வாய் நெஞ்சில்
கார் செறி குழலினுளே கருவிப் பாற் கீறி ரக்கா மோர்
மேற் படவே சட்ட பக்க பிளவை விட்டோடி போமே.

முதலில் பத்தி அரை போலே முள்ளந் தண்டில் தனை தப்பில் தவே வருகிற மரணமில்லை யென்கில் கண்ணில் படுமென்ற அதிலே பேணி குளிருகும் தவனம் முளலை களிச்சலுடன் யிது தான் பக்க பிளவை யிற யினி தாங்கார கிரியிடே.

தரிசு பாசாணம் தறியாதளவு குறையாமல் சோப் பொடியா பசு வெண்ணெயுடன் திரும்ப வரைத்து சீலை தன்னில் ஆரத் தடவி அட சீலை அங்கு தள்ளி புண்ணிலிட்டு காரம் பகைத்து நாலும் யிரத்திர பிரிந்திடும் தயிரும் சேறும் பிசைந்தவை வாங்கி அரிந்து வைத்து மாக் கட்டி அவிழ்த்து மேற் பார்க்கப் பின்னை செரிந்திடும் என்னை வைக்கச் சிக்க யிந்திரியம் முரிஞ் வர்க்கு இதுக்கு பேரீச்சம் பழஞ் சாயனம்:-

ஆவாரை வேர் நாழி ஒப்புடன் ஆடரி பூலா வேர் வொன்ற கன பின்னை பாதி யிப்பெருந் நாத்தி நொக்க இரண்டியும் ஒருப் பதாக்கை யிப்பு வெண் பாடல் கூட்டிக் கலக்கு என்னவையே.

என்னையுஞ் சீலை காணும் மிடை விடாப் பகலைக் தாற்கும் நத்ஹூமாம் பிளவை புண்ணே. உம்மையாலுரைக்க முன்னேரு பதியால் கண்டதாமே கண்டதோர் கரி நெரி நெய் பால் கருத்தினில் நினைத்த தெல்லாம் கொண்டிடக் கூத்த மென்ற கூறினர் தேவனுர் பெரியோர் முன்னம் விண்டிடா யீரந் கர்யம் விரும்பிய முருங்கைப் பிஞ்சு பண்டுதான் பழகு மோர் பத்தியந் தயிருமாமே.

பேரீச்சம் பழம் இரண்டு, நீர் முள்ளி விரை பலம்.க, மயிதால் சிட்டி விராகனிடை.ங, விசுஞ் கெலு விராகனிடை.ங, சி லவங்கப் பட்டை விராகனிடை.ங, வெள்ளை சாம்பிருணி பலக்கு விராகனிடை.ங, சாதிக்காய் விராகனிடை.ங, சாதிபத்திரி விராகனிடை.ங லவங்கம் விராகனிடை.உ, ஏலரிசி விராகனிடை.உ சுக்கு விராகனிடை.உ திராக்ஷபழம் விராகனிடை.உ இவை யெல்லாம் பொடி செய்து முன் பழந் தொட்டையை வாங்கிப் போட்டு பெடி யிரப்பி கோதிமை அரிசி அரைப்படி இடிச்சு மாவாக்கி பிசைஞ்சு பழம் பழம் மூடி உருண்டை யிடிச்சு பசுவின் நெய் இரண்டு சேர் கொண்டு வந்து பணியாரஞ் சுட்டு இரண்டு படி தேன் நெய்யில் ஊறப் போட்டு ஒரு மண்டலஞ் சாதிக்கவும். சகல மேகமுந் தீரும். இதுக்கு இச்சா பத்தியம் ஆன புளி விடவும். இத் கை கண்டது.

காஞ்சி பவு இலை நாள் விராகனிடை.உ, பறங்கிப் பட்டை விராகனிடை.உ, பசுவின் பாலிலே பேரீச்சம் பழம். சேர் .உ பழத்தை ஊறப் போட்டு கொட்டை வாங்கிப் போட்டு சூரணத்தை ரெப்பி சுடவும்.

கண் புகைச்சல் தெரியாதவர்க்கு தயிலம்:-

நெல்லிக்காய் இரண்டு படி கொண்டு வந்து அவைச்சு பெரிய பானையில் போட்டு வள்ளத் தண்ணீர் விட்டு கசாயம் காய்ச்சி இரண்டு படியா இறக்கி பிசைந்து கொட்டை எடுத்து போட்டு அதிலே பசுவின் பால் ஒரு படி கரிசிலாங் கண்ணி சாறு ஒரு படி பொன்னாங்கண்ணி

சாறு ஒரு படி அவரி யிலை சாறு ஒரு படி செம்பருத்தியிலை சாறு படி , வல்லாரை யிலைச் சாறு படி. சித்தர்மணக்கு எண்ணை சேர், பசுவின் நெய் சேர் நல்லெண்ணை சேர் இந்த வகையெல்லாம் நெல்லிக் கசாயத்தில் கலந்து கையிட்டுக் கலக்கி அடுப்பு மேல் வைத்து விராலி விறகு எரிய விட்டு அரை வாசிகண்ட விட்டு அதிலே சாம்பிராணி பலம். க வெட்டி வேர் பலம்: க, வாய்விளங்கம் விராகனிடை: உ; இந்த மூன்று வகையும் பொடி செய்து எண்ணையில் போட்டு எண்ணை பதத்துடனே ஆக்கி குடுவையிலே வார்த்து வைத்துக் கொண்டு எட்டு நாளைக்கு இரண்டு தரம் தலை முழுகினால் இதுக்கு தீரும் வியாதி கண் சிகப்பு; கண் நீர், கண் புகைச்சல் மாலைக் கண் தெரியாத கண் எண்பத்து நாலு வாய்வுந் தீரும்.

வாய்வுக்கு :-

நல்லெண்ணை ஒரு படி, கரிசிலாங் கண்ணி சாறு உழக்கு, தழுதாழை சாறு உழக்கு, வேளை யிலை சாறு உழக்கு, குப்பை மேனி சாறு உழக்கு தும்பை சாறு உழக்கு, சாட்டரணை சாறு உழக்கு, நொச்சிச் சாறு உழக்கு: மூக்கறட்டை யிலைச் சாறு உழக்கு, உத்தாமணி யிலைச் சாறு உழக்கு இலைக் கள்ளி சாறு படி. ½ கள்ளிப் பால் ஆழாக்கு எருக்கம் பால் ஆழாக்கு சதுரக் கள்ளிப் பால் ஆழாக்கு இந்த வகை சாறெல்லாம் எண்ணையில் வார்த்து கலக்கி அடுப்பு மேலே வைத்து கள்ளி விறகு கொண்டு வந்து எரிய விட்டு சாறெல்லாஞ் சுண்ட விட்டு அதிலே கடைச் சரக்கு கஸ்தூரி மஞ்சள் பலம். ½, மரமஞ்சள் பலம். ½ நல்ல மஞ்சள் பலம். ½, சித்திர மூலம் பலம். ½ செவியம் பலம். ½, தென்று பறங்கி பலம் ½ வசம்பு பலம். ½; மிளகு பலம். ½, அரத்தை பலம். ½, இந்தக் கடைச் சரக்கெல்லாம் பொடி செய்து முன் மருந்து எல்லாம் எண்ணையில் போட்டு கலக்கி சாறெல்லாம் சுண்ட விட்டு பதத்துடனே இறக்கி வைத்துக் கொண்டு உடம்புக்கு சுவளையிடவும். இதுக்குத் தீரும் வியாதி முழங்கால் வாய்வு, கணுக்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, சயித்திய வாய்வு இப்படிக் கொத்த எண்பது வாய்வும் தீரும்.

மேகத்துக்கு மேகுலாந்த கற சாயனம் :-

பறங்கிப் பட்டை சேர். க, திப்பிலி பலம். ½, மிளகு பலம்: ½ ஏலம் பலம். ½ லவங்கப் பட்டை பலம். க ½, லவங்கப் பத்திரி பலம். உ , நாகேசரம் பலம். க லவங்கம் பலம். உ சாதிக்காய் விராகனிடை. உ சாபத்திரி விராகனிடை. உ ஓமம் பலம். க குரோசானி ஓமம் பலம். க, சித்திரமூலம் பலம். ½ வாய்விளங்கம் பலம். ½ சீனப்பறங்கி பலம். ½ செவியம் பலம். ½ மோடி பலம். ½ கொத்தமல்லி பலம். ½, சீரகம் பலம். சடாமஞ்சி பலம். ½ செங்கல் கோஷ்டம். பலம். ½, அதிமதுரம் பலம். ½, வெட்டி வேர் பலம். ½ சுகந்த பாலை வேர் பலம். க, அமுக்கிறான் கிழங்கு பலம். ங, சர்க்கரை சேர் தேன் சேர். க, நெய் சேர். க இந்தக் கடைச் சரக்கெல்லாம் பொடி செய்து இந்த நெய் தேன் கலந்து அடுப்பு மேலே வைத்துக் காய்ச்சி அதிலே பொடியெல்லாம் போட்டு கலந்து கிளறி பதத்துடனே லேகம் பண்ணி இரண்டு சுண்டைக்காயளவு இரண்டு நேரம் சாப்பிடவும். இதுக்கு தீரும் வியாதி மேகம் முப்பத்திரண்டும். உஷ்ணமும் போம். இச்சா பத்தியம். [illegible] புளி விடவும்.

கிருணிக்கு மருந்து :- வீரிய விர்த்திக்கு மருந்து :-

மோடி விராகனிடை. ரு கொண்டு வந்து வெந்நீர் வார்த்து அரைச்சு ஆலக் கரண்டியில் போட்டு குப்பென்று அடுப்பு மேலே வைத்து காய்ச்சி இந்தப்படி ஏழு தரம் புடம் போட்டு ஏழு வாட்டி அரைத்து சுண்டைக்கா காயளவு இரண்டு நேரமுந் தின்னத் தீரும். இதுக்கு பத்தியம் துவரைப் பருப்பு ஆகும். பசுவின் பாலிலே நெல்லரிசி போட்டு பாகமாக்கி வாயி பாட்டு மேலே வாய் கட்டி அது மேலே சாதிக்காய் பலம். உ கொண்டு வந்து புட்டு இட்டு வைத்துக் கொண்டு ஒரு காய் பாலிலே அரைச்சு சாப்பிடவும். நூறு வாட்டியாகும். இது வீரிய சுத்தியாகும். ~~விளக்கெரியும் ஆன ஏதனக்கு~~ யிலந்துக்கு.

காதில் ஈ விழுந்தால் மருந்து :-

வாழைப் பழத்து மேலே எலுமிச்சம் பழஞ் சாறு தடவி விளக்கேத்தவும் எரியும்.

Not useful

அத்திப் பால் ஆலம் பால் சீலையிலுருட்டி வைச்சி திரி பண்ணி விளக்கேத்தவும். எரியும். சிவனார் கிழங்கு நிலைச்சன் பிள்ளை பெத்தவள் முலைப் பாலிலரைத்து தொப்புளுக்குள்ளே வைக்க வைக்க முலை ~~[illegible]~~ பெருக்கும். ஆரை சமூலம் பிடிங்கி வளையமாக சுத்தி கருப்பு நால் வெள்ளை நால் சிகப்பு நால் சுத்தி அதைப் பாயின் கீழே போடவும். இதுக்கு வீரியமில்லாதே யிருக்கும். வெள்ளை குண்டு மணிப் பருப்புக் கொண்டு வந்து நல்லெண்ணெயில் ஒரு பணவிடை வெங்காரம் பொரித்து எல்லாம் தேய்ச்சு பூசவும் விடாது. பச்சைக் கற்பூரம் கோரோசனம் பாக்கு உருட்டி கொடுக்கவும். பின் தொடருவாள். காதில் ஈ புந்தால் அதுக்கு நாசுவளைசாறு எண்ணெயில் காய்ச்சி காதில் விட்டால் ஈ செத்துப் போம்.

~~எலும்புருக்கி நோவுக்கு: மலட்டுப் பூச்சிக்கு மருந்து:-~~ 5.4.63.

உள்மூலத்துக்கு மருந்து:-

ஆவார விரையும் புழுங்கலரிசியும் மோர் வார்த்தரைத்து வேகவைத்து வைத்துக் கொண்டு காலமே மோரில் வார்த்து குடிக்கவும் தீரும். வியாதி எலும்புருக்கி, உள்ருருக்கி, உள்காச்சல், உஷ்ணந் தீரும்.

Not useful

மலட்டுப் பூச்சி சாக மருந்து:-

எருப் புழுக்கையும் வேப்பம் பருப்பும் தேன் வார்த்தரைத்து பூசிக் கொண்டு போகவும் புழு சாகும். பிள்ளை உண்டாம்.

அரிதாரம் குப்பை மேனி வேரும் இளநீரில் அரைத்து திலதமிட வருவாள்.

கோரோசனை திப்பிலியும் ஆனை நெருஞ்சியும் குப்பை மேனி வேரும் இது வெல்லாம் முலைப் பாலிலரைத்து குளிகை செய்து வைத்துக் கொண்டு திலதமிட வருவாள்.

மஞ்சளிலை பணவிடை.உ இலுப்பை புண்ணாக்கு கொட்டைப் பாக்களவு கொண்டு வந்து இரண்டும் கூட அரைத்து நாழி பசுவின் பாலில் கலத்திக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும் போகும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி விடவும்.

சிவைப் பட்டையும், கருப்பு நெல்லரிசியும் கொண்டு வந்து நல்லெண்ணை உழக்கு இடித்து கலக்கி தின்னவும் உள்மூலம் போம்.

Not required

அக்கினி கட்டுக்கு:-

பச்சைத் தவளை நெய் உழக்கு மண் திலூட்டி விராகனிடை.யஉ தேன் விராகனிடை ய பாவட்டை வேர் பறணை விராகனிடை.ய இது வெல்லாம் அந்த நெய்யிலே அரைத்து உள்ளங் காலில் எதிரிட்டு தேய்ச்சு நித்தம் நெருப்பில் நடக்கலாம்.

பேதி நிற்க மருந்து:-

கண்டங்கத்திரி வேர் கொண்டு வந்து கழுவிப் போட்டு உப்பு அரைத்து பசி செம்மண் துணி சுத்தி சுட்டு வெந்த பிறகு பட்டை வாங்கிக் கொண்டு அரச்சி கறண்டியில் போட்டு புடம் பண்ணி நாலு வாட்டி புடம் பண்ணி அதிலே சாதிக்காய் விராகனிடை.க, சாபத்திரி விராகனிடை.க, லவங்கம் விராகனிடை. , மோடி விராகனிடை.உ, ஓமம் விராகனிடை. க, மிளகு விராகனிடை.க, இலை மருந்து விராகனிடை. வெள்ள வெங்காயம் விராகனிடை.ங, இலவம் பிசின் விராகனிடை.க இது வெல்லாம் பொடி செய்து கூட அச்சி சுண்டக்காயளவு உருண்டை செய்து காலமே ஒரு உருண்டை பக்ஷிக்கவும். குருச் கழிச்சல் நிற்கும்.

வயிறு கழிச்சலுக்கு கிரானிக்கு மருந்து:-

கரியாப் பாலையை அரைத்து வெண்ணெயில் கலப்பி சட்டியைக் காய வைத்து அதிலே போட்டு பொங்கின பேருக்கு அதிலே பசுவின் மோர் கால் படி வார்த்து கலக்கி மூன்று நாள் குடிக்கவும் வயிறு கழிச்சல் நிற்கும்.

வெள்ளை வெங்காயப் பருப்பிலே முளையை வாங்கிப் போட்டு அதை ஆலக் கறண்டியில் போட்டு அதிலே நல்லெண்ணெ விட்டு அதிலே ஓமம் விராகனிடை.ய, மிளகு இரண்டை

பொடி செய்து வெங்காயத்தில் கலந்து வறுக்க தின்னவும். இந்தப்படி மூன்று நாள் சாப்பிட வும். வயிறு கழிச்சல் நிற்கும்.

சாதிக்காய் விராகனிடை. 1/2, சாதிபத்திரி விராகனிடை. 1/2, லவங்கம் விராகனிடை 1/2, அக்கலாக் கார்ம் விராகனிடை. உ செங்கல் கோஷ்டம் விராகனிடை. உ, அசமதாகம் விராகனிடை. உ குரோசாணி ஓமம் விராகனிடை. உ கொலிசப் பாலை வேர் விராகனிடை. உ அபினி மருந்து விராகனிடை. 1/2, கொப்பரைத் தேங்காய் விராகனிடை. ய் அதிலே பாதி முத்தின தேங்காய் சுட்டு இரண்டையும் அரைச்சு அதிலே கடைச் சரக்கெல்லாம் அரிச்சிப் போட்டு செய்து பழைய நல்ல வெல்லம் ஒரு பலம் கொண்டு வந்து சட்டியில் போட்டு பிறகு பாகு காய்ச்சி அதிலே பொடியைப் போட்டுக் கிளறி அம்மியில் வைத்து அரைச்சு சாந்து பதமானால் சுண்டைக் காயளவு உருண்டை பண்ணி காலமே ஒன்று சாயங்காலம் ஒன்று சாப்பிடவும் இந்தப் படி மூன்று நாள் சாப்பிடவும். தீராத கிறுணி தீரும். இதுக்கு பத்தியம் துவரை ஆகும். பருப்பு மோரும் ஆகும்.

<u>குழலு உப்புசத்துக்கு மருந்து :-</u>

எருக்கன் பூவு பிடி அரும்பு கொண்டு வந்து அதிலே கடைச் சரக்கு மிளகு விராகனிடை உ லவங்கம் விராகனிடை. உ யிஞ்சி பலம். க இதுவெல்லாம் கல்லுமேலே வைத்து அரைச்சு அவரை பிரமாணம் குளிகை செய்து காலமே க அந்திக்கு க சாப்பிடவும். இந்தப் படி மண்ட லம் சாப்பிடவும். இதுக்கு அனலானால் மோரு ஆகும். நெய் ஆகும். இதுக்கு தீரும் வியாதி உப்பு சம் கூறலு சீதம் இருமல் தீரும்.

<u>கூறலுக்கு உப்புசம் இருமலுக்கு மருந்து :-</u>

சதிரக் கள்ளிப் பால் படி: கொண்டு வந்து ஒரு மொந்தை செப்பிலே வைத்து அதிலே மிளகு பலம். உ லவங்கம் பலம். 1/2, இந்தக் கடைச் சரக்கு இரண்டையும் அந்தப் பாலிலே ஊறப் போட்டு மத்தா நாள் எடுத்து உலரப் போட்டு இந்தப் படி மூன்று வாட்டி பாலிலே ஊற வைத்து மூன்று வாட்டி உலரப் போட்டு அந்த மொந்தை செப்பிலே அரைப்படி பால் வார்த்து உலர்ந்த கடைச் சரக்கைப் பாலிலே போட்டு அந்த மொந்தை செப்புக்கு வில்லை சரி செய்து வாய் பாட்டுக்கு மூடி சீலை மண் செய்து ஊற வைத்து அடுப்பு முன்ன முழக் குழி வெட்டி புதைத்து மண் மூடி ஆர்த்து ஒரு மண்டலம் போன பிறகு எடுத்து உலர வைத்து வைத்துக் கொண்டு காலமே இரண்டு சாப்பிடவும். அந்திக்கு ஒரு லவங்கம் சாப்பிடவும். இந்தப் படி அரை மண்டலம் சாப்பிடவும். இதுக்கு தீரும் வியாதி பிள்ளைகள் உப்புசம், கூறல்க் குறண்டு மிளகு கொடுக்கவும். மத்தா நாள் ராதி பாதி லவங்கம் கொடுக்கவும். பெரி யோருக்கு இரண்டு மிளகு திங்கவும். மத்தா நாள் ஒரு லவங்கம் திங்கவும். கூரல் உப்புசம் இருமல் க்ஷயம், காசி தீராத ரோகமுந் தீரும். இது கை கண்டது. இதுக்கு பத்தியம் இச்சா பத்தியம்..

<u>ஆசன கண்ட மாலைக்கு மருந்து : புண்ணுக்கு மருந்து :-</u>

மூக்கறட்டை இலையைக் கொண்டு வந்து இடிச்சு உழக்கு சாறு பிழிந்து அதிலே கறண்டி நல்லெண்ணையை விட்டுக் குடிக்கவும். அரை மண்டலம் சாதிக்கவும். இதுக்கு தீரும் வியாதி ஆசன கண்டமாலை வாய்வு இடுப்பு நோவு தீரும். இதுக்கு இச்சா பத்தியம்..

புங்கெண்ணை உழக்கு, வேப்பெண்ணை ஆழாக்கு நல்லெண்ணை உழக்கு சின்ன சட்டியிலே கொண்டு வந்து வைத்துக் கொண்டு மயில் துத்தி விராகனிடை. உ பால் துத்தி விராகனிடை. உ சங்கால பக்ஷி விராகனிடை. க முறுதாறுசிங்கி விராகனிடை. க, மனிசெலை விராகனிடை. க, யிங்கிலிக்கம் விராகனிடை. க, ரசம் விராகனிடை. க முரிக்கிறது கருப்பு மருந்து கந்தகம் விரா கனிடை. க, ரகத்தகமணி சிலை விராகனிடை. க இந்தக் கடைச் சரக்கெல்லாம் பொடி செய்து முழத் துணியிலே பொடி பரப்பி பச்சை கள்ளிக் கழி கொண்டு வந்து அந்த துணி மருந் தைச் சுத்தி எண்ணை தோய்ச்சு எரிய விட்டு அந்த சட்டியிலே எண்ணை கறண்டியிலே எடுத்து வார்த்துக் கொண்டு வரவும். அந்த மருந்து நீல வர்ணமாயித்து விழும். வெந்த பிறகு சட்டி யிலே போட்டு அதுக்கு மஞ்சள் பலம். க, கரு ஊமத்தைக்காய் மூன்று, களிப்பாக்கு எட்டு

காசுக் கட்டி விராகனிடை. , கடுக்காய் நாலு இதை யெல்லாம் சுட்டு கருக்கு பண்ணி அரைச்சு பொடி செய்து அந்த எண்ணையிலே போட்டு பின்னையும் வெள்ளைக் குங்கிலியம் பலம். , புளியம் பட்டை விராகனிடை.ங, அரிசிப் பொடி செய்து போட்டு அந்த சட்டியிலே சதிரக் கள்ளி பால் கறண்டி விட்டு எல்லாம் கலக்கி அடுப்பு மேலே வைத்து இறக்கி வைத்துக் கொண்டு கோழி இறகு போட்டு புண் கண்ட விடமெல்லாம் தடவத் தீரும்.

வியாதி கண்ட மாலை, அரையாப்பு, ராச புண்ணு, சிலந்தி சிரங்குகளெல்லாம் சகலமான புண்ணுகளெல்லாம் தீரும்.

கூரல் உப்புசத்துக்கு மருந்து :-

அரத்தை பலம்.க, திப்பிலி விராகனிடை.உ கொடிசி பாலை விரை விராகனிடை.உ வலம்புரிக்காய் விராகனிடை.ங, அக்கலாக் காரம் விராகனிடை.க செங்கல் கோஷ்டம் விராகனிடை.க, அசமதாகம் விராகனிடை.க குரோசானி ஓமம் விராகனிடை.க, சுக்கு செக்கை விராகனிடை.உ, சயிந்த லவணம் விராகனிடை.க காஞ்சி லவணம் விராகனிடை.ரு. கல்லுப்பு விராகனிடை.உ, சுண்ணாம்பு அரைப் படி கல்லுக் கொண்டு வந்து மஞ்சள் பலம்.ரு போட்டு வேக வைத்து அந்த மஞ்சள் எடுத்து கழுவிப் போட்டு ஊற வைத்து அந்த கடைச் சரக்கு*காசுக்*கு* மஞ்சள் எல்லாம் பொடி பண்ணி அதிலே முள்ளு சுண்டைக்காய் பழம் ரசம் உழக்கு. கரிசிலாங்கண்ணி சாறு உழக்கு, உத்தாமணிச் சாறு உழக்கு, ஒன்னமுருள்ளி சாறு உழக்கு இந்த சாறு ஒருவகை அரைத்து இந்தப்படி நாலு வகைச் சாறும் அரைத்து சுண்டைக்காயளவு உருண்டை பண்ணி காலமே ஒன்று அந்திக்கு ஒன்று சாப்பிடவும். இதுக்கு தீரும் வியாதி கூறலு உப்புசம் இருமல் க்ஷயகாசி சீத்தம் வாய்வு இப்படிக் கொத்த சகலமான ரோகமுந் தீரும். இதுக்கு துவரைப் பருப்பு பசுவின் மோர், நெய் உப்பு ஆகும். புளி சேர்ந்த பண்டம் ஆகாது.

புண்ணுக்கு மருந்து :-

பால் துத்தம் விராகனிடை.உ மயில் துத்தம் விராகனிடை.ங, சங்கால பகுசி விராகனிடை.க முடதாற் சிங்கி விராகனிடை.க இது வெல்லாம் பொடி செய்து கலந்து மேலே போட்டு போட்டு வெற்றிலைச் சாறு பிழிஞ்சு செம்பு வைத்து யெழுத்து பருத்தி யிலைச் சாறு யெழுத்து அவரை யிலைச் சாறு யிழத்து துளசி சாறு யிழத்து தவிசி முருங்கை யிலை சாறு யிழத்து கறண்டியிலை சாறு யெழுத்து கருமத்தை யிலை சாறு யெழுத்து மனத்தக்காளி யிலை சாறு யெழுத்து கரிசிலாங் கண்ணி சாறு யிழைத்து கோவ கள்ளி பழத்தை வதக்கி பிழிஞ்சு சாறு யிழைத்து சிறுகீரை யிலைச் சாறு யிழைத்து உத்தாமணியிலை சாறு யிழைத்து குப்பை மேனி யிலைச் சாறு யிழைத்து அமுக்கிரான் கிழங்கு யிலை சாறு யிழைத்து பொதலை சாறு யிழைத்து வட்டக் கிலு கிலுப்பை யிலைச் சாறு யிழத்து நெரிஞ்சி முள்ளி யிலை சாறு யிழைத்து கொட்டை கிரந்தி யிலைச் சாறு யிழத்து பாகயிலை சாறு யெழுத்து பொடுதலை சாறு யெழுத்து தும்பை யிலைச் சாறு யெழுத்து கோவையிலைச் சாறு யெழுத்து இந்தப் படி ஒரு நாளைக்கு மூன்று வகை சாறு புழிஞ்சி யெழுத்து இந்தப்படி சாறு எல்லாம் யிழைத்து எடுக்கிறபோது எலுமிச்சம் பழச் சாறு மூன்று தரம் யிழைத்து அதிலே மாங்காய் பருமம் வெண்ணை போட்டு யிழைத்து பரணியில் வைத்துக் கொண்டு புண் கண்ட இடமெலலாம் தடவ நாள் பட்ட புண்ணும் யெல்லா மாறும். கை கண்டது.

சுருதிப் பவரசம் குளிகை சூரியப் பவுத்திர குளிகை :-

ரசம், கெந்தகம், நாபி, சுத்தி சிறுகீரை வேர்கள் கொண்டு வந்து சட்டியிலே போட்டு வள்ளம் தண்ணீர் விட்டு காய்ச்சி அதிலே நாபி போட்டு மேலே மூடி சாமம் வேக விட்டு சுத்தி செய்த நாபி யெடுத்துக் கொண்டு மூன்று பணவிடை போடுகிறது. இது நாபி சுத்தி. பண்ணுகிறது.

ரசம் சுத்தி ஆடு தின்னாப் பாளை சமூலம் கொண்டு வந்து கொட்டங்கச்சியிலே சாறு பிழிஞ்சு அதிலே ரசம் விட்டு முறிக்கிறது. முறிச்சு பசுப்பம் விராகனிடை.க போடுகிறது.

நெல்லிக்காய் கெந்தகம் சுத்தி அகலிலே வைத்து காய்ச்சினது தயிலம் மேலாக மிதத்துக் கொண்டது தயிலம் விராகனிடை.க போடுகிறது. கெந்தகம் சுத்தி தயிலம் ரசம், சுத்தி

கெந்தகம் சுத்தி நாபி சுத்தி:-

ரசம் விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க நாபி பணவிடை.ங, சுக்கு விராகனிடை.ங, திப்பிலி விராகனிடை.ங, கடுக்காய் விராகனிடை.ங, தானிக்காய் விராகனிடை.ங, சாதிக்காய் விராகனிடை.உ சர்பத்திரி விராகனிடை.உ குரோசானி விராகனிடை.உ செவியம் விராகனிடை.உ, சித்திரமூலம் விராகனிடை.உ, கடுகுரோகணி விராகனிடை.உ, அரத்தை விராகனிடை.உ, வாய்விளங்கம் விராகனிடை.உ, கொத்தமல்லிகை விராகனிடை.உ ரேணுவிரை விராகனிடை.உ கோரை கிழங்கு விராகனிடை.உ யேல அரிசி விராகனிடை.உ இது வெல்லாம் கூட்டி இடித்து வஸ்திர காயம் செய்து தாம்பர பற்பம் விராகனிடை.உ சூரணத்திலே கலந்து அந்த சூரணத்திலே இரண்டு ?க்கம் பனவெல்லம் பழைய வெல்லம் இபாட்டு இடித்து கடலைப் பிரமாணம் குளிகை செய்து சின்ன கலையத்திலே போட்டு வில்லை வைத்து மூடி சீலை மண் செய்து தானிய புடம் ஆறு மாதம் வைத்து எடுத்துக் கொண்டு அதுக்கு அனுபானம் கொடுக்கிறது வென்னீர் தண்ணீரில் ஒரு மாத்திரை கொடுக்கவும். இதுக்கு தீரும் ?* வியாதி பத்து வருஷத்து தீராத சுரமுந் தீரும், சுவாசம், காசி ரோகம், க்ஷயம், இருமல், சங்கிடு, கிறாணி வயறு குலை மூத்திர ஜலம் அவசுரம் சன்னி பாகம் பதிமூன்று வகை சன்னியும் சர்வ தோஷமுந் தீரும். வென்னீர் தண்ணீரிலே கொடுத்தால் பித்தம் அரமகழுணியிலே கொடுத்தால் வாயு தீரும். மோருலே கொடுத்தால் வறச்சி புண்ணு கிரந்தி தீரும். தயிருலே கொடுத்தால் ~~[illegible]~~வயிற்று குன்மம் தீரும். பாலிலே கொடுத்தால் அஷ்ட ?ஷ்டமுந் தீரும். சர்க்கரை கசாயத்தில் கொடுத்தால் பித்தவாந்தி தீரும். இந்தகுளிகை மூன்று மண்டலம் சாதிக்கவும். அதுக்கு பிறகு குதத்துக்கு ஒன்பது நாள் ஒன்பது குளிகை சாதிக்கவும். இதுக்கு மலட்டு பூச்சி செத்துவிழும். பிள்ளை யுண்டாம். இந்த வியாதி கொண்டவர்க்கு எட்டு நாள் எட்டு குளிகை பகூசிக்கவும். சர்வ ரோகமும் கெருடனைக் கண்ட சர்பம் போலே ஓடிப் போம். இதுக்கு இச்சா பத்தியம்.

சூரிய பவற சாயனம்: கண்ணுக்கு மருந்து:-

மயில் துத்தம் விராகனிடை.உ பால் துத்தம் விராகனிடை.க, அக்கினி புடம் புண்ணி பொடி செய்து கலத்து மேலே போட்டு வெத்திலைச் சாறு இழைத்து கோவையிலை சாறு மூன்று தரம் யிழைத்து எலுமிச்சம் பழச் சாறு மூன்று தரம் இழைத்து அதிலே எலுமிச்சங் காயளவு வெண்ணை போட்டு இழைத்து எடுத்து பரணியில் வைத்துக் கொண்டு கண்ணுக்கு தடவ இதுக்கு தீரும் வியாதி வாய்வு கண்ணு புழுக் கண்ணு கண்ணேவு அமரம் நீர் கண்ணு தெனவு கண்ணு நேத்திர வாய்வு இது வெல்லாந் தீரும். பத்தியம் யெச்சிலில் வாய் நீர் வந்தால் தலை திருப்புஙல் இதுக்கு அளிஞ்சி வேர் முத்தின பட்டை கொண்டு வந்து வைத்துக் கொண்டு அவரை மானம் தின்று சாறு முழுங்கவும். பயித்தியமெல்லாந் தீரும்.

அண்ட வாய்வுக்கு வயிறு கடுப்புக்கு மருந்து:-

அண்ட வாய்வு வந்தவர்க்கு கழற்சிக்காய் பருப்பு பொடி செய்து கறண்டியிலே கோழி முட்டை உடைச்சுக் கருவை எடுத்துப் போட்டு அந்த ?ள் போட்டு பணியாரஞ் சுட்டு உள்ளுக்கு சாப்பிடவும். இந்தபடி ஏழு நாள் சுட்டு தின்னவும் உப்பு புளி விடவும் தீரும்.

ஒறண்ட வாய்வுக்கு:-

எருக்களரும்பு ஏழு கொண்டு வந்து ஐந்து மிளகு ஒரு வெள்ளை பூண்டு கூட கலந்து கல்லு மேல் வைத்து அரைச்சு குளிகை பண்ணி சாப்பிடவும் ஒரண்ட வாய்வு தீரும். புளி விடவும். மேலே கட்டுகிறது புளியிலை களிச்சிக் காயிலை கழுதை லத்தி சிறுநீர் வார்த்து வதக்கிக் கட்டவும் அண்ட வாய்வு தீரும்.

வெள்ள வெங்காயம் பலம்.க கொண்டு வந்து பருப்புலே முளையை வாங்கிப் போட்டு ஆலக் கறண்டியிலே போட்டு நெய் வார்த்து பிரட்டி சாப்பிடவும். இந்தப் படி

மூன்று நாள் சாப்பிடவும். தீரும் வியாதி வயறு கடுப்பு ரெத்த கனம் சீதம் வ...
தீராத கடுப்பு தீரும்.

<u>வெள்ளை விழுந்தவர்க்கு மருந்து</u>:-

உஷ்ணம் வெள்ளை விழுந்தவற்கு சுழுக்கு அனவற்கு நாரை சங்கு யிலை ஒ...
அப்பு கொண்டு வந்து யிடிச்சு சாறு பிழிஞ்சு அதிலே நல்லெண்ணை ஆழாக்கு வார்த்து கலந்...
அதிலே மிளகு அரை பலம் பொடி செய்து போட்டு கலக்கிக் கொடுக்கவும். இந்தப்படி
ஏழு நாள் கலக்கி குடிக்கவும். இதுக்கு தீரும் வியாதி வெள்ளை சுருக்கு, புண்ணு சாக்கு
உஷ்ணம், வாய்வு தீரும். புளி விடவும்.

ரத்த மண்ட இலை கொண்டு வந்து இடிச்சு இலை வடி கட்டி எருமை தயிரிலே
கலக்கிக் குடிக்கவும் இந்தப்படி மூன்று நாள் குடிக்கவும். வெள்ளை தீரும். வன்னி மரத்து
இலை பிடி கொண்டு வந்து அரைத்து எருமைத் தயிரிலே குடிக்கவும். இந்தப் படி ஐந்து நாள்
குடிக்கவும் விழுகிற வெள்ளை தீரும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி விடவும்.

<u>பாண்டுவ் கற்பூரம்</u>:-

இரண்டு படி ஆக்கிற பானை கொண்டு வந்து ஒரு சட்டி கொண்டு வந்து இரண்டும்
வைத்துக் கொண்டு அதிலே செம்பருத்தியிலை கொண்டு வந்து இடிச்சு அரைப்படி சாறு பிழிஞ்சு
இரண்டுக்குள்ளே தடவி ஊற வைத்து பின்னையும் வெத்திலைச் சாறு பிழிஞ்சு பானைக்குள்ளே
தடவி ஆற வைத்து பின்னையும் பாகலிலை சாறு பிழிஞ்சு தடவி ஆற வைத்து பின்னையும் முருங்கை
யிலைச் சாறு பிழிஞ்சு ஆற வைத்து அதிலே படி கல்லுப்புப் போட்டு மேலே குமிள் பண்ணி
அதிலே ஒரு பிடி செம்மண் பொடி வைத்து அதிலே ஒன்றரை விராகனிடை ரசம் செம்மண்ணு
லே வைத்து சட்டி எடுத்து மேலே மூடி காத்து புகை போகாமல் செம்மண்ணு கட்டி சீலை
மண் செய்து ஆற வைத்து சாயங்காலம் இடுப்பு மேலே வைத்து ஒரு விறகாசாமம் எரிய
விட்டு காலமே எழுந்து இறக்கி பழைய நல்ல வெல்லம் பலம் உ, கொண்டு வந்து வைத்துக்
கொண்டு அந்த பானையை திறந்து சுத்துப் பக்கமெங்கும் மேல் சட்டி யெல்லாம் புகை
சூழ்ந்து பாண்டுவ கற்பூரம் ஆயிருக்கும். அதை யெல்லாம் வெல்லத்தில் யொத்தி வாங்கிக்
கொண்டு அதை பிசைந்து செப்பிலே வைத்துக் கொண்டு எட்டு நாளைக்கு பதினறு பொழுது
கொடுக்கவும். இல்லாவிட்டால் கருப்பு நெல்லரிசி உழக்கு மாவு கொண்டு வந்து வெல்லத்
தில் கலந்து பதினறு குளிகை செய்து எட்டு நாள் கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி
புண்ணுகள் பறங்கிப் புண்ணு அரையாப்பு கிறந்தி, உஷ்ணம், செலந்திகள் தீராத புண்ணு
களெல்லாந் தீரும். இதுக்கு தாளுவாய் கட்டும்.

அதுக்கு கருவேலம் பட்டைக் கொண்டு வந்து வேதுப் போட்டு தண்ணீரைக் கொப்ப
ளிச்சு உமியவும். வாய் கட்டு தீரும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி விடவும். பாலுஞ் சோறு
சாப்பிடவும். இந்தப் படி எட்டு நாள் சாப்பிடவும் ஒன்பது நாள் பொழுது நாரத்தையிலை
நொச்சியிலை கொண்டு வந்து தண்ணீரிலே போட்டு வென்னீர் காய்ச்சி என்னை தேய்ச்சு
முழுகி உள்ளுக்கு கோழிச் சாறு குடிக்கவும். இல்லா விட்டால் பச்சைக் கொள்ளு சாறு
குடிக்கவும். மத்தியானத்துக்கு சாறுஞ் சோறுஞ் சாப்பிடவும். மறு பத்தியம் நச்சுப்பு எட்டு
நாள் கூட்டவும். இதுக்கு இரண்டு மாசத்துக்கு பூசணிக்காய் தேங்காய் கடலை சிலந்திப்
பண்டங்களெல்லாம் விட்டு விடவும், இது கை கண்டது.

<u>சர்வ சுரத்துக்கு கசாயம்</u>:-

<u>கீல் வியாதி சுரத்துக்கு மருந்து</u>:-

கொத்தமல்லி சீந்திக் கொடி, வில்வலைப் பத்திரி ஒடு காஞ்சொறி
வேரு சிறு தும்முட்டி வேர், கோரைக் கிழங்கு வேப்பயீர்க்கு விளா யீர்க்கு ஆடு தின்னாப்
பாளை நிலவேம்பு தேவதாரிப் பட்டை, பற்படாகம், புளி யீர்க்கு வல்லாரியிலை, திரா
க்ஷை பழம் சித்தாமுட்டி வேர், கருவேப்பிலை யீர்க்கு கசாயம் வைத்து அதிலே திரா
க்ஷ பழம் கட்டறஞ் சொத்தி சீரகம் லவங்கம், திப்பிலி, மோடி, தாளிச பத்திரி,
அதிமதுரம் ஒன்பது வகை யெல்லாங் கொண்டு வந்து கசாயத்திலரைச்சு குடிக்கவும். இந்தப்
படி மூன்று நாள் குடிக்கவும். சர்வ சுரமுந் தீரும்.

...ருக்கம் வேர், திருகு பிரண்டை முதலிப் பட்டை செவியம் யிஞ்சிக்கிழங்கு ...ஞ்சள், திப்பிலி ஆனை திப்பிலி முருக்கன் விரை இந்த பத்து வகை ... கொண்டு வந்து சந்தன மிழைத்து கொப்புமை சுத்தி இடவினல் இதக்கு தீரும் வியாதி ...ளை வெளி முளை ரெத்த முளை கல்லு முளை யெல்லாங் கத்தரிச்சு விழும்.

உ_ரத்துக்கு குளிகை:-

எலி பாஷாணம் விராகனிடை.ங கொண்டு வந்து கறண்டியிலே சுண்ணாம்பு தண்ணீர் தெளியாயிருந்து அடுப்பிலே வேகவிட்டு எடுத்துக் கொண்டு சாணியிலே தேய்ச்சு கழுவி போட்டு கத்தாளை சோத்துலே தேய்ச்சு கழுவிப் போட்டு கருஊமத்தை யிலை சாத்திலே தேய்ச்சு கழுவிப் போட பதத்திலே அடைத்து செம்மண் துனி சுத்தி புடம் பண்ணி கறுக்கு ஆகாமல் முன்னே எடுத்துக் கொண்டு கலமுதான கல்லுலே பூமழும் மருந்து எல்லாம் வைத்து சர்மம் அரைச்ச துவரை பிரமாணம் குளிகை.செய்து நிழலிலே உலர்த்தி வைத்துக் கொண்டு அநுபானம் பழைய தண்ணீரிலாவது பாகயிலை சாறிலேயாவது துளசியிலைச் சாறிலேயாவது ஒரு குளிகை கொடுக்கவும். இதுக்கு தீரும் வியாதி சுர முறைக் காச்சல் சீத சுரம், சன்னி சுரம் சயித்தியம் முதலான்தும் சுர்மெல்லாம் தீரும். இதுக்கு பத்தியம் ரி காரம், புளிப்பு விடவும். இந்தப்படி ஐந்து நாள் கொடுக்கவும்.

சர்வ_ரோகத்துக்கு_லேகம்:-

பறங்கியாதி லேகம், பறங்கிப் பட்டை செஙு.லவங்கப் பட்ட பலம்.1/2 தாளிச பத்திரி பலம்.1/2, சாதிக்காய் விராகனிடை.க1/2 சாதிபத்திரி விராகனிடை.க1/2, அக்கலக்காரம் விராகனிடை.க1/2, செங்கல் கோஷ்டம் விராகனிடை.க1/2, லவங்கம் விராகனிடை.க1/2 லவங்கப் பத்திரி விராகனிடை.11/2 கொல்மூக்கு பட்டை விராகனிடை.க, திப்பிலி மூலம் விராகனிடை.11/2 வாய்விளங்கம் விராகனிடை.11/2, சயிந்தலவணம் விராகனிடை.க1/2 பீய் மரத்துப் பட்டை பலம்.1/2 சுக்கு விராகனிடை.க1/2 திப்பிலி விராகனிடை.க1/2 மிளகு விராகனிடை.க தானிக்காய் விராகனிடை.11/2, கடுக்காய் விராகனிடை.க1/2 நெல்லி வத்தல் விராகனிடை.க மண்டுரம் விராகனிடை.க லோக பற்பம் விராகனிடை.வ சீரகம் பலம்.1/2, கருஞ்சீரகம் பலம்.1/2, அரத்தை விராகனிடை.ங, யேலம் விராகனிடை.க1/2 மஞ்சள் பலம் 1/2 மரமஞ்சள் பலம் சித்திரமூலம் விராகனிடை.க கையான் தகரை வேர் பலம்.1/2 குங்குமப்பூ விராகனிடை.வ கஸ்தூரி விராகனிடை.வ, சங்கங்குப்பி வேர் திருகு விராகனிடை ங கருப்பு சங்கங் குப்பி வேரு திருகு விராகனிடை.ங, நாரை சங்கு வேர் திருகு விராகனிடை.ங, நாகேசுரம் விராகனிடை.க1/2, கச்சொரி விராகனிடை.க கெண்டு பறங்கி பலம்.1/2 கசக்சா பொட்டு பலம்.க1/2 முள்ளி விரை விராகனிடை.க1/2, பூமி சர்க்கரை கிழங்கு பலம்.உ, வெள்ளறுகு பலம் சிவனார் வேம்பு விராகனிடை.க1/2, கல்நார் விராகனிடை.க1/2 கன்னி மிட்டான் கிழங்கு உரிச்சதை பலம்.பத்து கொட்டைக் கிரந்தி நாள் விராகனிடை.க, அதிமதுரம் விராகனிடை.க ஆவாரை விராகனிடை.க1/2, நிலப்பனைக் கிழங்கு விராகனிடை.க1/2, குமிளான் வேர் விராகனிடை இந்த சூரணத்துக்கு சமனும் பொடி ரி.சர்க்கரை கொண்டு வந்து வைத்துக் கொண்டு ஒரு சட்டியிலே வெந்நீர் தண்ணீர் தேன் பசுவின் நெய், பசுவின் பால் அந்த சூரணத்துக்கு சம பாகமாய் சட்டியிலே வார்த்து காய்ச்சி பாக்க மெடுத்து அதிலே சூரணம் கலந்து போட்டு கிளறி லேகம் பதம் பண்ணி வைத்துக் கொண்டு சின்ன களச்சிக்காய் பிரமாணம் மண்டலம் சாப்பிடவும். இதுக்கு தீரும் வியாதி குச்சிகா ரோகம், செயம் பாண்டுவரோகம், சோகை பாண்டுவம் ஊது காமாலை பயித்திய காமாலை வுறக் காமாலை உஷ்ணம் வறச்சி மேகம் ரெத்த பிரமியம் பண்ணுகள் கிரந்தி அரையாப்பு உள்ளங்கால் நோவு பஷ்சி வாய்வு, பாரிச்ச வாய்வு தருற வாய்வு முழங்கால், கை கால் வாய்வு, சர்வ சுரமும் மகமுறிச்சி உன்மத காசிரோகம் சுவாச ரோகம் மூல ரணம் வயிற்று சூலை கடுப்புகள் சர்வ ரோகங் களெல்லாம் தீரும். இச்சா பத்தியம். இது ஷி கண்டது.

மருந்தீடுக்கு_மருந்து:-

மருந்து யிடுங் கலந்தவற்கு தெறணி கழியிலை தூருங் கொண்டு வந்து உழக்கு சாறு பிழிஞ்சு கறப்பாட்டு பால் வார்த்து கறப்பு பசுவின் பாலாவது உழக்கு கொண்டு வந்து

Not Required

கலக்கி குடிக்கவும்: அதுக்கு முன்னே மூன்று நாளைக்கு நெய்யுஞ் சோறுஞ் சாப்
இந்த கலக்கின மருந்தை குடிக்கிறது. அதுக்கு பேதி வாந்தியாகும். அந் வயறு
விழுந்து போம். பேதி நிற்காதே போனல் அதுபானம் செம்பருத்திக்காய் இடிச்சு
ஒரு கறண்டி சாறு ஆகப் பண்ணி அதிலே யேலம் சர்க்கரை சீரகம் பொடி பண்ணி செ
வும். தலைக்கு தண்ணீர் வார்க்கவும். பாலுஞ் சோறும் சாப்பிடவும். படுத்து கொள்
இந்த மருந்து மலத்திலே விழுந்து போம்.

உஷ்ணத்துக்கு மருந்து:-

மேகம் உஷ்ணம் வெள்ளை விழுந்தால் அதுக்கு பசும் காஞ்சி மல்லிகைப் பூவும் இலையும் ஒரு அப்பி கொண்டு வந்து உழக்கு சாறு பிழிஞ்சு நல்லெண்ணை ஆழாக்கு அதிலே பெரிய எலுமிச்சம் பழஞ் சாறு பிழிஞ்சு கலக்கி குடிக்கவும். இந்தப் படி ஏழு நாள் குடிக்கவும். இதுக்கு சர்வ மேகமும் உஷ்ணமும் போம். உப்பு, புளி கூட்டவும். பத்தியம்.

உஷ்ண வெள்ளைக்கு:-

கலியாண முருங்கை யிலைச் சாறு உழக்கு, அதிலே கடைச் சரக்கு ஏலம் விராகனிடை.க, கண்ட சர்க்கரை விராகனிடை.க, சீரகம் விராகனிடை.க, கல்நார் விராகனிடை.க இதுவெல்லாம் பொடி பண்ணிப் போட்டு கலக்கி குடிக்கவும். இந்தப் படி ஏழு நாள் குடிக்கவும். சர்வ மேக வெள்ளையும் போம். இதுக்கு பத்தியம் உப்பு, புளி விடவும்.

வீரிய விர்த்திக்கு குளிகை:-

not useful

வீரிய விர்த்திக்கு குளிகை ஆகிறதுக்கு பாதரசம் விராகன்.க, கொண்டு வந்து பெரிய கொட்டங்கச்சியிலே காச்சிக் காயில் சமூல பிழிஞ்சு ஊசித் தகரை சாறு விட்டு கல்லு மேலே வைத்து அரைச்சு உருண்டை பண்ணி கரு ஊமத்தைங் காயிலே றொப்பி செம்மண் துணியிலே சுத்தி பதினைஞ்சு தாம் புடம் பண்ணி குளிகை செய்து அண்கை வுத்திலே கட்டிக் கொள்ள வீரிய விர்த்தியுண்டாம். ராச வசிகரம் ஆகும்.

வெள்ளைப் பூண்டு பலம்.1, மிளகு பலம்.வ, திப்பிலி விராகனிடை.ங, இஞ்சி விராகனிடை.ரு ஆடு தின்னாப் பாளையிலை கொண்டு வந்து பிழிஞ்சு அந்த மருந்து சாறு வார்த்து அரைத்து சுண்டைக் காயளவு குளிகை செய்து நிழலிலே உலர்த்தி நல்லெண்ணையிலே பிரட்டி திங்கவும். காலமே சாப்பிடவும்.

பேய் சுண்டைக் காயிலை கொண்டு வந்து கல்லுப்பு போட்டு எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து சுண்டைக் காயளவு குளிகை பண்ணி அந்திக்கு ஒரு உருண்டை தின்னவும். இதுக்கு க்ஷயம், உப்பிசம், காசரோகம் தீரும். புளி விடவும்.

கய்யிமசத்தி மருந்து : புண்ணுக்கு மருந்து:-

Not clear

மருந்து யிடுக்குன கறை பட்டை ஒரு அப்பு கொண்டு வந்து பேய் மரத்து யிலை சாறு பிழிஞ்சு அந்த பட்டை அரைச்சு சுண்டைக்காயளவு குளிகை செய்து நிழலிலே உலர்த்தி வைத்துக் கொண்டு தினம் இரண்டு நேரமும் ஒரு உருண்டை பசுவின் நெய் கறண்டி நெய் உள்ளங் கையிலே வைத்து மருந்தை பிரட்டி சாப்பிடவும். அரை மண்டலம் சாப்பிடவும். இதுக்கு மருந்து யெல்லாம் மலத்திலே கத்தரிச்சு விழும்.

புண்ணுக்கு மருந்து:-

மயில் துத்தம் விராகனிடை.ங, பால் துத்தம் விராகனிடை.ங, சங்கால பக்ஷி பச்சை விராகனிடை.உ, மிர்தாங்சிங்கி விராகன்.உ, மனிசெலை விராகனிடை.உ, ரெத்த மனி செலை விராகனிடை.உ, கந்தம் விராகனிடை.க சவுரி தாளம் விராகனிடை.க, பொட்டிலுப்பு விராகனிடை.க, யிங்கிலிகம் விராகனிடை.க, ரசம் விராகனிடை.க, வெள்ளை குங்கிலியம் விராகனிடை.க, கெவுரி பாஷாணம் விராகனிடை. மனிதன் எலும்பு தூள் விராகன்.க, கமுகை குடத்தி மூக்கு யிழைத்த சந்தனம் விராகன்.க, களிப்பாக்கு சுட்ட கறுக்கு விராகன்.க, கடுக்காய் கறுக்கு விராகன்.க, காசிக் கட்டி கறுக்கு விராகன்.க,

க்கு விராகன். க, புளியம் பட்டை கழக்கு விராகன். க சிறுகீரை வேர் கழக்கு க, மருந்து எல்லாம் பொடி பண்ணி கலந்து மேலே பேட்டு செம்பருத்தி சாறு செம்பு வைத்து இழைத்து அதுக்கு வெத்திலை சாறு இழைத்து ஊசியிலைச் சாறு து செவுறு கெந்தகி யிலை சாறு இழைத்து நெருஞ்சி முள்ளி சாறு இழைத்து முசுமுசுக்கைச் யிழைத்து வெள்ளை சாட்டறணை சாறு இழைத்து முள்ளி தண்டு சாறு இழைத்து அவரையிலை சாறு இழைத்து முருங்கையிலை சாறு இலை இழைத்து தவசி முருங்கை யிலை சாறு இழைத்து (முடிவில் லை)

<u>அகஸ்தியர் சொன்னது பெருங் குழம்பு</u> :-

பற்வதந் தன்னில் வாழும் பரம குருளிலே
பொருமை யோகிணேசன் கந்தன் போத்தினேன் மலர் கடுவி
அருமையா சினங்கட்க்கு உண்மையாய் நோவு வந்தால்
அருமையா தீர்க்கும் நல்ல அகஸ்தியர் உரைத்த தாமே.

To Compare with printed prescriptions

2. உரைக்கிறேன் பெருங் குழம்பை உண்மைகள் புலத்தியா நீ
மரக் கொள்ளு குக கெந்தி மரை நெ--விடிகும் நாபி
நிரைக் கொடு தாரம் லிங்கம் நேர் மனோசிலையுங் காயம்
அரைப்பது அசமதாகம் ஆன பொற்காரந் தானே.

3. காரமா லவங்கம் யேலம் கனதிரிகடுகு இந்துப்பு
வாரமாய் யிரு கடுகு வகையுடன் கார்கோல் வித்து
சாரமாங் கடுக்காய் நெல்லி தானது கருஞ்சீரகந் தீபதாக்சி.
பாரமாம் ரோகணியும் வகை ஒன்று மண பாச கழிஞ்சி ஒன்று வாங்கிக் கொள்ளே.

4. கொள்வாய் நீ சரக்கதனை சுத்தி செய்து குரை மருந்தை யிள வறுப்பாய் வழுத்து தள்ளாமல் வாளமது யோடு போக்கி சதிர் வாத முளையிலையுஞ் சார்வாய் தள்ளி விள்ளாமல் நவ சுத்தி செய்து கொண்டு விளங்கு முன் மருந்துக்குச் சமமாய் காக்கி அள்ளாமல் பாகி தனை வைத்துப் போடு அளகான பச்சையது பாகி சேரே.

5. சேரவே கல்வத்திலெல்லாம் போட்டு சிறப்பாக சாமமது ஆட்டி வாங்கி
சார்வாக நீ சிமிழிலடைத்துக் கொண்டு தாங்காதே மயங்காதே சாத்துறேன்
பேறுன வாத சுரந் தனக்கு மிஞ்சி பெரிதான பித்த சுரந்திச மூலத்தில்
மாரான சிலோற்பனத்துக்காம் முருங்கை மகத்தான பட்டைச் சாற் தன்னிலாட்டே.

6. ஊட்டுவாய் சன்னிக்கு பஞ்ச மூலம் உறவான கோஷ்டதாலிஞ்சி நீரில்
மாட்டிடுவாய் திப்பிலியும் லவங்கம் தாளிசம் வகையான பத்திரியும் வழுத்து நாவி
தாஷ்டிகமாய் தேனதிலே குத்தி நீயும் தவறுமல் கொடுத்திடவே சண்டாள நோவும்,
கூட்டறவு மில்லாத பகைஞர் போலே குடிக்கையிலே நிலை யறிந்து பிரியுந்தானே.

7. தாளுன சூலை பதினைந்துக்கும் தவறுமல் கொடிவேலி கசாலத்தாட்டு
மாளுன குன்ம மது வந்த பேர்க்கு மகத்தான சங்கு நீர் தன்னிலாட்டு
தேளுன காசமது வந்த பேர்க்கு தேங்காய் நீர் தன்னிலே சிறக்க வூட்டு
கோளுன விஷங்களுக்கு சின்னிச் சாத்தில் கொடுத்திடவே விஷ. மிறங்கிச் முதித்துப் போமே.

8. போகுமே செய்த்துக்குள பாண்டத்தில் புகழான புண்ணுக்கு பிரங் காசிலேகியும்
தாகுமாம் குடல் பிரட்டு குடல் வாதங்கள் தனிக்க சிக்கல மிகுந்து
தென்றல் தனக்கு கேளும் ஆகுமா நிலாவரைக் கசாளந் தன்னில் அறிந்திடுவாய்
பாசிப் பயறளவாமே.

9. பாயசனிலே பாகி பேய் பீக்கூஞ் சாத்தில் பரிவாக மத்திச்சு கண்ணில் தீட்டாய்
பெரியறவந் தீண்டினதங் கீழே நோக்கும் பேசாத சன்னியுமே பேசப் பண்ணும்
தயக்க முறுங் கண் சிவப்பாம் சுக சன்னிக்கு தயங்காமல் கன்னிலிட தாம்பல் சாத்தில்

10, தாம்பூல சாத்திலிட வயது போகும் தனிக் கிருமி வுள்ள தெல்லாம் கழன்று
வேமப்பா ஆரோசிகங்கள் அன்னதோசம் விகாரமுடன் மயிலயி பித்தம் விருப்பே
சாம்ப சிவன் சொல் மொழியே வெளியில் போட்டேன் சமத்தான வாதிகளே
செ

11. செய்யப்பா அருபான விசேஷந் தன்னில் திடமாகப் புத்தியினால் செய்ய வேணும்
மெய்யறவே நாலுத்தி நாற்பத்தெட்டு வீரிட்டு ஓடி விடும் மதயானை போலே.
அய்யமில்லை கணையெட்டு மாந்த மெட்டும் அருளாதிக் கசாயத்தி லடிபட்டோடும்
பொய்யதல்ல மெய்யதாம் பெருங் குழம்பை பிரபலமாக் கண்டறிந்து பிரித்திட்டேனே.

12. பிரித்திட்டேன் பேதிக்கு கொர்டுத்தீரால் பல்மறிந்து குன்றியிடை கொடுக்க நன்று
செரிப்பான் பேய்து அதிகமானால் சிறுகீரை வேர் சீரகமுங் கூட்டி
முரித்தே நீ கசாயமிட்டு கற்கண்டிட்டு மூழ்கமா அறிந்திட்டவே கட்டிப் போகும்
கற்றெரன்று ராத்திரிக்கு சுக்கு நீர் கசாய்மது முன்னறிந்து பின் அமுதுக் கொள்ளே.

13. கொள்ளவே யிது பேதி கட்டாததர்லே கூறுகிறேன் ஆவின் பால் நிம்பழஞ் சார்
கள்ளனைப் போலோடி விடும் யின்னங் கேளும் கன்மான யிசுப்பு கோல வெளரால்
போ

தள்ளாமல் யிலக்கணத்தில் கிருணி கட்டி தவருமலுள்ளபடி சாந்தமாகும்
உள்ளபடி சொல்லி விட்டேன் யென் மேல் குத்தம் ஒரு நாளும் வராதென்றோதினேனே.

14. ஓதினேன் கல்வத்தில் ரணி பிரட்டி உத்தமனே சிமிளிலே வைத்துக் கொண்டு
ஆதியாம் தலை நோவு பிடரி முத்து ஆனதொரு நாசடைப்பு புருவந் இத்து.
மோதிவரு மொருதலை நோய் பரபரப்பு ஈடி விடும் ரெத்த பித்தம் வெரி பித்தம்
விகார பித்தம்

சாதியாம் தீய்க் கொருத்தி புகைச்சலேத்த சன்னுமடா யித்தனையும் சாந்தமாமே.

15. சாந்தமாம் சம்போகம் செய்யும் போது தனி நாம்பு பசியது அரையில் கட்டும்
வேந்தனே அரையா யெனறறிந்து கொள்ளு விபரமாய் குன்றியிடை யெருக்கம் பாலில்
அந்தமுடன் மத்தித்து அதின் மேல் பூச அடி முளையுங் கண்டு அழுந்து போகும்
மிந்த படி தடை வாழை கண்டமாலை யெழும்பு பக்க பிளவைக்கு யிது தானுமே.

16. தானுன பவுத்திரமுந் தவடைப்புத்தும் தனித் தெரும்பு மேகபுத்து மேகக் கட்டி
மானல் தன் மோகத்தால் சூடு கொண்டு மாரி வருஞ் சிலந்திகள்க்கு முன்போல் செய்வா
ய்

வீணைச் சொன்னதென்று பருதென்னமல் விபரமாய் செய்வதற்கு மேன்மையாவாய்
நானென்ற ஆணவத்தை அளித்த பேர்க்கு நாதரருள் சித்திக்குஞ் சித்தருமே.

17. சித்தனென்ற சொல்லுககு விபரங் கேளு சிவாய நமாவய நமசிய நமசிவ.
உத்தமனே சிவய நமசிவாய வென்று ஒரு லெட்சம் செய்திடவே மூவர் காண்பாய்.
சத்த ரிஷி சாபங்கள் நிவர்த்தி யாகும் சத்த சாகரங்களெல்லாம் தனக்குள்ளாகும்
வித்தகனை யறிவிடைத்து வாழ்ந்திருப்பாய் மேலான பெருங் குழம்பு முத்து முதத்தே.

18. <u>திருச் சித்தம்பலந் தனக்குள்ளாகும்</u>: ரசங் Incomplete

ரசம், கெந்தி நீர்விஷம், கருநாபி, அரிதாரம், லிங்கம், மனைசிலை, பெருங்காயம், ஓமம், வெண்காரம், லவங்கம், யேலம், சுககு, திப்பிலி, மிளகு, இந்துப்பு யிருகடுகு, கார்கோல மத்து, கடுக்காய், நெல்லிப் பருப்பு, கருஞ்சீரகம் தீவதாஷ்சி பழம், கடுரோகணி வகைக்கு விராகனிடை .கவ (செய்முறை முடிவுயில்லை)

<u>மேகத்துக்கு மருந்து: அகஸ்தியர் குழம்பு</u>:-

சீந்திர் சர்க்கரை சேர்.க, பறங்கி சக்கை சேர் 1/2, சுக்கு பாவு.க, லவங்கம் பலம்.க, தாளிச பத்திரி பலம்.க, லவங்கப் பட்டை பலம்.க, சந்தனம் பலம்.க, சாம்பிராணி பலம்.க, அதிமதுரம் பலம்.க, ஏலம் கட்டெடை.க, சாதிக்காய் பலம்.க குங்குமப்பூ விராகனிடை.க, சாபத்திரி பலம்.க, தேன் சேர்.க, சீனி சர்க்கரை சேர்.க

பாவு.க, பசுவின் நெய் சேர்.க, இது வெல்லாம் வச்சிர காயம் செய்து பண்ணி சாப்பிடவும். இச்சா பத்தியம்.

பெருங்காயம், கடுககாய், இந்துப்பு ரசம், வெங்காரம், மநோசிலை, ...சேரவாமம், பொன் அரிதாரம், கருசீரகம் வகைக்கு விராகனிடை.க, நேர்வாளம் ...ட்டு வாங்கினது.யது மருந்து சுத்தி மநோசிலை சுண்ணம்பு தண்ணீரில் சுத்தியாம். காடி ...ள்ளாட்டு சாணியில் வேக சுத்தியாம். ரச சுத்தி ஓட்டடை சுண்ணம்பு, செங்கல் ஆள் பிரண்டை சாறு, வார்த்து அரைத்து குள்கைபிடித்து குள்கைக்குள்ளே ரசம் விட்டு மேலே குப்பை மேனி சாறு விட்டு மேல் சீலை மண் செய்து பகலில் மூன்று சாமம் வைக்க சுத்தியாம்.

அரிதார சுத்தி சுண்ணம்பு தண்ணீர் வடிகட்டி எரிக்க சுத்தியாம். வெங்காரம் எருமை சாணியில் ஒரு தரம் தேய்க்க சுத்தியாம். இப்படி சுத்தி செய்து எல்லாம் கூட்டி அரைக்க அகஸ்தியர் குழம்பு. பத்தியம் மிளகு நீர் சோறு சாப்பிடவும். இந்த அவிழ்தம் மிஞ்சினால் முருங்கையீர்க்கு மிளகும் வருத்து கசாயம் கொடுக்க நிற்கும். சாயங்காலம் வசம்பு கசாயத்தில் வெண்ணெய் பாக்களவு போட்டு கொடுக்கவும். சுரத்துக்கு சுக்கில் குளிர்சுரத்துக்கு சுக்கு மிளகு நாளில் கொடுக்கவும்.

****

முற்றும்

****

சு.ச:5.4.63.

352

Completed verification of No 7, Bundle of Kaveripatnam Kuppusami Chettiar Total 88 typed pooleah pages

Sunderananda

15-5-63